AR
905

# தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

15




அறிஞர் அண்ணா

# தம்பிக்கு
# அண்ணாவின் கடிதங்கள்

பதினைந்தாம் தொகுதி

காஞ்சிக் கடிதங்கள் - 2

அறிஞர் அண்ணா

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு : 1988
பதிப்பு உரிமையுடையது

தமிழ் நூல் காப்பகம்
09215
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

விலை ரூ. 15-00

அச்சிட்டோர்: சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு,
கோபாலபுரம், சென்னை-600 086 [93]

## முதல் இரண்டு தொகுதிகளின் முதற்பதிப்பின்

# முன்னுரை

### திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

'அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள்' நூல் வடிவம் கொண்டு அழகும் கவர்ச்சியும் ஒருங்கே ஏற்று, என் கைக்கு வரப்பெற்று மிக்க பேருவகையுற்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழ் மூலம் அருமைத் தம்பிமார்களுக்கு எழுதிவந்த மடங்கல்கள் அனைத்தும் நூல்வடிவம் பெற்றால், அந்த நூல், கருத்துக் கருவூலமாகத் திகழப்பெறுமே என்ற வேணவா என் உள்ளத்தில் நீண்ட நாட்களாக எழுந்ததுண்டு. என்னைப் போன்ற பல்லாயிரக்கணக்கான தம்பிமார்களுக்கும் வேணவா கிளர்ந்தெழுந்திருக்கும் என்பது உறுதி. அந்த வேணவாவை இனிது நிறைவேற்றி வைக்கும் அரும் பெருந்தொண்டை, 'பாரி நிலையத்தார்' செய்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன். பாரி நிலையத்தாரை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையையும், அவரது எழுதுகோல் முனையிலிருந்து உருப்பெற்றெழுந்து நாடெங்கணும் வெற்றியுலா வரும் கதைகள்—கட்டுரைகள்—நாடகங்கள்—திரைப்பட வசனங்கள்—எழுத்தோவியச் சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் ஆகியவற்றையும், அவற்றின் தமிழ் மணம் மிகச்சிறந்த முறையில் கமழ்வதையும், இனிய ஓசைபயக்கும் சொற்கள் அருவியின் வீழ்ச்சியெனத் தங்கு தடையின்றிப் பாய்ந்து துள்ளிக் குதித்து ஓடுவதையும், கருத்துக்கள் செறிந்து காணப்படுவதையும், உவமை நயங்கள் பெருவாரியாக ஆங்காங்குப் பளிச்சிட்டு மின்னுவதையும், அறிவும் ஆற்றலும், உண்மையும் உயர்வும், திண்மையும் திட்பமும், சொல்லழகும் பொருளாழமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு துள்ளிக் குதிப்பதையும், தமிழ் கற்றறிந்த நல்லறிவு படைத்தோர் அனைவரும் நன்கு உணர்வர். தமிழின்பத்தை எல்லா வகையிலும் சுவைக்க விரும்புவோர், இந்நூலைச் சுவைத்தாலே போதும். எல்லா வகையான இனிய சுவைகளும் இதனுள் பொதிந்து கிடக்கின்றன.

படித்து மகிழ்ந்து பயன் பெறுவதற்குரியவைகள் பலப் பல இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் கடிதத்தைப் படிப்பதற்குப் பேராவல் காட்டுகிறோம். அஞ்சலை அன்றாடம் வழி மேல் விழிவைத்துப் பார்க்க நாம் தவறுவதில்லை. அஞ்சல் வந்தவுடன் மற்றப் பணிகளையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டுப் பரபரப்புணர்ச்சியுடன் அவற்றைப் பிரித்துப் படிக்கிறோம், பலதரப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் அறிந்துகொள்கிறோம். பொதுவாகக் காதலியிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வரும் முடங்கல்களைப் படிப்பதில் ஒருவன் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் காட்டுவானோ அவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களைப் படிப்பதிலும் ஒவ்வொருவரும் காட்டுவர். அவ்வளவு கவர்ச்சியும், அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களில் காணப்பெறும். அறிஞர் அண்ணா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை எழுத்துக்களின் மூலம் எளிதில் கண்டறிய இந்நூல் பெரிதும் பயன்படும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் 'தம்பிக்குக் கடிதம்' என்று தலைப்பிட்டு எழுதிய கடிதங்களைப் பத்துத் தொகுப்புகளாகக் கொண்டுவர முயற்சி எடுத்து, இப்பொழுது இரண்டு தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றனர். இந்தப் பத்துத் தொகுப்புகளும் தமிழகத்தின் அரிய பெரிய கருத்துக் கருவூலங்களாகும். இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டு தொகுப்புகளைப் போலவே, விரைவில் ஏனைய எட்டுத் தொகுப்புகளும் வெளிவருவனவாக!

அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லமுதைக் கொண்டு இலக்கிய விருந்து படைக்க முன்வந்த 'பாரி நிலைய'த்தாரைப் பாராட்டுகிறேன். தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த இலக்கிய விருந்தை உண்டு மகிழ்ந்து, பயன் பெற்று, இனிதுற வாழ்வார்களாக!

4-1-63

—இரா. நெடுஞ்செழியன்

# பதிப்புரை

அறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய கருத்துக்களையும் சிந்தனைகளையும் தம்பிக்கு என்ற தலைப்பில் கடித வடிவில் அவர் நடத்தி வந்த 'திராவிட நாடு' இதழிலும் 'காஞ்சி' இதழிலும் அவ்வப்போது எழுதி வந்தார்கள். இவற்றில் சில கடிதங்கள் திராவிடநாடு, காஞ்சி பொங்கல் மலர்களிலும் வெளிவந்தன.

இக்கடிதங்கள் அறிஞர் அண்ணா அவர்களையும் அவர் நேசித்த இலட்சக்கணக்கான தம்பிமார்களையும் ஒருங்கிணைத்துக் கலந்து உறவாடி மகிழச் செய்தன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்களை வெளியிட அண்ணா அவர்களிடமே இசைவு பெற்று, முதல் இரண்டு தொகுதிகளையும் 1963ஆம் ஆண்டில் வெளியிட்டோம். இவை கடற்கரையில் சீரணி அரங்கில் பல ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் வெளியிடப் பெற்றன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்கள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்து நிறைவடைந்தன. காஞ்சி இதழில் அண்ணா தமது சிறை அனுபவங்களைக் 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் கடித வடிவமாகவே எழுதி வந்தார்கள். அவைகளைத் தொகுத்து, 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் தனிநூலாக வெளியிட்டோம். இது அண்ணாவின் கடிதங்களின் பதின்மூன்றாம் தொகுதியாகும்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 26-7-64 தொடங்கிக் 'காஞ்சி' இதழில் அண்ணா கடிதங்கள் எழுதத் தொடங்கினார்கள். காஞ்சி இதழில் வெளிவந்த முதல் கடிதத்தின் தலைப்பே 'நீண்ட இடைவெளிக்குப் பிறகு' என்பதாகும்.

காஞ்சி இதழில் வெளிவந்த கடிதங்களை வெளியிடத் திருமதி ராணி அண்ணாதுரை அவர்களிடம் இசைவு

பெற்று வெளியிடத் தொடங்கி இருக்கிறோம். பல காரணங்களால் இவைகளை நூலாக வெளியிடுவதிலும் நீண்ட இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இனித் தடையின்றி இவை விரைவில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பொழுது வெளியிடப் பெறும் இந்தத் தொகுதி மொத்த வரிசையில் **பதினைந்தாம்** தொகுதியாகும். காஞ்சியில் வெளிவந்த கடிதங்களின் **இரண்டாம்** தொகுதியாகும். இதில் பதினோரு கடிதங்கள் வெளிவந்துள்ளன. **'காஞ்சிக் கடிதங்கள்–2'** என்று தலைப்பிட்டுப் புதிய எண்கள் கொடுத்திருக்கிறோம்.

காஞ்சியில் வந்த கடிதங்களையும். வழக்கம் போலப் புலவர் நா. அறிவழகன் அவர்கள் உள் தலைப்பிட்டுக் கொடுத்தும், கிடைக்காத கடிதங்களுக்கு 'ஜெராக்ஸ்' பிரதி எடுத்துக் கொடுத்தும் பலவாறு உதவினார்கள். டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் பிரதியை நன்கு ஒப்பு நோக்கி அச்சிட்டு உதவினார்கள். இவ்விரு அறிஞர்களுக்கும், காஞ்சியில் வெளிவந்த கடிதங்களை நூல்வடிவில் வெளியிட எங்களுக்கு வாய்ப்பளிதத திருமதி ராணி அண்ணாதுரை அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய சாலை அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியது.

வழக்கம் போலத் தமிழ்ப் பெருமக்கள் இந்நூல் வரிசையினையும் ஏற்று எங்களை ஊக்குவிக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

—பாரி நிலையத்தார்

# பொருள் அடக்கம்


| கடித எண் | பொருள் | நாள் | பக்கஎண் |
|---|---|---|---|
| 11. | ஏழ்மையால் எழில் கெட்டு | 28.3.65 | 1 |
| 12. | தன்னை வெல்வான் தரணியை வெல்வான் | 4.4.65 | 33 |
| 13. | விந்தை மாந்தர்கள் | 11.4.65 | 48 |
| 14. | வெந்த புண்ணில் வேல் | 18.4.65 | 57 |
| 15. | இதயம் வென்றிட -1 | 25.4.65 | 75 |
| 16. | இதயம் வென்றிட -2 | 2.5.65 | 93 |
| 17. | இதயம் வென்றிட -3 | 9.5.65 | 123 |
| 18. | மனிதனும் மிருகமும் | 16.5.65 | 137 |
| 19. | சொக்கப்பனிடம் பட்ட கடன் | 23.5.65 | 155 |
| 20. | கங்கா தீர்த்தம்-1 | 30.5.65 | 175 |
| 21. | கங்கா தீர்த்தம்-2 | 6.6.65 | 187 |

காஞ்சிக் கடிதம் : 11

# ஏழ்மையால் எழில் கெட்டு...!

**விஞ்ஞானத்துறைக் கற்றறிவாளர்களின் வேண்டுகோள்**

**'இட்டுக் கட்டிக்' கூறுவதே எனக்குச் சாதகமாக அமைந்தது**

**சிறுபான்மையினரின் கருத்தே ஒருநாள் நாட்டு மக்களின் கருத்தாகிவிடும்**

**டில்லி செயின்ட் ஸ்டீபன் கல்லூரியில் சிறுபான்மைப் பிரச்சினை பற்றிய பேச்சு**

தம்பி,

K. சுவாமிநாதன் B.Sc.
J. மஞ்சேஸ்வர் B.Sc.
K. சீனுவாசன் B.Sc.
S. லட்சுமிவராகன் B.Sc.
S. சுப்பிரமணியம் B Sc.
P.A. அசுவதநாராயணா B.E.
G. ராமதுரை M.Sc.
C.V. கோகுலரத்னம் B.Sc., B.E.
V. கிருஷ்ணபிரம்மம் B.E.
P.K. வெங்கடேஸ்வரன் B.E,
A. ராமகிருஷ்ண சாஸ்திரி B.Sc. B.E.
K.M. தாமோதரன் M.Sc.
C.V.R. பாபு B.Sc.
R.V. ராமகிருஷ்ணசாஸ்திரி B.Sc.
N. சீனுவாசன் B.E.

G. ரங்கராஜன் M.Sc.
A.R. கோடீஸ்வரராவ் M.E.
N.V S. சாஸ்திரி M.Sc.
D V. சுப்பிரமணியம் M.Sc.
S.S ராகவன் M.Sc.
K.U.M. பிரசாத் M.Sc.
பிரபாகரராவ் B.E
M R. லட்சுமண் M Sc.
N. ரமணி M Sc.
K.T. ஜோசப் B.Se.
M.R. அனந்தசயனம் M.E.
A. கோபாலகிருஷ்ணன் B.Sc.
V C. ஜோஷி Ph.D.
S. ஹரிஹரன் B Sc.
காசி. விசுவநாத் M.Sc.
R. சீதாராமன் B Sc.
K.J. நாயக் B.E.
K.V, கிருஷ்ணராவ் M.E.
H.R. பார்த்தசாரதி B Sc.
P. மதுசூதனன் நாயர் M.Sc.
N.D. ஜெயசங்கர் M Sc.
K.S. நாராயண அய்யர் M.Sc.
K. சுப்ரமணிய அய்யர் M.Sc
G. சத்தியநாராயணராஜ் B Sc
K. ராமசாமி B.E.
D. தட்சிணாமூர்த்தி B.E.
H.N. கிருஷ்ணசாமி B E.
S.R. சசிகாந்த் B E.
A.S. பெருமாள் M.Sc.
E.V.L.N. ராவ் Ph. D.
B. ராஜீவலோசனம் B.Sc
V.N. கிருஷ்ணமூர்த்தி M.Sc
ஆஷ்லிஷிமெய்ன் B.Sc.
S. வீரேசய்யா B.E.
M.K. மணி B.E.
V. அளகர்சாமி B.E.
K.P. கோபிநாதன் M,Sc.
K. அப்பாராவ் B E.
B V. சோமசேகர் B E.



S.S. கிருஷ்ணமூர்த்தி M.Sc.
S. சுப்பிரமணியம் B E.
G. பாஸ்கரராவ் M.Sc.
K. ராமசாஸ்திரி M.E,
V V. ஷான்பீ B.E,
P M. கோபிநாத் M.Sc.
B.V S சர்மா M Sc.
C.H. ராமச்சந்திரராவ் M.E.
V. முனிரத்தினம் B.E. (Hons)
K L. நாராயணா M E.
G. செலமா ரெட்டி M.E.
G. ரமணி M.Sc.
V N. வசந்தராஜன் M Sc.
T, நாராயணா B E.
N. ரகுநாதநாயக் B.E.
P. பிரபாகராவ் B.E,
K.P.R. பிரபு B.Sc.
B. ராதாகிருஷ்ணராவ் B.Sc.
M. மாதவசம்பிகீதாயா B.E.
H.V. வெங்கடகிருஷ்ணா B.E.
S விஜயகுமார் சாஸ்திரி B.Sc.
K. நாராயணபட் B.Sc.
K. விசுவநாத்அடிகா B Sc.
B. ரத்தினாகரபைரி B Sc.
M.R. பரணேஷ் B.E.
M.K. சதீஷா B.E.
A P. சிவபிரசாத் B.Se.
P சேஷசாயி B.Se.
A. செல்வராஜன் M.Sc.
N. கோபால் B E.
H.G. மாதவராஜ் M,Sc.
G.G. சண்ட் B E.
R.K. யூவத்சவா B.Sc.
K.V.N சர்மா B E.
M.V. ராமமூர்த்தி M.Sc.
V. ராமச்சந்திரன் B.Sc.
N. சேஷகிரி B.Sc.
N.S. ஜெயந்த் B.Sc.
H. ராமகிருஷ்ணா B.Sc.

G V. ஆனந்த் M Sc.
T.V. சத்தியநாராயணா B.Sc.
V P. நாராயணசாமி B E.
R. சீனுவாசன் B E.
B. தத்தகுரு B.Sc.
P. தத்தகுப்தா B Sc. (Hons)
N S. மகாதேவன் B E.
H.K. ராமப்பிரியன் B.Sc.
குமாரி A பிரதீமா B Sc.
G. ரமணி B.E (Hons)
R விசுவநாதன் B.Sc.
N.C. ஜகன் B Sc.
P.K. நாகேஸ்வரராவ் B.Sc.
R. சம்பத்குமார் Ph.D.
B சுகவனம் M.Sc.
T. கங்காதரய்யா B.E.
M D. இடியாரா B Sc.
D S R. சர்மா M.Sc.
K.G கிருஷ்ணமூர்த்தி B.E.
K.H. ராமா B.E.
R. தண்டபாணி B.Sc.
V மதுசூதனராவ் B.Sc.
D.M. பஜிலுல்லா B.Sc.
N. ராமச்சந்திரா B.Sc.
G புருஷோத்தமம் B.Sc.
A. ராமதாஸ், B,E.
K.V. ராமமூர்த்தி, B.E,
K. பாலசந்திரபட், B Sc.
S. சேஷாசலா, B.Sc.
R.K. சீனுவாசமூர்த்தி, B,Sc,
D.S. பதாக், B.Sc.
V. சர்மா, B.Sc.
S.H. வெங்கடேஷ், M.Sc.
K. நஞ்சுண்டசாமி, B.E.
குமாரி S. சீதாலட்சுமி, M.Sc.
,, பாக்கியலட்சுமி, M.A. Ph D.
,, K.S. லிங்ஸி, M.Sc.
,, D.E. லீலாவதி, M.Sc.
,, கிளாடிஸ் சுமித்ரா, M A.
,, E.J, ராமன், M.A.



,, J. அமிர்தவல்லி, M,Sc.
N. ராமன், B,Sc.
V. சீனுவாசன், M A,
S. சத்தாக்கு, B.E.
V. ராம்ஜி, M Sc.
K. நாகராஜ், B Sc,
K. சிவராமன், B Sc.
H.C. நாகராஜ், B.Sc.
A, அழகர்சாமி, B.E.
K. வெங்கடேஸ்வரன், B.Sc.
M.V. ராஜா, B Sc.
V. சீதாராமராவ், B.E.
R. ரவீந்திரன், B.E.
K. நாராயணன், B Sc,
V,N சுப்பாராவ், B.Sc.
R. சுந்தரேசன். B Sc,
R. கிருஷ்ணமூர்த்தி, B,Sc.
N. ரங்கநாதன், B.Sc.
R. ராமநாதன், B.Sc
K S L. நரசிம்மன், B.Sc.
C.S. கணேஷ், B Sc.
N, பார்த்தசாரதி, B Sc.
R. ஆனந்தராஜ், B.Sc,
K V, வெங்கடாச்சாரி, B.Sc.
K R சீனுவாசன், B.Sc.
B.P. சானி, M.Sc.
N. பத்மநாபன், B Sc. (Hons)
K N.N. ரெட்டி, M.Sc.
S.K ராமலிங்கம், M.Sc.
K. சந்தானம் M Sc.
J சுப்பிரமணியம், M.Sc
K. சங்கரராவ், M Sc.
V. பச்சையப்பன், M Sc.
N S. வெங்கடராமன், M.A.M.Sc
R. கண்ணன்குட்டி B.E.
K கிருஷ்ணசாமி, B E.
V.R. ரங்கராஜு, B.E.
C கந்தசாமி, M.Sc.
K. சீனுவாசராகவன், B E.
A. சண்முகசுந்தரம், B.E.

C.V. ராமகிருஷ்ணன், B.E.
T. நடராஜன், B.Sc.
P. சூரியநாராயணன், B.Sc.
C. ரவீந்திரன், B.Sc.
K.S. சங்கரன், B.Sc.
K.P.S பிரபு, B Sc.
D. ரவீந்திரா, M.E.
P. சத்தியநாராயணா, B.E.
M.S. கிருஷ்ணமூர்த்தி, B E.
R. பாலசுப்பிரமணியம், M.E.
C.V. வெங்கடசேஷய்யா, M.E.
S. ராமன், B.Sc.
N. ராமன், M.A., M.Sc.
S. ராகவன், M Sc.
N. விசுவநாதம், B. Sc.
V. V. S. சர்மா, B Sc
R. J சீனுவாசன், B. E.
M K. சிவலிங்கம், M. A.
குமாரி R. லீலா, M. A.
M. சீனுவாசன், B Sc.
P S. அனந்தராமன், B. E.
H. N. ராமச்சந்திரா, B E.
P. G. லட்சுமணன், B. Sc.
K. R. K. ஈஸ்வரன், M. Sc.
V. கணேசன், B. Sc.
ஜாப் S. எபனேசர், M. Sc.
T. S. ராமபத்திரன், B. Sc.
S. A. அக்கீம், B. E.
K. ரங்கா, Ph. D.
B யக்யநாராயணா, B. Sc.
M. S. ராதாகிருஷ்ணராவ், B Sc.
G R. வெங்கடகிருஷ்ணன், M. Sc.
T. A வெங்கடராம், B Sc.
D N அஜாரிகா, B. E.
N. ராகவேந்திரா, B. E.
S. R. யோகநரசிம்மம், M, Sc.
S. அய்யாசாமி, M. Sc.
குமாரி P. மாலதி, M Sc.
,, P. வசந்தா, B Sc
,, P. ராதா, M. Sc.



,, B. மீராபாய், M. Sc
G. K. வெங்கடராவ். B. Sc.
R. நடராசன், M. E
V, சுப்பிரமணியம். B. Sc.
V. சீராமுலு, B. E.
P. R. சீனுவாசன், M. Sc.
K. சீதரன், B. E.
S. குருராஜராவ், B. E.
D S. தேஷ்முக், M. Sc.
K. ராமமூர்த்தி ரெட்டி, B. E.
M. V பட், B. E.
J. கோபாலகிருஷ்ணன், M. Sc.
A K. மல்லய்யா, B. E.
M. Y. சுப்பிரமணியம், M. Sc.
J S. கினி, B. E.
K. தாமஸ்ஜேகப், B. Sc.
T. M. ராதாகிருஷ்ணன், M. Sc.
T, K. சந்தானம், B E.
C. P. பிரபாகரன், M Sc.
U. V. சவுதாரி, B E.
S. B. பாய், B Sc. (Hons)
K S. சீனுவாஸ், M. Sc.
M. K பிரேமராஜன், B Sc.
K. V. பட், M. Sc.
K R. ஹெக்டே, B. Sc.
K. சீனுவாசன், B. Sc. (Hons)
K. S சலபதிராவ், B Sc,
C. சூரியநாராயணா, B. Sc,
A. பாலசுப்பிரமணியம் B. Sc.
M. R. கஜபதி B E.
R ராமநாதன் B. Sc.
V B. K. சன்யாசிராவ் B. E.
R. S. சீனுவாசன் B. E.
M. V. ராவ் M. Sc.
G. ராமசாமி B. E.
H. S. முகுந்தா B. E.
B. சத்தியநாராயணா B. E (Hons)
K. மல்லிகார்ஜுனராவ் B. Sc.
C. H. பிரசாதராவ் B. Sc.
M, சாம்பசிவராவ் B. Sc.

K. M. காமத் M. Sc.
A. N. மோகன் B. Sc.
M. ரவீந்திரன் B. Sc.
திருநாராயண அய்யங்கார் B. Sc.
M. J. S. ரங்காச்சாரி M Sc.
S. ராஜசேகரன் B. Sc.
K. ரகுநாதன் M. Sc.
S. V. விஜயராகவன் B. E.
K. கோபாலன் M. Sc.
K. N. சுப்பிரமணியம் M. Sc.
M. சீனுவாசன் B Sc. (Hons)
V. கிருஷ்ணன் M. Sc.
M. S. வாசுதேவ் B E.
V. S. V. மணி B. Sc.
K. ரவீந்திரநாத் M. Sc.
S. R. ஜெயின் M. Sc.
D. V. சுப்பிரமணியம் M. Sc.
V. K. வாசுதேவன் உன்னி M. Sc.
குமாரி. V. வசந்தசேனா M. Sc.
,, சரோஜம்மா M. Sc.
T. S. கண்ணன் M. Sc.
S. R. சத்தியநாராயணா M. Sc.
குமாரி. D. K. பத்மா M. Sc.
N. பாலசுப்பிரமணியம் M. Sc.
H. C. மிருத்யன்ஜனேயா M. Sc.
குமாரி. S. K. விஜயலட்சுமம்மா M. Sc.
K. M. தாமோதரன் M. Sc.
N. மகாபத்ரா M. Sc.
R. ரங்கநாதன் B. Sc (Hons)
K. S. அய்யர். M. Sc
A. சீனுவாசன் M Sc.
T. அருணாசலம் M. Sc,
S ரங்கராஜு M. Sc.
G. ராமன்B . E.
V. சேஷகிரிராவ் M. E.
A. G நாராயணராவ் B. Sc,
M. அந்தோனிரெட்டி B.E.
M. அரிசங்கர் B. Sc.
P. K. போலோஸ் B. Sc
சீதாராம ஆசார்யா M, Sc,



L. R. சுப்பிரமணியம் M. Sc.
S. பட்டநாயக் B. Sc.
C. தேவநாதன் B. Sc. (Hons)
C. V. யோகாநந்தா M. E.
N. கிருஷ்ணமூர்த்தி M. Sc
K. K. கண்ணன், M. Sc,
B. V. தாசரதி. B. E.
K. கேசவன், B. Sc.
G. B. சுப்பையா, B. E.
ஜோசப்லோபோ, B. E.
C. K. சீதாராமன், B. Sc.
T. ஜிஷ்ணு, B E.
D. மல்லையா, B. E.
T. V. சுந்தரராஜமூர்த்தி, B. A., B. E.
C. குருராஜ், B E.
R. பார்த்தசாரதி B. Sc.
V. மித்தர் B Sc.
V. K. மாணிக்கசெல்வம் B. E.
S வெங்கடசுப்பன், B. E. (Hons)
V. நாகராஜன், Ph. D.
C. V. கல்யாணசுந்தரம், M. A.
R. பாலகிருஷ்ணன், B. Sc.
R. கண்ணப்பன், B E.
S. பாலசுப்பிரமணியம் B. Sc.
D S. சத்தியநாராயணா B. E.
S ராஜசேகரன் B. Sc.
R. S ராஜகோபாலன் M. Sc.
S. சந்திரசேகரன் B. E.
S. சீதரன் B Sc.
C. அனந்தநாராயணன B. Sc.
V. திருவேங்கிடாச்சாரி B. E.
R. S. பட்கோகேஷ்வர் B. E.
R. G. புவனேஸ்வரன் B. Sc.
R. மீனாட்சிசுந்தரம் B.E.
S. ராமப்பிரசாத் B. E.
V. பசுபதி B.Sc.
N. ராதாகிருஷ்ணன் B. E,
H. பரூமிக் B. E.
S. C முகோபாத்யாயா B.E.
Y. V. வெங்கடேஷ் B. E.

R ஜம்புநாதன் M. Sc.
H. R. வைத்தியநாத் B. Sc.
N. K. சீனுவாசன் B. Sc.
R. நாகராஜா M. Sc.

★

பட்டியலைப் பார்த்தனையா! பட்டதாரிகள், அதிலும் தொழிலியல், பொறியியல், மின் இயல் போன்ற விஞ்ஞானத்துறையின் பட்டங்கள், மிக நீண்டகாலமாகப் புதுமுறைத் தொழில் வளம் பெறாமல் பஞ்சத்தில் அடிபட்டுக் கிடந்தோர் நாட்டினைப் புதுப்பொலிவு பெற்றிடச் செய்திடும் பொறுப்பினை மேற்கொள்வதற்கான தகுதியும் திறமையும் பெற்றிருப்பவர்களின் பட்டியல். இருண்ட சிற்றூர்கள் ஒளி பெற்றிடவும், துவண்டிடும் தொழிலினை முறுக்கேற்றிடவும், மனிதனைக் கசக்கிப் பிழிந்திடும் கடின உழைப்பைக் குறைத்திட யந்திர வலிவினைத் துணையாக்கிடவும், பொருள்களின் தன்மையினை நுணுகிக் கண்டறிந்து பயனை மிகுதியாக்கிடவும், எந்த விஞ்ஞான அறிவுத்திறமை தேவையோ, அதனைப் பெற்றுள்ள அறிவாளர்களின் பட்டியல்! இவர்கள் காட்டாறுகளைக் கட்டுப்படுத்துவர், கரம்பைக் கழனியாக்குவர், கடல்நீரைக் குடிநீராக்கிடுவர், வேகம், வலிவாக மாறிட வழிசெய்வர்—இவர்களைப் பாரதியார் 'புதிய பிரம்மாக்கள்' என்பார்! அத்தகைய சிறப்பியல்பு பெற்றவர்கள்; பெற்றுள்ள திறமையினை மேலும் செம்மைப்படுத்திக்கொள்ள பயிற்சி பெற்றுக்கொண்டுள்ளவர்கள்—பெங்களூர் விஞ்ஞானத்துறைக் கல்லூரியில் பயின்று வருபவர்கள்! இவர் போன்றோரின் கரம் பட்டுப் பட்டுத்தான் நாடு செல்வபுரியாகிட வேண்டும். இவர் போன்றோரின் தொகை பெரும் அளவு பெற்றதனால் பிரிட்டனும் ஜெர்மனியும், ரஷியாவும், அமெரிக்காவும், இத்தனை வளர்ச்சிகண்டன. ஆனால்......!

பெருமிதமல்லவா கொள்ளவேண்டும், பழமைப் பிடியிலே சிக்கிக் கிடந்திட்ட நாட்டை மீட்டிடத் திறமை பெற்றுள்ளவர்களின் பட்டியலைக் காணும்போது; புதிய உற்சாகமும் நம்பிக்கையுமல்லவா பெறவேண்டும்; அதற்கு மாறாக இந்தப் பட்டியலையும் காட்டிவிட்டு, பெருமூச்செறிவது ஏன்! ஆனால்......என்று இழுப்பு எதற்காக என்று கேட்கிறாய்; புரிகிறது.



இவர்களின் தகுதியையும் திறமையையும், இவர்களால் நாடு பெற இருக்கும் பெருமையையும் வளர்ச்சியையும் எண்ணும்போது, எல்லோருக்கும் ஏற்படுவது போல எனக்கும் இனிப்பான உணர்ச்சிதான் எழுகிறது. என்றாலும்......

நான் இந்தப்பட்டியலைத் தந்துள்ளதன் நோக்கம், விஞ்ஞானத் துறையினரின் தொகை வளர்ந்து வருவதனைக் காட்டுவதற்காக இ ப்பின், மகிழ்ச்சி குறைவின்றிக்கொள்வேன். நான் இந்தப் பட்டியலைத் தந்திருப்பது, அதற்காக அல்ல, எப்படிப்பட்டவர்களின் கருத்தையெல்லாம் துச்சமென்று மதித்திடும் துரைத்தனம் நடத்தப்படுகிறது, எவ்விதமான தகுதி திறமை படைத்தவர்களெல்லாம் ஏனோ தானோக்கள் ஆக்கப்பட்டுவிடுகின்றனர் இந்த ஆளவந்தார்களால் என்பதை அறிவதனால் எனக்கு ஏற்பட்டுள்ள வேதனையைப் பங்கிட்டுக் கொள்வதற்கு உன்னை அழைக்கவே இந்தப் பட்டியலைக் காட்டினேன்.

எந்த அரசு எனினும், எம்முறையில் நடாத்தப்படும் அரசு எனினும் அந்த அரசு அந்நாட்டு நல்லறிவாளர்களின் நட்புறவு பெற்றிட வேண்டும்—நாற்படையினும் மேலானதோர் நற்படையாகிடும் அந்த நட்புறவு. சொல்லேர் உழவர் என்பது கவிதை புனைவோரை மட்டும் குறித்திடுவதாகாது...அறிவுக் கழனியில் பணியாற்றிடும் படைப்பாளர்கள் அனைவரையும் குறிப்பதாகும். அத்தகைய அறிவாளர்களைப் புறக்கணிக்கும் அரசு, புறக்கணிக்கப்பட வேண்டிய அரசாகிவிடும்—ஓர் நாள். இவை, ஆன்றோர் மொழிந்தவை. இன்றுள்ள ஆளவந்தார்களோ, ஏன் அடிக்கடி, எதற்கெடுத்தாலும் ஆன்றோர், சான்றோர் என்றெல்லாம் அழைக்கின்றீர்கள்; நாங்கள் இருக்கின்றோமே, போதாதோ என்கிறார்கள்! சொல்வது மட்டுமல்ல, அறிவாளர்கள் கூறுவதை மருந்துக்கும் கொள்ளமாட்டோம் என்று உறுதியாக நிற்கின்றனர்—கற்பாறை போல!!

நான் குறிப்பிட்டேனே ஒரு பட்டியல்—விஞ்ஞான வித்தகர்களின் பெயர் வரிசை—இது மேலும் நீண்டதாகிடும். வேறு பற்பல கல்லூரிகளில் உள்ளவர்களின் பெயர்களையும் சேர்த்தால் நான் தந்துள்ள பட்டியல், தயாரித்தால் கிடைக்கக்கூடிய மிகப் பெரிய பட்டியலில் ஒரு சிறு துண்டு.

இவர்கள், மொழி வெறி, வகுப்பு வாதம், ஜாதிப் பித்து, கட்சி மாச்சரியம், பதவிமோகம், வன்முறையில் நாட்டம், குழப்ப வாதம், பிளவு மனப்பான்மை போன்ற எவற்றினுக்கும் பலியாகிவிடக் கூடியவர்கள் அல்லர். அறிவாலயத்தில் உள்ளவர்கள். எதற்கும், தாமாக முன்னாலே வந்து நிற்கும் இயல்பினருமல்லர். சந்தடி, சச்சரவு விவாதம் ஆகியவைகளுக்கு அப்பால் நெடுந்தொலைவில் இருந்துகொண்டு, மனநிம்மதியுடன் நுண்ணறிவு பெற்று வருபவர்கள். உனக்கா எனக்கா! பார்த்துவிடலாம் வா! என்ற வம்புக்கும் போட்டிக்கும் வருபவர்களல்லர், தமக்கென்று அமைந்துள்ள கோட்டத்தில் இருந்துகொண்டு, அறிவாற்றலைப் பெற்றுக்கொண்டு வருபவர்கள்—பிறகு அதனை நாட்டு வளர்ச்சிக்குப் பயன்படுத்த.

அத்தகைய அறிவாளர்கள், கூடிப் பேசி, பிரச்சினையின் பல கோணங்களையும் கண்டறிந்து, ஒரு கருத்தைக் கொண்டு, அதனை அரசு நடாத்திடும் லால்பகதூர் அவர்களுக்குத் தெரிவித்துள்ளனர் — நல்ல விளக்கத்தையும் இணைத்து.

இந்தியை இந்தியாவின் ஆட்சிமொழி ஆக்கக்கூடாது என்பதும், ஆங்கிலத்தை அகற்றிவிடக் கூடாது என்பதும் அவர்கள் லால்பகதூருக்குத் தெரிவித்திருக்கும் கருத்தின் சுருக்கம்.

அரசியல் வாதிகள், ஆளுங் கட்சியைக் குறை கூற, அரசியல் ஆதாயம் தேடிக்கொள்ள, மொழிப் பிரச்சினையைக் கிளப்பிவிட்டு விடுகிறார்கள் என்று ஆளவந்தார்கள் அடித்துப் பேசுகிறார்கள்—தாமே அரசியல்வாதிகள் என்பதை மறந்து; அண்ணல் காந்தியாரின் பெயர் கூறி—அரசியல் ஆதாயம் தேடிக் கொண்டவர்கள் என்பதனையும் மறந்து.

இது பொருளற்ற குற்றச்சாட்டு என்ற போதிலும், இதனைக்கூடப் பட்டியலில் காணப்படுவோர்மீது வீசுவது இயலாததாகும். ஏனெனில், இவர்கள் ஒவ்வொருவரும் பயிற்சி பெற்றுப் பயன் தரும் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றுள்ளவர்கள்—அரசியல் அங்காடியில் நுழைந்திட வேண்டிய நிலையில் உள்ளவர்கள் அல்லர்.

இத்தகைய அறிவாளர்களின் பேச்சைத் தட்டி நடக்கக்கூடாது, இத்தகையவர்களை அலட்சியப்படுத்தக்



கூடாது என்று. ஆளவந்தார்கள் மேற்கொண்டாக வேண்டிய நெறி, அதிலும் குடியாட்சிமுறை காரணமாக ஆளவந்தார்களாகிவிட்டவர்கள், இந்த நெறியைக் கடைப்பிடிக்கப் பெரிதும் கடமைப்பட்டவர்கள். ஆனால், லால்பகதூர் என்ன கருதுகிறார்! பட்டியலைப் பார்த்து என்ன கூறுகிறார்!! லால்பகதூர் இருக்கட்டும், பெரிய பதவியில் உள்ளவர்; உனக்கு அறிமுகமான மண்டலத்தைக் கேட்டுப் பாரேன்; பட்டியலைக் காட்டிப் பாரேன்! ஒரேவரியில் பதில் வரும், "இவர்கள் கூறிவிட்டால் போதுமா!" என்று. திகைத்து நிற்பாய், அவர் தொடருவார், ''இவர்களுக்கு என்ன தெரியும்?'' என்பார்! கணைகள் தொடரும், சில நூறுபேர் கூறுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் இலட்சோப இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். தெரியுமா?'' என்பார். இறுதியாக, ''பொதுமக்களுக்கு எது நல்லது என்பதுபற்றி இந்தப் புத்தகம் புரட்டிகளுக்கு என்ன தெரியும்? சதா பொது மக்களோடு பழகிப் பழகி, தொண்டாற்றித் தொண்டாற்றி, அதற்கே எம்மை அர்ப்பணித்துக்கொண்டுவிட்ட எமக்கன்றி, இந்த B. A. க்களுக்கும், M. A. க்களுக்கும், B. Sc. களுக்கும், M. Sc களுக்கும், B. E க்களுக்கும், M. E க்களுக்கும், Ph. D. களுக்குமா தெரியப்போகிறது?'' என்று கேட்பார். அவருடைய கோபம் அந்த அளவோடு அடங்கிப் போய்விட்டால், தம்பி! நீ தப்பிப் பிழைக்கலாம்; இல்லையோ, ஆரம்பிப்பார் மளமள வென்று; படித்தவனெல்லாம் அறிவாளியா! படிக்காத மேதை இல்லையா, படித்தால் மட்டும் போதுமா! படித்தவன் படும்பாடு தெரியுமா? எத்தனை B' A. வேண்டும். சோறு போட்டால் போதும் விழுந்து கிடப்பார்கள் காட்டிய இடத்தில்! - இப்படிப்பட்ட துந்துபி தொடரும். காரணம் என்ன, அவருடைய ஆர்வத்துக்கு? அவருடைய கண்களுக்கு மிகப் பெரியவராக, மிகப்பெரிய இடத்தில் உள்ளவராக உள்ளவர்களிலே பலர், படிக்காமலேயே பாராளும் பக்குவம் பெற்றவர்களாகி விட்டது தெரிகிறது. தெரியும்போது, படித்தவன் என்றால் என்ன, அதற்காகத் தனி மதிப்புத் தர வேண்டுமா என்ன! என்று தோன்றுகிறது. பள்ளிக்கூடத்துக்கும் தனக்கும் நடைபெற்ற 'ஒத்துழையாமை' இயக்கம் வேறு அவருக்கு நினைவிற்கு வந்துவிடுகிறது. வந்ததும் வாயிலிருந்து வார்த்தைகள் பொறி பொறியாகக் கிளம்புகின்றன.

படித்தவர்கள் சிறுபான்மையினர் — மற்றவர்களே பெரும்பான்மையினர் — பெரும்பான்மையினர் ஆட்சி நடத்தும் உரிமை பெறுவதே ஜனநாயகம் என்று வாதாடியவர்களே உண்டு! அவர்களைக் காணும் நிலை எனக்கு ஏற்பட்டதுண்டு.

மதம், இனம், மொழி என்பவை காரணமாக, சிறுபான்மையினர் இருப்பது தெரியுமல்லவா! — அந்தப் பட்டியலில்தான் மண்டலம் சேர்த்து விடுவார், நான் காட்டிய பட்டியலையும்! அதனால்தான், 'ஆனால்' என்று பெருமூச்செறிந்தேன்.

இன்று நாடு உள்ள நிலைமையில் பட்டதாரிகள் சிறுபான்மையினர் - எண்ணிக்கைப்படி. அதிலும் நான் காட்டிய விஞ்ஞானத்துறைக் கற்றறிவாளர்கள் மிகச் சிறிய சிறுபான்மையினர். எனவே அவர்கள், செல்வாக்கற்ற நிலையில் வைக்கப்பட்டு விடுகின்றனர்—பொதுமக்களால் அல்ல—பொதுமக்கள் பெயரைக் கூறிக்கொண்டு ஆட்சி பீடம் பிடித்துக்கொள்பவர்களால். ஒருநாள் வந்தே தீரும் —படித்தவர்கள் பெரும்பான்மையினர் என்று நாடு பெருமையுடன் கூறிக் கொள்ளக்கூடிய நாள். இப்போது நல்ல வளர்ச்சி உள்ள நாடுகளில் அதுதான் நிலை. அந்த நிலைநோக்கி நம் நாடும் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைய சிறுபான்மையினர் நாளைய பெரும்பான்மையினர் ஆகப்போவது திண்ணம். என் மகன் B. A. என்று கூறிப் பெருமைப்படும் தகப்பனார், ஆத்திச்சூடியோடு தமது படிப்பை முடித்துக் கொண்டவராக இருக்கலாம்; ஆனால், அவருக்குத் தம் மகனை நன்றாகப் படிக்கவைக்க வேண்டுமென்ற ஆர்வம் எழுந்தது.

நல்லரசு, சிறுபான்மையினர் எண்ணிக்கையில், என்ற கணக்கு மட்டும் பார்த்து, அவர்களின் பேச்சைத் துச்சமென்று தள்ளிவிடக்கூடாது. சொல்லப்படுவதன் பொருள் பொருத்தம், ஏற்றம் கண்டறிந்து, கொள்வதா தள்ளுவதா என்று முடிவு செய்யவேண்டும்—இந்தி கூடாது என்று சொல்பவர்கள் சிறுபான்மையினர்—ஆகவே, அவர்கள் பேச்சிலே எவ்வளவு நியாயம் இருந்தாலும், ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பது நல்லாட்சி என்ற தனிச் சிறப்பைப் பெறமுடியாது.

அதுபோலவே, நாம் மிகச் சிலர் கூறி என்ன பயன்? ஆட்சியிலுள்ளோர் அதனை மதித்து ஏற்றுக் கொள்ளவா



போகிறார்கள் என்ற ஐயப்பாடு கொள்ளாமல், நாம் உணர்ந்ததை உரைப்பது நமது கடமை என்ற பொறுப் புணர்ச்சியுடன் பெங்களூர் விஞ்ஞானத் துறைக் கல்லூரியினர் மொழி பற்றிய தமது கருத்தினை லால்பகதூருக்குத் தெரிவித்தது கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று இவர்கள் கூறிடும் கருத்தினை, 'சிறுபான்மையினர்' கருத்து என்று லால்பகதூர் கருதிவிடக்கூடும். ஆனால், இந்தக் கருத்து இதுவரையில் வாளாயிருந்த எத்தனை எத்தனையோ இலட்சக்கணக்கானவர்களை ஈர்த்துக் கொண்டுவிடும் என்பதில் ஐயம் இல்லை. ஏனெனில் ஆளவந்தார்களின் கட்சியிலேதான் பலர், அருவருப்பு, அச்சம் காரணமாக, அறிவாளர்களின் கருத்தை மதித்திட மறுக்கின்றனர். பொதுமக்கள் அந்த விதமான போக்கில் இல்லை. அவர்களுக்கு அறிவாளர்கள் பற்றியும் தெரியும், ஆளவந்தார்களின் ஆலவட்டங்களைப் பற்றியும் நன்றாகத் தெரியும். கேட்கலாமே அவர்களின் பேச்சை, சிற்சில வேளைகளில்;

> 'யாரு! கொளந்தையப்பனா! தெரியுமே! தெரியும்!!
> கொளத்தங்கரைத் தெரு! அடே அப்பா! அது சின்ன
> புள்ளையிலே ஊர்லே போட்ட ஆட்டம் கொஞ்சமா!
> அது அப்பன் பொத்தகம் வாங்கப் பணம் கொடுத்தா,
> ''இது பொட்டலம் வாங்கிட்டுப் பொடியன்களோட
> பொழுதை ஓட்டும்''

என்று ஆரம்பித்து, வாழ்க்கை வரலாற்றை விளக்குவதை.

பொதுமக்கள், கூறப்படும் கருத்தை, கவனிக்க மறுப்பதில்லை. ஆகவே, நமது கருத்து நாடாள்வோரால் தள்ளப்பட்டுவிடினும் நாட்டினரால் வரவேற்கப்படும் என்ற நம்பிக்கையுடன். விவரம் அறிந்தவர்கள், விளக்கம் பெற்றவர்கள், உண்மையை அஞ்சாது உரைத்திடவேண்டும். உரைத்து வருகின்றனர்.

கருத்தளிப்பவர் சிறுபான்மையினரா பெரும்பான்மையினரா என்பதல்ல முக்கியமாகக் கவனிக்கப்படத்தக்கது. அளிக்கப்பட்ட கருத்து ஏற்புடையதா அல்லவா என்பதுதான் மிக முக்கியம்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்ற வள்ளுவர் வாக்கு, இதற்கும் சேர்த்துத்தான் என்பதை உணரலாம்.

ஆனால், நமது கருத்தை எடுத்துக் கூறிவிட்டோம், நமது கடமை முடிந்தது என்ற அளவுடன் இருந்துவிட்டால் பயன் இல்லை. அதனைச் சிறுபான்மையினர் கருத்து என்று கூறுபவர் வெட்கித் தலைகுனியும்படி, பெரும்பான்மையினரின் கருத்து ஆக்கிக் காட்டிட வேண்டும். உண்மையை உணருவது, உண்மையை உரைப்பது என்பதுடன், உண்மையை நிலைநாட்டுவது என்பது இணையவேண்டும்.

என்ன கூறினார் மண்டலம்? நினைவிற்கு வருகிறதா! பொதுமக்களிடம் தமக்குத்தான் தொடர்பு இருக்கிறது, இந்தப் பட்டதாரிகளுக்கு அல்ல என்றார். தமக்குப் பொதுமக்களிடம் தொடர்பு இருப்பதால், பொதுமக்களின் விருப்பம் எது, அவர்களுக்கு நல்லது எது என்பது தமக்கே தெரியும் என்று மார்தட்டுகிறார். அந்தப் பொதுமக்கள் தொடர்பை, இந்த அறிவாளர்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்; இயலாததா? மண்டலம் கூறுகிறாரே எனக்குப் பொதுமக்கள் தொடர்பு உண்டு என்று. அந்தப் பொதுமக்கள் விஞ்ஞானத் துறை பயில் அறிவாளர்களை வெறுத்தா ஒதுக்கி விடுவர்? அவர்களுக்கு உள்ள குறையே, இந்த அறிவாளர்கள் பழகமாட்டேன் என்கிறார்களே என்பதுதான்! ஆகவே, பெங்களூர் விஞ்ஞானக் கல்லூரி பயில் வித்தகர்கள், தாம் கொண்டுள்ள கருத்தினைச் சிறுபான்மையினரின் கருத்து என்று ஆளவந்தார்கள் அலட்சியப்படுத்தினால் மனம் தளர்ந்துவிடாமல், இக்கருத்தினைப் பெரும்பான்மையினர் கருத்தாக்கிக் காட்டுவோம் என்ற உறுதி எடுத்துக்கொண்டு பொது மக்களிடம் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு, கருத்தினைப் பரவிடச் செய்திடவேண்டும். முயற்சியில் ஈடுபட்டால், எத்தனை எளிது என்பதும், எத்துணை சுவை உளது என்பதும், என்னென்ன பயன் விளைகின்றன என்பதனையும் அறிந்துகொள்ளலாம். அதிலும் இந்த மொழிப் பிரச்சினையைப் பொருத்தமட்டில் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்கள் செய்யவேண்டிய பணி நிரம்ப உளது.



நெடுநாளைக்கு முன்பே இப்பணீ துவக்கப்பட்டிருக்க வேண்டும். முன்பே இப்பணி நடைபெற்றிருக்குமானால் இப்போது சிறுபான்மைக் கருத்து என்ற பேச்சுக்குக்கூட இடம் ஏற்பட்டிருக்காது. ஆனால், அந்தப் பேச்சு ஏற்பட்டுவிட்டதாலேயே, மனச்சோர்வு அடைந்துவிட வேண்டும் என்பது இல்லை; ஆலின் விதை மிகச் சிறிது!!

சென்னை சட்டமன்றத்தில் தி. மு. கழகத்தினரின் எண்ணிக்கை 15! இப்போது 50! எனினும், எண்ணிக்கை 15 என்றிருந்த போதும், நாம் மிகமிகச் சிறுபான்மையினராக இருக்கிறோம் என்ற தயக்கம் காட்டியதில்லை; சரியென்று பட்டதனைச் செப்பினோம். அந்தச் செயலை எள்ளிநகையாடியோரும் உண்டு; ஆனால், அந்தநிலை இன்றி ஓர் வளர்ச்சி நிலையை, கழகத்துக்குத் தந்திருப்பதனை நாடு அறியும்; நல்லோர் மகிழ்கின்றனர்; மற்றையோர் மனத்தாங்கல் கொண்டுள்ளனர். ஒரே மரத்தில் ஒரு கிளையில் குயிலும் மற்றோர் கிளையில் காகமும் இருக்கின்றன; மரம் என்ன செய்யும்! அதுபோலச் சமூகத்தில் நமது கழக வனர்ச்சி கண்டு மகிழ்ச்சி கொள்பவர்களும் இருக்கிறார்கள். மல்லாந்து படுத்துக்கொண்டு துப்பிக்கொள்பவர்களும் இருக்கிறார்கள்.

அன்றும் இன்றும், கழகம் கூறுவதை மறுப்பதும், மறைப்பதும், திரிப்பதும், குறைப்பதும், குலைப்பதும் தொழிலாக்கிக் கொண்டவர்கள் உண்டு; அன்று மறுத்துக் கொண்டிருந்தவர்களிலே சிலர் இன்று மனம் மாறி நமது கருத்தை ஆதரிக்க முற்பட்டுள்ளனர்; அன்று நமது அரணாக நின்றவர் சிலர் நினைப்பு மாறியதால் இன்று நமது மாற்றார்கை அம்புகளாகியுமுள்ளனர்; பூத்தது உதிர்வதும், பெற்றது மடிவதும், சேர்த்தது ஒழிவதும்போல என்று கொள்வோம். மொத்தத்தில் கணக்கெடுத்தால் 'சிறுபான்மை' என்றிருந்த கணக்கு நாம் மகிழத்தக்க மாற்றம் பெற்றிருப்பது தெரியும். இப்போதும் 'சிறுபான்மை' என்று எண்ணிக்கைதான் சட்டமன்றத்தில். ஆனால், 15—50 ஆக வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சி கண்டு, மாற்றுக்கட்சியினர் தமது முறைகளை மாற்றிக்கொண்டனரா என்றால், இல்லை; வேகமாகி இருக்கிறது. அன்றுபோலவே இன்றும், இட்டுக்

கட்டுவதும், திரித்துக் கூறுவது நடந்தபடி இருக்கிறது, அன்று— 1958-ல்—நான் இந்தியை ஏற்றுக் கொண்டு கையெழுத்துப் போட்டுவிட்டேன், சட்டசபை கமிட்டிச் கூட்டத்தில் என்று, ஒரே புகார்—வதந்தி — தப்புப் பிரச்சாரம்—பரபரப்பு.

எனக்குத் தம்பி! அதிலே ஒரு மகிழ்ச்சி—என்னைப் பற்றி 'விஷமம்' செய்யப்படுகிறதே என்பது குறித்து வரவேண்டிய எரிச்சல்கூட எழவில்லை; இந்திக்கு எத்தனை அளவு எதிர்ப்பு இருக்கிறது, அதனை எவராவது ஆதரிக்க முனைகிறார்கள் என்று கூறப்பட்டால், மக்கள் எத்தனை ஆத்திரம் கொள்கிறார்கள் என்பதனை அறிந்து மகிழ்ந்தேன். பொறுமையாகக் காத்துக்கொண்டிருந்தேன், கட்டிவிடப்பட்டதை உடைத்துப்போடக் கிடைத்தது வாய்ப்பு.

"கூட்டத்திற்குத் தாங்களும் சென்று விட்டு அங்குக் கூறப்பட்ட கருத்துக்களையும் ஒத்துக் கொண்டுவிட்டு, கையெழுத்தும் போட்டுவிட்டு வெளியே வந்து வேறுவிதமாகச் சொல்கிறார்கள்.''

என்று பேசினார் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர்;

''அதிலே கையெழுத்துப் போடப்பட்டது என்று சொல்வது தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்''

என்று நான் குறுக்கிட்டுக் கூறினேன்.

''அந்தக் கூட்டத்திற்கு யார் யாரெல்லாம் வந்திருந்தார்கள் என்று தெரிந்து கொள்வதற்காகக் கையெழுத்து வாங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்''

என்று மேலும் கூறினார் அந்தக் காங்கிரஸ் உறுப்பினர்.

''அவ்விதமும் கையெழுத்து வாங்கவில்லை என்பதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

என்று நான் கூறினேன்.

*1958*, பிப்ரவரி *12*ம் நாள் சென்னை சட்டமன்றத்தில் இந்த நிகழ்ச்சி; அதுவரையில், விடாமல் ஒரு திங்கள் மேடைக்கு மேடை, அண்ணாதுரை இந்தியை ஏற்றுக்



கொண்டு கையெழுத்துப் போட்டுவிட்டான் என்றுதான் பேச்சு! பேச்சா! இடிமுழக்கம்! பெரியாரின் பேருரை! கேலிப்படம்! கடாவுதல்! எல்லாம்!! தெரிந்த வித்தை அவ்வளவும்!! மறுநாளும் எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது சட்டசபையில்.

''நம் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், நான் கையெழுத்துப் போட்டுவிட்டதாகச் சொன்னதாக நான் பத்திரிகையில் பார்த்தேன்.'' (நான்)

''நான் எந்தக் கூட்டத்திலும் கையெழுத்துப் போட்டதாகச் சொல்லவில்லை''

(அமைச்சர் சுப்பிரமணியம்)

''நிதி அமைச்சர் சொன்னதாகப் பத்திரிகையில் வந்தது. பத்திரிகையிலே வந்தது மட்டுமல்ல; நேற்றைய தினம் பேசிய கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் கையெழுத்துப் போட்டுவிட்டு இப்போது இல்லையென்று சொல்கிறாரே என்று ஆழ்ந்த வருத்தத்தோடு கேட்டார்.'' (நான்)

''திருத்திக்கொண்டேன் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்''

(கனம் அனந்தநாயகி அம்மையார்)

புகார் கிளப்பிய இதழ்கள், அது பொருளற்றது என்பதை விளக்கிடும் சட்டசபை நிகழ்ச்சியை எடுப்பாக வெளியிட்டனவா? இல்லை! அதற்கா அவை? இட்டுக் கட்டுகளோ இருப்பதை மறைப்பவைகளோ இவைகளுக்கு இடம் கொடுத்தாகிலும் என்னைக் குறைகூற எண்ணுபவர்களுக்கு இடம் நிறைய!

இந்த 'இட்டுக்கட்டு' கூட, எனக்கு ஒரு சாதகமாக அமைந்தது. உண்மை விளங்கச் செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது மட்டுமல்ல; மொழி விஷயமாக கழகக் கொள்கை எது என்பதனைச் சரியான முறையில் பதிவு செய்துகொள்ளவும் வழி கிடைத்தது.

*1958* மார்ச் *11*-ம் நாள் அதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

"This House is of firm opinion that Part 17 of the Constitution of India should be suitably amended so as to retain English as the official language of the Union Government without any time limit."

காலவரையின்றி இந்தியப் பேரரசில், ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக நீடிக்கச் செய்வதற்கு ஏற்ற முறையில், இந்திய அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைத் திருத்த வேண்டுமென்று இந்த மன்றம் உறுதியான கருத்து கொண்டிருக்கிறது.

என்ற தீர்மானத்தைக் கழகம் கொடுத்தது. இதற்கு ஆதரவாக 14 வாக்குகள்; எதிர்த்து 121. கழகம் கொடுத்தது தோற்கடிக்கப்பட்டது; ஆனால் நாடு பதிவு செய்து கொண்டது, கழகம் மொழிபற்றிக் கொண்டுள்ள கொள்கை என்ன என்ற உண்மையை.

அதே சட்டமன்றத்தில் 1963ம் ஆண்டு ஆகஸ்ட் எட்டாம் நாள்,

'This House recommends to the Government to convey to the Union Government that this House is of opinion that steps should be taken to recognize all the fourteen languages enumerated in the 8th schedule of the constitution as the official languages of the Union under article 343 and till such time English shall be retained for all official purposes of the Indian Union."

இந்திய அரசியல் சட்டத்தில் எட்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 14-தேசிய மொழிகள் எல்லாம் பேரரசின் ஆட்சி மொழிகளாக ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும், அதுவரையில் 343-ம் விதிமுறையின்படி, இந்தியப் பேரரசின் அதிகாரக் காரியங்கள் அனைத்துக்கும் ஆங்கிலத்தைப் பயன் படுத்துவது நீடிக்கப்படவேண்டும் என்பதனை மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று, (மாநில) சர்க்காருக்கு இந்த மன்றம் சிபாரிசு செய்கிறது.



என்ற தீர்மானம் கொண்டு வந்தது கழகம். ஆதரவாக 44-வாக்குகள்; எதிர்த்து 84.

இம்முறையும் வெற்றி இல்லை. ஆனால், கழகக் கருத்துக்கு ஏற்பட்ட வளர்ச்சி தெரிகிறதல்லவா! 'சிறுபான்மை' வளருகிறது என்பதற்கு இந்தச் சான்று.

1958-ல் மொழிபற்றிய கழக யோசனையை வெளியிட்டவர் தோழர் அன்பழகன்; 1963-ல் தோழர் மதியழகன்.

எனவேதான் கூறுகிறேன் சிறுபான்மையினரின் கருத்து என்றால், ஆட்சியினர் அலட்சியப்படுத்திவிடுவதும் தவறு, அந்தக் கருத்து எப்போதுமே சிறுபான்மையினர் கருத்தாகவே இருந்துவிடுமோ என்று அந்தக் கருத்தினர் அச்சப்படுவதும் தவறு. நம்பிக்கையுடனும், நல்ல முறையிலும் பணியாற்றினால், சிறுபான்மையினர் கருத்து என்று கூறப்படுவதையே, நாட்டு மக்களின் கருத்து என்ற அளவுக்கு வளர்ச்சி பெறச் செய்வதில் வெற்றி பெற்றிட முடியும். பெங்களூர் விஞ்ஞானத்துறை பயில்வோர் இதனை உணர்ந்து அதற்கு ஏற்றபடி தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுபான்மையினர் என்பது குறித்து மிக அதிகமான அளவு சிந்தனையைச் செலுத்த வேண்டிய வாய்ப்பு எனக்கு, துவக்கநாள் தொட்டு. சிறுபான்மை என்பதற்கு எண்ணிக்கையை மட்டுமே காரணமாகக்காட்டுகிறார்கள்; அந்த முறையிலே மட்டும் கவனித்தால் அந்தப் பிரச்சினையின் முழு உண்மை துலங்காது.

ஜாதி, மதம், மொழி அடிப்படையில் அமைந்துவிடும் சிறுபான்மையினருக்கும், ஜாதி, மதம், மொழி, அரசு—முறை, ஆகியவைபற்றிய கருத்தினைக் கண்டறிந்து எத்தகைய கருத்தினை எவரெவர் பெற்றுள்ளனர் என்று கணக்கெடுத்து, அதிலே பெரும்பான்மை—சிறுபான்மை என்று வகைபடுத்திப் பார்ப்பது பிரச்சினையின் உண்மையை உணர்ந்துகொள்ள உதவும்.

மதம், ஜாதி, மொழி என்பனவற்றின் காரணமாக அமைந்துவிடும 'சிறுபான்மை' அதிகமான அளவிலோ, அதிகமான வேகத்திலோ வளர்ந்து 'பெரும்பான்மை' ஆகிவிடுவது இயலாத காரியம்.

ஆனால், கருத்து அடிப்படையில் காணப்படும் 'சிறுபான்மை' என்பது அவ்விதமல்ல, வேகமாக மாறி' வளர்ந்து, பெருமபான்மை ஆகிவிடக்கூடியது.

பெரும்பான்மையோர், கூடித் தீர்ப்பளித்துத்தான் கிரேக்கப் பெருமகனார் சாக்ரடீசுக்கு நஞ்சளித்துக் கொன்றனர்; அவருக்காக அந்த மன்றத்தில் சிறுபான்மையோர்தான் பரிவுகாட்டினர்.

ஆனால், சாக்ரடீஸ் உயிரோடு இருந்தபோது இருந்த சிறுபான்மை, அவர் மறைந்ததும் வேகவேகமாக வளர்ந்தது, பெரும்பான்மையாகிவிட்டது! பெரும்பான்மையா! கிரேக்கம் முழுவதும் அவர் சார்பில்! கிரேக்கத்தோடும் நின்று விடவில்லை, அறிவுலகம் அவ்வளவும் அவருக்கே!!

இவை குறித்தெல்லாம் எண்ணவும், இவைகளில் சிலவற்றைக் குறித்துப் பேசவும் இம்முறை டில்லியில் எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

இந்தி எதிர்ப்பு உணர்ச்சியே சிறுபான்மையினரின் உணர்ச்சி என்பதுதானே டில்லிப் பேரரசின் கணக்கு. அந்த முறையில், 'சிறுபான்மை'யினரில் ஒருவன் என்ற நோக்கத்துடனேயே என்னை அங்குக் கவனிக்கிறார்கள்.

அந்நிலையில் சிறுபான்மையினர் பிரச்சினை பற்றிப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டது, மகிழ்ச்சி தந்தது.

டில்லிப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள செயின்ட் ஸ்டீபன் கல்லூரி மாணவர் மன்றத்தில் பேசும் வாய்ப்புப் பெற்றேன். ஜனநாயகத்தில் சிறுபான்மையோர் பிரச்சினை என்பது குறித்துப் பேசினேன். கல்லூரித்தலைவர் சர்க்கார் என்பவரும், ஆசிரியர்களும் மாணவர்களும் குழுமியிருந்த அந்தக் கூட்டத்தில் பேசச் சென்ற என்னுடன் நமது மனோகரன், ராஜாராம், செழியன், முத்து, ராமபத்திரன் ஆகியோரும் வந்திருந்தனர்.

டில்லி செயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரி தரமானது என்று கூறப்படுகிறது. ஆனால், கல்லூரி முதல்வர், சென்னை கிருத்தவக் கல்லூரி, லயோலா கல்லூரி ஆகியவைபற்றிப் பெருமிதத்துடன் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார்.



இங்கு நான் கல்லூரிகளுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும்போது, கல்லூரி முதல்வர்கள் என்னிடம் தனியாக, அரசியல் பேசாதிருக்கும்படி கேட்டுக்கொள்வார்கள்—ஒருவிதமான அச்சத்துடன். அன்று செயின்ட் ஸ்டீபன் கல்லூரி முதல்வர் அதுபோல ஏதும் கூறவில்லை. உற்சாகமாக வரவேற்று, நண்பர்போல் பழகினார்.

மாணவர்கள், பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்திருப்பவர்கள் என்பதை அறிந்துகொண்டேன். துளியும் எதிர்பாராத நிலையில் இந்த வாய்ப்புக் கிடைத்தது, காரணம் என்ன இதற்கு என்று அறிந்துகொள்ள இயலவில்லை—துவக்கத்தில்.

அந்தக் கல்லூரி மாணவர் இருவர் ஒருநாள் மாலை என்னைக் கண்டு தங்கள் கல்லூரியில் சொற்பொழிவாற்ற வரவேண்டும் என்று அழைத்தபோது, எனக்கு வியப்பாக இருந்தது. வருவதற்கு இசைவு தெரிவித்துவிட்டு, எதற்கும் முறைப்படி, உங்கள் கல்லூரி முதல்வரிடமிருந்து ஒரு அழைப்புக் கடிதம் பெற்று அனுப்புங்கள் என்றேன்.

''தேவைகூட இல்லை. எவரெவரை அழைத்துப் பேசச்சொல்வது என்பது மாணவர்மன்றம் பெற்றிருக்கும் உரிமை. முதல்வர் அதற்குக் குந்தகம் விளைவிப்பதில்லை. நாங்கள் ஆண்டுதோறும் ஆண்டுரூஸ் சொற்பொழிவுகள் எனும் தொடர் நிகழ்ச்சி நடத்தி வருகிறோம். அதிலே, முன்பு ஜெயப்பிரகாஸ் நாராயணன், ஹிரேன்முக்கர்ஜி ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். மாணவர்களாகவே ஒரு ஆங்கில மாத இதழ்கூட வெளியிட்டு வருகிறோம்; ஆன்செட் என்பது இதழின் பெயர்; இதழ்கள் நாளை அனுப்பிவைக்கிறோம்; நீங்கள் விரும்புகிறபடியே கல்லூரி முதல்வரின் அழைப்புக் கடிதமும் பெற்று அனுப்புகிறோம்'' என்று கூறினர் சொன்னபடியே செய்தனர். ஆன்செட் இதழ் கிடைத்தது; அதைக் கண்ட பிறகுதான், ஏன் என்னை அழைக்க விரும்பினார்கள் என்பது எனக்குப் புரிந்தது. அந்த இதழில் தி. மு. கழகத்தைத் தாக்கி ஒரு கட்டுரையும், விளக்கமளித்து ஒரு கட்டுரையும், அந்த விளக்கத்துக்கு மறுப்பு அளித்து ஒரு கட்டுரையும் வெளியிடப்பட்டிருந்தன. முன்னதாகவே, கழகம் செயின்ட் ஸ்டீபன் கல்லூரிக்குச் சென்றுவிட்டிருக்கிறது!

99215 விருத்தாசலம்

பிறகு, நானும் செல்லவேண்டியது முறைதான் என்று எண்ணிக்கொண்டேன்.

சிறுபான்மையோர் பிரச்சினை என்ற உடன், அனேகமாக, முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் ஆகியோர் குறித்த விஷயம் பேசுவேன் என்றுதான் அவர்கள் எதிர்பார்த்திருப்பார்கள்; நான் முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் ஆகியவர் குறித்த பிரச்சினையாக மட்டும் சிறுபான்மையோர் பிரச்சினையைக் கருதவில்லை; கொள்கை கருத்து-இவற்றிலேகூட சிறுபான்மையினராக உள்ளவர்கள் பற்றிய பொதுப் பிரச்சினையாகவே அதனைக் கருதினேன்; அந்த முறையிலேதான் பேசினேன்.

வாடிக்கையாக, கூட்டத் தலைவர் பேச்சாளர்பற்றி நாலு நல்லவார்த்தை சொல்லி அறிமுகப்படுத்துவார் அல்லவா; அதுபோல மாணவர் தலைவர் என்னைக் குறித்துப் பேசினார்-இவர் நமக்கெல்லாம் மிக நன்றாக அறிமுகமானவர்; பிரமுகர்; தி.மு. கழகத்தவர் என்றெல்லாம். நான் துவக்கத்திலேயே சொன்னேன். "என்னை இங்கு அனைவரும் மிக நன்றாக அறிந்திருப்பதாக நண்பர் கூறினார்; நன்றி; ஆனால், உண்மை என்னவென்றால், என்னைப்பற்றிய தவறான கருத்துகளைத்தான் நீங்கள் தெரிந்துவைத்திருப்பீர்கள், நல்லனவற்றை அல்ல; என்றாலும், எனக்கொரு மகிழ்ச்சி, நல்லதோ கெட்டதோ, சரியோ தவறோ, ஏதோ ஒரு வகையில், என்னை நீங்கள் அறிந்துகொண்டிருக்கிறீர்கள்; அந்த மட்டில் மகிழ்ச்சிதான். இனி நான் பேசியான பிறகு, என்னை ஓரளவு நீங்கள் சரியாகவும் அறிந்துகொள்ளலாம், அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள்; சரியாக அறிந்துகொள்ளும் இயல்பு உள்ளவர்கள்!'' என்று கூறினேன். ஏன் அவ்விதம் கூறத் தோன்றிற்று என்றால், பல நூறு முறை என் பேச்சைக் கேட்ட பிறகும், இங்கே இல்லையா சிலர், என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளாதவர்கள்; புரிந்துகொள்ள மறுப்பவர்கள், சுளையை விட்டுவிட்டுத் தோலை எடுத்துக் கொள்பவர்கள்! அதுபோல, எங்கும் சிலர் இருக்கத்தானே செய்வார்கள்; அதனால் அவ்விதம் கூறினேன்.

'ஆனால் மாணவர்களிலே மிகப் பெரும்பாலானவர்கள் அவ்விதமானவர்கள் அல்ல என்பது, அவர்கள் பலமுறை, நான் கூறிய கருத்தினுக்கு ஒப்பம் அளிக்கும் முறையில், மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததிலிருந்து தெரிந்தது. துளியும் தொடர்பற்ற ஒருவனுடைய பேச்சை, அக்கறையற்று, ஒருகாதில் வாங்கி மறுகாது வழியாக விடுபவர்களாக இருந்துவிடுவார்களோ, பேச்சு பயனற்றுப் போய்விடுமோ என்று நான் அச்சப்பட்டுக் கொண்டேன். அச்சம் பொருளற்றது என்பதனை மாணவர் போக்கு விளக்கிக் காட்டிற்று.



"சிக்கலும், மாறுபட்ட கருத்துகள் மிகுந்ததுமான ஒரு பிரச்சினை பற்றி என்னை ஏன் பேச அழைத்தார்கள் என்று நான் யோசித்தேன்; என்னைப் பற்றியே பல மாறுபட்ட கருத்துக்கள் உலவுகின்றன என்பதால், நான் தான் சிறுபான்மையோர் பிரச்சினை குறித்துப் பேசப் பொருத்தமானவன் என்று மாணவர்கள் தீர்மானித்தார்கள்போல் தெரிகிறது. சிறுபான்மையோர் பிரச்சினை மட்டுமல்ல, நானே விவாதத்துக்கு உரிய ஆசாமிதான்!'' என்று கூறினேன். பிறகு, சிறுபான்மையோர் எனபதற்கு என்னென்ன பொருள் கொள்ளப்படுகின்றன, எங்கெங்கு இந்தச் சிறுபான்மையோர் உள்ளனர் என்பது குறித்து விவரம் அளித்தேன்.

பெரும்பான்மையோர் என்று ஒரு பகுதி சமூகத்தில் இருப்பதனால், இயற்கையாகவே சிறுபான்மையோர் என்ற பகுதி இருந்து தீரவேண்டி இருக்கிறது. இது இன்று நேற்று முளைத்ததுமல்ல; இட்டுக் கட்டப்பட்டதுமல்ல; பொருளற்றதுமல்ல; வெறும் பொழுது போக்குப் பிரச்சினையுமல்ல; மிக முக்கியமானது; நெடுங்காலமாக இருந்து வருவது; சிக்கலைப் போக்கும் வழி இதுதான் என்று திட்டவட்டமாக எவரும் எளிதிலே கூறிவிட முடியாத விதமான கடினமான பிரச்சினை இது. மாணவர் மன்றம் இத்தகைய பிரச்சினை பற்றி அறிந்துகொள்ள ஆர்வம்காட்டுவது வரவேற்கத்தக்கது. ஏனெனில், மிகப் பெரியவர்கள் சிலர், சிறுபான்மையோர் பிரச்சினை, வகுப்புவாதப் பிரச்சினை, ஜாதிப் பிரச்சினை என்பவைகள் சில்லறைப் பிரச்சினைகள்; அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டால், பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுவிட்டால், கல்வி அறிவு பெருகிவிட்டால், தொழிற் புரட்சி ஏற்பட்டுவிட்டால், இந்த சில்லறைப் பிரச்சினைகள் தாமாக மடிந்தொழியும் என்று கூறிவருகிறார்கள்; பொருளாதார வளர்ச்சி, தொழிற் புரட்சி, கல்வி வளர்ச்சி எல்லாம் வியந்து பாராட்டத்தக்க அளவு

உள்ள இன்றைய அமெரிக்காவில், சிறுபான்மையோர் பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. உரிமை கேட்டு, நீக்ரோ மக்கள் கிளர்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்; ஆகவே, சிறுபான்மையோர் பிரச்சினை என்பது, யாரோ சில சிறு மதியாளர்கள் வேண்டுமென்றே கட்டிப் பிடித்துக் கொண்டு அழுகின்ற முறையில் இருக்கிறது என்று தவறாக எண்ணிக்கொள்ளாதீர்கள்; எங்கெங்கு, எந்தெந்தச் சமயத்தில், என்ன காரணம் காட்டி, சமூகத்தில் ஒரு பகுதியினர் மற்றோர் பகுதியினரைக் கொடுமையாக நடத்தினாலும். இழிவுபடுத்தினாலும், உரிமையைப் பறித்தாலும். வளர்ச்சியைத் தடுத்தாலும், ஆதிக்கம் செலுத்தினாலும், கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட, உரிமை பறிக்கப்பட்ட, இழிவாக நடத்தப்பட்ட பகுதி, எதிர்த்துக் கிளம்பியே தீரும், எதிர்ப்பின் முறைகள் வேறு வேறாக இருக்கலாம்; ஆனால், ஆதிக்கம் செய்பவர்களை எதிர்த்து நிற்கும் இயல்பு எங்கும் உண்டு, எப்போதும் உண்டு; ஆதிக்கக்காரரர் மிகப்பெரும்பாலோராக இருப்பினும் கொடுமை செய்திட அவர்களுக்கு உரிமை கிடையாது, வலிவு இருக்கலாம்! கொடுமைக்கு ஆளானவர்கள் சிறிய அளவினராக இருப்பினும், எதிர்த்து நிற்கும் உரிமையும் இயல்பும் அந்தச் சிறுபான்மையினருக்கு உண்டு; சிறுபான்மையினர் என்பதற்காக அவர்கள் உரிமை இழந்துவிட வேண்டும் என்பதில்லை, கொடுமையில் உழலவேண்டும் என்பதில்லை. இந்த உணர்ச்சிதான், சிறுபான்மையோர் பிரச்சினை என்பதன் அடிப்படையாக அமைந்திருக்கிறது.'' என்று விளக்கம் தந்தேன்.

பொதுவாக ஒரு கருத்து இங்குப் பரப்பப்பட்டிருக்கிறது—இங்கு மட்டுந்தான் சிறுபான்மையோர் பிரச்சினை என்பது வேண்டுமென்றே கிளப்பிவிடப்பட்டிருப்பதாக, உண்மை முற்றிலும் வேறு. நீண்ட பல ஆண்டுகளாகக் குடியாட்சி முறையை மேற்கொண்டுள்ள பல நாடுகளில்—ஐரோப்பிய பூபாகத்து நாடுகளில்—இன்றும்கூட சிறுபான்மையோர் பிரச்சினை இருந்து வருகிறது. காரணம்? ஆதிக்கம் செலுத்திடும் இயல்பு, அரசு நடத்தும் வாய்ப்புப் பெற்றதனாலோ, ஜாதி காரணமாகவோ, மொழி காரணமாகவோ, மத அடிப்படையிலோ, பொருளாதார வலிவின் துணை கொண்டோ ஏற்பட்டுவிடுகிறது; ஆதிக்கம் செலுத்திச் செலுத்தி அதிலே ஒரு தனிச் சுவை கண்டுவிட்டவர்கள், எளிதிலே அந்த இயல்பினை



விட்டுவிடுவதில்லை; வெற்றி வீரர்கள், ஆளப் பிறந்தவர்கள், அறிவாற்றல் மிக்கவர்கள் என்று காரணம் காட்டி, பண்டைய கிரேக்கத்தில், சமூகத்தில் ஒரு பகுதியினரை அடிமைகளாக, எந்தவிதமான உரிமையும் அற்றவர்களாக, மனித மிருகங்களாக வைத்துக் கொண்டிருந்தனர். அறநூற்களும், அறிவு நூற்களும், காவியமும் ஓவியமும், அரசு முறை பற்றிய ஏடுகளும் ஆத்மீகம் பற்றிய ஏடுகளும், எந்தக் கிரேக்கத்திலிருந்து மலர்ந்தனவோ. அதே கிரேக்கத்திலே அடிமைகளாக சமூகத்தில் ஒரு பகுதியினரை அழுத்தி வைத்திருக்கும் அக்கிரமம் நெளிந்து கொண்டிருந்தது. பிறகு வடிவமெடுத்த ரோமப் பேரரசு, எகிப்திய எழிலரசு போன்ற பலவற்றிலும், ஒவ்வோர் முறையிலும் வடிவிலும், இந்த அக்கிரமம் இருக்கத்தான் செய்தது.இவைகளைப் பற்றிக் கோடிட்டுக் காட்டத்தான் முடிந்தது—நேரம் கிடைக்க முடியாதல்லவா.

சிறுபான்மை, பெரும்பான்மை என்பது வெறும் எண்ணிக்கை பிரச்சினை அல்ல-மிகப் பெரும்பான்மையினரிடமிருந்து சிறுபான்மையினர்—அதாவது சிறிய எண்ணிக்கையில் உள்ளவர்கள், பாதுகாப்புத் தேடிக் கொள்ளும் பிரச்சினை என்று மட்டுமே இதனைக் கருதிவிடக் கூடாது. சில சமயங்களில், சில இடங்களில் மிகப்பெரிய அளவில் உள்ள மக்களை, மிகக் குறைந்த அளவில் உள்ள மக்கள், அடக்கி ஆள்வது காணலாம், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு என்ற வாதத்தின்படி; ஆதிக்கம் செலுத்தும் சிறு கூட்டம், தனது நிலையைக் கெட்டிப் படுத்திக்கொள்ள நியாயம் தேடிக் கொள்ளலாமா! அது அநியாயம்! வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் இங்கு இருந்தபோது, பலகோடி மக்களை ஒரு சில ஆயிரவர்—வெள்ளையர்—சிறுபான்மையினர் அடக்கி ஆண்டு வந்தனர், நாங்கள் சிறுபான்மையினர், ஆகவே எங்களுக்குப் பாதுகாப்பு தேவை என்று வெள்ளையர் வாதாடி இருப்பின், எப்படி இருந்திருக்கும்? அதனை அநீதி என்றுதான் எவரும் கூறி இருப்பர்! சிறுபான்மையினராக இருக்கிற ஒரே காரணத்துக்காக இனம், மதம், மொழி, வாழ்க்கை முறை போன்ற துறைகளில் பெரும்பான்மையினரிடம் அடங்கிக் கிடக்கவேண்டும் என்ற நிலை இருக்கும்போதுதான், சிறுபான்மையினரின் உரிமைக் கிளர்ச்சிக்கு நியாயம் இருக்க முடியும்,

பண்டைய கிரேக்கத்தில் குடியாட்சிமுறை நடைபெற்ற விதத்திற்கும் இப்போதுள்ள குடியாட்சி முறைக்கும் நிரம்ப மாறுபாடு—இயற்கையான காரணத்தால் விளைந்த மாறுபாடு—ஏற்பட்டுவிட்டிருக்கிறது. கிரேக்கத்தில், ஏதன்ஸ் நகரமக்கள் ஐம்பது ஆயிரம்பேர்—எந்த அரசியல் பிரச்சினையையும் கவனிக்க, கருத்தளிக்க, முடிவெடுக்க எல்லாமக்களும் ஒருசேரச் சந்தைச் சதுக்கத்தில் கூடுவர். இப்போது, குடியாட்சி முறை என்பது, மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளுவது என்ற கொள்கை அடிப்படையில் இருப்பினும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மூலமாகத்தான் ஆட்சி நடத்தப்படுகிறது—நேரடியாக அல்ல—மக்கட் சமூகம் முழுவதனாலும் அல்ல. தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் எங்கும், தேர்ந்தெடுக்கும் மக்களைவிட எண்ணிக்கையில் சிறிய அளவினராகத்தான் இருக்க முடியும்—சிறுபான்மையினர்! நாங்கள் சிறுபான்மையினர் எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று ஆளவந்தார்கள் வாதாடினால் எப்படி இருக்கும்; விந்தையாக மட்டுமல்ல, விபரீதமாகவும் இருக்கும்.

ஆகவே, இந்தப் பிரச்சினையை நாம் பார்க்க வேண்டிய சரியான முறை, ஜாதி, மதம், மொழி, செல்வம், வலிவு, எனும் ஏதேனும் ஒன்றைத் துணைக்கொண்டு சமூகத்தில் ஒரு பகுதியினர் ஆதிக்கம்பெற்று, ஆதிக்கக்காரர்களின் மதம், ஜாதி, மொழி, கோட்பாடு என்பதனை ஏற்றுக்கொள்ளாமல், தமக்கென்று மதம், ஜாதி, மொழி, கோட்பாடு ஏதாகிலும் பற்றுடன் கொண்டு, அவைகளுக்கு ஊறு நேரிடாதபடி பாதுகாத்துக் கொள்ளும் உரிமை பெறவேண்டுமென உறுதியுடன் மற்றோர் பகுதியினர் இருப்பின், அங்குச் சிறுபான்மையோர் பிரச்சினை எழுகிறது என்பதுதான்.

இன்று நீக்ரோ மக்கள், உலக முழுவதும் உள்ளவர்களைக் கணக்கெடுத்தால், அமெரிக்கர்களை விட எண்ணிக்கையில் அதிக அளவு என்று கூறலாம். ஆனால், அமெரிக்கா என்ற எல்லைக்குள்ளாக மட்டும் கணக்கெடுத்தால், நீக்ரோக்கள் சிறுபான்மையினர்,

ஆகவே, சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் என்ற கணக்கு, அதற்கு நாம் பயன்படுத்தும் அளவுகோல், கணக்கெடுக்கும் இடம், முறை ஆகியவற்றையும் பொறுத்திருக்கிறது.



இந்தியாவை ஒரு எல்லையாகக்கொண்டு கணக்குப் பார்க்கும்போது, முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் எனும் இரு பிரிவினருமே சிறுபான்மையினர்! ஆனால், முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் உலகில் உள்ளவர்கள் அனைவரையும் ஒன்றாகக் கணக்குப்போட்டு, இந்துக்களுடன் ஒப்பிட்டால், முஸ்லீம்களும் கிருஸ்தவர்களும் பெரும்பான்மையினர் என்பது தெரிகிறது.

உலகமெல்லாம் சுற்றுவானேன் தம்பி! அருகாமையிலேயே இருக்கிறதே விளக்கம்; சென்னை சட்டசபையை எடுத்துக்கொண்டு கணக்குப்பார்த்தால், கழகம் சிறுபான்மையாகிறது! சென்னை மாநகராட்சி மன்றத்தில் கணக்கெடுத்தால் காங்கிரஸ் சிறுபான்மையாகிவிடக் காண்கிறோம்.

இந்தி மொழி, பெரும்பான்மையினர் பேசும் மொழி என்ற வாதம்கூட, அதன் ஆதரவாளர் பயன்படுத்தும் அளவுகோலின் தன்மையைக்கொண்டுதான்.

இந்தியாவில் பேசப்படும் எல்லா மொழிகளையும் ஒரு கணக்கில் சேர்த்து, இந்தியை மட்டும் ஒரு தனிக் கணக்காக்கினால், இந்தி இந்தியாவில் சிறுபான்மையினரின் மொழி என்பது விளங்கும்.

ஆனால் இந்தி ஆதரவாளர்கள், மராட்டிய மொழி பேசுவோரைவிட, தமிழ் பேசுவோரைவிட, தெலுங்கு பேசுவோரைவிட, வங்காளமொழி பேசுவோரைவிட, அதிக எண்ணிக்கையினர் பேசும் மொழி இந்தி, ஆகவே அது பெரும்பான்மையினரின் மொழி என்கிறார்கள்,

உண்மையில் பெரும்பான்மையினரின் மொழியாக இந்தி இருக்கிறது என்று மெய்ப்பிக்கவேண்டுமானால், இந்தியாவில் உள்ள 40-கோடி மக்களில் 30-கோடிப் பேர், அல்லது 25 கோடிப் பேர் இந்தி மொழியினர் என்று கணக்கு இருக்கவேண்டும். அப்படி இல்லை. ஆயினும் ஆட்சியினரின் அரவணைப்பு இருப்பதால், இந்தி பெரும்பான்மையினரின் மொழி என்று அடித்துப் பேசுகிறார்கள்.

தானே தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு கடைவீதி சென்று தின்பண்டம் வாங்கிக் கொடுத்து, தின்னத் தெரியாமல், தின்று சட்டையை அழுக்காக்கிக்கொண்ட

சிறுபயல், அரும்பு மீசைக்காரனாகி, முதலாளி என்ற பட்டத்தை, தந்தை செத்ததால் பெற்றுவிட்ட பிறகு, தன்னையே—அறுபதாண்டு நிரம்பிய தன்னையே—பெயரிட்டுக் கூப்பிட்டு மிரட்டுவதை, ஊழியம் செய்து பிழைக்கும் கந்தனும் முருகனும் சகித்துத் கொள்வதைக் காண்கிறோமே! அதுபோல, இப்போதும் கடன் வாங்கிக் காலந்தள்ள நினைக்கும் நிலையிலுள்ள இந்தி மொழி, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே இணையற்றது என்ற ஏற்றம் பெற்றுவிட்ட நமது தமிழ் மொழியைவிட உயர் நிலைபெற்று, ஆட்சி மொழி என்று ஆகிறது அல்லவா!

சிறுபான்மை—பெரும்பான்மை என்பது, அதற்குக் கிடைத்திடும் பாதுகாவலனையும் பொருத்து வலிவு பெறுகிறது.

ஆனால், எக்காரணம் கொண்டோ பெரும்பான்மை என்ற நிலையைப் பெற்றுவிட்ட ஒரு பகுதி, அதிகார பலம்கொண்டு, சிறுபான்மையைச் சீரழிவாக நடத்தி வெற்றிகாண நினைப்பது, பேராபத்தில் நாட்டைக் கொண்டுபோய்ச் சேர்க்கும். இந்தியே ஆட்சிமொழியாக வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களிலேயே சிலர், ஆதிக்கம் காட்டி இந்தியைப் புகுத்திடப்போய், அதன் காரணமாக நாட்டிலே பிளவு மனப்பான்மை ஏற்பட்டு ஒற்றுமை குலைந்து போகும்போலத் தோன்றினால், இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதை விட்டுவிடத்தான் வேண்டும் என்று பேசத் தலைப்பட்டுவிட்டுள்ளனர்.

மொழி காரணமாகப் புகுத்தப்படும் ஆதிக்கத்தையும், அதனை நாம் எதிர்த்து நிற்பதையும், நான் கல்லூரிக் கூட்டத்தில் எடுத்து விளக்கும்போதுதான், அவர்களின் இதழில் வெளியிட்டிருந்த கழகம் பற்றிய கருத்துபற்றி எடுத்துக்காட்டினேன், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிடர் கழகத்திற்கும் உள்ள வித்தியாசத்தை, இரண்டும் வேறு வேறு அமைப்புகளாகப் பதினேழு ஆண்டுகளாக உள்ளன என்பதனை உணர்ந்துகொள்ளாமலே இதழில் எழுதப்பட்டிருக்கிறது என்பதனை எடுத்துக்காட்டிவிட்டு, இப்போது திராவிடர் கழகம் இந்தியை எதிர்க்கத் தேவை இல்லை என்று கூறிடும் அமைப்பாகவும், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்பு நடத்திடும் அமைப்பாக இருப்பதனையும் விளக்கினேன். கூட்டம் முடிந்த பிறகு, பலர், நமது கழகம்




பற்றிய விளக்கம் பெற ஆங்கில இதழ் ஒன்று வெளியிட வேண்டுமென்றுகூட என்னிடம் கூறிச் சென்றனர்,

மதம், இனம், மொழி போன்ற காரணங்களால் ஏற்படும் சிறுபான்மையினர்-என்ற நிலையை ஆதிக்கத்திற்கும், கொடுமை செய்வதற்கும் வழியாக்கிக்கொள்ளாமல், அனைவரும் சமஉரிமை பெற்று வாழ்ந்திடத் தக்க அரசியல் முறையை வகுத்துக்கொண்டு, ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக, நிம்மதியாக வாழ்ந்துவரும் சுவிட்சர்லாந்து நாட்டு அரசியல் பண்பாடு பற்றியும், ஆங்கில மொழியினர், பிரஞ்சு மொழியினர் எனும் இரு பிரிவு மக்களையும் கொண்ட கனடா நாட்டில் இருமொழித் திட்டம் ஒரு சமரச ஏற்பாடாகப் புகுத்தப்பட்டது பற்றியும், அந்த ஏற்பாட்டை நடத்திச் செல்வதில் நாணயக் குறைவு ஏற்பட்டதனால், இப்போது கனடாவில் கொந்தளிப்பு உள்ளது பற்றியும், கனடாவில் க்யூபெக் எனும் மாநிலம் பிரிந்துபோய்விட வேண்டுமென்ற கிளர்ச்சி மூண்டுள்ளதையும், க்யூபெக்கில் உள்ள பிரஞ்சு மொழி பேசுவோர் மனத்துக்குச் சமாதானம் ஏற்படுத்த, இதுவரை பிரிட்டிஷ் அரசு சின்னம் பொறிக்கப்பட்டதாக இருந்த கனடா நாட்டுக் கொடியைக்கூட மாற்றி அமைத்து, பிரிட்டிஷ் சின்னம் ஆங்கில மொழி ஆதிக்கத்தைக் காட்டுகிறது என்று பிரஞ்சுக் கன்னடியர் கூறுவதால், அந்தச் சின்னத்தை நீக்கிவிட்டு, புதிய கனடா தேசியக் கொடியில், பச்சிலையைச் சின்னமாக்கி இருப்பதனையும் கூறினேன்.

என்ன கூறி என்ன பலன்? கடைசியாகக் கேட்கிறார்கள், எண்ணிக்கையின்படி தி. மு. கழகம் சிறுபான்மை தானே, தமிழகத்தில் என்பதாக. ஆம்! என்றேன். எத்தனை நாளைக்குத் தம்பி! இதனைக் கூறியபடி இருப்பது? சிறுபான்மையினர் அல்ல, நாங்கள்தான் தமிழகத்தில் சட்டமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியினர் என்று கூறும் நிலையை எப்போது ஏற்படுத்திக் கொடுக்கப் போகிறாய், தம்பி! கனடாவில் ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாக ஒரு பகுதியாக இணைந்து இருந்துவரும். க்யூபெக் மாநிலத்தில் அந்த மாநிலத்தில் மட்டும், பிரஞ்சுக் கன்னடிய உணர்ச்சி பெற்றவர்கள் அரசியலில் பெரும்பான்மையினராகி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காரணத்தால், கனடா முழுவதற்குமாக இருந்துவந்த தேசியக் கொடியையே, மாற்றிவிடும்

காரியத்தில் வெற்றி கிடைத்திருக்கிறது. நீங்கள், உங்கள் மாநிலத்திலேயே, சிறுபான்மையினராகத்தானே இருக்கிறீர்கள் என்ற கேள்வியை, எத்தனை நாளைக்குத் தாங்கிக் கொண்டிருக்கச் சொல்கிறாய். தமிழக அரசு நடாத்துபவர் வேறு; அந்த அரசு இப்படி இப்படி நடத்தப்படவேண்டும் என்று கூறிடும் எதிர்க் கட்சியாக—சிறுபான்மைக் கட்சியாக—தி மு. கழகம் என்ற நிலை இருக்கும்வரையில், நமது கொள்கை, ஏழ்மையால் எழில் கெட்டு, இளைத்துக் கிடக்கும் ஏந்திழை மருத்துவரிடம் பெற்ற மருந்துக்குப் பணம் தரக் காசு இன்றி, காதிலுள்ளதைக் கழற்றிக் கடை நோக்கி நடந்திடும் நிலையினில்தான் இருக்கும். இந்த நிலை உனக்குச் சம்மதம்தானா?

அண்ணன்,



28-3-'65

காஞ்சிக் கடிதம்: 12

# தன்னை வெல்வான் தரணியை வெல்வான்!

பாளையங்கோட்டைச் சிறையில் கருணாநிதி

பாதுகாப்புச் சட்டப்படி மாறனும் கைது

கருணாநிதிக்கோ தருமபுரித் தேர்தல் பற்றியே கவலை

விரிவாகி விட்டது இந்தி எதிர்ப்பு உணர்ச்சி

கருணாநிதிக்குக் கழகம் தரக்கூடிய மகிழ்ச்சிப் பொருள் தருமபுரி வெற்றியே!

தம்பி,

இலைகள் உதிர்ந்த நிலையில் சில மரங்கள்; இது முழுவதும் வெட்டவெளி அல்ல என்பதைக் காட்டுவதற்காக இருந்து கொண்டிருந்தன - மற்றபடி அந்த இடம் இயல்பாகவே வெப்பத்தை அதிகமாக்கிக் காட்டக்கூடிய இடம்.

முப்பது அறைகளுக்குமேல் இருக்கும் - அதிலே ஒரு அறையில் தம்பி கருணாநிதி - மற்ற அறைகள் எல்லாம் பூட்டிக்கிடந்தன. மொத்தத்தில் ஒருவிதமான வெறிச்சோடிய நிலை. ஆள் நடமாட்டம் இல்லை என்பது மட்டும் அல்ல; பேச்சுச் சத்தம்கூடக் காதிலே விழ முடி

யாத இடம், அத்தனை தனிமை! அவ்வளவு 'பாதுகாப்பு'! பக்தவத்சலனாரின் அரசு என்ன இலேசுப்பட்டதா! அவர் தானென்ன சாமான்யமானவரா - இந்தியப் பேரரசின் போலீஸ் அமைச்சர் நந்தாவினாலேயே பாராட்டப்பட்டவர்-கற்பாறைபோல் நின்றார் என்பதாக!

பாதுகாப்புச் சட்டப்படி சிறைபிடித்து வைத்திருப்பதால், மிக்க பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பது முதலமைச்சரின் திட்டம்போலும். அதனால் தான், பக்கத்திலேயே உள்ள இளம் குற்றவாளிகளுக்கான சிறைக் கட்டடத்தில் பல நூறு பேர் இருக்க, கருணாநிதிக்காகவே ஒரு பெரிய தனிச் சிறையை ஒதுக்கி, அதிலேயும், தனியாக வைத்திருக்கிறார்கள்.

மக்களைப் பெற்றவர்கள் மனம் நொந்து, ஏனோ இந்தக் கொடுமை என்று கண்ணீர் மல்கிடும் நிலையில் இருந்தபடி கேட்பார்கள். கேட்டால் என்ன! பக்தவத்சலனாரா இதற்கெல்லாம் அசைவார்! கற்பாறைபோல நின்றார் என்று சிறப்புப்பட்டம் பெற்றுவிட்டாரே!! தீக்குளித்து இறந்தவர்களை எண்ணி எண்ணி இந்த நாடே பதறுகிறது, கதறுகிறது; நல்லோர் அனைவரும் நெஞ்சு நெக்குருகிப் போயினர்; இந்திக்காரர்களிலேகூடச் சிலர், செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்; ஆனால், முதலமைச்சர் மட்டும்தான், இதயத்தை எடுத்துத் தனியாக வைத்துவிட்ட நிலையினர் போலாகி, துளியும் ஈவு இரக்கம், மனிதத்தன்மை அற்றவராகி. தோழர் மதியழகன் மெத்த மன வேதனையுடன் குறிப்பிட்டுள்ளது போல, தீக்குளித்த தீரர்களின் பிணங்களின் மீது தூற்றல் சேற்றினை வாரி இறைக்கிறார். எதிர்காலக் காவியமாகப் போகிற எழுச்சிமிக்க தியாகத்தை, இன்று கிடைத்துள்ள இடம் என்றென்றும் தமக்கு என்ற ஏமாளித்தனம் மிகுந்த இறுமாப்பு உணர்ச்சியுடன் எண்ணிக்கொண்டு, இழித்துப் பேசுவதும், பழித்து உரைப்பதும், தமிழ் மண்ணின் மாண்பினையே மங்கிடச் செய்திடும் மாபாதகச் செயல். ஆனால், துணிந்து செய்கிறார்கள் துரைத்தனம் நடாத்துவோர்.

சென்னையிலிருந்து நானூறு கல் தொலைவில், பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் போட்டடைத்துக் கொடுமை செய்வதனைத் தமிழகம் கேட்டுத் தத்தளிக்கிறது; விம்மிடுகின்றனர் தாய்மார்கள்; இப்படி



ஒரு ஆட்சியா என்று கேட்டுத் துடிக்கின்றனர் முதியோர்கள்; நம்மை இத்தனை துச்சமாக எண்ணிவிட்டனரே என்றெண்ணி வேதனைப்படுகின்றனர் இளைஞர்கள்; அறம் அறிந்தவர்கள் பதறுகின்றனர்; சட்டம் தெரிந்தவர்கள் இதற்குப் போதுமான நியாயம் இல்லை என்று எடுத்துரைக்கின்றனர்; கழகத் தோழர்கள் கலக்கமடைந்துள்ளனர்; முதலமைச்சர் மட்டும் நிற்கிறார் கற்பாறைபோல!

காலை மணி பத்து இருக்கும், நான் அங்குச் சென்றபோது; உடன் வந்திருந்த நெல்லை நகராட்சி மன்றத் தலைவர் மஜீத், வழக்கறிஞர் இரத்தின வேலுபாண்டியன் மற்றும் பலரையும்தனியே இருக்கச் செய்துவிட்டு,என்னை மட்டும், சிறை அதிகாரிகள் மூவர், கருணாநிதி இருந்த சிறைக்கூடம் அழைத்துச் சென்றனர்,

சந்தித்துப் பேசுவதற்காக ஒரு அறை தயாரிக்கப்பட்டிருந்தது; இரு அதிகாரிகள் உடன்இருந்தனர்.

கருணாநிதி அழைத்துவரப்பட்டபோது, முன்பு பல முறை ஒருவரை ஒருவர் சிறையினில் சந்தித்ததுண்டு என்றபோதிலும், இம்முறை தனியானதோர் தவிப்புணர்ச்சி எழுந்து வாட்டியது. அதனை அடக்கிக் கொள்வது கடினம் என்றபோதிலும், கலக்கம் காட்டுவது நமது உள்ளத்தின் உறுதிபற்றி மற்றவர்களுக்கு அய்யப்பாடு எற்படுத்திவிடுமே என்ற அச்சம் துணை செய்தது; தவிப்புணர்ச்சியைத் தள்ளிவைத்துவிட்டு, அரைமணி நேரத்திற்குமேல் பேசிக்கொண்டிருந்தோம்.

முன்னாள் நள்ளிரவிலேயே நான் நெல்லை போய்ச் சேர்ந்துவிட்டேன்; விடிந்ததும் என் காதில் விழுந்த முதல் செய்தி, மாறனைப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்துவிட்டிருக்கிறார்கள் என்பது. நெல்லைக்குக் கிளம்புவதற்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து தொலைபேசி மூலம் மாறனிடம் பேசினேன் - கைது செய்யப்படக்கூடும் என்ற குறிகள் தென்பட்டிருந்தால்கூட என்னிடம் சொல்லி இருந்திருப்பார். ஆகவே, நெல்லையில் நான் கேள்விப்பட்ட செய்தி என்னைத் தூக்கி வாரிப் போட்டது. அடுக்கடுக்காக வந்து கொண்டிருக்கும் இந்தக் கொடுமைகள், இறுதியில் நமது கழகத்தைப் புடம்போட்டெடுத்த பொன்னாக ஆக்கிடும் என்ற பொது உண்மை தெரியும்-மிக நன்றாகத் தெரியும் என்றபோதிலும்-

இப்போது நமது கழகத் தோழர்கள் அடக்குமுறைத் தீயிலே தள்ளப்பட்டுக் கொடுமைகளால் தாக்கப்பட்டு வருவதைக் காணும்போது என்னால், பீறிட்டுக் கொண்டு கிளம்பும் வேதனையை அடக்கிக்கொள்ள முடியவில்லை. உள்ளம் மேலும் உறுதிப்பட வேண்டும் என்று தோன்றுகிறது.

கொடுமைகள் இழைக்கப்படும்போது, அநீதி தலைவிரித்தாடும்போது, அக்கிரமம் தன் அகன்ற வாயினைத் திறந்து அகோரக் கூச்சலிடும்போது, எல்லாம் இறுதியில் நன்மைக்கே என்ற தத்துவத்தைத் துணைக்கழைத்துச் சமாதானம் தேடிக்கொள்ள முடியவில்லை. காரணம், நாம், ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் என்ற முறையிலே மட்டும் இருந்து வருபவர்கள் அல்லர்; பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பமாகி விட்டிருக்கிறோம். அதனால் நம்மில் சிலருக்கு இழைக்கப்படும் கொடுமை நம் எல்லோருடைய உள்ளத்தையும் வேதனையில் ஆழ்த்திவிடுகிறது.

ஆனால், நாம் இத்தகைய கொடுமைகளைத் தாங்கிக் கொண்டே தீரவேண்டும். உள்ள நிலை அது. இன்று இங்குள்ள காங்கிரஸ் அரசு, நாட்டிலே ஏற்பட்டுள்ள நிலையைக் காரணமாக்கிக் கொண்டு, கழகத்தை அழித்தொழிக்கத் திட்டமிட்டு விட்டிருக்கிறது. சுட்டுத் தள்ளவே கூசாத ஒரு ஆட்சி, சிறையில் தள்ளவும் வழக்குகளைத் தொடுக்கவுமா கூசும்! நல்லாட்சிக்குத் தேவையான எல்லா இலக்கணத்தையும் இழந்துவிட்ட நிலையில், கொடுமைகளன்றி வேறென்ன காணமுடியும்? காட்டுப் பன்றியிடமிருந்து உறுமலையும், ஓநாயிடம் இரத்த வெறியையும் தவிர, வேறெதைக் காணமுடியும்? ஆட்சி தவறான முறையை மேற்கொள்ளும்போது. நாட்டுக்கும் காட்டுக்கும் உள்ள வேறுபாடு மறைந்து விடுகிறது.

கவலை கப்பிய நிலையில் கருணாநிதியுடன் பல விஷயங்கள் குறித்துப் பேசிக்கொண்டிருந்தேன். கருணாநிதியோ, இடையிடையே, தருமபுரித் தேர்தல் பற்றியே பேசிடக் கண்டேன்; உடல் நலத்தைக் கவனித்துக் கொள், ஏதேனும் உடல் நலக் குறைவு இருப்பதாகத் தோன்றினாலும் உடனே மருத்துவர் தேவை என்பதைத் தெரியப்படுத்து என்று நான் கூறிக்கொண்டிருப்பேன், இடைமறித்து கருணாநிதி, தருமபுரித் தேர்தலில் காங்கிரஸ



கட்சி பணத்தை அள்ளி வீசுவார்களே அண்ணா! அங்கு நாம் வெற்றிபெற வெகு பாடுபட வேண்டுமே! என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன? யாரார் தருமபுரி சென்று வந்தனர்? நீங்கள் எப்போது செல்லப் போகிறீர்கள்? என்ற இவைபற்றிக் கூறுவார், எனக்குக் கவலையைப் பிய்த்துக்கொண்டு புன்னகை கிளம்பும்.

சிறை மிகச் சக்தி வாய்ந்தது என்று, ஆணவம் பிடித்த நிலையில் உள்ள எந்தச் சர்க்காரும் எண்ணிக் கொள்ளுகிறது, சிறையிலே போட்டு அடைத்ததும், வேதனை வென்றுவிடும், உணர்ச்சிகள் மங்கிவிடும், உறுதி தளர்ந்துவிடும் என்ற நினைப்பு; நிலைகெடப் போகும் கட்டத்தை நோக்கி நடைபோடும் எந்தச் சர்க்காருக்கும். சிறை அவ்விதமானதல்ல; அந்த இடம், உறுதியைக் கெட்டிப்படுத்தி வைக்கும் உலைக்கூடம்; சிந்தித்துச் சிந்தித்துத் தமது சிந்தனைச் செல்வத்தைச் செம்மையாக்கிக் கொள்ள வைக்கும் பயிற்சிக்கூடம், இதனை அறிய முடிவதில்லை, அடக்குமுறைச் சுவையால் நினைவு இழந்துவிடும் அரசுகளால். நெல்லையில் சிறைப்பட்டிருக்கும் கருணாநிதியின் நினைவு முழுவதும் எதன்மீது என்பதனை அறிந்து கொள்வாரானால், முதலமைச்சர் தமதுமுறை தவறு என்பதனை உணர்ந்து கொள்வார். மக்களின் நலனுக்காகக் கழகம்; கழகத்தின் சார்பிலே செயலாற்றினோம்; அந்தச் செயலைத் தவறானது என்று திரித்துக் கூறிச் சர்க்கார் நம்மைக் கொடுமைப்படுத்துகிறது; நமக்கு இழைக்கப்படும் கொடுமையினைக் கண்டும் கேட்டும் இலட்சக்கணக்கானவர்கள் இதயம் துடிக்கிறது; அந்தத் துடிப்பிலிருந்து கிளம்பும் மிகப் பெரிய வலிவு எத்தனை பெரிய ஆணவ அரசினையும் வீழ்த்தவல்லது; அந்த வலிவினை நாடு பெற நாம் நமது வலிவிலே ஒரு பகுதியைச் சிறைவாழ்க்கை காரணமாக இழப்பது தேவை, முறை, அறம் என்ற எண்ணம், சிறையில் உள்ளவர்களுக்குச் செந்தேன். அந்தச் சுவையில் திளைத்திருக்கக் கண்டேன், உடல் இளைத்தாலும் உள்ளம் களைத்திடாது என்ற நிலையில் உள்ள கருணாநிதியிடம். ஒரே ஒரு கவலைதான் இருக்கிறது; தருமபுரி பற்றி! ஆனால், அதிலேயும் கவலையை விரட்டியடிக்கக்கூடிய ஒரு நம்பிக்கையும் இருக்கிறது; எப்படியும் கழகம், தருமபுரித் தேர்தலில் வெற்றி பெற்றுவிடும் என்ற நம்பிக்கை கருணாநிதியைச் சிறையில் போட்டடைத்து வைத்திருக்கிறதே என்பதனை எண்ணி

ஏக்கம் கொண்டுள்ளவர்கள், தங்கள் வல்லமையினை, உழைப்பினை, வசதியினை, நேரத்தை, நினைப்பை, தருமபுரிக்காக என்று அனுப்பிக் கொடுத்திடின், வெற்றி பற்றிக் கவலை ஏது! வெற்றி நிச்சயம்! அந்தச் செயலினைச் செம்மையாகச் செய்வார்களா என்ற அய்யப்பாடு அல்ல, கருணாநிதிக்கு; அந்தச் செயலிலே தனது பங்கினைச் செலுத்த முடியாதபடி பக்தவத்சலனார் செய்துவிட்டாரே என்ற கவலைதான். அந்தக் கவலை வேண்டாம், தோழர்கள் திறமையாக, சுறுசுறுப்பாக, மெத்த ஆர்வத்துடன் தேர்தல் காரியத்தைக் கவனித்துக் கொள்கிறார்கள் என்று உறுதி அளித்தேன்.

அதிகாரிகள் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டனர்; அதன் பொருள் விளங்கிற்று; நான் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன்; நான் வெளிப்புற வாயிற்படி நோக்கி நடந்தேன்; தம்பி தனக்கென அரசு தந்துள்ள அறைநோக்கிச் செல்வதைப் பார்த்தபடி.

சென்றேன், கண்டேன்; செய்தியை உங்களிடம் கூறினேன்; ஆனால், இதுதானா நாம் ஒருவருக்கொருவர் தந்துகொள்ள வேண்டிய செய்தி? எவ்வளவு முறையாகச் செயலாற்றி வருகிறோம், கழகம் அமைத்து; நமக்கு இத்தகைய கொடுமைகளைக் காங்கிரஸ் அரசு செய்தபடி இருப்பதா! நாடு எத்தனை காலத்துக்குத் தாங்கிக் கொள்ளப் போகிறது இவ்விதமான கொடுமைகளை? எத்தனை எத்தனை கொடுமைகள் நடந்துவிட்டன இன்பத் தமிழகத்தில். மகனை இழந்த மாதாக்கள் கதறுகின்றனரே! எங்கெங்குச் சென்றாலும், நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றியும், துடிதுடித்து மக்கள் செத்தது பற்றியும், ஊரெல்லாம் சுடுகாடுகள் போலாகிக் கிடப்பது பற்றியும், நண்பர்கள் கூறிடக் கேட்டுக்கேட்டு வேதனை மேலும் வளருகிறது. எத்தனை எத்தனை வழக்குகள்! எத்தனை விதமான கொடுமைகள்! நள்ளிரவிலே கைதுகள்! பிடிபட்டவர்கள் நையப்புடைக்கப் படும் இழிதன்மை! ஏன் நமக்கு இழைக்கப்படுகின்றன இவ்வளவு கொடுமைகள்? நிகழ்ச்சிகள் நடைபெற்று நாட்கள் பலப் பல ஓடியபின், ஒரு திங்களுக்குப் பிறகும் கழகத் தோழர்கள் வேட்டையாடப்படுகின்றனர்; வழக்குகள் தொடுக்கப்படுகின்றன. நெல்லைக்குச் சென்று அங்கிருந்து மாயவரம், பிறகு ஆத்தூர், ராசிபுரம், பிறகு சேலம், தருமபுரி ஆகிய இடங்கள் சென்று வந்தேன். வழிநெடுக இதே செய்தி,



ஊரெங்கும் இதே கொடுமை. சித்திரவதையைவிட, ஒரே அடியாகக் கொன்றுபோட்டு விடுவதுமேல் என்பார்கள்; அதுபோல இப்படிக் கழகத் தோழர்களைக் கண்டகண்ட இடங்களில் விதவிதமான கொடுமைகளுக்கு ஆளாக்குவதைவிட, ஒரே அடியாகக் கழகத்தைத் தடைசெய்து விடலாமே, ஏன் இத்தனை பழிவாங்கும் உணர்ச்சி—வெறித்தனம், புரியவில்லையே, என்று கழக நண்பர்கள் கேட்கின்றனர். காரணம் இருக்கிறது காட்டுமுறையை நாட்டினை ஆள்வோர் கட்டவிழ்த்துவிட்டிருப்பதற்கு.

காங்கிரஸ் ஆட்சிக்குப் பலத்த எதிர்ப்பு மூண்டுவிட்டிருக்கிறது, சமூகத்தின் பல முனைகளிலுமிருந்து. இங்கேயே உள்ள நிலை என்ன? முன்பு கழகம் கிளர்ச்சி நடத்தியபோது, காங்கிரஸ் அமைச்சர்கள் கெம்பீரக் குரலில் முழக்கிவந்தனர், கழகத்தின் கிளர்ச்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை; மாணவர்கள், வழக்கறிஞர்கள், இதழ் நடாத்துவோர், அறிவாலயம் நடத்துவோர் ஆகியோரின் ஆதரவு இல்லை; ஒரு சமூகத்தின் மதிப்புமிக்க முனைகள் இவை; இந்த முனைகளில் கழகத்தின் பேச்சுக்கோ செயலுக்கோ துளியும் ஆதரவு இல்லை; எனவே, கழகத்தின் கிளர்ச்சிக்கு அரசினர் மதிப்பளிக்கத் தேவையில்லை; அது தன்னாலே மங்கி மடிந்துவிடும் என்று மார்தட்டி வந்தனர். இப்போது? எந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சியினைக் கழகம் பல ஆண்டுகளாக நாட்டிலே எடுத்துக் காட்டிக்கொண்டு வந்ததோ, எந்த இந்தி எதிர்ப்புக்காகக் கழகம் அறநெறிக் கிளர்ச்சியில் ஈடுபட்டு இன்னல்களையும் இழப்புகளையும் ஏற்றுக் கொண்டுவந்ததோ, அந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, மாணவர் உலகினில் பொங்கிடக் கண்டனர் ஆட்சியினர். வழக்கறிஞர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு ஆதரவு தந்திடுவது கண்டனர்; இதழ்கள், இனியும் ஏதும் நடைபெறாததுபோல் இருப்பது கூடாது என்ற உணர்வுடன் இந்தி எதிர்ப்புணர்ச்சியின் வேகத்தையும் வடிவத்தையும் அரசினர் அறிந்து கொள்ளச் செய்யும் அரும்பணியினை ஆர்வத்துடனும் திறமையுடனும் நிறைவேற்றி வருவதனைக் காண்கின்றனர்; காண்பதனால் கிளர்ச்சிக்கு மதிப்பளிக்க முடியாது என்று கூறிவந்த போக்கு சுக்கல்நூறாகிவிட்டது. மாணவர்களுமா! ஆசிரியர்களுமா! வழக்கறிஞர்களுமா! இதழ் நடாத்துவோருமா!! என்று கேட்டுக்கேட்டு அரசினர் அதிர்ச்சி அடைந்து விட்டனர். இப்போது

அரசினருக்கு ஆதரவாளர் எவர்? என்பதே புரியவில்லை. அவ்வளவு விரிவாகிவிட்டது இந்தி எதிர்ப்புணர்ச்சி.

காங்கிரஸ் கட்சியிலேயே ஒரு பகுதியினர், இந்தி எதிர்ப்புணர்ச்சி கொண்டுள்ளது மட்டுமல்ல, அதனை வெளியே காட்டிக்கொள்வதிலே தயக்கம் காட்டவில்லை, ஆர்வத்துடன் பேசுகின்றனர்.

இந்நிலையில், காங்கிரஸ் அரசு கலக்கம்கொண்டு விட்டிருக்கிறது; எந்த நேரத்திலும் தனது செல்வாக்கு சரிந்து போய்விடக்கூடும் என்ற அச்சம் பிடித்தாட்டு கிறது.

இத்தனைக்கும் காரணம் இந்தக் கழகம் அல்லவா! தேசியக்கட்சி, சுயராஜ்யத்துக்காகப் போராடிய புனிதக் கட்சி என்ற பாசத்துடன் ஆதரித்துவந்த மாணவர்கள், இன்று எதிர்ப்புச் செய்கிறார்களே! நாட்டின் பெரிய கட்சி, நிலையான ஆட்சியை நடாத்திடும் திறமை பெற்ற கட்சி என்பதற்காக நம்மை ஆதரித்து வந்தவர்கள் வழக்கறிஞர்கள்—அவர்கள் அல்லவா வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பிவிட்டிருக்கிறார்கள், இந்தியை எதிர்க்க!!

நிர்வாகத் திறமைக் குறைவு, ஊழல் ஊதாரித்தனம், ஆகாத சட்டங்கள், ஆர்ப்பரிப்பு அமுல்கள் என்பவை களைக் கூடப் பொறுத்துக்கொண்டு, இன்றைய நிலையில், அமைதியான ஆட்சிநடத்திச் செல்லக்கூடிய பக்குவம் பெற்றுள்ள கட்சி காங்கிரஸ் கட்சிதான், மற்றவை நாட்டைக் கெடுத்திடும் நச்சுக் கொள்கை கொண்டவை என்று கூறி ஆதரவு அளித்து வந்த இதழ்கள் இன்று இந்தி எதிர்ப்புக்கு ஆதரவு திரட்டிடும் பணியிலே மும்முரமாகி விட்டுள்ளனவே! இந்த முனைகளிலே கிடைத்துக் கொண்டுவந்த ஆதரவை இழந்துவிட்டோமே! இனி எதிர்காலம் எவ்விதமோ!! என்று எண்ணும்போது பதவிச் சுவையைப் பருகிப் பழகிவிட்ட காங்கிரஸ் கட்சிக்கு மனம் பதறுகிறது, பார்வையில் பொறி பறக் கிறது, பேச்சிலே தடுமாற்றம் ஏற்படுகிறது.

இத்தனைக்கும் காரணம்? கழகம்! கழகம் ஒழிக்கப் பட்டால், மற்ற முனைகளில் கிளம்பியுள்ள எதிர்ப்பு தன்னாலே முறிந்துவிடும்; ஆகவே, பிடி! அடி! சுடு! என்ற ஆர்ப்பரிப்பு முறையில் அரசு, கழகத்தைத் தாக்கும் செய லில் முனைந்து நிற்கிறது.



கழகம் கூறிடும் பேச்சை யார் மதிக்கிறார்கள்? எவர் பொருட்படுத்துகிறார்கள்? எவர் ஏற்றுக் கொள்கிறார் கள்? என்று பேசிய இறுமாப்பு இன்று இல்லை; எதை எதையோ பேசுகிறார்கள், மக்கள் நம்பித் தொலைக் கிறார்களே! எப்படி எப்படியோ பேசுகிறார்கள்; மக்கள் மனம் மாறிவிடுகிறார்களே!! என்ற அங்கலாய்ப்பு ஏற் பட்டுவிட்டது.

கழக ஏடுகளிலே வரும் சொற்கள், ஆட்சியாளர்களின் ஆணவக்கோட்டை மீது வீசப்படும் வெடிகுண்டுகள் என்றாகிவிட்டன, இன்று. அன்று? சொற்களா? பொருளற்ற பிதற்றல் என்று பேசினர் ஆளவந்தார்கள். அன்று கழகம் எழுப்பிய முழக்கங்களைக் காட்டி, எந்தப் பிரிவின்படி வழக்குத் தொடுக்கலாம் என்று துடித்தபடி உள்ளனர்.

இன்று காங்கிரஸ் அமைச்சர்களின் மேஜைமீது, காந்தியாரின் ஏடுகளும், பண்டித ஜவஹர்லாலின் சுய சரிதமும் இல்லை, பாதுகாப்புச் சட்டத்தின் பிரதிகள்!

பிடி 30ல்! தொடு 41ல்! போடு 54! ஆகட்டும், 147, 148 வீசுக!-இவ்விதம் உள்ளனர்.

கழகத்தின் ஒவ்வொரு அசைவும் அச்சம் தருகிறது ஆட்சியாளர்களுக்கு.

இவர் இவ்விதம் பேசியது எதற்காக? இவர்மீது என்னவிதமான வழக்குத் தொடரலாம்? என்ற இதே நினைப்புடன் உள்ளனர் இன்று—அன்று? கழகமா? தூ! தூ! அதை ஒரு பொருட்டாக மதிப்போமா! யார் இருக்கிறார்கள் கழகத்தில்? ஒரு பத்துப் பேர்! இவர்களை நாடு சீந்துமா!! என்று பேசிக்கிடந்தார்கள். கழக ஏடு களிலே வெளியிடப்படும் கேலிப் படங்கள், ஆட்சியாளர் களின் கண்களைக் குத்துகின்றன, மனத்தைக் குடைகின் றன; நெஞ்சை அச்சம் பிய்த்து எடுக்கிறது.

இருக்கவே இருக்கிறது பாதுகாப்புச் சட்டம்— அதனை வீசு! பிடித்துப்போடு உள்ளே!! என்கிறார்கள்.

கருணாநிதியை ஏன் சிறைபிடித்தீர்கள்?

அவர் வெளியே இருந்தால் அமைதியைக் கெடுத்து விடுவார்; அதனால்!!

இப்படி அஞ்சி அஞ்சிச் சாவார்பற்றிப் பாரதியார் அழகாகப் பாடுகிறார்:

அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர்

அஞ்சாத பொருளில்லை அவனியிலே!

என்றார். கழக ஏட்டிலே வரும் ஒவ்வொரு எழுத்தும்' கவிதையும், படமும் கண்டு அஞ்சி அஞ்சிச் சாகின்றார்' யார்? எம்மை வீழ்த்தவல்லாரும் உளரோ! நாடே எமது பக்கம் திரண்டு நிற்கிறது! எமது வீரதீர பராக்கிரமம் எப்படிப்பட்டது! வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தையே கிடுகிடுக்க வைத்தவர்கள் நாங்கள்! பிரிட்டிஷ் சிங்கத்தை அதனுடைய குகைக்குள்ளேயே நுழைந்து அதன் பிடரியைப் பிடித்தாட்டியவர்கள்! நாங்களா இந்தக் கழகப் 'பொடியன்'களின் பேச்சுக்கும் எழுத்துக்கும் பயப்படுவோம்? சிற்றெறும்பைக் கண்டு சிங்கம் அஞ்சுமோ! எலிக் கூட்டம் கண்டு புலி கிலி கொள்ளுமோ!! என்றெல்லாம் பேசிவந்தவர்கள் இன்று என்ன ஆனார்கள்? கழகப் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஈடுகொடுக்க முடியாத நிலையினராகி, சட்டத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, அதிலும் பாதுகாப்புச் சட்டத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, காப்பாற்று! காப்பாற்று! என்று கதறி நிற்கின்றார்கள். அச்சம் விடுக! அலறலை நிறுத்துக! இதோ உமது பக்கம் யாம் நிற்கிறோம்,—என்று அபயம் அளித்துக்கொண்டு, நிற்கிறது அடக்குமுறை! அதன் துணையுடன் துரைத்தனம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், எமது காங்கிரஸ் அரசு, அன்பு வழியை, அகிம்சை வழியை, காந்தியின் சாந்தி வழியைக் கடைப்பிடிக்கும் என்று கூறி வந்தவர்கள்.

உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும்

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே!!

என்று கூறிவந்தவர்கள்...பாடி வந்தவர்கள்—இன்று கழகத்தின் அச்சகங்களிலிருந்து வெளிவரும் எழுத்துக்களைக் கண்டு, கிலிகொண்டு, பாதுகாப்புச் சட்டத்தின் துணையைத் தேடிக்கொண்டு ஓடுகிறார்கள்.

எங்கே போனார்கள், ஆட்சியாளர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட, ஆற்றல் மிக்க எழுத்தாளர்கள்? இம்மென்றால் இருநூறு ஏசலைக் கக்கக்கூடிய பேச்சாளர்கள்! அவர்களிடம் இருந்த 'சரக்கு' தீர்ந்துபோய்விட்



டதா! மகாப் பிரபோ! அம்பறாத்தூணியில் கணைகள் இல்லை! வில்லும் ஒடிந்துவிட்டது! இனி உமக்குத் துணை நிற்க இயலாது! ஆகவே மணிமுடியை மறைத்துக்கொண்டு மறைவான இடம் சென்றுவிடும்; சிக்கினால் சீரழிவு ஏற்படும்; சென்றுவிடும் பாதுகாப்பான இடம்! என்று களத்திலே நின்று படை நடாத்தியவன் கைபிசைந்துகொள்ளும் காவலனுக்குக் கூறிய கதை போலாகிவிட்டதோ! இந்த ஆட்சியாளர்களுக்கு அவர்களை ஆதரிக்கும் எழுத்தாளர்கள் அவ்விதம் கூறிவிட்டார்கள் போலிருக்கிறது.

கழகத்தாரின் பேச்சையும் எழுத்தையும் வலிவற்றதாக்க, பொருளற்றதாக்க நாங்கள் எங்களால் ஆனமட்டும் பார்த்தோம்; உரத்த குரல் எடுத்தோம், உருப்போட்டவைகளை ஒப்புவித்துப் பார்த்தோம், உருட்டி மிரட்டிப் பார்த்தோம், இழிமொழி பொழிந்துபார்த்தோம், பழிச்சொற்களை வீசிப் பார்த்தோம், இட்டுக் கட்டிப்பார்த்தோம், பொய்யும் புனை சுருட்டும் பொழிந்து பார்த்தோம், கலகப் பேச்சை மூட்டிப்பார்த்தோம். வன்முறையைத் தூண்டிடும் பேச்சையும் கொட்டிப்பார்த்தோம்; இத்தனையும் பயன்படவில்லை; இத்தனைக்கும் கிடைக்காத மதிப்பு, அந்தக் கழகத்தாரின் பேச்சுக்கும் எழுத்துக்கும் கிடைத்து வருகிறது; எங்கள் பேச்சை மக்கள் ஏற்க மறுக்கிறார்கள். கழகப் பேச்சும் எழுத்தும் மக்களிடம் எழுச்சியை, விழிப்பை, வீரத்தை, தியாக உணர்வை ஊட்டிவிட்டிருக்கிறது, மேலும் ஊட்டியபடி இருக்கிறது; ஆகவே, இனி எமது பேச்சையும் எழுத்தையும் நம்பிவிடுவது கூடாது; அவை உம்மைப் பாராட்ட, வாழ்த்துக்கூற, வரவேற்பளிக்கமட்டும் வைத்துக் கொள்ளலாம் இப்போது உடனடியாக எந்தச் சட்டத்தைக் கொண்டாகிலும் கழகப் பேச்சும் எழுத்தும் தடுக்கப்பட வழிசெய்யுங்கள்! உடனே! அவசரம்! அவசரம்!

என்று ஆளவந்தார்களின் அன்புக்குத் தம்மைப் பாத்திரமாக்கிக்கொண்ட சண்டமாருதப் பேச்சாளர்களும் வழுக்கிவிழும் அளவுக்கு ஆத்திரப் போதையினை ஏற்றிக்கொண்டுவிட்டுள்ள எழுத்தாளர்களும், முறையிட்டுக்கொண்டார்கள்போலும்!

இல்லையென்றால், கழக எழுத்துக்கு மறுப்பளித்து மக்களைத் தமது பக்கம் அழைத்துச்செல்ல காங்கிரஸ் கட்சி ஏன் தமது ஆதரவாளர்களான எழுத்தாளர்களைப் பயன்படுத்தாமல், பாதுகாப்புச் சட்டத்தைத் தூக்கி வீசு கிறது!

மற்றெல்லாப் படைக்கலன்களும் தீர்ந்துபோய் விட்டன என்பதையன்றோ இந்தப் போக்கு காட்டுகிறது?

நிலபுலம் விற்றுச் செலவாகியான பிறகு, தட்டு முட்டுச் சாமான்களை விற்றாகிலும் வயிறு கழுவிக் கொள்ள முனைவது போன்ற நிலைக்கல்லவா காங்கிரஸ் கட்சி வந்து விட்டிருக்கிறது.

சாதாரணச் சட்டம் போதவில்லையே காங்கிரஸ் அரசுக்கு! பாதுகாப்புச் சட்டமே அல்லவா தேவைப்படு கிறது, நிலைமையைச் சமாளிக்க!! நெறித்தபுருவமே போதும் எதிரிகளை முறியடிக்க என்று முடுக்குடன் பேசித் திரிந்தவன், பிறகு அடி ஆட்களைத் தேடி அலைந்த கதை போலாகிவிட்டதே.

முரசொலியில் வெளிவந்த கட்டுரை, படம், இவை களைக் கண்டு மக்கள் கொண்டிடும் எண்ணத்தைப் போக்கிடவும் மாற்றிடவும், வக்கு வழியற்றுப் போன நிலைக்குக் காங்கிரஸ் பிரச்சார யந்திரம் வந்துவிட்ட தைத் தானே காட்டுகிறது கருணாநிதி, மாறன் ஆகியோர் மீது பாதுகாப்புச் சட்டத்தை வீசியிருக்கும் செயல்.

எண்ணிப் பார்த்தாரா, எழுபதாம் ஆண்டுக்கு நடை போடும் பருவத்தினரான பக்தவத்சலனார்; கருணா நிதியைச் சிறைவைத்திருப்பது பற்றி மக்கள் என்ன பேசிக்கொள்வார்கள் என்பதுபற்றி!

என்ன குற்றம் செய்தான் அந்தப் பிள்ளை? குற்றமா! இவர்களின் குணத்தை அம்பலப்படுத்தி னான். எழுதினான்.

எழுதினால் என்ன? ஆட்சியாளர் குடியா முழுகி விடும்.

ஆட்சியாளர்களுக்கு அவ்வளவு வெறுப்பு, பயம், கோபம்,.....



கருணாநிதி எழுதினால் என்ன? அதை மறுத்து இவர்கள் எழுதுவதுதானே! மக்கள் இருசாராரின் எழுத்தையும் பார்த்து எது நியாயமோ அதனைக் கொள்ளட்டுமே.

எழுதியும் பார்த்தார்கள், காங்கிரசிலே உள்ள எழுத்தாளர்கள்......

மக்கள் சீந்தவில்லை போலிருக்கிறது!!

இப்படியும் இதுபோல வேறுபலவும் பேசிக்கொள் வார்களே! இது ஆட்சியில் உள்ளவர்களின் புகழினையோ வளர்த்துவிடும்!! ஆத்திரம் கண்ணை மறைக்கும் என்பார்கள். அதன் விளைவோ இந்த அடக்குமுறை!!

இவைபற்றி எண்ணிடும்போது, சிறையில் தம்பி அடைக்கப்பட்டிருப்பது குறித்து இயற்கையாக எழும் சோகம்கூட மறைகிறது; கருணாநிதியின் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஆட்சியாளர் எத்துணை அஞ்சுகிறார்கள் என்ற நினைப்பு எழுகிறது; ஒரு வெற்றிப் புன்னகை தன்னாலே மலருகிறது.

கழகத்தின் வளர்ச்சி கண்டு காங்கிரஸ் அரசு கதிகலங்கிப் போயுள்ளதை எடுத்துக் காட்டி, கழகத் தோழர்களுக்கு மேலும் எழுச்சியைத் தரவல்ல நிகழ்ச்சி, கருணாநிதியைச் சிறைப்படுத்தி இருப்பது என்பது புரியும் போது மகிழ்ச்சிகொள்ளக்கூட முடிகிறது,

கழக வளர்ச்சியை அரசினர் கண்டு கலங்கிடும் வண்ணம் பேச்சாலும் எழுத்தாலும் பணியாற்றியதற்காக கழகம் என்ன விதத்தில் நன்றியைத் தனது கருணா நிதிக்குத் தெரிவித்துக்கொள்வது?

ஒன்று இருக்கிறது. கற்கோட்டையில் அடைக்கப் பட்டுள்ள கருணாநிதிக்குக் கழகத் தோழர்கள் காட்டக் கூடிய நன்றியறிவிப்பு! தருமபுரித் தேர்தலில் கழகம் வெற்றி பெறவேண்டும் அந்தச் செய்தி செந்தேனாகி எத்தனை கொடுமை நிறைந்த தனிமைச் சிறையினையும் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக்கிடும். அந்த வெற்றிச் செய்தி, காடு மாலை வனம்வனாந்திரங்களைக் கடந்து, காவல்கட்டு யாவற்றினையும் மீறி கருணாநிதி யின் செவி சென்று மகிழ்ச்சி அளித்திடும். அப்போது

முதியவர் முதலமைச்சர் பக்தவத்சலனார் யோசிப்பார் இதுவும் பயன்தரவில்லையே என்பதாக.

இந்த நோக்கத்துடன் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், தருமபுரி இடைத்தேர்தலில் கழகம் வெற்றி பெற உடனடியாக முனைந்திட வேண்டும்.

கவலையுடன் தம்பி என்னைத் தருமபுரி பற்றிக் கேட்டபோது, நான் மிகுந்த நம்பிக்கையுடன் கூறி விட்டு வந்திருக்கிறேன், தருமபுரியில் கழகம் நிச்சயம் வெற்றி பெறும் என்று.

அந்த வெற்றியைப் பெற்றுத் தருவதைவிட அடக்குமுறையால் தாக்கப்பட்டு நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டுத் தனிமைச் சிறையில், பாஞ்சாலங்குறிச்சிச் சீமையில், அடைக்கப்பட்டிருக்கும் கருணாநிதிக்குக் கழகம் தரக்கூடிய மகிழ்ச்சிப் பொருள் வெறெதுவும் இருக்க முடியாது.

அடக்குமுறையை வீசி அறப்போர் வீரர்களை அடக்கி விடவோ, அவர்தம் பாசஉறையை ஒழித்து விடவோ முடியாது. இது மிக எளிதாக எவருக்கும் புரிந்திடும் உண்மை என்றாலும், அரசாள்வோர், அதிலும் தமது பிடி தளர்ந்து வருவதை உணர்ந்து பீதிகொண்டுள்ள நிலையிலுள்ள அரசாள்வோர், உண்மையினை மறந்து விடுகின்றனர்.

சிறைக்கோட்டம் தள்ளப்படும் இலட்சியவாதிகளோ, உறுதி பன்மடங்கு கொண்டவர்களாவது மட்டுமல்ல, தன்னைப்பற்றிய எண்ணம், தனது நலனைப் பற்றிய நினைப்பு, தனது குடும்பம்பற்றிய எண்ணம், இவைகளைக்கூட மறந்துவிடவும், தான் தனக்காக அல்ல, மற்றவர்களுக்காகவே என்ற நெறியினை உணர்ந்து மகிழ்ந்திடவும், தன்னைப்பற்றிய எண்ணம் எழுப்பிவிடும் ஆசை, அச்சம், கவலை, கலக்கம், பிரிவாற்றாமை போன்ற உணர்ச்சிகளை வென்றிடவுமான ஒரு துறவு நிலையைப் பெற்றளிக்கிறது. இது பற்றியே ஆன்றோர், சிறைச்சாலையை அறச்சாலை என்றனர்.



பாளையங்கோட்டைச் சிறைவாயிலில், கண்டேன், இந்தப் பேருண்மையை உணர்த்தும் எழுத்தாரத்தை. அங்குப் பொறிக்கப்பட்டிருப்பது என்ன?

''தன்னை வெல்வான்
தரணியை வெல்வான்!''

அண்ணன்,

அண்ணாதுரை

4-4-'65

காஞ்சிக் கடிதம் : 13

# விந்தை மாந்தர்கள்

**பக்தவத்சலனார் சுளையை விட்டுத் தோலைச் சுவைப்பவர்**

**காத்திருப்போம்; காலம் தெளிவளிக்கும்**

தம்பி,

ஊருக்குப் பெரியவர், அவரைக் காணும்போது வெறுங் கையுடன் போகக்கூடாது என்று எண்ணி, எலுமிச்சம்பழம் கொடுத்து வணக்கம் கூறுகிறாய் என்று வைத்துக்கொள் - என்ன செய்வார் அந்தப் பெரியவர் என்று எதிர்பார்க்கிறாய்? பதில் வணக்கம் கூறிவிட்டு, எதற்கப்பா இவ்வளவு மரியாதை, நீ என்ன எனக்குப் பழககமில்லாதவனா, நம்ம வீட்டுப்பிள்ளை போன்றவன் நீ—என்று பேசுவார் என்றுதானே! யாருமே அப்படித் தான் எதிர்பார்ப்பார்கள். ஆனால்...!

★

சிரித்துச் சிரித்துப் பேசிடும் இயல்பு! எவரிடமும் விளையாடி மகிழும் சிறுவன்! அவனிடம் அன்பு காட்டி, உன்னால் இயன்றது ஒரு வாழைப்பழம், கொடுக்கிறாய், என்ன செய்வான் என்று எண்ணுகிறாய்? சிறுவன் துள்ளிக் குதிப்பான்! எங்க மாமா! தங்க மாமா! எனக்கு வாழைப்பழம் கொண்டுவந்து கொடுத்துது! என்று



மகிழ்ச்சியுடன் கூறியபடி தன் தாயிடம் பழத்தைக் காட்டி, பிறகு அதைத் தின்பான் என்று. ஆனால்...!

★

நீ மட்டும் சாக்கடை நாற்றத்தைப் போக்கிவிட்டு, இந்த இடத்தைப் பூக்கடை ஆக்கிக் காட்டு, நான் உனக்கு அடிமை ஆகி விடுகிறேன் என்று ஒருவரிடம் கூறுகிறாய் என்று வைத்துக்கொள். அவர் என்ன செய்யவேண்டும்? முடிந்தால் நீ சொன்னதைச் செய்து காட்டிவிட்டுப் பிறகு உன்னிடம் வரவேண்டும், பார்! நீ சொன்னபடி செய்து விட்டேன், இப்போது என்ன சொல்கிறாய் என்று கேட்க வேண்டும். ஆனால்...!

★

ஊமைப் பெண்ணைப் பேசவைத்துவிடு. ஒன்பதே நாளில் நான் அவளைத்தேசிகர் மெச்சிடும் பாடகி ஆக்கிக் காட்டுகிறேன் என்று ஒருவரிடம் சொன்னால், அவர் என்ன பொருள் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பாய்? ஊமைப் பெண்ணைப் பேசவைக்க நம்மாலே முடியவா போகிறது; எதற்காக நாம் ஒரு வம்பான பந்தயத்திலே போய் மாட்டிக்கொள்வது என்று எண்ணி வாய் மூடிக்கொள்வார் என்றுதானே! ஆனால்...!

★

கொடுத்த கடனை மட்டும் கோபாலன் திருப்பிக் கொடுத்துவிடட்டும், பார்! நான் என் ஒரு பக்கத்து மீசையை எடுத்து விடுகிறேன்!!-என்று ஒருவரிடம்'சவால்' பேசுகிறாய் என்று வைத்துக்கொள் - அவர் என்ன செய்ய வேண்டும்? கோபாலனை நச்சரித்தாகிலும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, பிறகு வந்து பார்த்து, ''கடனைத் திரும்பப்பெறவே முடியாது என்று சொன்னாயே! இதோ பார்!'' என்று பணத்தைக் காட்டிவிட்டு, என்ன ஆவது உன்னுடைய 'சவால்' என்று கேட்கவேண்டும். ஆனால்...!

★

குத்துச்சண்டைக் குமரப்பனைக் குப்புற வீழ்த்திக் காட்டு, உனக்கு எட்டுப் பவுனில் தங்கத்தோடா செய்து போடுகிறேன் என்று கூறினால், அந்த நண்பன் என்ன

செய்ய வேண்டும்? குமரப்பனிடம் பேரம் பேசிக் கொண்டாகிலும் அவனை வீழ்த்துவதுபோல பாவனையாகவாகிலும் செய்து காட்டிவிட்டு, எங்கே எட்டுப் பவுனில் தோடா என்று கேட்கவேண்டும். ஆனால்...!

★

ஆனால், முதலமைச்சர் பக்தவத்சலனார் இருக்கிறாரே, அவர் நீ எதிர்பார்க்கிறபடி நடந்துகொள்ள மாட்டார் போலிருக்கிறது.

எலுமிச்சம் பழத்தை மரியாதைக்காக நீ கொடுத்ததும் அந்தப் பெரியவர், உருட்டு விழி காட்டி மிரட்டும் குரல் எழுப்பி, ''ஏடா! என்னைக் கேலியா செய்கிறாய்! என்ன துணிவு உனக்கு, எனக்கு எலுமிச்சம் பழம்தர! என்ன உன் நினைப்பு! யார் என்று என்னை எண்ணி விட்டாய்! எனக்குத் தலை கிறுகிறுப்பு, பித்தம், பைத்யம் என்று காட்டத்தானே, எலுமிச்சம் பழம் கொடுக்கிறாய்? இதைத் தலையில் தேய்த்துக்கொண்டு நீராடினால் பித்தம் குறையும், புத்தி தடுமாற்றம் போய்விடும் என்று குத்திக் காட்டும் செயலல்லவா இது. எலுமிச்சம் பழம் எனக்கு! ஏடா பயலே! என்ன திமிர் உனக்கு!!—என்று பேசினால் என்ன நிலை ஆவாய்? திணறிப் போவாய்! முதலமைச்சர் பக்தவத்சலம் தமது போக்காலும் பேச்சாலும் நம்மைத் திணற அடிக்கிறார் என்று தோன்றுகிறது. மரியாதைக்குத் தந்த எலுமிச்சம் பழத்தை, கேலிக்குத் தந்தது என்று தப்பர்த்தம் செய்துகொண்டு 'தகதக'வென்று ஆடிடும் பெரியவர் போல, நான் சொல்வதைத் தப்பர்த்தம் செய்துகொண்டு, பதைபதைக்கிறார், படபடக்கிறார், பலப்பல பேசுகிறார்.

சிறுவனிடம் பழம் கொடுத்ததும், இது என்ன சிறுமலையா, பூவனா, நேந்திரமா என்று கேட்டால், பரவாயில்லையே சிறுவன் கெட்டிக்காரன் என்று எண்ணிக் கொள்வாய். அந்தச் சிறுவனோ, பழத்தை ஆவலுடன் வாங்கி உரித்து, சுளையை ஜன்னல் வழியாக வீசி எறிந்துவிட்டு, தோலைத் தூக்கிக்கொண்டு ஓடோடிச் சென்று, ''அம்மா! அம்மா! பார்! பார்! மாமா கொடுத்தது, பாரம்மா!'' என்று கூவுகிறான். வாழைப்பழத்தில் சுளை சுவைத்திட, தோல் மாட்டுத் தொழுவத்துக்கு என்ற விவரமும் புரியவில்லை சிறுவனுக்கு. சிறுவனுக்கே கூட



இது புரியவில்லை என்றால், நமக்கு என்னவோ போல இருக்கும். சுளை முக்கியமா தோல் முக்கியமா என்பது கூடத் தெரியாதா; வயது எட்டு இருக்கும் போலிருக்கிறதே என்று எண்ணிக் கொள்வோம்; ஏக்கம் கொள்வோம்.

பெரியவர்கள், பெரிய இடத்தில் உள்ளவர்கள் எத்தனை பெரிய செயலையும் எளிதாகச் செய்திடும் வாய்ப்புப் பெற்றவர்கள், சுளையை எறிந்துவிட்டு, தோலைத் தூக்கிவைத்துக்கொண்டு விளையாடினால் நான் என்ன சொல்லமுடியும்! பரிதாபப்படலாம்!!

முதலமைச்சர் பக்தவத்சலனார் சுளையை விட்டுவிட்டுத் தோலை ஆவலுடன் எடுத்துக்கொள்ளும் விவரமறியாத விளையாட்டுப் பிள்ளையல்ல; வயதில் பெரியவர்; சொல் அதன் பொருள், பொருள் அதன் பொருத்தம், இடம் காலம் என்ற இவைகளை அறிந்திடும் பக்குவம் பெற்றவர்; என்றாலும், என் பேச்சிலே அவருக்குத் தோல்தான் பிடிக்கிறது. சுளையைச் சுவைத்திட மனம் இல்லை என்றால் நான் என்ன செய்யலாம்! இவ்வளவு பெரியவரும் இப்படித்தானா என்று எண்ணி ஏங்க வேண்டும்! வேறென்ன செய்யமுடியும்! அவருடைய இயல்பையா மாற்ற முடியும்? நானா? ஏ! அப்பா! நம்மாலே முடிகிற காரியமா! நாடே முயன்று பார்த்து, முடியவில்லையே என்று முணுமுணுக்கிறதே! நான் எம்மாத்திரம்!!

சாக்கடையை அகற்றிவிட்டு அந்த இடத்தைப் பூக்கடை ஆக்கிக் காட்டு, நான் உனக்கு அடிமை ஆகிறேன் என்று சொன்ன சொல்லைக் கேட்டு, சாக்கடையைச் சுத்தப்படுத்த முனையாமல், தெருத் தெருவாகச் சுற்றி, தெரியுமா! தெரியுமா! எனக்கு அவன் அடிமை ஆகிவிட ஒத்துக்கொண்டான்! என்று அந்த ஆசாமி பேசினால், ஊர் என்ன சொல்லும்? நேற்றுவரை நன்றாகத்தானே இருந்தான்; இன்று என்ன ஏதேதோ பேசுகிறானே என்று கூறும்.

ஆனால், நாடாளும் நல்ல நிலையில் உள்ள முதலமைச்சர் பக்தவத்சலம், சாக்கடையைப் போக்கிப் பூக்கடை வைத்திடு என்ற நிபந்தனையைக் கூறாமல், அடிமை ஆகிவிடுவதாகச் சொன்னான் என்ற அபத்தத்தைச் சுமந்து திரிவதுபோல, என் பேச்சிலே இணைந்துள்ள

நிபந்தனைகளைக் கூறாமல், என் சவாலின் இறுதிப் பகுதியை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு பேசுகிறார். நான் என்ன சொல்லி அவருக்கு விஷயத்தை விளங்க வைப்பேன்? அறியாதவர்களுக்குச் சொல்லலாம்; அறிந்து கொள்ள மறுப்பவர்களுக்கு எப்படிச் சொல்வது! எதைச் சொல்வது! இப்படித்தானா இவர் என்று எண்ணிக் கொண்டு வேறு பயனுள்ள காரியத்தைக் கவனிக்கச் செல்லவேண்டியதுதான்! ஓணானின் முதுகுக் கூனை நிமிர்த்திட மருத்துவ மனையா அமைக்க முடியும்!!

இதோ தண்டபாணி தேசிகர்! இவர் மெச்சிடும் விதமான பாடகி ஆக்கிடுவதாகச் சொன்னாயே! எங்கே அந்தப் பெண்! பாடச் சொல்லு!!—என்று கேட்டுக் கொண்டு, ஊமைப் பெண்ணை நீ பேச வைத்தால், நான் பாட வைக்கிறேன் என்று சொன்னதில் முதல் நிபந்தனையை நிறைவேற்றாமல், இறுதி நிபந்தனையைத் தூக்கிக் காட்டினால், என்ன பொருள்! ஊமைப் பெண் பேசட்டும், பேசச்செய்—பிறகு பாடுவாள்—பாடவைக்கிறேன் என்றுதானே பதில் தரவேண்டும். அவ்விதமான பதிலை நான் தரவேண்டிய நிலைமையை உண்டாக்குகிறார், என் பேச்சிலே உள்ள இணைப்பைக்கழற்றிவிட்டுக் கையில் கிடைத்ததை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு பேசும் 'கனம்' பக்தவத்சலம் அவர்கள்!

ஒருவருக்கொருவர் நடத்திக்கொள்ளும் வாக்குவாதத்தில், முழுவதையும்—தொடர்பாக உள்ளது அவ்வளவையும் எடுத்துப் பார்த்து, பொருளும் பொருத்தமும் காண வேண்டுமேயன்றி, ஒரு துண்டு மட்டும் தூக்கி வைத்துக் கொண்டு இதற்கென்ன பொருள் என்றா கேட்பது?

இராமன் சீதையைக் கரம் பற்றினான்.  
அனுமாரின் வாலில் தீ பற்றிக் கொண்டது.  
தசரதன் கீழே வீழ்ந்து மடிந்தான்,  
மான் மாயமாக மறைந்தது  
சூர்ப்பனகையின் மூக்கை அறுத்தனர்.  
ஆ! பிராணநாதா! என்று சீதாதேவி அலறினாள்.  
சேடிகள் சிரித்து மகிழ்ந்தனர்,  
வில்லை எடுத்தான்; விரிந்தது; ஒடிந்தது.

இவை எல்லாம் உள்ளன இராமாயணத்தில்; ஆனால், ஒவ்வொன்று ஒவ்வோரிடத்தில், ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு பொருத்தம், இணைப்பு; இவ்விதமாக உள்ள



எண்ணற்ற நிகழ்ச்சிகள் பொருத்தமுடன் இணைக்கப்பட்டுள்ள மொத்த வடிவத்தைக் கொண்டுதான் இராமாயணத்தின் பொருளைத்தெரிந்து கொள்ளலாமேயன்றி, இராமாயணத்தில் வெவ்வேறு இடத்தில் உள்ளவைகளில் சிற்சில துண்டுகளைக்கல்லி எடுத்துவைத்துக் கொண்டு, 'பார்த்தனையா இராமாயணம்' என்றா பேசுவார்கள்? அதுபோல இந்தப் பெரியவர் என் பேச்சிலே தொடர்புதனை இவராக அறுத்துவிட்டு, துண்டு துணுக்குகளைத் தூக்கி வைத்துக் கொண்டு, இதுதான் அண்ணாதுரை சொன்னது! இது தான் அவருடைய கருத்து! என்றா பேசுவது? இவ்வளவு பெரிய இடத்தில் இருந்து கொண்டா! வெட்கமாக இருக்கிறது நம்மவர் இப்படிப் பேசுகிறாரே என்று இவருக்கு மெத்தவேண்டியவர்களே என்னிடம் கூறும்போது.

என்னைக் கண்டிக்க, கேலிபேச, அவருக்கு உரிமையும் இருக்கிறது; வசதி நிரம்ப, வாய்ப்பும் அதிகம் நிலையை எடுத்துக்கொண்டாலும், அவர் எதுவும் பேசலாம். ஆனால், அதற்காக இவ்வளவு வழுக்கி விடுவதா! இந்தி ஆட்சிமொழி இல்லை என்று சர்க்கார் அறிவித்துவிட்டு, அது இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்ற திட்டமும் கூறாமல், அதனைக் கட்டாயம் படித்தாகவேண்டும் என்றும் சட்டம் போடாமல், இந்தி பரப்புவதற்காகச் சர்க்கார் பணமும் செலவழிக்காமல் இருந்தால் இந்தி பரவிட உமது உதவி கிடைக்குமா என்ற கருத்துப்பட — லால்பகதூர் அல்ல — நந்தா அல்ல—பாராளுமன்றத்தில் அல்ல—பத்திரிகை நிருபர் ஒருவர்—நிருபர்கள் மாநாட்டில் கேட்டிருக்கிறார். அவருடைய கேள்வி, சவால் விடுகிற முறையில் இருந்தது. நானே பதில் கூறும்போது, நான் அந்தச் சவாலை ஏற்றுக் கொள்கிறேன் என்ற முன்னுரையுடன் பேசி இருக்கிறேன்—இதனை நான் விளக்குவதற்கு முன்பே 'இந்து' பத்திரிகை விளக்கமாக்கி இருக்கிறது—இவ்வளவுக்கும் பிறகு முதலமைச்சர் என்மீது தமது கேலிப் பேச்சை வீசுவது முறை அல்ல! அதனால் எனக்கு எந்த இழுக்கும் வந்துவிடாது. இவரைபற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக்கொள்வார்கள்; பேசிக் கொள்கிறார்கள்.

யாராவது ஒருவர் என்னிடம்வந்து, 'அண்ணாதுரை! வா! வா! இந்தி பரப்பிட வா!'' என்று அழைத்தால் என்ன சொல்வேன் என்று எதிர்பார்க்கிறார் முதலமைச்சர்.

'இதோ வந்துவிட்டேன்' என்று, வந்து கேட்பவர் விவரம் புரியாதவராக இருந்தால், விளக்கம் கொடுத்து அனுப்பு வேன்; விஷமத்தனமாகக் கேட்பவராக இருப்பின், "மதியிலி! என்னைப்போய் அழைக்கிறாயே இந்தியைப் பரப்ப உதவும்படி! நான் சொன்னது என்ன? அதைச் செய்து முடித்தாயா? ஓடு! சாஸ்திரியிடம்! இந்தி இந்தியா வின் ஆட்சிமொழி அல்ல என்ற உத்திரவு போடச் சொல்லு, ஒரு கோடிக்கு மேல் இந்திக்காகச் செலவிடப் பணம் ஒதுக்கியிருக்கிறார்களே, அந்தப் பணத்தை வேறு ஏதாவது உ ப்படியான காரியத்துக்குச் செலவிடச் சொல்லு. அதை எல்லாம் செய்துவிட்டல்லவா என்னிடம் வரவேண்டும். அதைச் செய்ய வக்கு வல்லமை இல்லாமல் என்னிடம் வந்து பேசுகிறாயே! போ! போ!" என்று கூறு வேன்.

ஆனால், முதலமைச்சர் தவறாகப் புரிந்துகொண்டு பேசும்போது குடிமகன் இத்தனை கண்டிப்பாகப் பேச முடியுமா! அதனால்தான் என் மனக்கண்முன், எலுமிச்சம் பழம் கண்டு எரிச்சல் கொண்ட பெரிய மனிதர், சுளை யைக் கீழே போட்டுவிட்டுத் தோலைத் தூக்கிவைத்துக் கொண்டு ஆடிடும் சிறுவன், ஊமைப் பெண்ணைப் பேச வைக்க ஒத்துக்கொண்டு அதைச் செய்து முடிக்காமல், இந்தப் பெண்ணைப் பாடச் செய் என்று கேட்ட அப்பாவி ஆகியோர் தெரிந்தனர்.

நானாகவா இட்டுக்கட்டிச் சொல்கிறேன், பத்திரிகை யில் வந்ததைச் சொல்கிறேன் என்று வாதாடிக் காட்ட நினைப்பார்கள்.

பத்திரிகை நிருபர்கள் மாநாட்டிலே கூறப்படுபவை களை இன்னின்ன விதமாக நீங்கள் சொன்னீர்கள், இன்ன விதமாக நாங்கள் வெளியிடுவதாக இருக்கிறோம் நீங்கள் இப்படித்தானே சொன்னீர்கள் என்று நம்மிடம் காட்டி, ஒப்பம் பெற்றுக்கொண்டு, இதழ்களில் வெளியிடும் வழக்கம் இல்லை, குறித்துக்கொண்டு போகிறார்கள். வெளியிடுகிறார்கள்; வெளியிடுவதற்கு மறுப்பு நாம் அளித்தால்கூட பல வேளைகளிலே மறுப்பை வெளியிடு வதுமில்லை; வெளியிடும்போதுகூட, பளிச்சிட்டுக் காட்டு வதில்லை. இது இன்று உள்ள முறை.

இந்த நிலையில், எனக்கு அல்ல, முதலமைச்சர் போன்ற பெரிய நிலையினருக்கே, அவர்கள் எதிர்பார்க்



காத முறையில் செய்திகள் வெளியிடப்பட்டு விடுவ துண்டு.

மாணவர்களுக்குக் கழகத் தலைவர்கள் புகாரி ஓட்ட லில் பிரியாணி வாங்கிக் கொடுத்து மயக்கிவிட்டார்கள் என்று முதலமைச்சர் சொன்னதாகப் பத்திரிகைகளிலே வெளிவந்தது; படித்தோம், பதறினோம்.

முதலமைச்சர் இதற்கு ஒரு மறுப்பும் வெளியிட வில்லை, பல நாட்கள் உருண்டோடியும்!

தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தால்கூடப் பத்திரிகைகள் மறுப்பை வெளியிட்டிருக்கும். செய்தா ரில்லை. செய்யவேண்டும் என்று தோன்றவுமில்லை,

ஒரு திங்கள் அளவு சென்ற பிறகு, நான் அப்படிச் சொல்லவே இல்லை; பத்திரிகையில் வந்தது வெறும் புரளி என்று முதலமைச்சர் கூறினார். அதனைப் பத்திரி கைகள் வெளியிட்டன; வேறென்ன செய்ய முடியும்?

ஒரு திங்கள் அளவு வாய் மூடிக்கொண்டிருந்து விட்டு இப்போது 'என் வாயில் பிரியாணி என்ற வார்த்தையே வராது' என்று முதலமைச்சர் சொல்கிறார், என்ன செய் தோம்? சரி! ஒரு விளக்கம், மறுப்பு, சமாதானம்—என்ற முறையில் அதனைக் கருதிக்கொண்டோம். 'இல்லை! இல்லை! பிரியாணி என்று சொன்னார், இன்னின்ன பத்திரிகைகளைப் பார்த்தால் புரியும்!' என்று கூக்குரல் எழுப்பினார்களா! இல்லையே!! பெரியவர் கூறிவிட்டார், சரி என்று இருந்து விட்டோம்.

இவர் போன்றார் பத்திரிகைகளில் வெளியிடப்படு வதை இல்லை என்று மறுக்கலாம், புது விளக்கம் தரலாம், பத்திரிகையில் ஆயிரத்தெட்டு வரும், நானா பொறுப்பு என்று தர்பார் பேசலாம். நாடு தாங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் நான் பேசியிருப்பதற்கு—இன்ன பொருள்-இதற்குத் தப்பான பொருள் கொள்ளாதீர்கள் பொருத்தமற்று; தொடர்பற்றுப் பேசாதீர்கள் என்று நான் விளக்கம் அளித்தால், அதனைக் கவனிக்கக்கூட மாட்டார்களாம் இவர்கள்! ஏன்? இவர்கள் பெரிய இடம், நான் சாதாரணம்! நியாயம் பொது! நேர்மை எத்தனை உயரம் சென்றாலும் இருக்கவேண்டும். இருக்கிறதா என்பதற்கு எனக்கல்ல, அவரவர்கள் தமது நெஞ்சுக்குப் பதில் கூறிக்கொள்ள வேண்டும்.

மாணவர்களைச் சந்திக்க முதலமைச்சர் மறுக்கிறார் என்று இதழ்கள் வெளியிட்டன. இவர் அதனை அப்போது மறுக்கவுமில்லை. இப்போது, நான் அவ்விதம் சொல்லவில்லையே என்றார், நாடு கேட்டுக்கொண்டது. அன்று வெளிவந்த இதழ்களைத் தூக்கிக்கொண்டு போய் இவர் எதிரில்போட்டு, 'இதற்கென்ன சொல்கிறீர்? இதற்கு என்ன பொருள்?' என்றா கேட்பது?

நான் அப்படிக்கூட அல்ல. என் பேச்சின் மொத்தத்தை, ஏன் அதுபோல் பேசினேன் என்பதற்கான காரணத்தை, என் நோக்கத்தைப் புரிந்துகொண்டு 'பேசுங்கள் என்று சொல்கிறேன்; அந்த அளவு கண்ணியம் கூடவா காட்டக் கூடாது?

ராஜ்யசபைப் பேச்சு, பத்திரிகை நிருபர்களிடம் பேசியது என்ற இரண்டையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக்கொண்டு, குழம்பிப்போய், குழப்பமாக இருக்கிறதே என்று பேசுகிறார் முதலமைச்சர். அவராகக் குழப்பத்தைத தேடிக் கொண்டால் யார் என்ன செய்ய முடியும்? காலம் தெளிவளிக்கட்டும் என்று காத்திருக்க வேண்டியதுதான்.

இதுபற்றி நான் எண்ணிக் கொண்டிருந்தபோதுதான் என் மனக்கண்முன் விந்தைமாந்தர்கள் தெரிந்தனர், உனக்கும் தெரிவித்தேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

11-4-'65

காஞ்சிக் கடிதம் : 14

# வெந்த புண்ணில் வேல்

**தருமபுரியில் தோற்கடிக்கப்பட்டோம்**

**தோல்வி நமக்கொரு பாடம்;**
**வெற்றிக்கு வழி அமைக்கும்.**

**மெய்யும் பொய்யும் குயிலும் காகமும் போல!**

**கழகத்தவர் இருட்டில் ஒளி எழ விளக்கு ஏற்றியவர்கள்**

தம்பி,

கட்டவிழ்த்துக்கொண்டு ஓடிய காளை, பயிரைப் பாழாக்கி, குழந்தைகளைக் குத்திக் குற்றுயிராக்கி அட்டகாசம் செய்வது கண்டு, அதனை மடக்கி அடக்கி, மற்றவர்க்கு ஏற்படக்கூடிய ஆபத்தைத் தடுத்திட வேண்டும் என்று முயன்றவனை, அந்தக் காளை தாக்கிவிட்டு, தப்பித்துக்கொண்டு கனைத்துக்கொண்டு, புழுதியைக் கிளப்பிக்கொண்டு, வாலைத் தூக்கியபடி ஓடுவதைக் கண்டதுண்டா? காளைக்குப் பேசத்தெரியாது; தர்மபுரியில் வெற்றி கிடைக்கப் பெற்ற எக்களிப்புக் கொண்ட காங்கிரஸ் தலைவர்களுக்கு, வாய் இருக்கிறது; ஆகவே, வார்த்தைகள் குபுகுபுவெனக் கிளம்புகின்றன; பொழிந்து தள்ளுகிறார்கள்! கேட்டுக்கொள்கிறேன் காது இருப்பதால்; பொறுத்துக் கொள்கிறேன், அவர்களின் போக்குப் புரிவதால்; கூறிவைககிறேன், உன் கடமையை உனக்கு நினைவுபடுத்த வேண்டும் என்பதால்,

புள்ளிமானை அடித்துத் தின்றிடும் புலி உறுமுவதும், ஆட்டுக்குட்டியைப் பிடித்துக் கொன்றிடும் ஓநாய் கத்துவதும், காட்டிலே. நாட்டிலே, சில வேளைகளிலே அக்கிரமக்காரர்கள், சூதுபல செய்து நீதியைச் சாய்த்துவிட்டு, ஆர்ப்பரிப்பதுண்டு, அவர்களின் எண்ணம் எல்லாம் முடிந்துவிட்டது என்பதால். பேதமையான எண்ணம் மட்டுமல்ல, தலை சுற்றும் அளவுக்குத் தற்பெருமை ஏறிவிட்டது என்பதும் அந்த ஆர்ப்பரிப்பின் பொருளாகும்.

என்னை எதிர்க்க இனி எவனால் ஆகும்!
எதிர்த்து நின்றவன் என்ன கதியானான் காணீர்!
தாக்கினேன்! தகர்ந்துபோனான்!
பொடிப் பொடியானான் போரிட வந்தவன்!

இவ்விதம் ஆர்ப்பரித்தவர்கள் ஒவ்வொருவரும், தமது வல்லமை பற்றித் தவறான கணக்குப் போட்டுக்கொள்பவர்களே என்பதனை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் எண்ணற்றன உள்ளன வரலாற்றுச் சுவடிகளில்! எக்காளமிடுவோர் இதனை நினைவிற்கொள்வதில்லை.

தரம் குறைந்தவர்கள் மட்டுமல்ல, ஓரளவு தரம் உள்ளவர்களுக்கேகூடச் சில வேளைகளில் வெற்றி தந்திடும் மகிழ்ச்சி, போதையாகி விடுவதுண்டு.

பிறகோர் நாள் வீழ்த்தப்பட்ட ஜூலியஸ் சீசர், களம் சென்று வெற்றி கண்டது குறித்துத் தன் நாட்டவருக்குச் 'சேதி' அனுப்பியபோது, சென்றேன்! கண்டேன்! வென்றேன்! என்று குறிப்பிட்டிருந்தான்—தனது வல்லமையின் அளவுபற்றி அவனுக்கு அத்தனை பெரிய கணக்கு.

ஜூலியஸ் சீசராவது, சென்றேன்—கண்டேன்—வென்றேன் என்றார்! முதலமைச்சர் பக்தவத்சலமோ, சென்றேனில்லை! வென்றேன் காண்பீர்! என்று பேசுகிறார்! பேசுகிறாரா? முழக்கமிடுகிறார்! களம்கூடச் செல்லாமல்—வெற்றிபெற்ற வேந்தர்வேந்தே! வாழ்க உமது வீரம்! வளர்க உமது தீரம்!! என்று வளைந்துபோனவர்கள் சொல்லாரம் சூட்டுகின்றனர்.

காணாததைக் கண்டவர்கள்! என்று பேசிடுவோரும், அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்றும், திருச்செங்கோட்டையும்,



திருவண்ணாமலையையும், சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் மண் கவ்வியதையும் மறந்துவிட்டார்களோ என்றும், பேசிடும் பொது மக்கள் உளர். ஆனால், நான் அவர்களைப்போலக் காங்கிரஸ் தலைவர்களின் ஆர்ப்பரிப்பைக் கண்டிக்கவோ, திருச்செங்கோடு திருவண்ணாமலையைக் கொண்டு தருமபுரியை மறைக்கவோ போவதில்லை. தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்—காரணம் பல காட்டி இது உண்மையில் தோல்வி அல்ல என்று வாதாடப் போவதில்லை; தோல்வி கண்டோம் என்பதனை ஒப்புக்கொள்ளத் தயங்கப் போவதில்லை. கேரளத்தில் கண்ட தோல்வியை மறைத்திடப் புள்ளி விவரக் கணக்குத் திரைக்குப் பின்னே ஒளிந்து கொண்ட காமராஜர் போல, தருமபுரியில் முன்பு பெற்றதைவிட அதிக வாக்குகள் கழகம் பெற்றிருக்கிறது என்று கணக்குக் காட்டிடும் தந்திரத்தையும் மேற்கொள்ள முற்படவில்லை. ஆமாம்! தோற்று விட்டோம்! தோற்கடிக்கப்பட்டோம்! என்பதனைக் கூறிட அச்சம், தயக்கம் கொள்ளவில்லை; தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.

தோல்வியை ஒப்புக்கொள்வதுமட்டுமல்ல; அந்தத் தோல்வியைச் சுட்டிக் காட்டி, காங்கிரஸ் தலைவர்கள் பேசிடும் இழிமொழிகள், எடுத்தேன் கவிழ்த்தேன் பேச்சுகள், ஒழித்தே விடுவோம் என்ற மிரட்டல்கள் ஆகியவற்றை வரவேற்கிறேன்.

நான், எனது கழகத் தோழர்களின் கண்முன்பும் பொதுமக்களுடைய கண்முன்பும், தோற்கடிக்கப்பட்ட கோலத்திலேயே நிற்க விரும்புகிறேன்—அவர்கள் காண—காண்பதனால் பெறவேண்டிய கருத்துக்களைப் பெற்றிட!

வளைந்தவாள்! நொறுங்கிய கேடயம்! பிய்த்தெறியப்பட்ட கவசம்! குருதி கசிந்திடும் வடுக்கள்!—இவைகளைப் பட்டுப் பீதாம்பரத்தாலோ, இரவல் மினுக்காலோ மறைத்துக்கொண்டு, என் தோழர்களின் முன்பு போலியான ஒரு காட்சிப் பொருளாக நிற்கப் போவதில்லை; தருமபுரியில் காங்கிரசால் தோற்கடிக்கப்பட்டவன் என்ற நிலையை மறைத்துக்கொள்ளாமல் நிற்க விரும்புகிறேன்;

அந்த நிலையில் என்னை என் தோழர்கள் காணவேண்டும் என்றும் விரும்புகிறேன்.

காங்கிரஸ் தலைவர்களே! உங்களால் முடிந்த மட்டும் இழிமொழிகளை மாலையாக்கி எனக்களியுங்கள், என் தோழர்கள் என்னை அந்த நிலையிலே காணட்டும்!

அடைபட்டுக் கிடந்த சேற்று நீர், கல் பெயர்க்கப் பட்டு ஒரு துளை தோன்றியதும் அதன் வழியாகக் கிளம்பி வேகமாகப் பாய்ந்தோடி வருவதுபோல, தருமபுரியில் வெற்றி கண்டதால் உங்களுக்குக் கிளம்பியுள்ள எக்களிப் பைக் காட்ட, என்னை ஏசுங்கள்! தூற்றுங்கள்! கேவல மான வார்த்தைகளை வீசுங்கள்! அவைகளை நான் பெற்றுக்கொள்வது மட்டுமல்ல, உம்மால் எனக்கு அளிக்கப்படும் அந்த விருதுகளுடன், நான் என் தோழர்கள் முன் நிற்க விரும்புகிறேன்.

அதிலே எனக்குக் கேவலம் வரும் என்று எண்ணு கிறீர்கள்—மக்களின் மனப்பாங்கு அறியாததால்!

அவைகளைத் தாங்கிக்கொள்ள நான் அஞ்சுவேன் அல்லது கூச்சப்படுவேன் என்று எண்ணுகிறீர்கள்— என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால்!

நமது அண்ணன் கேவலப்படுத்தப்படுகிறான், தரும புரியில் கழகம் தோற்றதால், என்பதனை எவ்வளவுக் கெவ்வளவு விளக்கமாகத் தெரிந்து கொள்ளுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது — எனக்குமட்டுமல்ல— கழகத்துக்கு.

இன்று நீங்கள் வீசும் இழிமொழி, நாளைய எதிர் காலத்தை எமக்கு ஒளி நிரம்பியதாக்கிட உதவட்டும்; தெம்பு இருக்கும்போதே திட்டித் தீர்த்துவிடுங்கள்; பொன்னான வாய்ப்பு அல்லவா இது உங்களுக்கு; எமது எதிர்காலம் பொற்காலமாக இருக்க வேண்டு மானால் இப்போது உம்முடைய இழிமொழிகளை நாங் கள் பெற்றாகவேண்டும்; நாராசநடை வல்லவர்களைக் கொண்டு நன்றாகத் தூற்றுங்கள், எங்கள் உள்ளத்தில் பாயந்திடும் விதமாக! எமது தோழர்களின் கண்கள் குளமாகும் விதமாக! தோல்வி ஏற்பட்டால் என்னென்ன கொடுமைகள் விளைந்திடும், எவை எவைகளைத் தாங்



கிக்கொள்ள வேண்டிவரும் என்ற உண்மையினை உணர்ந்திட!

தேர்தலில் நாம் வெற்றி பெற்றாகவேண்டும், தொடர்ந்து; இல்லையெனில், ஒரு இடத்தில் நாம் தோற் றாலும் நம்மை இழிவாகப் பேசிடவும், இதுதான் முடிவு என்று ஆரூடம் கணித்திடவும், பொதுமக்கள் மனத்தில் பீதி மூட்டிடவும் காங்கிரசின் பெருந்தலைவர்கள் முனை வார்கள் என்று நான் என் தோழர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களின் நாடியினை முறுக்கேற்றிவிடுவதனை விட, கழகத்தின் தோல்வியைக் காட்டி, நீங்கள் ஏசஏச, என்னைப்பற்றி இழிவாகப் பேசப் பேச, இடம் பிடித் தான்கள் குடம் குடமாகத் தமது தூற்றல் சேற்றை இறைக்க இறைக்க, என் தோழர்கள், வேதனை அடை வார்கள்; அந்த வேதனையிலிருந்து வெளிக்கிளம்பும் 'சக்தி' இருக்கிறதே, அது சாமான்யமானதாக இராது: நான் அதனைப் பெற விரும்புகிறேன். என்னையும் கழ கத்தையும் இழிவாகப் பேசி ஏசுவதன் மூலம், என்வேலைப் பளுவைக் குறைக்கிறீர்கள்; என் கழகத் தோழர்களின் உறுதியையும் ஊக்க உணர்ச்சியையும் வலுவாக்கி வைக்கிறீர்கள்; வசவாளர்களே! நீவிர் வாழ்க! வாழ்க! நுமது நாவு நீள்க! நீள்க! உமது தூற்றல் அகராதி பெரி தாகுக! பெரிதாகுக!

ஒரு வெற்றி கிடைத்திட்டால், காங்கிரசார் எவ்வித மாக ஆர்ப்பரிக்கின்றனர் என்பதனைக் காணட்டும், கழகத்தவர் மட்டுமல்ல, பொதுமக்களும்.

ஒரு தோல்வி கழகத்தைத் தாக்கினால், அதன் விளை வாக என்னென்ன இழிமொழிகளைக் கழகம் தாங்கிக் கொள்ளவேண்டி வருகிறது என்பதனை உணர்த்திட, நான் ஆயிரம் விளக்கம் தருவதைவிட, உம்முடைய ஒரு அரைமணி நேரத் தூற்றல் பேச்சு மிக மிகப் பலன் தருவ தாக அமையும். எனவே தூற்றுங்கள், எமது தோழர்களின் இதயத்தைத் துளைக்கும் அளவுக்கு. அவர்களின் கண் கலங்கட்டும், நெஞ்சு பதைபதைக்கட்டும், இரத்தத்தில் சூடு ஏறட்டும்; அது கழகத்தின் எதிர்காலத்தைச் செம்மைப்படுத்தி வைக்கும்.

தருமபுரி தீர்ப்பளித்துவிட்டது என்கிறார்கள்— பெருந் தலைவர்கள்!!

திருச்செங்கோடும், திருவண்ணாமலையும், சென்னை மாநகரமும் தீர்ப்பளிக்கும் திருத்தலங்கள் அல்ல போலும்! அங்கெல்லாம் மக்கள், காங்கிரசைத் தோற்கடித்துக் காட்டியது, தீர்ப்பு அல்லபோலும்! தருமபுரியில் மட்டுந் தான் தீர்ப்பு தெரிகிறதோ! பந்தாடும் சிறுவனும் கை கொட்டிச் சிரிப்பான்!!

தருமபுரி தீர்ப்பளித்து விட்டது என்று பேசிடும் காங்கிரசின் பெரிய தலைவர் திருவண்ணாமலையின்போது என்ன சொன்னார்? திருவண்ணாமலை தீர்ப்பு அளித்து விட்டது என்று கூறி, கன்னத்தில் போட்டுக்கொண் டாரா? காதைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட்டுக் காட்டினாரா? புத்தி வந்தது புத்தி வந்தது என்று சொல்லித் தலையில் குட்டிக்கொண்டாரா? தெரியுமே பொதுமக்களுக்கு, அவர்கள் காட்டிய போக்கும், பேசிய பேச்சும்!

இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, மக்களை ஏமாற்றி, கழகம் வெற்றிபெற்றுவிட்டது என்றார்.

கழகம் வெற்றிபெறும் போதெல்லாம், 'இல்லாததும் பொல்லாததும்' சொல்லிப் பெற்ற வெற்றி! காங்கிரசுக்கு வெற்றி கிடைத்தால் அது தீர்ப்பு! நாக்குத்தானா அவர்கள் பேசப் பயன்படுத்தும் கருவி!

தருமபுரியில் காங்கிரஸ் வெற்றி பெற்றது 'தீர்ப்பு' என்றால் திருச்செங்கோட்டிலும், திருவண்ணாமலையிலும் கழகம் வெற்றி பெற்றதும் 'தீர்ப்பு' தானே!

திருச்செங்கோடு, திருவண்ணாமலைத் 'தீர்ப்புகளை' மதித்துக் காங்கிரஸ் கட்சி என்ன காவி உடுத்திக் கமண்டலம் எடுத்துக்கொண்டு காடேகிவிட்டதா! இல்லையே! போனால் போகட்டும், மற்றோர் சமயம் பார்த்துக்கொள்வோம் என்று இருந்துவிட்டது. இந்த இலக்கணம் எல்லோருக்கும் பொதுதானே! அப்படியிருக்க, தருமபுரியில் கிடைத்த வெற்றியால் மட்டும், ஏன் அவர்கள் தீர்ப்பு! தீர்ப்பு! என்று நாவாட, தலையாட, நாற்காலி மேஜையாட, ஒலிபெருக்கி உடனாட உரையாற்றுகின்றனர்? காரணம் இருக்கிறது, தம்பி! காரணம் இருக்கிறது.

அவர்களுக்குத் தாங்கள் குற்றம் செய்திருக்கிறோம் என்ற அச்சம் நிரம்ப இருந்திருக்கிறது.



நமது குற்றம் வெளிப்பட்டுவிடும்; தண்டிக்கப் பட்டுவிடுவோம்! என்ற அச்சம் இருந்திருக்கிறது.

மறுக்க முடியாததும் மறைக்க முடியாததுமான குற்றங்களைச் செய்துவிட்டிருக்கிறோமே, மக்கள் எப்படி அவைகளை மறந்துவிடுவார்கள், எப்படி மன்னித்து விடுவார்கள்? நிச்சயமாக நம்மைத் தண்டிக்கத்தான் போகிறார்கள் என்ற திகில்கொண்ட நிலையிலேதான் அவர்கள் தருமபுரி வந்தனர்.

ஆனால், தருமபுரியில் வெற்றி அவர்கட்கு என்றதும், அவர்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை; சந்தேகத்துக்கு இடமற்ற தன்மையில் குற்றம் மெய்ப்பிக்கப்படவில்லை என்ற காரணம் காட்டி, கொலையாளி விடுதலை செய்விக்கப்பட்டால், அவனுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக் கொந்தளிப்பு எப்படிப்பட்டதாக இருக்கும்; அந்த நிலையில் உள்ளனர்! நல்லதீர்ப்பு! நல்ல தீர்ப்பு! என்று பாடுகின்றனர். நாங்கள் வென்றோம்! நாங்கள் வென்றோம்! என்று ஆர்ப்பரிக்கின்றனர்.

தருமபுரியில் அவர்கள் வெற்றியை எதிர்பார்க்கவில்லை; வெற்றிக்கு உரியவர்கள் தாமல்ல என்ற எண்ணம் அவர்களிடம்.

அந்த நிலையில் வெற்றி என்று ஏற்பட்டதும், அவர்களால், நிற்க முடியவில்லை, நினைத்துப் பார்க்க முடியவில்லை; வாயைத் திறக்கிறார்கள், வார்த்தைகள் உருண்டோடி வருகின்றன.

''இவன்தான் களவாடினான் என்பதற்குப் போதுமான சான்று இல்லை; மெய்ப்பிக்கப்படவில்லை'' என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

குற்றக் கூண்டிலே நின்றவன் மகிழ்ச்சிப் பெருக்கடைந்தான், தன் நிலையையும் மறந்தான்.

> ''அப்படியானால் அந்தத் தங்கச் சங்கிலியை
> நான் திருப்பித்தர வேண்டியதில்லையே?''

என்று கேட்டுவிட்டானாம், தீர்ப்பளித்த நீதிபதியே, தான் எவ்வளவு பெரிய தவறான தீர்ப்பளித்து விட்டோம் என்பதை உணர்ந்து திகைத்திடத்தக்க விதமாக.

அவன் விவரமறியாத குற்றவாளி! காங்கிரஸ் தலைவர்கள் எல்லாத் திறமையும் பெற்றவர்களாயிற்றே. ஆகவே. குளறிக் கொட்டவில்லை, தீர்ப்புப் பிரமாதம் என்று பேசித் திருவிழா கொண்டாடுகிறார்கள்.

தருமபுரியில் மட்டுமல்ல, எத்தனையோ இடங்களில் எத்தனையோ தடவைகளில், எத்தனையோ விவரமறிந்தவர்கள்கூட மெய்போன்ற பொய்யை ஆதாரமாகக் கொண்டு தவறான தீர்ப்பு அளித்து விடுவதுண்டு.

கள்வனைக் கொண்டுவா! என்ற கூறவேண்டிய
மாமன்னன் கள்வனைக் கொன்று வா!

என்று கூறியபோது, மன்னன் தீர்ப்பு-நீதிநெறி வழுவாத மன்னன் தீர்ப்பு—செங்கோல் வளையாச் சிறப்புடையான் தந்த தீர்ப்பு என்றுதான் அவையோர் கருதினர். கோவலனைக் கொடுமைக்கு இரையாக்கிய கெடுமதியாளன், ''இஃதன்றோ நல்ல தீர்ப்பு'' என்றுதான் பெருமிதத்துடன் கூறியிருப்பான்.

உண்மையான தீர்ப்பு பிறகல்லவா கிடைத்தது, ஒற்றைச் சிலம்பேந்திய கண்ணகி சிலம்பினை உடைத்து உள்ளே உள்ள பரல்களைக் காட்டி, தன் கணவன் குற்றமற்றவன் என்பதனை மெய்ப்பித்தபோது!

எனவே, திருவண்ணாமலையையும் திருச்செங்கோட்டையும், சென்னை மாநகரையும் தீர்ப்பளிக்கும் தகுதி பெற்ற இடங்களல்ல என்று கருதிக்கொண்டு, தருமபுரி மட்டுமே தீர்ப்பளிக்கும் இடம் என்று காங்கிரசார் கூறினாலும்—அது சொத்தை வாதம்—அளிக்கப்பட்ட தீர்ப்பு முறையானதுதான் என்றோ, முடிவானதுதான் என்றோ கூறி விடுவது எங்ஙனம் பொருந்தும்?

தரப்பட்ட ஆதாரங்களைக் கொண்டும், காட்டப்பட்ட சான்றுகளை நம்பியும், எடுத்துக் கூறப்பட்ட வாதங்களைக்கொண்டும், தருமபுரி மக்கள் அந்த விதமான தீர்ப்பு அளித்துவிட்டனர்.

இதனாலே நான் தருமபுரி மக்கள் மீது குற்றம் கூறவில்லை; அவர்களின் நேர்மையையும் திறமையையும் சந்தேகிக்கவில்லை; நான் கூறிக்கொள்வது, நாம்,வழக்கை எடுத்துரைத்ததிலும், சான்றுகளை விளக்கியதிலும்



குற்றத்தை மெய்ப்பித்துக் காட்ட வாதாடியதிலும், தேவைப்படும் அளவு திறமையைக் காட்டாததால் வழக்கின் வடிவம் கெட்டு விட்டது; தீர்ப்பு வேறுவிதமாகி விட்டது என்றுதான் கருதுகிறேன்.

நம்மை நாமே நொந்துகொள்ள வேண்டுமேயன்றி, தருமபுரி மக்கள்மீது வருத்தப்பட்டுக் கொள்வது முறையாகாது.

நியாயம் காங்கிரசின் பக்கம் இருந்ததாலும் அல்ல; நீதிபதிகள் தவறான போக்கினர் என்பதாலும் அல்ல; வழக்கை எடுத்துரைப்பதில் நாம் வெற்றி பெறாததாலேயே தீர்ப்பு காங்கிரசுக்குச் சாதகமானதாகத் தரப்பட்டுவிட்டது.

இது தோல்வியை மறைத்திடக் கூறப்படும் தத்துவம் அல்ல; நான் தோல்வியை ஒத்துக்கொண்ட பிறகே இதனைக் கூறுகிறேன்; உண்மை நிலைமையினை உவகைக் கூத்தாடும் காங்கிரஸ் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்குக்கூட அல்ல; நமக்கே உண்மை நிலைமை புரியவேண்டும் என்பதற்காக.

பிரச்சாரத்தில் திறமை மிக்கவர்களாயிற்றே, நீங்களா போதுமான முறையிலே வழக்கை எடுத்துரைக்கத் தவறிவிடுவீர்கள்! என்று நையாண்டி செய்வார்கள்; உணருகிறேன். நான் கூறுவது, நமது பிரசார முறை செம்மையாக இல்லை என்பது அல்ல; வழக்கு மிக எளிதானது; சிக்கலற்றது; இதனை விளக்க நாம் அதிகமான முயற்சி எடுக்கத் தேவையில்லை, குற்றம் புரிந்துவிட்டது காங்கிரஸ் கட்சி என்பது பொதுமக்களுக்கு நன்றாகத் தெரியும், ஆகவே, தண்டிக்க முற்படுவர் என்ற நம்பிக்கையை, அளவு கடந்த முறையிலே வைத்துக்கொண்டு தீர்ப்பு நிச்சயமாக நமது பக்கம்தான், இதிலென்ன சந்தேகம், என்ற முனைப்புடன் தருமபுரி சென்றோம். அதைக் கூறுகிறேன்.

அச்சத்தோடு வந்தவர்கள், குற்றத்தை மறைத்திடத் திறமைகாட்டினர், தமக்கு ஆதரவான தீர்ப்புப் பெற்றுவிட்டனர்.

தீர்ப்பு நம் பக்கம்தான் என்ற நம்பிக்கையை மிக அதிக அளவு கொண்டிருந்ததால், நாம் மெத்தனம் காட்டினோம்; தோற்கடிக்கப்பட்டோம்.

இது தோல்வி அல்ல என்று வக்கணை பேச அல்ல இதனை நான் குறிப்பிடுவது.

இந்தப் போக்கு இனிக்கூடாது என்ற உண்மையினை நாம் உணர்ந்துகொள்வதற்கு இந்தத் தோல்வி ஒரு பாடமாக அமையட்டும் என்பதற்காக.

உண்மை எது, பொய் எது என்று கண்டுகொள்வது மிக எளிது என்று எண்ணிவிட்டோம்; பலர் அவ்விதம் எண்ணிக்கொள்கிறார்கள். மெய்யும் பொய்யும் கிட்டத்தட்ட குயிலும் காகமும்போல என்று கொள்ளலாம்; பலரால் இதுவா அதுவா என்று எளிதாகக் கண்டுபிடித்துவிட முடிவதில்லை. அதிலும் பொய் பொன்னாடை அணிந்துகொண்டும், மெய் புழுதிபடிந்த மேனியுடனும் உலா வரும்போது பலருக்கு மயக்கம்—பொய்யின் பக்கம் ஈர்க்கப்பட்டு விடுகின்றனர்.

நாம், தம்பி! உண்மை நமக்குப் புரிவதால், எல்லோருக்கும் உண்மை புரியத்தானே செய்யும் என்று எண்ணிக்கொள்கிறோம்.

உண்மையின் பக்கம் நாம் இருக்கிறோம் என்பது மட்டும் போதாது. உண்மையின் பக்கம் அனைவரும் வந்து சேரும்படி செய்யவும் வேண்டும். அதற்கான முறைகளைத் திறமையாக, செம்மையாகச் செய்தே வெற்றி பெற முடியும். அதிலே நாம் தவறிவிட்டோம்; காரணம், திறமைக் குறைவு என்றுகூடக் கூற மாட்டேன்; உண்மையை உண்மை என்று மெய்ப்பிக்க வாதாடவும் வேண்டுமா என்று எண்ணிக்கொண்டு விட்டதால்,

இது எப்படிப்பட்ட அரசு என்பது பற்றியும், இந்த அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் நாட்டு மக்கள் படும் அல்லல்பற்றியும், இந்த அரசு நடத்திக் காட்டிய அடக்குமுறைக் கொடுமைபற்றியும், மக்கள் மிக நன்றாக அறிவார்களே; அப்படிப்பட்ட மக்கள், தேர்தலில் எப்படிக் காங்கிரசை ஆதரிக்க முடியும்! என்று எண்ணிக்கொண்டோம்.



மக்களில், அரசியல் பிரச்சினைகளை அறிந்தவர்கள், இந்த அரசின் இயல்பினைப் புரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள்; அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

ஆனால், அரசியல் பிரச்சினைகளைத் தாமே நேரடியாக ஆராய்ந்து பார்த்து முடிவெடுப்பவர்கள் என்று ஒரு பகுதி, மற்றவர் கூறிடும் முடிவினை ஏற்றுக்கொள்ளும் ஒரு பகுதி என்ற முறையில்தான் சமூகம் இருக்கிறது என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

மக்களாட்சி முறையின் மாண்பினை நன்கு உணர்ந்துள்ள நாடுகளில், தாமாகவே அரசியல் பிரச்சினைகளை ஆய்ந்தறிந்து தக்க முடிவினை மேற்கொள்வோரின் அளவு அதிகம், இங்கு இருப்பதைக் காட்டிலும்.

எனவேதான், இங்கு உண்மைக்காகப் பரிந்துரைக்கும் பணியிலே மும்முரமாக ஈடுபட்டாக வேண்டி இருக்கிறது.

இந்தப் பணி எந்த அளவுக்குத் தேவை என்பதை மறந்த நிலையில் தருமபுரி சென்றோம்; விளைவு நமக்கு வேதனை தந்துவிட்டது.

இந்த அரசு நடாத்திய அடக்குமுறை பற்றிய கருத்தினைத் தெரிவிக்கும் கடமையைக் காட்டிலும், இவருக்கா அவருக்கா ஓட்டு என்ற முறையிலேயும், இன்னின்னார் சொல்கிறார்கள் என்பதற்கா, அவர்களெல்லாம் சொல்கிறார்கள் என்பதற்கா? எதற்கு நாம் கட்டுப்படுவது என்ற முறையிலும், தருமபுரி மக்கள் இந்தத் தேர்தலைக் கவனித்தார்கள்.

சுட்டு வீழ்த்தப்பட்டவர்களிடம் இரக்கமற்றவர்களாக, இழப்புக்கு ஆளானவர்களின் வேதனையைத் துடைக்கவேண்டும் என்ற எண்ணமற்றவர்களாக, தருமபுரி மக்கள் இருந்திருக்க முடியாது—எவரும் அவ்விதமானவர்களாக இருந்திட மாட்டார்கள்.

ஆனால், அந்தக் கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு இந்தத் தேர்தல் என்ற எண்ணத்தைவிட வேறு பலவிதமான எண்ணங்களை அவர்கள் கொண்டுவிட்டனர் என்றே தோன்றுகிறது. நாமோ இதயமுள்ளவர்கள் எவரும் இவ்வளவு கொடுமைகளைச் செய்த ஒரு ஆட்சியை நடத்திவரும் கட்சியை ஆதரிக்கமாட்டார்கள் என்ற

நம்பிக்கையை அளவுகடந்த முறையிலே கொண்டுவிட்டி ருந்தோம்.

மக்களுக்கு இயற்கையாக ஏற்படக் கூடிய நீதி நியாய உணர்ச்சி, பரிவுபச்சாத்தாப உணர்ச்சி ஆகிய வற்றினைக்கூட உருக்குலையச் செய்திடும் வல்லமை, காங்கிரஸ் கட்சியினருக்கு உண்டு என்பதைத் தருமபுரி எடுத்துக்காட்டிவிட்டது.

காங்கிரஸ் கட்சிக்கு உள்ள இந்த வல்லமை, போற்றுதலுக்குரியதாகாது; நச்சுப்பை கொண்டுள் ளதற்காகப் பாம்பினைப் பாராட்டுவார் இல்லை,

நாம் செய்த தவறு, காங்கிரஸ் கட்சி இந்த நச்சுப் பரப் பிடும் செயலுககேற்ற திறமை பெற்றுள்ளது என்பது பற்றி அறிந்துகொள்ளாதது என்றும் கூறுவேன்.

நாமோ குற்றம் செய்துவிட்டோம்; மக்களோ நம்மை மன்னிக்கமாட்டார்கள். தண்டிக்கத்தான் போகிறார்கள் என்ற அச்ச உணர்ச்சியால் உந்தப் பட்ட காங்கிரஸ் கட்சி, இரண்டு திங்கள், ஒரு சிற்றூர் விடாமல் தமது பணியாளர்களை ஏவி, மக்கள் மனத்திலே இருந்து வந்த கொதிப்பை மாற்றவும், அவர்கள் முன் வேறு பிரச்சினைகளை வைக்கவும் முனைந்து வந்தபோது, கழகம் அதனைப் பெரிதாகக் கருதவில்லை, தடுத்திடவும் முனையவில்லை.

முதலிலே அறிவிக்கப்பட்ட தேர்தல்நாள் ஒத்தி வைக்கப்பட்டது; வேறோர் நாள் குறிக்கப்பட்டது; அந்த இடைவெளியின்போது, இச்சகம் பேசிடவும், நச்சுக்குழி யைப் பச்சை இலை போட்டு மூடிமறைத்திடவும், நாவிலே தேன் தடவிவிடவும், காங்கிரசார் மெத்தத் திறமையுடன் பயன்படுத்திக் கொண்டனர்.

திண்ணைப்பேச்சு, சாவடிப்பேச்சு, கூட்டுறவு அமைப்புகளில் கூடிக்குலவுதல் போன்ற முறைகளைக் காங்கிரஸ் கட்சி தன் வெற்றிக்குப் பயன்படுத்திக் கொண்டது.

இந்த முறைகளைக் கழகம் மேற்கொள்ளவில்லை; முயலவில்லை; காரணம்? மக்கள் எப்படியும், அடக்கு முறையை அவிழ்த்துவிட்ட காங்கிரஸ் கட்சியைத் தோற கடிப்பார்கள் என்ற நம்பிக்கை.



கழகத் தோழர்கள் மட்டுமல்ல, பொதுமக்களிலே ஒரு பகுதியினரே கூட, சென்ற தேர்தலின்போது காணப் பட்ட புள்ளிவிவரத்தைக் கொண்டு ஒரு தவறான முடிவுக்கு வந்திருந்தனர். வெற்றிபெற்ற சுயேச்சை உறுப்பினர் மறைந்த திரு. வீரப்ப செட்டியாருக்குக் கிடைத்த 24 ஆயிரம் வாக்குகளும், காங்கிரஸ் எதிர்ப் பாளரின் வாக்குகள், ஆகவே, இம்முறையும் அந்த 24 ஆயிரம் வாக்குகளும் காங்கிரசுக்கு எதிர்ப்பாகவே இருக்கும், ஆகவே, அவை அவ்வளவும் கழகத்துக்குச் சேரும் என்று கணக்கிட்டனர்.

அந்தக்கணக்கு பொய்த்துவிடுமா என்பது பற்றிய எண்ணம்கூட எழவில்லை; அவ்வளவு நிச்சயமாக இருந்து விட்டோம். தேர்தல் முடிவு, அந்தக் கணக்கு தவறு என்பதைக் காட்டிவிட்டது; அந்த வாக்குகளைக் காங்கிரஸ் கட்சி பெற்றுக்கொள்ள எல்லா முறைகளையும் பயன்படுத்திக் கொண்டது. அந்த வாக்குகள் நம்மை விட்டுவிட்டு வேறு எங்கும் போய்விடாது என்று எண்ணி னோம்; தோல்வி கண்டோம்.

இவற்றை நான் கூறுவதன் காரணம், தம்பி! தோல்வி எதிர்பார்த்ததுதான் என்று வாதாட அல்ல; வெற்றி நிச்சயம் என்று அதிக அளவு நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு விட்டோம், தொகுதியின் நிலைமையை நன்கு ஆராயாமல் என்பதைக் காட்டத் தான்.

இன்றுகூட, தனித்தனியாகத் தருமபுரித் தொகுதி மக்களைக்கண்டு,

இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவது நியாயமா?

மாணவர் கிளர்ச்சியை இரக்கமற்ற விதமாகத் தாக்கித் தகர்க்க முற்பட்டது நியாயமா?

அடக்கு முறையை அவிழ்த்து விட்டு 59 பேர் துப்பாக்கிக்குப் பலியாகிடச் செய்தது நியாயமா?

என்று கேட்டால், நியாயம் அல்ல என்றுதான் கூறுவார்கள்.

ஆனால், காங்கிரஸ் பணியாளர் இரண்டுதிங்களாக நடத்திவந்த பிரசாரம், அதற்காக நடப்பது அல்ல இந்தத்

தேர்தல்-தருமபுரி தலைநகராக வேண்டுமா வேண்டாமா? தலைநகர் வேண்டும் என்றால், காங்கிரஸ் வெற்றி பெற்றாக வேண்டும், அதற்காகத்தான் இந்தத் தேர்தல் நடத்தப்படுகிறது என்பதுதான்.

இந்தி ஆட்சி மொழியாவதைக் கண்டிக்கிறோம், அடக்கு முறையைக் கண்டிக்கிறோம். ஆனால், அதே போது தருமபுரி தலைநகராக வேண்டும் என்றும் விரும்புகிறோம், அதற்காகவே காங்கிரசுக்கு ஓட்டுப் போடுகிறோம் என்ன எண்ணத்துடன், தருமபுரியின் குறிப்பிடத்தக்க புள்ளிகள் முனைந்து நின்று பணியாற்றி னர். காங்கிரசின் வெற்றிக்கு அது மிக நல்லவாய்ப்பாக அமைந்தது.

மறுப்பார்கள் காங்கிரஸ் கட்சியினர்: எனினும், நான் மனதார நம்புவதை, எனக்கு அறிவிக்கப்பட்டதை நான் சொல்லுகிறேன்: காங்கிரசுக்கு எதிராகப் பணியாற்ற முனைபவர்கள், பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப் படுவார்கள் என்ற திண்ணைப் பேச்சு, தருமபுரித் தொகுதி யில் மிக வேகமாகப் பரவிற்று.

அமைச்சர்களோ, தரமுள்ள தலைவர்களோ இந்தத் தவறான பிரசாரம் செய்தார்கள் என்று நான் கூற வில்லை. ஆனால், காங்கிரசுக்கு ஓட்டுத்திரட்டச் சென்ற பணியாளர்கள், அதிக அளவில் அரசியல் தெளிவில்லா தாரிடம் இந்த அச்சம் எழச்செய்து விட்டிருந்தனர் என்று அறிகிறேன்.

> கருணாநிதியைப் பார்க்கிறீர்களல்லவா? வழக்குக் கூடப் போடாமல் உள்ளே பிடித்து அடைத்து விட்டார்கள், பாதுகாப்புச் சட்டப்படி!

என்று பேசி, பலருக்கு, உண்மைதானே! ஒரு பெரிய கட்சியின் பொருளாளருக்கே இந்தக் கதி என்றால், நாம் காங்கிரசை எதிர்த்தால், என்னதான் செய்ய மாட்டார் கள்! நமக்கேன் வீண் வம்பு! காங்கிரசுக்கே வேலை செய் வோம்! என்ற எண்ணம் எழுந்தது என்று எனக்குத் தெரி விக்கப்பட்டது.

அடக்குமுறை கண்டு அருவருப்பும் ஆத்திரமும் எழுவது போலவே, சமூகத்தில் ஒரு பகுதி யினருக்கு அச்சம் ஏற்பட்டுவிடுவது இயற்கை,



இந்த அச்சம் காரணமாகப் பலர் காங்கிரசுக்கு ஓட்டுத் திரட்டும் வேலையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள் என்றும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றைக் கூறும் நான், ஆகவே, தருமபுரியில் நாம் தோற்றது வியப்பல்ல என்று வாதாடவில்லை; இந்த நிலைமைகளை மீறி நாம் பணிபுரிந்து வெற்றி பெற்றிருக்க வேண்டும். கழகத்தின் பணி, சூது சூழ்ச்சிகளை முறி யடிக்கத் தக்கதானதாக வலிவு பெற்றாக வேண்டும். தருமபுரித் தோல்வி இந்தப் பாடத்தைத்தான் நமக்கு அளிக்க வேண்டும்.

தம்பி! மகனை இழந்த மாதா மனம் நொந்து கதறிக் கிடக்கிறாள். கணவனை இழந்த காரிகை கண்ணீர் வடிக்கிறாள்; அண்ணனை இழந்த தம்பி புரண்டு அழு கிறான்! இத்தனைக்கும் காரணமான அடக்கு முறையை அவிழ்த்துவிட்ட ஆட்சியின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ள கட்சி தேர்தலிலே வெற்றி பெறுகிறது என்றால் இது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போன்றதல்லவா, இது நடந்துவிட்டதே தருமபுரியில்!!

''சுட்டோம், சுடுவோம்!'' என்று ஆட்சியினர் ஆர்ப் பரித்தாலும் வியப்பில்லையே!

சுட்டோம், ஓட்டளித்தனர் என்று வாதாடிடவும் முனைவரே வன்கணாளர்கள். எதை எதையோ எண்ணிக் கொண்டு, தருமபுரி மக்கள் நடந்து கொண்ட போக்கு, ஆட்சியாளர்களுக்கு, நாம் எப்படியும் நடக்கலாம், எதையும் செய்யலாம், எத்தனை முறையும் சுடலாம், எத்தனை பிணமும் விழலாம், யார் என்ன கேட்க முடியும் என்ற எண்ணத்தை அல்லவா உண்டாக்கி விடும். தோற்றது கழகமா! இல்லையே! அடக்கு முறைக்கு ஆளான மக்களின் இதயக் குமுறலை அல்லவா, இந்தத் தேர்தல் தோல்வி, பொருளற்றதாக்கி விட்டது. நல் லாட்சிக்கான முயற்சிக்கல்லவா பலமான அடி விழுந்து விட்டது!

வீழ்ந்துபட்ட மக்களின் சார்பில் நின்றோம், நம்மை வீழ்த்தி விட்டார்கள். வேதனைப்பட்டவர்களின் துயர் துடைக்க முனைந்தோம். தோற்கடித்து விட்டார்கள். இந்தத் தோல்வி, விழிப்புற்ற தமிழர்களுக்கன்றோ பெருந்தோல்வி என்றாகி விட்டது. தேம்பித் தவித்திடும்

தமிழ்த்தாயே! உன் கண்ணீரைத் துடைத்து, நீதியை வெற்றி பெறச் செய்ய முடியாமற் போய் விட்டது. என்னை மன்னித்துவிடு! என்றன்றோ நாம் ஒவ்வொரு வரும் மண்டியிட்டு முறையிட்டுக்கொள்ள வேண்டி ஏற்பட்டுவிட்டது.

மகனே, மனம் தளர்ந்து போகக்கூடாது. நீதியின் பக்கம் நின்றாய், மகிழ்ச்சி! எனக்காகப் பரிந்து பேசிப் பணியாற்றினாய், பெருமைப்படுகிறேன். உன் வல்லமை வளரும், தோல்வி வெற்றிக்கு வழி அமைக்கும் என்று கூறித் தமிழ்த்தாய் நம்மைத் தேற்றுவாள் என்பது உறுதி.

நியாயம் சில வேளைகளில் வெற்றிபெறாமற் போய் விடக் கூடும், அதனாலேயே நியாயத்தின் பக்கம் நிற்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு அறிவாளர் எவரும் வரமாட்டார்கள். நியாயம் வெற்றி பெறத் தக்க விதமாக உழைப்பதற்கான வலிவினைத் திரட்டிக் கொள்வோம் என்ற உறுதியைப் பெறுவதே தீரர் கடன்.

நஞ்சு கொடுத்துச் சாக்ரடீசைச் சாகடித்துவிட்ட தாலேயே, சாக்ரடீசின் கொள்கையைச் சாகடித்துவிட முடிந்ததா! இரண்டு அங்குல நீளமே உள்ள தேள், கொட்டினால் ஆறடி ஆள் கூடத் துடிதுடிக்கிறான்; அதனாலேயே ஆளைவிடத் தேள் வலிவுள்ளது என்றாகி விடுமா; ஆளிடம் அந்தத் தேள் சிக்கவில்லை, கொட்டிக் கொண்டிருக்கிறது என்பதுதானே உண்மை நிலை. தரும புரியில் கழகத்தைத் தோற்கடித்து விட்டதாலேயே காங்கிரசுக்கு எதிராகத் திரண்டு கொண்டிருக்கும் எதிர்ப்பும், அந்த எதிர்ப்பை உண்டாக்கிக் கொடுக்கும் மக்களின் எழுச்சியும் மடிந்துவிட்டது என்றாகிவிடாது.

தருமபுரியில் பெற்ற வெற்றி காரணமாகக் காங்கிரஸ் கட்சி தனது வல்லமைபற்றி மிக அதிகமான கணக்குப் போட்டுக் கொள்ளுமானால் அது நமக்கு நல்லதுதான். தொடர்ந்து தவறுகளைச் செய்யவும், மக்களின் மனக் கொதிப்பை அதிகமாக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடு படவும், அடக்குமுறையை அவிழ்த்து விடுவதிலே சுவை காணவும், தனது ஊழலாட்சியைத் திருத்திக் கொள்ளா திருக்கவும், துணிந்து விடும். அந்தக்கட்டம் வேகமாக வளரும்போது, இது வரை அக்கறையற்று இருந்துவந்த



மக்களும் சீறி எழுவார்கள்; ஆசைக்கு ஆட்பட்டு அநியாயத்துக்குத் துணைபோனவர்களும் தமது தவற்றினை உணர்ந்து நீதியின் பக்கம் நிற்பார்கள்; அஃது காங்கிரசாட்சியை வீழ்த்தும் வலிவை மக்களுக்கு அளித் திடும்.

அந்த நம்பிக்கையுடன் கழகம் பணியாற்றிவரும்; தருமபுரித் தோல்வி அந்தப் பணியின் தரத்தையும் வேகத்தையும் அதிகமாக்கிவிடுமேயன்றித் துவண்டிடச் செய்யாது என்பதனையும் நான் மறந்திடவில்லை.

என்ன கொடுமை செய்தாலும் நமக்குத்தான் 'ஓட்டு' என்ற எண்ணம் காங்கிரஸ் கட்சிக்குத் தடித்து விடச் செய் கிறது தருமபுரி.

நமக்கோ, உன் வலிவு போதாது, வளர வேண்டும்; முறை செம்மைப் படுத்தப்பட வேண்டும்; முயற்சியில் புதுமுறுக்கு ஏற வேண்டும், உண்மைக்காகப் பரிந்து பேசினால்மட்டும் போதாது, உண்மைவெற்றி பெறத் தக்கவிதமான வலிவு உண்மைக்குக் கிடைத்திட வழி கண்டாக வேண்டும் என்ற பாடத்தைத் தருகிறது.


வெற்றி எந்த நேரத்தில் எந்தக் கட்சிக்குக் கிட்டு கிறதோ, அந்தக் கட்சியை வலிவுள்ள கட்சி என்று எண்ணிக்கொள்வதும், வலிவு இருக்கிற காரணத்தாலேயே அது நியாயமான கட்சி என்று எண்ணிக் கொள்வதும் கூர்த்தமதி படைத்தோரின் போக்கல்ல; தெளிவற்றோர் பெற்றிடும் மன மயக்கம்.

கழகம் நடாத்துவோர், வலிவுள்ள கட்சியில் தஞ்சம் புகுந்து தகத்தகாயம் பெற முனைந்தவர்கள் அல்ல; சாதாரணக் கட்சியை வலிவுள்ளதாக்கியவர்கள்! ஒளி உள்ள இடம் ஓடி வெளிச்சம் போட்டுக் கொண்டவர் கள் அல்ல, கழகத்தினர்; இருண்ட இடத்தில் ஒளி எழத் திருவிளக்கு ஏற்றிவைத்தவர்கள்; எங்கே சென்றால் தேர்தலில் வெற்றி கிடைக்கும் என்று அலைந்து அதற் கோர் இடம் கண்டுபிடித்தவர்களல்ல, தேர்தலில் வெற்றி கிடைக்கத்தக்க வலிவினை உழைத்துப் பெற்றிடும் உறுதி கொண்டு பணிபுரிவோர். கழகத் தோழர்கள் விளைந்த காட்டுக்குருவிகளுமல்ல, மரம் பழுத்தது கண்டு பறந்தோடி வரும் வௌவாலும் அல்ல, அரைக்க அரைக்க மணம் எழும்பும் சந்தனம் போன்ற இயல்பினர், தருமபுரித்

தோல்வியை நமது சிந்தனையைக் கிளறி, முறைகளைச் செம்மைப் படுத்தும் ஓர் வாய்ப்பாக மாற்றிட வல்லவரே, கழகத் தோழர்கள்.

இந்த நமது இயல்பை மேலும் விறுவிறுப்பான தாக்கிட, வெற்றிபெற்ற காங்கிரசார் ஏவிடும் தூற்றலையும் பயன் படுத்திக்கொள்வோம். வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சிவிட்டனர்; ஆம்! குருதியைத் துடைத்துக் கொண்டு, தொடர்ந்து பணியாற்றி வருவோம். துயரம் காரிருளெனக் கப்பிக்கொண்டிருக்கும், உணருகிறேன்; ஆனால், தம்பி! விடிவதற்கு முன்பு கருக்கல் அதிகமாகத் தான் இருக்கும். பொழுது புலரும், பொறுத்துக்கொள்; பணியாற்று.

அண்ணன்,



18-4-'65

காஞ்சிக் கடிதம் : 15

# இதயம் வென்றிட...1

**காந்தியார் காங்கிரசும் ஆளுங்கட்சிக் காங்கிரசும்**

**இழந்தது சரிகைத் தொப்பி; பெற்றதோ மந்திரி வேலை!**

**மக்களின் இதயத்தை வென்றிடும் தன்மை மட்டும் போதாது கழகத்துக்கு!**

தம்பி,

இரத்த ஆறு ஓடும்-பிணமலை குவியும்-வீடுகள் தீக்கிரையாகும்-வயல்கள் கருகும்-எங்கும் அல்லோலகல்லோலம்-அமளி-அழிவு,

காட்டுத் தீப் போல, கட்டுக்கு அடங்காத பெரு வெள்ளம் போல, நெருப்பைக் கக்கும் எரிமலையின் குமுறல்போல, செங்கிஸ்கான், தைமூர், அட்டில்லா போன்ற வெறிபிடித்தலைந்தவர்கள் அவனியில் நடமாடி அழிவை ஏவியபோது, நிலைமை இருந்தது.

அவர்களின் படைகள் பாய்ந்து வருகின்றன என்றால் ஒரே பீதி! எதிர்த்து நிற்க முடிவதில்லை; தடுத்திட முடிவதில்லை! அழிவு! அழிவு! பெரும் அழிவு! எதிர்ப்பட்டதெல்லாம் அழிக்கப்படும்! வாள்! வேல்! ஈட்டி! இவை மட்டுமல்ல, நெருப்பு, விஷம், சித்திரவதைக் கருவிகள் இவைகளையும் கொண்டுதான் அந்த வெறியர் போர் நடத்தினர்.

போர்முறை, அதிலே ஒரு நெறி; ஆயுதமற்றவர் களைத் தாக்காதிருக்கும் பண்பு; பெண்டிரிடமும் குழந்தை களிடமும் பச்சாத்தாபம் காட்டும் உணர்வு; சொத்துக் களை நாசமாக்காதிருக்கும் முறை எனும் எதற்கும் அவர் கள் கட்டுப்படுவதில்லை. எதையும் நாசம் செய்வது, வதைப்பது, வாட்டி எடுப்பது, அதிலே மக்கள் துடிதுடிப்பது கண்டு மகிழ்வது, இப்படி அவர்கள்.

அவர்களின் வெறித்தனத்தை இன்று கண்டிக்கிறோம்; வரலாற்றுச் சுவடிகள் அவர்களை நடமாடிய நாசம் என்று குறிக்கின்றன. ஆனால், அவர்கள் படைபலமும் போர்வெறியும் காட்டி நாடு நகரங்களை அழித்தும், மக்களைக் கொன்று குவித்தும் நாசத்தை மூட்டிவிட்ட போது அவர்களின் செயலைக் கண்டிக்க முடியவில்லை. கண்டிப்பவனின் நாக்கு துண்டாடப்பட்டுவிடும்.

அவர்களைக் கண்டிக்காதது மட்டுமல்ல, அவர்கள் பெற்ற வெற்றிகளைக் கொண்டாட விழாக்கள்! கோலா கலப் பவனிகள் நடைபெற்றன!

ஒருபுறத்தில் அக்கொடியவர்கள் வெட்டி வீழ்த்திய உடலங்கள் குவியல் குவியலாக; மற்றோர்புறத்திலே அந்த மாபாவிகளின் கொலு!

அது மட்டுமல்ல! அந்த அக்கிரமக்காரர்களின் வெறித் தனத்தை வீரம் என்றும், படுகொலைகளை வெற்றிக ளென்றும் கூறிட வேண்டிய கொடுமைக்கும் சிலர் ஆளாக் கப்பட்டனர். கவிதைகளை இயற்றித்தந்தனர் சிலர்! அவர்களின் கொடுஞ்செயல்களைக் காவியமாக்கித் தந்தன ராம் சிலர்! அதற்காகவே சிலர், அந்த வெறியர்களால் அமர்த்தப்பட்டிருந்தனராம்.

அவர்களின் 'காலம்' முடிந்த பிறகே, அவர்களின் செயல் எத்துணைக் கொடுமை நிரம்பியது என்பதனைக் கூறிட முடிந்தது. அவர்களின் ஆதிக்கம் இருந்து வந்த போது, புகழாரம் சூட்டிடவும் வேண்டி நேரிட்டது, புண் பட்ட நெஞ்சினரால்! தமது புலமையை அந்தக் கொடிய வர்களுக்குப் பலி கொடுத்திட வேண்டியும் நேரிட்டதாம்!

கொடுமைகளை எதிர்த்து ஒழித்திட முடியாத நிலை யில் பலர் அதற்கு இரையாகிவிடுவதுடன், சிலர் அந்தக் கொடுமையைக் கொடுமை என்று கூறிடவும் முடியாத நிலையினராகிக் குமுறிக் கிடந்திடுவதுண்டு.



வெற்றி வெறி தலைக்கேறிய அந்தத் துருக்கர்களும், தம்மை எதிர்த்து நிற்பார் இல்லை என்பதைக் களம் பல வற்றில் கண்டு கண்டு இறுமாந்து, தமக்கு இந்த ஆற்றலை ஆண்டவன் அளித்திருப்பது, அதனைக் கொண்டு இந்த அவனியை அஞ்சிட வைத்திடவும், அடக்கி ஆண்டிடவுமே என்றுகூடக் கருதினர்,

ஆண்டவனே அனுப்பிவைத்த அழிவாயுதம் என்று தமக்குத் தாமே விருதும் சூட்டிக்கொண்டனர் அந்தக் கொடியவர்கள்,

இப்போதுதான் எடுத்துக் காட்டப்படுகிறது: அவர் களிடம் இருந்து வந்த படைகளின் தன்மையும், அவர்கள் கையாண்ட போர்முறையும், அவர்கள் காட்டிய வேகமும் துணிவுமே அவர்களைக் கண்டோர் மருண்டிடத்தக்க, கேட்டோர் கிலிகொள்ளத்தக்க வெற்றிகளைப் பெற்றிடச் செய்தது என்பதனை.

நெடுங்காலத்துக்குப் பிறகுதான், எவ்வளவோ நாசத் துக்குப் பிறகுதான், அவ்விதமான அழிவுச் சக்தியை எப்படித் தடுத்து நிறுத்துவது, எப்படி எதிர்த்து ஒழிப்பது என்ற போர் முறையை வகுத்திடவும், வெற்றி காணவும் முடிந்தது. அந்தக் கட்டம் பிறந்திடும் வரையில் அந்தக் கொடியவர்கள், எவராலும் தோற்கடிக்கப்பட முடியாத மாவீரர்கள் என்று கூறிக்கொள்ள முடிந்தது.

உலகை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டானல்லவா இட்லர்! சென்ற இடமெங்கும் வெற்றி என்றனர்! சேதி சொல்லி அனுப்பினால்போதும், சரண் அடைய நாடுகள் காத்திருந்தனவே.

அவனை வெல்வார் இல்லை! என்று உலகே பேசிற்று. எதுவரையில்? அவனை வீழ்த்துவதற்கான முறை செம் மைப் படுத்தப்படும் வரையில்,

கொன்று குவித்திடும் கொடுமை நிரம்பிய களம் நின்றவர்களின் இறுதியே, தோல்வி என்றாகிவிட்டது என்கிறபோது, ஆயிரத்தெட்டுத் தந்திரங்களின் துணை கொண்டு, அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றுவிடும் ஒரு கட்சி, என்றென்றும் வல்லமைமிக்கது, வீழ்த்தப்பட முடியாதது என்ற நிலையில் இருந்துவிடும் என்று பேதை யும் கூறிடான். கொடுமைகளைத் தாங்கித் தத்தளித்த

உலகு இறுதியில் அந்தக் கொடுமையினை ஒழித்துக் கட்டியது என்பதனைக் காட்டிடுவது வரலாற்றுச் சுவடி. இதனை மறந்து தேர்தல் களத்திலே பெற்றுவிட்ட ஒரு வெற்றியைக் கண்டு காங்கிரசின் தலைவர்கள் எமக்கு இனி எவரே இணை! எவர் இனி எம்மை என்ன செய்திட முடியும்! என்றெல்லாம் இறுமாந்து பேசுகின்றனர்.

அதுகேட்டு நமது தோழர்கள் கோபித்து ஆகப் போவது ஒன்றுமில்லை.

வெற்றிபெற்ற காங்கிரசுக் கட்சி பேசுவதில், ஆணவம் நெளிகிறது; உண்மை. ஆனால், அந்தப் பேச்சைக் கேட்டுக்கொள்வது, கழகத்துக்கு நன்மையே செய்திடும் என்று நான் நம்புகிறேன். எனவே, வெற்றிவெறியிலே அவர்கள் பேசுவதை வரவேற்கிறேன்,

தோல்வியால் துயரமும், வெற்றி வெறியாளரின் பேச்சால் கோபம் கலந்த வேதனையும் கழகத் தோழர் களிடம் மூண்டிட மூண்டிட, அவர்கள் தமது முறை களைச் செம்மைப்படுத்திக்கொள்ள முனைவர் என்பது என் எண்ணம். நான் கடிந்துரைப்பதன் மூலம் நடை பெறக்கூடியதைக் காங்கிரசின் வெற்றி வெறிப் பேச்சினர், நடத்திக் கொடுக்கிறார்கள். கடிந்துரைத்திடும் இயல்பும் எனக்கு இல்லை.

தேர்தல் களத்திலே ஏற்பட்டுவிடும் ஒரு தோல்வி நம்மைச் செயலற்றவர்களாக்கிவிடாது என்பதனை நான் அறிவேன், நானே தேர்தலிலே தோற்கடிக்கப்பட்டவன்.

தோல்வி, துடைக்க முடியாத இழுக்கை ஏற்படுத்தி விடும் என்று கவலை கொள்பவனுமல்ல; வெற்றி அதனைப் பெற்றவர்களுக்கு, என்றென்றும் ஒளிவீசும் புகழாரம் சூட்டிவிடாது என்பதனையும் அறிந்திருக் கிறேன்.

போட்ட புள்ளிகள் பொய்த்துப்போவதும், தீட்டிய முறைகள் கெட்டுப்போவதும், எதிர்பார்த்தவைகள் நடைபெறாமல் போய்விடுவதும், நாம் இதற்கு முன்பு காணாததுமல்ல; ஒவ்வொரு தனி மனிதரும் சரி; கட்சியும் சரி, இத்தகைய நிலையினைக் கண்டதுண்டு; அறிவோம்.

மோப்பம் பிடிப்பதிலும், பதுங்கிப் பாய்வதிலும், பாய்ந்து பற்றுவதிலும், பற்றுவதைப் பிய்த்து எறிவதி



லும் காட்டிலே புலிக்கு உள்ள திறமை, நாட்டிலே தேர்தல் களத்திலே காமராஜருக்கு உண்டு என்று பேசா தார் இல்லை, புகழாதார் இல்லை.

எனினும். திருவண்ணாமலையிலும் திருச்செங்கோட் டிலும், மாநகராட்சி மன்றத் தேர்தலிலும், கேரளத் திலும் காமராஜரின் கணக்குச் சரியில்லை, வாக்குப் பலிக்கவில்லை, முயற்சி வெற்றி பெறவில்லை; அதனால் அவருடைய மூக்கு அறுபடவில்லை, முகாம் கலைக்கப்பட வில்லை, முடுக்குக்கூடக் குறையவில்லை!

ஐயாயிரம் ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றிக்கொடி நாட்டுவோம் என்று பிரகடனம் செய்தவர்தான் காமராஜர் திருவண்ணாமலைத் தேர்தலின் போது!!

மாநகராட்சி மன்றத் தேர்தலை முடித்துக்கொண்டு டில்லி புறப்பட்ட காமராஜர், ஹைதராபாத்திலே, நிருபர்களிடம், தொலைந்தது கழகம்! வென்றது காங் கிரஸ்! கார்ப்பரேஷனைக் காங்கிரஸ் கைப்பற்றிவிட்டது! என்று அறிவித்தார்.

நினைத்தது நடக்கவில்லை; நடந்துவிட்டது கண்டு அவருடைய நினைப்புத் தளரவில்லை, நிலை தடுமாற வில்லை; பேச்சிலேகூட ஒரு அச்சம், ஆயாசம் எழவில்லை.

அதனை நான் எடுத்துக்காட்டுவது அவரைக் கேலி செய்ய அல்ல,

வெற்றியை எதிர்பார்த்து, அதற்காகப் பாடுபட்டு, நிச்சயமாகக் கிடைக்கும் என்று நம்பி, தோல்வியைக் கண்டால், எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற் கான கருத்தினைக் கழகத் தோழர்கள் பெறவேண்டும் என்பதற்காகவே இதனைக் கூறினேன்.

சில காலமாக நமக்கு ஓர் எண்ணம் வளர்ந்துவிட் டிருக்கிறது; நம்முடைய முயற்சி எப்படியும் வெற்றி பெற்றுவிடும் என்ற எண்ணம்,

காரணமற்றதுமல்ல அந்த நம்பிக்கை.

நாம் மேற்கொள்ளும் முயற்சி நியாயமானது என்ப தால், அந்த முயற்சி வெல்லும் என்று கருதுவதும்,

நாம் மேற்கொள்ளும் முயற்சிக்கு மக்களின் பேராதரவு இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் நிரம்பத் தெரிவ தால், வெற்றி கிடைத்திடும் என்று கருதுவதும் தவறு அல்ல.

ஆனால், நம்முடைய முயற்சி நியாயமானது என்பதை எடுத்து விளக்கும் செயலிலும்,

நம்முடைய முயற்சிக்குப் பேராதரவு அளித்திடும் விருப்பம் கொண்டுள்ள மக்கள் முழுத் திறமையுடன் நமக்குத் துணை நின்றிடச் செய்திடும் செயலிலும், நாம் பெறவேண்டிய வெற்றியைப் பெற்றோமில்லை.

மற்றொன்று, நாம் காங்கிரசுக்கு உள்ள 'தேர்தல் யந்திரத்தின்' அளவு, தாங்கும் சக்தி, தாக்கும் சக்தி இவைபற்றிய கணக்கிலேயும் தவறு செய்கிறோம்.

காங்கிரஸ், தனது தூய காந்தீயக் கொள்கையை இழந்துவிட்டது; ஆகவே, அதற்குக் காந்தியார் காலத்தில் இருந்துவந்த மதிப்பு இப்போது மங்கிவிட்டது.

ஆகவே, காங்கிரசின் செல்வாக்குச் சிதைந்துவிட்டது என்பது நமது கருத்து.

இந்தக் கருத்தினைக் கொண்டோர், வேறு பலரும் உளர். இந்தக் கருத்து தவறானதுமல்ல; உண்மை; மறுக்க முடியாதது.

கொள்கைக் கூடமாகக் காங்கிரஸ் இல்லை, கொள்கையாளர் அதிகம்பேர் அங்கு இல்லை என்பது உண்மை. அதனால் மதிப்பு மங்கிவிட்டது என்பது உண்மை; ஆனால், ஒரு விசித்திரமான உண்மை என்னவென்றால், தம்பி! கொள்கையை இழந்துவிட்ட பிறகு காங்கிரசுக்குத் தூய்மையான அமைப்பு என்ற செல்வாக்கு இல்லை என்றாலும், தேர்தலில் ஈடுபட்டு வெற்றி ஈட்டத்தக்க கட்சி என்ற வலிவு வளர்ந்திருக்கிறது.

கொள்கையை இழந்துவிட்டது காங்கிரஸ், எனவே, அதனுடைய வீழ்ச்சி நிச்சயம் என்பது பொதுவான உண்மை என்றபோதிலும், கொள்கைச் சிறப்புடன் காங்கிரஸ் இருந்தவந்தபோது, அதனுடன் நெருங்க முடியாத நிலையினில் இருந்துவந்த பலர், கொள்கையைக் காங்கிரஸ் இழந்துவிட்ட பிறகு, அச்சமற்று அதிலே சேர்ந்துகொள்ள முன்வந்தனர்.



அவர்கள், ஓட்டு வேட்டையாடும் வலிவினைக் காங்கிரசுக்குப் புதிதாகச் சேர்த்துக் கொடுத்துள்ளனர்.

மகாத்மாவின் காலத்தில் அதன் தூய்மை காரணமாகக் காங்கிரசிடம் மக்கள் 'பக்தி' செலுத்தினர். காங்கிரசின் வலிவு மிகுந்திருந்தது.

காங்கிரசின் கொள்கை புதையுண்ட பிறகு, அதிலே புகுந்துகொண்ட புதியவர்கள், இலாப நோக்கத்துடன், திட்டமிட்டு, காங்கிரசுக்கு வலிவு ஊட்டியுள்ளனர்.

காந்தியார் காலத்துக் காங்கிரஸ், மக்களின் இதயத்தை வென்றிடும் வலிவு கொண்டிருந்தது.

கொள்கையை இழந்துவிட்ட காரணத்தால் காங்கிரசுக்கு, முன்பு இருந்த வலிவு இல்லை என்று நாம் கூறும்போது, தம்பி! மக்களின் இதயத்தை வென்றிடும் வலிவு இல்லை என்பதைத்தான் எண்ணிச் சொல்கிறோம்.

கொள்கை இழந்த பிறகு காங்கிரசைத் தமது கூடாரமாக்கிக் கொண்டவர்கள், மக்களின் இதயத்தை வென்றிடும் வல்லமையைக் காங்கிரஸ் பெறும்படி செய்யவில்லை; அவர்களால் முடியாது; ஆனால், அவர்கள் மக்களின் 'ஓட்டுகளை'த் தட்டிப் பறித்திடும் வலிவினைக் காங்கிரசுக்குத் தேடிக் கொடுத்துள்ளனர்.

பத்தினி கெட்டால் பளபளப்பு அதிகமாகும், துவக்கத்தில்! இறுதியில் இழிவு நாசம்! ஆனால், இடையிலே ஒரு புது மினுமினுப்பு, குலுக்கு, தளுக்கு ஏற்படும்.

காங்கிரசைத் தமது கூடாரமாக்கிக் கொண்டவர்கள் அதனுடைய பழைய புனிதத்தன்மையை மாய்த்துவிட்டனர்; ஆனால் ஒரு புதிய பளபளப்பைத் தந்துள்ளனர்.

அந்தப் பளபளப்பு விவரமறியாதாரை மயக்கவல்லது என்பதனை மறந்துவிடக் கூடாது.

தனிப்பட்ட முறையில் தாக்கும் நோக்குடன் அல்ல, நிலைமையை விளக்குவதற்காகக் கூறுகிறேன்; காங்கிரஸ் தூய அமைப்பாக இருந்தபோது, பழைய கோட்டைப் பட்டக்காரரும், சங்கரண்டாம் பாளையத்தாரும், பூண்டி

வாண்டையாரும், மூப்பனாரும் மற்றவர்களும் அதிலே இல்லை. அது, சிறை செல்ல, சொத்து இழந்திட, தடியடி பட, துப்பாக்கிக் குண்டடி ஏற்க அழைத்த காங்கிரஸ்.

எங்குச் செல்கிறோம் என்றும் தெரியாது, என்னென்ன இடர்ப்பாடுகள் என்பதும் புரியாது. எத்தனை நீண்ட பயணம் என்ற கணக்கும் அறியாது என்ன கிடைக்கும் என்று நினைக்கவும் முடியாது, ஒரு தூய தொண்டாற்று கிறோம், இதயம் கூறுகிறது, அதன்படி நடக்கிறோம் என்று மட்டுமே உணர்ந்து பலர் காங்கிரசில் ஈடுபட்ட காலத்தைக் குறிப்பிடுகிறேன்.

அப்போது, வ.உ. சிதம்பரனாரும், திருப்பூர்க் குமரனும், சர்தார் வேதரத்தினமும் தேவைப்பட்டனர்; கிடைத்தனர்.

அவர்கள் காலத்துத் தூய்மை மங்கிற்று; மடிந்தது; காங்கிரஸ் ஒரு கட்சியாக வடிவமெடுத்தது; அரசியல் ஆதாயம் தரத்தக்க அமைப்பு ஆயிற்று; வாண்டையாரும் பட்டக்காரரும் நெடும்பலத்தாரும் சேதுபதியாரும் காங்கிரசிலே சேரமுடிந்தது.

அவர்கள் சேர்ந்ததரால் மக்களின் இதயத்தை வெல்லும் சக்தியைக் காங்கிரஸ் இழந்தது; ஆனால், மக்களிடம் உள்ள 'ஓட்டுகளை' மயக்கியோ மிரட்டியோ பெற்றிடும் வலிவினை அந்த வித்தையில் மெத்தத் தேர்ந்த வர்களான அவர்கள் காங்கிரசுக்குக் கொடுத்துள்ளனர்.

இந்தக் கணக்கினை நாம் கவனிக்காமலிருப்பது தவறு; மிகமிகத் தவறு.

பழையகோட்டைப் பட்டக்காரரால், உப்புக்காய்ச்ச முடியவில்லை, சட்டம் மீறமுடியவில்லை, கைராட்டை சுற்ற முடியவில்லை, வரிகொடா இயக்கம் நடத்த முடிய வில்லை; ஆனால், அவரால் இன்று, தம்மைப் பெரிய புள்ளி என்றும் பட்டக்காரர் என்றும் விளக்கிக்கொள் வதன் மூலம் ஏற்படும் செல்வாக்கைப் பயன்படுத்தி ஓட்டு களைப் பெற்றுத்தந்திட முடிகிறது.

இத்தகையவர்கள் நிரம்ப உளர், இன்றைய காங் கிரசில்; அதன் காரணமாக, இதயத்தைப் பெறமுடியாத நிலையைப் பெற்ற காங்கிரசினால், ஏழையின் ஓட்டு



களைத் தட்டிப் பறித்துக்கொள்ளும் புதிய வலிவினைப் பெறமுடிந்திருக்கிறது.

இதயத்தை வென்றிடும் வல்லமையைக் காங்கிரஸ் இழந்துவிட்டது என்பது மட்டுமல்ல, மக்களின் இதயத்தை வென்றிடும் தன்மை கழகத்திடம் வளர்ந்து கொண்டு வருகிறது.

மக்களின் இதயத்தை வென்றிடும் வல்லமையையோ காங்கிரஸ் இழந்துவிட்டது; மக்களின் இதயத்தை வென் றிடும் நிலையோ கழகத்துக்கு இருக்கிறது, இந்நிலையில் காங்கிரசால் கழகத்தைத் தோற்கடிக்க முடியுமா என்ற எண்ணம் நமக்கு.

இந்த வாதத்தில் தவறு இல்லை; பொருள் இல்லாமற் போகவில்லை, தவறு எங்கே இருக்கிறது என்றால், தேர்தல் களம் என்பது, முழுக்க முழுக்க இதயத்தை வென்றிடும் இடம் என்று நினைத்துக்கொள்வதுதான்.

★

''சரியல்ல என்று தெரிகிறது என்றாலும் செய்ய வேண்டி இருக்கிறதே''

''நான் என்ன செய்ய! என் நிலைமை அவ்விதம் ஆகிவிட்டது''

''விருப்பத்தோடா நான் ஆதரவு கொடுத் தேன்!''

இவ்விதமான பேச்சைத் தேர்தல் சமயத்திலே கேள்விப் படலாம்,

★

''அந்தக் கட்சிக்காக அல்ல, நிற்கிறாரே அவர் எனக்கு மிகவும் வேண்டியவர்.''

''நிற்கிற ஆள் எனக்குத் தெரியாது, ஆனால், கம்பெனி முதலாளி அவர் பக்கம்; நான் வேறு பக்கம் இருக்க முடியுமா?''

"என்ன செய்வது, கடன் கொடுத்தவன், கழுத்தின் மீது கத்தியை நீட்டுகிறான்; இந்தத் தேர்தலில் அவன் பக்கம் நான் இருந்தால்தான், தலை தப்ப முடியும்,'

"என்னவோ என் கஷ்டம் போக ஏதாவது வழி கிடைக்காதா என்று பார்க்கிறேன். கொள்கை கோட்பாடு என்று பேசிக் கொண்டிருந்தால், என் குடும்பத்தைக் கவனிக்க வேண்டுமே! பெரிய மனிதர் வாக்குக் கொடுத்திருக்கிறார், உதவி செய்வதாக. அதனால்தான் அந்தப் பக்கம் இருக்கிறேன்.''

"நம்ம சம்பந்திக்கு வேண்டியவராம். நான் அவர் பேச்சைத்தட்டி நடக்க முடியுமா?',

"என் மானம் சொத்து எல்லாம் இந்த வழக்கிலே நான் வெற்றி பெறுவதைப் பொறுத்து இருக்கிறது. இதற்கு முக்கியமான சாட்சி ஒருவர். அவர் வந்து சொல்கிறார்.

இன்னாருக்குத்தான் ஓட்டுப்போட வேண்டும் என்று. எப்படி நான் மீற முடியும்.''

இவ்விதம் பேசுபவர்களையும், தம்பி! தேர்தலின்போது காணலாம்.

★

தேர்தலின் போது அனைவருமே இதயத்தின் கட்டளைப்படி நடந்து கொள்வார்கள் என்று எண்ணி விட முடியாது. கட்டளை, கனிவுரை, எச்சரிக்கை, வரம், வாக்குறுதி, மிரட்டல் எனும் பல்வேறு வகையின கிளம்பும், பல்வேறு முனைகளிலிருந்து.

★

"பார்ப்போமே, பயல் என்னை மீறி நடக்கிறானா என்பதை''

"கண்டிப்பாகச் சொல்லிவிடு! இதிலே என் சொல்லை மீறி அவன் நடந்தால், பிறகு எவ்விதமான பந்தமும் பாசமும் எனக்குக் கிடையாது என்பதை.''



"என்ன ஏகப்பட்ட ஆட்டம் போடுகிறானாமே! கேட்டு விட்டுவா, சொத்தை ஏலத்துக்குக் கொண்டு வரவா என்பதை.''

என்று இவ்விதமாக மிரட்டித் திரியும் பேர்களைக் காணலாம் தேர்தல் காலத்தில்.

★

மற்றச் சமயத்தில் இதயம் பேசும்—தேர்தல் சமயத்தில் இதயம் தூங்கிவிடும் அளவுக்கு மயக்க மூட்டும் காரியம் நடைபெறும். அதைச் செய்திட வல்லவர்கள் இருக்கிறார்கள்.

மக்களின் இதயம் நமது பக்கம், ஆகவே, தேர்தலில் வெற்றி நமது பக்கந்தான் என்று எண்ணுவது இயற்கை; வாதம் நியாயமானது. ஆனால், தேர்தல் நேரத்தில் நீதியைக்கூடச் சாய்த்துவிடத்தக்க வல்லவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பிவிடுவார்கள்.

கட்சியின் சிறப்பு, கொள்கையின் தூய்மை, வேட்பாளரின் திறமை என்பவைகளைக் காட்டி ஆதரவு திரட்டுவது மேடைகளில், நம்முடைய முறை.

வீட்டுக்குள்ளே உட்கார்ந்து முன்பின் தொடர்பு பற்றிப் பேசி, இன்னாருக்கு இன்னார் வேண்டியவர், இதைச் செய்தால் இது கிடைக்கும் என்பதுபற்றி விளக்கி,

எனக்காக இதைச் செய்யவேண்டும். இதைச் செய்தால் இன்ன பயன் உண்டு, இதைச் செய்யச் சொல்லி 'இவர்' சொல்லி அனுப்பியிருக்கிறார்.

எப்படியும் என் பேச்சை நீங்கள் தட்டி நடக்க மாட்டீர்கள் என்று கூறிவிட்டு வந்திருக்கிறேன். என் மதிப்பு உங்கள் கையிலேதான் இருக்கிறது.

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவன், மறந்து விடாதீர்! இந்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்.

என்று இச்சகம் பேசியும் நச்சரித்தும், ஏற்கனவே கொண்டுள்ள நினைப்பை மாற்றிக்கொள்ளச் செய்வதிலே தனித் திறமை பெற்றவர்கள், தேர்தல் சமயத்திலே சுறுசுறுப் படைகிறார்கள்.

★

யார் வெற்றி பெற்றால் எங்களுக்கு என்ன? எந்தக் கட்சியினால் எங்களுக்கு என்ன? எங்களுக்கு வேண்டியது மூவாயிரம், கோயில் கோபுரம் கட்டி முடித்தாக வேண்டும். அந்தத் தொகை கொடுப்ப வருக்கு இந்தக் கிராமத்து ஓட்டு முழுவதும்

என்று பேரம் பேசிடும் பெரியவர்களைப் பார்க்கலாம் தேர்தல் காலத்தில்,

★

இப்பத்தானய்யா, நம்ம கிராமத்துக்கு நல்ல காலம் பிறக்கப்போவுது. ஏரி மதகு புதிதாக வேணும் என்று இந்தப் பத்து வருஷமாக முயற்சி செய்கிறோம் அல்லவா! நேற்றுத்தான் அதற்கு வழி பிறந்தது. தாசில்தார் ஒத்துக்கொண்டு விட்டார். நாளைக்கு வருகிறார்கள் அளவு எடுக்க! நம்ம கஷ்டம் தீர்ந்தது.

பரவாயில்லயே, புதுத் தாசில்தார் நல்லவர் போலிருக்கிறது. நம்ம நியாயம் அவருக்குப் புரிந் திருக்குது.

புரியும்படி செய்தாரு கதம்பத்தூராரு...

கதம்பத்தூராருக்கு நம்ம ஏரிமதகுபற்றி என்ன அக்கறை?

அவருக்கு எதுக்காக அக்கறை ஏற்படும்? நான் ஏற்படுத்திவைத்தேன் அந்த அக்கறையை.

அது எப்படி? உன்னோடு பேச்சுக்கு அவர் கட்டுப் படுவானேன்?

அவரோட பேச்சுக்கு நாம கட்டுப்படுவதாக ஒப்புக்கொண்டதாலேதான்......

அது என்ன ஏற்பாடு? விளங்கச் சொல்லேன்!

நம்ம கிராமத்து ஓட்டு அவ்வளவும், அவர் கட்சிக்கு நாம போடணும்; ஒத்துக்கொண்டு வந்திருக் கிறேன்.

இவ்விதமாகக் கிராமத்துப் பெரியதனக்காரர் ஊர் கூட்டிப் பேசிவிடுவதும் உண்டு, பல இடங்களில்.

★



''உன்னோட கட்சி கொள்கை கொடி எல்லாத் தையும் நீ அடுத்த தடவைக்குப் பார்த்துக்கொள்ளு. இந்தத் தடவை நான் சொல்றபடி செய்துவிடு! காரணம் இருக்குது''

என்று பேசி, தன் மகனை மடக்கிப் போட்டுவிடும் தகப்பனாரைக் காணலாம் தேர்தல் நேரத்தில்.

★

தர்மபுரித் தேர்தலின்போது ஒரு கிராமம்—நமக்கு ஆதரவான இடம்—அங்கு ஒரு இளைஞர், கழகத்தவர்-நமக்காகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந் தார் ஒருநாள், சேலம் மாவட்டத்துக் காங்கிரஸ் தலைவர்களிலே ஒருவர் அவரைச் சந்தித்தார்; கூட்டுறவுத் துறையிலே அவர் பெரியவர்; கழக இளைஞர் கூட்டுறவுத் துறையில் தொடர்புள்ளவர். அந்தத் தொடர்பையே காரணமாகக் காட்டி, அந்தக் காங்கிரஸ் தலைவர், கழக இளைஞரைத் தன் பக்கம் இழுக்கும் தந்திரத்தில் ஈடு பட்டார்,

''என்னப்பா! நாம இருவரும், கூட்டுறவுத் துறை யிலே உள்ளவர்கள். நமக்குள்ளே எந்த விதத்திலும் சச்சரவு, பேதம் வரக் கூடாது. கூடிப்பழகி வரு பவர்கள்,''

''கூடிப் பழகுவதற்கும் கட்சிக்காக ஓட்டுக் கேட்பதற்கும் என்னங்க சம்பந்தம்? நான் என் கட்சிக்கு வேலை செய்வதும், நீங்க உங்க கட்சிக்கு வேலை செய்வதும், நம்ம இருவருடைய சினேகிதத் தையும் எப்படிங்க பாதிக்கும்.''

''நாம இரண்டுபேரும், வேறு வேறு கட்சி அல்ல. இருவரும் ஒரே கட்சி, கூட்டுறவுக் கட்சி; தெரி கிறதா!''

''கூட்டுறவு ஒரு கட்சியாகுங்களா! எந்தக் கட்சிக்காரரும் அதிலே இருக்கலாமே...''

''இருக்கலாம்; ஒப்புக்கொள்கிறேன்; ஆனா, நாம இருவரும் தேர்தலிலே வேறு வேறு கட்சிக்கு வேலை செய்தா எப்படியும் நமக்குள்ளே பகை

உண்டாகிவிடும், அது நம்ம கூட்டுறவுத் தொடர்பையே கெடுத்து விடுமே...''

''எனக்கு என்று ஒரு கட்சி இருக்குதுங்களே.''

''கழகம்! தெரியும்! இப்ப நடக்கப்போற தேர்தலில் கழகமே ஜெயித்தாலும், சர்க்காரா மாறப் போகுது? பொதுத் தேர்தலின் போது எந்தக் கட்சி மெஜாரட்டியாக வருதோ அது சர்க்காரை அமைக்கும். பொதுத் தேர்தலின்போது நீ உன்னுடைய கழகத்துக்கு வேலை செய்து, வெற்றி தேடிக் கொடுத்து, சர்க்கார் அமைத்துக்கொள்; நான் தடுக்கவில்லை; வேண்டாமென்று சொல்லவில்லை. இப்ப நடப்பது இடைத் தேர்தல். இதிலே, எனக்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுத்தா, என்ன கெட்டுவிடும், யோசனை செய்துபாரு! இந்தத் தேர்தலில் என் கட்சி ஜெயித்தால் எனக்கு மதிப்பு—எனக்கு மதிப்பு என்றால். நாம நம்முடைய கூட்டுறவுத் துறையை நம்ம மாவட்டத்திலே மேலும் வளரச் செய்ய முடியும், எவ்வளவோ செய்ய வேண்டி இருக்குது. செய்ய வேண்டுமானால் என் வார்த்தைக்கு மதிப்பு உயர வேண்டும், அது உயர, என்ன வழி? இந்தத் தேர்தலிலே நான் வெற்றிபெற்றுக் காட்ட வேண்டும். அதனாலேதான் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன், இந்தமுறை கட்சிக்காகப் பிடிவாதம் பிடிக்காதே.''

''எப்படிங்க முடியும். நாலுபேர் என்ன சொல்லுவாங்க.''

''சரி, நீ காங்கிரசுக்கும் வேலை செய்யாதே, கழகத்துக்கும் வேலை செய்யாதே. ஒதுங்கி இருந்துவிடு.''

இவ்விதம் மேடையில் பேசமுடியுமா! பேசவேண்டிய இடத்தில் பேசினார் அந்தக் காங்கிரஸ் தலைவர்; கழக இளைஞரும் ஒதுங்கிக் கொண்டதாகக் கேள்வி.

★

இதயத்தை வேலை செய்யவிடாமல் தடுத்திடும் முறைகள், புதிது புதிதாகக் கிடைத்திடும் வேளை, தேர்தல் காலம்,



மக்களின் இதயம் நம்மிடம் என்ற எண்ணத்தை மட்டுமே நாம்கொண்டிருந்தால் போதாது; அதனைக் கெடுத்திடத்தக்கன தேர்தல் நேரத்தில் என்னென்ன கிளம்பக்கூடும் என்பதனைக் கண்டறியவும், தடுத்திடவும், அவைகளை மீறி, வெற்றி கிடைத்திடவுமான முறையில் பணியாற்ற வேண்டும்,

★

காங்கிரஸ், ஆளுங்கட்சியாகிவிட்ட பிறகு, ஆதாயம் தேடுவோர், தாமாக அதிலே நுழைந்துகொள்ளவும், நட்புத் தேடவும் முற்பட்டுவிட்டனர்.

காங்கிரஸ் ஆட்சி நடத்தினால் மட்டுமே, தமது நிலைமை பாதுகாக்கப்படும் என்று உணர்ந்த செல்வவான்கள், தேர்தலின்போது, காங்கிரசின் பக்கம் திரண்டு நிற்கிறார்கள்.

மகாத்மாவின் காங்கிரஸ் தனது தூய்மையைக் காட்டி மக்களின் இதயத்தை வென்றது என்றால், ஆளுங் கட்சியாகிவிட்ட காங்கிரஸ், தன்னிடம் உள்ள சலுகை தரும் சக்தியைக்காட்டி ஆசை ஊட்டவும் கெடுத்துவிடும் வலிவைக்காட்டி மிரட்சியை மூட்டிவிடவும் செய்கிறது.

காந்தியாரின் காங்கிரசைக் கண்ட பொதுமக்களின் கண்களில் நீர் துளிர்த்தது—பக்தியால், பாசத்தால்.

இன்றைய காங்கிரசைக் காணும் பொது மக்களின் கண்களில், மிரட்சி தெரிகிறது, எதிர்த்தால் என்ன கெடுதல் வந்துவிடுமோ என்ற எண்ணத்தால். இந்த நிலையை மீறி, இதயம் பேசவேண்டும்; எளிதானது அல்ல!!

தம்பி! நான் குறிப்பிட்டுக் காட்டினேனே, பட்டக்காரர், வாண்டையார், நெடும்பலத்தார் என்றெல்லாம்: அவர்களின் 'ரகம்' ஒவ்வொரு வட்டத்திலும் உண்டு. அவர்களில் பெரும்பாலோர் முன்பு காங்கிரசை எதிர்த்து நின்றவர்கள், தங்கள் நிலைமைகளை, சொத்து சுகத்தை, அதிகாரம் அந்தஸ்துகளைக் காப்பாற்றிக்கொள்ள. அதனாலே மிகுந்த கஷ்ட நஷ்டத்துக்கு ஆளானவர்கள்.

அவர்களைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது, தன் தூய்மையை இழந்ததால்.

காங்கிரசில் தங்களுக்கு இடம் கிடைத்ததும் அதனை எதிர்த்து எதிர்த்து எரிச்சலும் ஏமாற்றமும் கொண்டவர்கள், இது பொன்னான சந்தர்ப்பம் என்று கண்டு கொண்டனர்; எதைஎதை, காங்கிரசை எதிர்த்தபோது பெற முடியாமல் தவித்தார்களோ, அதனையும், அதனைவிட மேலானவற்றையும் காங்கிரசில் இருந்து கொண்டு அவர்களாலே பெறமுடிகிறது என்றால், அவர்களுக்கு காங்கிரஸ் கசக்குமா! அந்தக் காங்கிரசை வலிவுபடுத்துவதும் அவர்களுக்கு நஷ்டமா!

காமராஜர் நல்லவர், பச்சைத் தமிழர். ஆகவே நான் காங்கிரசை ஆதரிக்கிறேன் என்று பெரியார் சொன்னாலும், அவர் காங்கிரசை ஆதரிப்பதற்கான உண்மையான காரணம் எனக்குத் தெரியும்!! எனக்குத் தெரியும் என்பது அவருக்கும் தெரியும்!!!

யாராருக்காகப் பெரியார், வாதாடி, அவர்களின் நிலைமைகளைக் காப்பாற்றக் காங்கிரசுடன் போராடிப் போராடிவந்தாரோ, அவர்களில் பெரும்பாலானவர்கள் காங்கிரசிலே சேர்ந்து எல்லா வாய்ப்புகளையும் பெற்று, நிம்மதியாக, நிலை உயர்ந்து இருக்கக் காண்கிறார். அவர்களுக்கு இந்த இடம் கொடுத்திருப்பதால், காங்கிரசை ஆதரிக்கிறார். வேறு காரணம் யாவும், திறமையான வாதம்! வேறில்லை!

ஒரு உதாரணம் பாரேன்! தஞ்சைத் தரணியில் நெடும்பலம் சாமியப்பாவின் நிலை காப்பாற்றப்பட, அவரை எதிர்த்துவந்த காங்கிரசைப் பெரியார் மிகப் பலமாகத் தாக்கிவந்தார். இப்போது நெடும்பலத்தாரின் திருக்குமாரன் காங்கிரசில் புகுந்து, தந்தை பெற முடியாதனவற்றைக்கூடப் பெற்று ஒளியுடன் விளங்குகிறார். இந்த ஒளி மங்கிவிடக்கூடாது என்பதற்காகப் பெரியார், இப்போது இந்த ஒளியைத் தந்துதவும் காங்கிரசை ஆதரிக்கிறார். எட்டும் எட்டும் பதினாறுதான், பத்தும் ஆறும் பதினாறுதான்; கணக்குவகைதான் வேறு, முடிவு ஒன்றுதான்.

பெரிய புள்ளிகளின் கணக்கு எப்போதும் இந்தவிதமாகத்தான். சோடையாக இருப்பதில்லை. காங்கிரசை எதிர்த்தனர், சுவையும் பயனும் கிடைக்கும் காலம் வரையில்—வெள்ளைக்காரன் துணை இருக்கும் வரையில்,



பிறகு, காங்கிரசை ஆதரித்து, சுவையும் பயனும் பெறுகின்றனர்.

அவர்கள் இதைப் பெற இழந்தது என்ன? கிளாஸ்கோ மல்லும் சரிகைத் தொப்பியும்! பெற்றது என்ன? மந்திரி வேலை வரையில்! விவரம் தெரியாதவர்களா! அவர்களுக்கே உரிய கணக்குத் திறமையுடன் காரியமாற்றுபவர்கள் இந்தக் கனதனவான்கள்-நடந்த நிகழ்ச்சி ஒன்று நினைவிற்கு வருகிறது.

ஒரு நண்பர்—குறிப்பிடத்தக்க புள்ளி—பஸ் முதலாளி—பத்து ஆண்டுகளுக்கு முன்பு, கிளாஸ்கோ மல் வேட்டி உடுத்திக்கொண்டு பாப்ளின் சட்டைபோட்டுக் கொண்டு பட்டைக்கரை சரிகை அங்கவஸ்திரம் போட்டுக்கொண்டு, வந்தார், என்னைக்காண! தெருத்திண்ணையில் உட்கார்ந்தோம் பேச.

முனிசிபாலிடி, பஞ்சாயத்து இவற்றின் உறுப்பினர்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற மேல் அவைக்குச் செல்லும் தேர்தலில் தாம் நிற்க விரும்புவதாகச் சொன்னார்; என் உதவி கேட்டார்.

எனக்கு வேண்டியவர்கள் அந்த அமைப்புகளிலே அதிகம் கிடையாது. அவருக்கும் தெரியும். ஆனாலும், தேர்தல் என்றால் எல்லோரையும் பார்க்கவேண்டுமே! அந்த முறைப்படிப் பார்த்தார் என்று எண்ணுகிறேன்.

நான் சொன்னேன் இந்தவிதமான தேர்தலிலே நிறையச் செலவாகிறதாமே என்று.

அவர் பச்சையாகவே பேச ஆரம்பித்தார்.

எனக்கு ஓட்டுப் போடுபவர்கள், கேட்டால் பணம் கூடத்தர நான் தயார் என்றார்.

எவ்வளவு என்று கொடுக்க முடியும். நிறையச் செலவாகுமே என்றேன்.

உடனே அவர், மளமள வென்று கணக்குப் போட்டுக் காட்டினார்.

இருபதனாயிரம் செலவாகிறது என்றே ஒரு கணக்குக்கு வைத்துக் கொள்ளுவோம். என்ன நஷ்டம் அதனாலே—ஐந்து வருடம் மேல் அவை உறுப்பினராக


இருந்தால்; மாதம் 150, வருடத்துக்கு 1800.ஐந்து வருடத்துக்கு 9000! இதன்றிப் படி வேறு இருக்கிறது. இந்த ஐந்து வருஷத்தில் ஒரு பஸ் ரூட்டாவது கிடைக்காதா! எத்தனை மந்திரிகள், அதிகாரிகள் தொடர்பு ஏற்படும்! போதுமே! முன்னாலே போட்டுப் பின்னாலே எடுக்கவேண்டியது தானே என்றார். தம்பி! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எனக்கு மட்டுமா, இப்போது உனக்குத் தூக்கிவாரிப் போடப் போகிறது பாரேன்! சொன்ன படியே செய்து காட்டினார் அந்தப் புள்ளி!!

சொன்னதற்கு மேலும் செய்து காட்டிவிட்டார்! காங்கிரசில் சேர்ந்து தலைவராகிவிட்டார்!

இப்போது அவர் மகாநாட்டுத் திறப்பாளர், அமைச்சர், பேச்சாளர்! அவர் அழைக்கிறார், அமைச்சர் செல்கிறார்; அவர் கேட்கிறார், அமைச்சர் அக்கறை காட்டுகிறார்! பெரிய காங்கிரஸ் தலைவராகிவிட்டார். முடிந்தது பாரேன்! இவ்வளவு எளிதாக எப்படி ஏற்பட முடிகிறது இந்த உறவு? இதயம் இருக்கட்டும் ஒருபக்கம் என்று இருசாராரும் இருந்து கொள்வதால்.

இப்படிப் பட்டவர்களின் முகாம், இன்றைய காங்கிரஸ். இவர்களின் துணையுடன் நடத்தப்படும் தேர்தலின் போது, மக்களின் இதயம் நமது பக்கம். ஆகவே வெற்றி நமக்குத் தான் என்று எண்ணி ஏமாறக்கூடாது. விழிப்புடனிருந்து, தேர்தலின்போது சுறுசுறுப்பாகப் பணியாற்றும் விந்தை மாந்தர்களைக் கவனித்தாக வேண்டும். அவர்களில் சிலரை, அடுத்த கிழமை காட்டுகிறேன்.

அண்ணன்,



25-4-'65

காஞ்சிக் கடிதம் : 16

# இதயம் வென்றிட...2

**பர்மிட்டும் லைசென்சும் பகை போக்கிப் பாசத்தை ஊட்டிவிடும்!**

**மதில் மேல் பூனை நிலையில் சிலர்**

**கிராமங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்க!**

**மண்டலத்தின் தேர்தல் நேர வேலைகள்**

தம்பி,

சென்ற கிழமை கூறியபடி தேர்தல் காலத்திலே விறுவிறுப்புடனும், மிகுந்த தந்திரத்துடனும் பணியாற்றிடும் சிலர்பற்றி எடுத்துக்காட்டுகிறேன். இவர்களை நமது தோழர்கள் சந்தித்திருக்கிறார்கள். ஊருக்குஊர் பெயர்கள் மாறிமாறி இருக்கும்-இயல்பு ஒரேவிதமானதாகவே இருக்கும்.

இவர்கள் தேர்தல் சமயம் தவிர மற்ற வேளைகளில் பொதுவாழ்க்கையில் இல்லாமல் இருக்கக்கூடும்; தேர்தலின்போதுமட்டும் தீவிரமாகிவிடுவர்.

தர்மபுரித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு, நமது நண்பர்கள், காங்கிரசில் இன்னாரை வேட்பாளர் ஆக்கினால் இன்னின்னார் வேலை செய்யமாட்டார்கள், ஒதுங்கிக்கொள்வார்கள் என்றுகூடச் சொன்னார்கள்.

அவ்விதம் நம்பினார்கள்; நம்பிக்கை கொள்ளும்படி அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

ஆனால் தேர்தல் நாள் நெருங்க நெருங்க, ஒதுங்கி இருப்பார்கள், ஒப்புக்கு வேலை செய்வார்கள் என்று எவர்களைப்பற்றி நமது நண்பர்கள் கூறிக்கொண்டிருந் தார்களோ அவர்கள் அனைவரும் தீவிரமாக வேலை செய்தனர்.

அது தவறு என்று நான் கூறவில்லை; அது முறையுங்கூட.

ஆனால் அவர்கள், உண்மையில் ஒதுங்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதனை நமது தோழர்கள் முன்ன தாகவே உணராமலிருந்தது, தவறு இல்லையா?

கசப்பு, வெறுப்பு, பகை எனும் உணர்ச்சிகள் கொந்தளிக்கும் உள்ளம் என்பதைக் காட்டிக்கொள்ளும் விதமாகத்தான் காங்கிரசில் உள்ளவர்களில் பலர், சாதாரண நாட்களில் பேசிக்கொள்வார்கள்; நம்மிடமே கூடப் பேசுவார்கள்.

★

இந்தப் பக்தவத்சலம் இப்படித் துப்பாக்கித் துரைத் தனம் நடத்துவது, அதற்கு நாங்கள் துதிபாடிக்கிடப்பது என்றால், அது எப்படி முடியும், எத்தனை நாளைக்கு முடியும்?

★

நான் கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன், ‘‘இந்தி ஆட்சிமொழி ஆகக்கூடாது. ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டும்; இதற்கு உத்தரவாதம் சட்டப்படி கிடைக்காத வரையில், நான் காங்கிரசுக்காக வாதாட முடியாது’’ என்று.

★



காங்கிரசுக் கட்சி புனிதமானதுதான், ஆனால் கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிபுகுவது போலாகி விட்டது நிலைமை. ஊரை அடித்து உலையில் போடுபவ னெல்லாம் காங்கிரசிலே! இந்த நிலைமையில் உள்ள காங்கிரசை ஆதரிக்கும்படி ஏழைகளிடம் எப்படிக் கேட்டுக்கொள்ள முடியும்? முடியாது என்று கூறி விட்டேன்.

சர்க்காரின் மந்தத்தனம், நிர்வாக ஊழல், இவ்விதம் இருக்கும்போது, எப்படி ஓட்டுக் கிடைக்கும் காங்கிரசுக்கு என்று கேட்டேன், தலைவர் களை. எனக்கென்ன பயம்!

இவ்விதமாகவெல்லாம், நம்மிடமே வந்து பேசும் காங் கிரஸ்காரர்கள் உண்டு. உள்ளபடி அவர்களில் பலருக்கு மனக்குமுறல்கூட உண்டு. ஆனால், தேர்தல் சமயத்தில், அவர்களில் மிகப் பெரும்பான்மையினர், சட்டை மாட்டிக் கொள்கிறார்கள், காங்கிரசுக்கு ஓட்டு வேட்டையாடுவதில் மும்முரமாகிவிடுகிறார்கள். ஏன்? அவர்களின் குமுறல் அடங்கிப்போகும்படியான நிலைமை ஏற்பட்டுவிடுகிறது; அதற்கு ஆயிரத்தெட்டு வழிகள் உள்ளன; ஆளுங்கட்சிக்கு மட்டுமே அந்த வசதிகள் உண்டு.

ஒரு சிறு சலுகை, மன எரிச்சலைக் குறைத்து விடுகிறது.

ஒரு பர்மிட்டும் லைசென்சும், பகையைப் போக்கி விடுகிறது; பாசத்தை ஊட்டிவிடுகிறது.

★

அவரே தோளின்மீது கைபோட்டுக் கொண்டு உரிமையோடு பேசினார், என்ன! உன்னைப்பற்றி என்னென்னவோ சொல்லுகிறார்களே! காங்கிரசுக்கு வேலை செய்யப்போவதில்லை என்று சொன்னா யாமே. நான் நம்பவில்லை. கேள்விப்பட்டபோது திடுக்கிட்டுப்போனேன் என்று கூறினார். அவருடைய நிலைமைக்கு, வீடுதேடி வந்து என்னைப் பார்த்து, தோளின்மீது கைபோட்டுக்கொண்டு தோழமையுடன் பேசுவது என்றால் சாதாரணமா! அவர் அவ்வளவு

தூரம் கேட்ட பிறகு நான் எப்படி மறுக்க முடியும்?
மறுநாளே கிளம்பி வேலை தொடங்கினேன்.

என்று பேசிடும் உண்மைக் காங்கிரஸ்காரரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

★

ஆளுங்கட்சியை அடியோடு பகைத்துக்கொள்ளப் பலரால் முடிவதில்லை.

மயக்குமொழி கேட்டுப் பலியாகிவிடாத உறுதி பலருக்கு இருப்பதில்லை.

அச்சமும் ஆசையும் அலைக்கழிக்காத விதமான உள்ள உரம் இருந்தால் மட்டுமே, ஆளுங்கட்சியை எதிர்த்து நிற்கமுடியும்.

வெற்றியோ தோல்வியோ, நான் என் கட்சிக்காக, எனக்குப் பிடித்தமான கொள்கைக்காக என்று கூறிடும் துணிவு, நேர்மையின்மீது கட்டப்பட்டிருக்க வேண்டும்.

தனித்து நிற்க நேரிட்டாலும் தயங்கமாட்டேன் என்று கூறிடும் துணிவு, ஒரு கொள்கையிடமோ, அந்தக் கொள்கைக்காக உள்ள அமைப்பினிடமோ நாம் வைத்திருக்கும் பற்று இருக்கிறதே அதன்மீது கட்டப்பட வேண்டும்.

அத்தகைய இயல்பினர் நிரம்பப் பேர் இருக்கிறார்கள், கழகத்துக்கு நல்லாதரவு தந்து வருகிறார்கள். ஆயினும், பலர், மதில்மேல் பூனை நிலையில் இன்னமும் உள்ளனர். அவர்களே தேர்தல் காலத்தில், ஆளுங்கட்சி விரித்திடும் வலையிலே எளிதாக விழுந்துவிடுகிறார்கள்; சில்லறைச் சலுகைகளில் மயங்கிப்போகிறார்கள்.

வலை வீசுவதிலும் நாக்கில் தேன் தடவி விடுவதிலும் வல்லவர்கள், காங்கிரசுக் கட்சிக்காகத் தேர்தல் வேலை செய்வதற்கு நிரம்பப் பேர் உள்ளனர்.

தலைவர்களின் மேடை முழக்கங்களால் சாதிக்க முடியாத காரியத்தை இந்தக் காரியவாதிகள் சாதித்துவிடுகிறார்கள்.



மேடையிலே நாம் இந்தப் பதினேழு ஆண்டு ஆட்சியிலே காணக் கிடைக்கும் கேடுபாடுகளை விளக்கிக் காட்டுகிறோம்.

இதனை மறுத்திட முடிவதில்லை காங்கிரஸ் தலைவர்களால்; மறுத்திட முன்வருபவர்கள், தங்களைப் பேச்சாளர்கள் ஆக்கிக் கொள்வதிலே மட்டுமே வெற்றி பெறுகிறார்கள். மக்களின் இதயத்தைப் பெறுவதிலே அல்ல.

இந்த முறையினால் மட்டுமே வெற்றி கிட்டிவிடாது என்று உணர்ந்துள்ள, ஊர் அறிந்தவர்கள் கிளம்புகிறார்கள், தனித்தனியே சந்திக்க, தித்திப்புப் பேச்சுத் தந்திட, மனக்குறையைப் போக்கிட! அதிலே நல்ல வெற்றி கிடைக்கிறது.

நாட்டாண்மைக்காரர் இருக்கிறார், ஊருருக்கும். அவரும், நாம் நடத்தும் கூட்டத்திற்கு வந்திருந்து நாம் காட்டும் காரணங்களைக் கேட்டு, உண்மையை உணர்ந்துவிட்டிருக்கிறார் என்று நாம் எண்ணிக்கொள்கிறோம். ஆனால், உண்மை என்ன? நாட்டாண்மைக்காரர் கூட்டத்திற்கு வருவதுமில்லை! கூட்டத்திற்கு வந்து நாம் சொன்னவைகளைக் கேட்டுச் சென்றவர்களும் அவரிடம் சென்று விளக்கம் கூறுவதில்லை.

இந்த நாட்டாண்மைக்காரரின் பேச்சை மீறி நடந்துகொள்ளும் இயல்பு, கிராமப்புறங்களில் அதிக அளவு இன்னமும் தென்படவில்லை, அரும்பு இருக்கிறது. சில இடங்களில் கருகிய மொட்டுக்களாகி விட்டதையும் நான் கண்டிருக்கிறேன்.

அரசியல் கட்சிகளிடம் ஈடுபாடு கொண்டு, நாட்டு நிலைமைகளை அறிந்து, அந்த நிலைமைகளைத் தக்க முறையில் திருத்தி அமைக்கவேண்டும் என்ற உரிமையும் கடமையும் தமக்கு உண்டு என்று உணர்ந்து செயல்படுவோர்களைப் போலவே, கிராமத்துத் தலைவர்கள் இருந்துவருவார்கள் என்று எண்ணிக்கொள்வது சரியல்ல; அப்படி எண்ணிக்கொண்டு கணக்குப்போடும் போதுதான், போட்ட கணக்குப் பொய்த்துப் போய்விடுகிறது.

ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டது...எனும் உண்மை விளக்கப்படும்போது அதற்குக் காரணமாக உள்ள ஆட்சியிடமும் அந்த ஆட்சியை நடத்தும் கட்சியிடமும் விவரமறிந்தவர்களுக்கு எரிச்சல் வருகிறது; அந்தக் கட்சிக்குத் தக்க பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள்.

ஆனால், ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டதே என்ற கவலையில் அல்ல; வரவர கிராமத்திலே அவனவன் அவன் இச்சைப்படி நடந்து கொள்கிறான்; பெரியவர்கள் நாட்டாண்மைக்காரர்கள் ஆகியோரின் பேச்சின்படி நடப்பதில்லை என்ற கோபமும், தனது மதிப்புக் குறைந்து விடுகிறதே என்ற கவலையும் கிராமத்துத் தலைவருக்கு.

அவருடைய 'அரசியல்', நாடு அறிந்த அரசியலோடு முழுக்க முழுக்கத் தொடர்பு கொண்டதல்ல.

சுட்டுத் தள்ளுகிறார்களாம் என்று கேள்விப்படும் போது அவருடைய மனம் பதறத்தான் செய்கிறது, அத்தகையவர்கள் ஆட்சியில் இருக்கக்கூடாது என்று தான் எண்ணுகிறார், ஒரு கணம். மறுகணமோ நாலு பேர் நடத்திய பஞ்சாயத்திலே ஒப்புக்கொண்டு போன குப்பன் அதன்படி நடக்கவில்லையே என்ற கவலை அவரைப் பிடித்துக்கொள்கிறது.

அந்தக் கவலையின் முன்பு நாட்டை வாட்டிடும் அரசியல் பிரச்சினைகள் மங்கி விடுகின்றன.

இந்த மனப்போக்கு மாற்றப்பட வேண்டும்; இது வெறும் மேடைப் பேச்சினால் மட்டும் மாறிவிடாது; கிராமத்துடன் நமது கழகத் தோழர்கள் தொடர்ந்து, நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதன் மூலமாகவே, நிலைமையையும் நினைப்பையும் மாற்றிட முடியும்.

தர்மபுரியில் நான் கேள்விப்பட்டேன். ஒரு கிராமத்தில் முக்கியமானவரைக் காங்கிரஸ் தலைவர்கள் தமது பக்கம் சேர்த்து கொண்டார்கள் என்று.

யார் அந்தக் கிராமத்துப் பெரியவர்? என்று நான் கேட்டேன். மந்திரிக் கவுண்டர் என்று சொன்னார்கள்.



தர்மபுரித் தொகுதியில் சில கிராமத் தலைவர்களுக்கு மந்திரிக் கவுண்டர் என்று பட்டப் பெயரே இருப்பதாக அறிந்துகொண்டேன்.

இவர்களைப் போன்றவர்களின் செல்வாக்குப் பற்றிய கணக்கு நாம்தான் மக்களின் இதயத்தை வென்று விட்டோமே என்ற நினைப்புடன் மட்டும் நாம் இருந்து விடும்போது நமக்குப் புரிவதில்லை. இந்தக் கணக்கு நமக்குப் புரியவேண்டும், தெளிவாக.

தேர்தல் நேரமாகப் பார்த்து ஆசை ஊட்டியும் அச்சமூட்டியும் எவரெவரை எப்படி எப்படி வளையச் செய்வது என்ற வித்தையில் வல்லவர்கள் நடத்திடும் நாடகத்தில் சில காட்சிகளை இனிக் காண அழைக்கிறேன், தம்பி!

★

முன்னாள் கள்ளுக்கடைக்காரர்:- போய்யா, போ! போ! காங்கிரசுக்காக வாதாட வந்துவிட்டாயா! எவ்வளவு கிடைச்சுது அதுக்கு. நாங்க எதுக்காகய்யா காங்கிரசுக்கு ஓட்டுப்போடணும், எங்க தலையிலே கல்லைப்போட்டுதே அதுக்காகவா; எங்க பிழைப்பிலே மண்ணைப் போட்டுதே அதுக்காகவா! என்னோட ஓட்டு காங்கிரசுக்குக் கிடையாது—நிச்சயமா—ஆமாம். என்வாயாலே காங்கிரசுக்கு ஓட்டுப் போடுன்னு ஒரு பயலுக்கும் சொல்லமாட்டேன்—நீ கையைப் பிடிச்சிக்கிட்டாலும் சரி, காலைத் தொட்டுக் கும்பிட்டாலும் சரி......

மண்டலம்:- உங்களோட கோபத்துக்கான காரணம் எனக்கு நன்றாகப் புரியுது. உங்கபேர்லே ஒரு துளியும் எனக்குக் கோபம் கிடையாது. இரண்டு தலைமுறையாக நடத்திக் கொண்டுவந்த தொழிலைக் கெடுத்துவிட்டதே காங்கிரஸ், மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்து என்ற கோபம் உங்களுக்கு. ஆனா......

மு. க. க:- ஆனா என்னய்ய ஆனா.........வழக்கமான உபதேசந்தானே? ஒரு சிலருக்கு ப் பண நஷ்டமென்றாலும் பலபேருக்கு நன்மை; புண்யகாரியம்; ஏழைகளோட குடும்பத்துக்கு நிம்மதி; இதைத்தானே

சொல்லப்போறே. கேட்டுக் கேட்டுக் காதும் புளித்துப் போயிருக்குது......

மண்டலம்:- அய்யய்யே! நான் அந்தப் பழய காடிப் பேச்சையா சொல்லவந்தேன். மதுவிலக்குச் சட்டம் கொண்டுவந்தாகணும் என்று, ஓர் வற்புறுத்தல். மகாத்மா சொன்னதைக்கூட நிறைவேற்றாமல் இருக்கலாமா, காங்கிரஸ் மந்திரிசபை என்கிற எண்ணம். அதனாலே கொண்டுவரப்பட்டது மதுவிலக்குச் சட்டம்...

மு. க. க:- காரணம் சொல்றிங்களா, காரணம்! காரணத்தைச் சொல்லிவிட்டா, என் பெட்டியிலே காசு வந்து குவிந்துவிடுமா...

மண்டலம்:- சொல்ல வந்ததை முழுவதையும் கேட்காமலே கோபம் பொங்கிவருதே உங்களுக்கு. கேளுங்க. வந்த புதுசிலே மகாத்மா பேச்சை மறந்துவிடக்கூடாது பாருங்க...அதனாலே சட்டம் போட்டாச்சி. இப்ப, காங்கிரசிலே, மதுவிலக்குச் சட்டம் இருந்தாக வேணும்னு பிடிவாதம் பேசுகிற ஆசாமிகளோட தொகை குறைச்சலாகிவிட்டுது. மதுவிலக்குச் சட்டம், எதிர்பார்த்த பலனைக் கொடுக்கல்லே என்கிற பேச்சு வலுவாகிவருது...

மு. க. க: அதனாலே...! போலீசை நாலாபக்கமும் ஏவி வேட்டை ஆடிக்கிட்டு வர்ரிங்க... அதைத்தானே சொல்றே...

மண்டலம் : அதைச் சொல்லவில்லைங்க...ஒரே அவசரம், ஆத்திரம்; பொறுமையாக் கேட்கவேண்டாமா. மதுவிலக்குச் சட்டம் பிரயோஜனமில்லே. அதை எடுத்து விடலாம் என்று இப்ப ஒரு அபிப்பிராயம் உருவாகிக் கொண்டு இருக்குது...

மு. க. க.: என்னது! என்னது! மதுவிலக்கு வேண்டாமென்று...

மண்டலம் : மதுவிலக்குச் சட்டம் வேண்டாமென்று காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இப்ப கருத்து வளர்ந்து கொண்டிருக்குது. கொஞ்ச நாளிலே இந்தக் கருத்துக்கு அமோகமான ஆதரவு கிடைத்துவிடும் என்பதற்கான அறிகுறிகள் பளிச்சிட்டுக் காட்டுது...



மு. க. க : என்னாலே நம்பமுடியல்லையே, மகாத்மாவோட பேரைச் சொல்லிக்கொண்டு மக்களோட ஆதரவு தேடுவது காங்கிரஸ் கட்சி. மகாத்மா, மதுவிலக்குச் சட்டம் வேதம்னு சொல்லிவிட்டாரு. அப்படிப்பட்ட சட்டத்தை எப்படி எதிர்த்து ஒழிக்க முடியும்...காங்கிரஸ் கட்சியாலே...

மண்டலம் : இப்ப இருக்கிற காங்கிரசுக்கும் அப்ப இருந்த காங்கிரசுக்கும் உள்ள வித்தியாசம் தெரியாததாலே இவ்விதம் பேசத்தோணுது உங்களுக்கு. இப்ப இருக்கிற காங்கிரசிலே, மகாத்மா காந்தியை முன்னே எதிர்த்துக்கொண்டு இருந்தவங்களோட தொகைதான் அதிகம். தெரியுதுங்களா, அவங்களோட எண்ணம், மகாத்மா என்னமோ தன்னைப்போலவே எல்லோரும் தவசிகள் என்ற நினைப்பிலே மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரச்சொல்லி கட்டளையிட்டார். ஆனா அது நடைமுறைக்கு ஒத்துவராது என்பதுதான்.

மு. க. க: அதனாலே...போட்ட சட்டம் போட்டபடியே தானேய்யா இருந்து வருது...

மண்டலம் : இருந்துவருது, ஆனா எத்தனை நாளைக்கு? சட்டத்தை எடுத்துவிட வேண்டும் என்ற குரல் வலுவடையுது தெரியுங்களா? இப்பவே. மகாராஷ்டிரத்திலே கடைகளைத் திறந்தாச்சி.

மு. க. க: பம்பாய் பக்கத்திலேயா—அங்கே காங்கிரஸ் ஆட்சி இல்லையா...

மண்டலம் : காங்கிரஸ் ஆட்சிதான் அங்கே நடப்பது, காங்கிரஸ் கட்சியே சொல்லிவிட்டுது மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்த வேண்டியதுதான் என்று. காங்கிரஸ் கடசி சொல்வதைக் காங்கிரஸ் ஆட்சி நிறைவேற்றுது, அதுதானே நியாயம்...

மு. க. க. : பம்பாய் பக்கத்திலே மதுவிலக்கு சட்டத்தை மாற்றிவிடச்சொல்லி அங்கே இருக்கிற காங்கிரஸ் சொல்லி இருக்குதா! பலே! பலே! துணிச்சல் பாருங்க அப்படி இருக்குது அங்கே. இங்கே தொடை நடுக்கம் எடுக்குது காங்கிரசிலே உள்ளவங்களுக்கு. பஞ்ச

நூல் நிலையம் ... நகர், விருத்தாசலம்

மாபாதகத்திலே ஒண்ணல்லவா குடின்னு பஜனைப் பேச்சுப் பேசறாங்க......

மண்டலம் : எதுவரையிலே பேசுவாங்க? உங்களைப் போன்றவங்க, விவரம் தெரிந்தவங்க காங்கிரசிலே சேராமப்படிக்கு ஒதுங்கி இருக்கிறவரைக்கும். உங்களைப் போன்றவங்க, காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்து பாடுபடணும்... விளக்கமாப் பேசணும்... இந்த மாதிரிச் சட்டமெல்லாம் வீணா பண நஷ்டத்தைத் தான் உண்டாக்கும் என்று தைரியமாப் பேசணும்.

மு. க. க. : பேச விடுவாங்களா? மதுவிலக்கு, மகாத்மாவோட திட்டம்; அதை எதிர்த்துப் பேசுவதற்கு எந்தக் காங்கிரஸ்காரருக்கும் உரிமை கிடையாது என்று உருட்டி மிரட்டிப் பேசுவார்களே...

மண்டலம்: அதுதான் முடியாது என்கிறேன். ஜனநாயகம் நடக்குது ஜனநாயகம். தெரியுதுங்களா? ஜனநாயக தர்மப்படி, அவரவர்களும் தமக்குச் சரி என்று பட்ட விஷயத்தைப் பற்றி அச்சம், தயை, தாட்சணியம் இல்லாமப்படிக்குப் பேசலாம்......

மு. க. க.: கள்ளுக் கடைகளை மறுபடியும் திறக்க வேணும்னு கூடவா பேச முடியும்? அனுமதிப்பார்களா......!

மண்டலம் : அனுமதி மறுக்க யாருக்கு உரிமை! ஒருவருக்கும் கிடையாது. கேட்கலாமே நீங்க, என்னப்பா நான் பொருளாதாரக் காரணத்துக்காகவும், உழைப்பாளிகளுடைய நன்மைக்காகவும் கள்ளுக் கடைகளை மறுபடியும் திறக்க வேண்டும் என்று சொன்ன உடனே, சரமாரியா கண்டனத்தை வீசுகிறீங்களே— காங்கிரசுக்கு இது ஆகாது அடுக்காது என்றெல்லாம்; அதே காங்கிரஸ்தானே புதுச்சேரியிலே அரசாளுது— அங்கே கள்ளுக்கடை கோலாகலமாக இருக்குதே... காந்திராஜ்யம் கடலூருக்கு மட்டுந்தானா, காரைக்கால் புதுச்சேரிக்குக் கிடையாதான்னு கேட்கலாமே. என்ன பதில் சொல்ல முடியும். உண்மையைச் சொல்லட்டுமா; உங்களைப்போல ஒரு பத்துப் பேர் இது போலப் பேசினா, மதுவிலக்குச் சட்டம் தன்னாலே போய்விடும்...



மு. க. க.: கள்ளுக் கடையைத் திறக்கச் சொல்லிக் கள்ளுக்கடைக்காரன் சொல்கிறான் என்று கேலி பேசமாட்டாங்களா...?

மண்டலம் : எப்படிப் பேசுவாங்க! நீங்க காங்கிரசுக்கு வெளியே இருந்துகொண்டு பேசினா, கண்டனம், கேலி, எதிர்ப்பு எல்லாம் கிளம்பும். நீங்களே காங்கிரசிலே சேர்ந்துவிட்டா! ஒரு பய நாக்கை வளைக்க முடியுமா! காங்கிரஸ்காரர்தான் அவரும் என்று நாங்க பேசமாட்டமா, உங்க பக்கம் ஆதரவு காட்டி......

மு. க. க.: நினைக்க நினைக்க இனிக்குதப்பா......

மண்டலம்: அதனாலேதான் சொல்றேன். இந்தத் தேர்தலிலே காங்கிரசுக்கு ஆதரவு காட்டி, வேலை செய்து காங்கிரசுக்கு வெற்றி தேடிக் கொடுங்க. பிறகு பாருங்களேன், நீங்க கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருது காங்கிரசு......

மு. க. க.: கள்ளுக்கடை நடத்தின ஆசாமி இப்பக் காங்கிரசிலே சேருகிறானே என்று ஊர் ஒரு மாதிரியாப் பேசாதா...

மண்டலம் : வீணான சந்தேகம் உங்களுக்கு, உங்களைப் போன்றவங்க வேண்டியபேர் இப்பக் காங்கிரசிலே வந்து சேர்ந்திருக்காங்க......

மு. க. க.: என்னைப்பற்றி, உங்க தலைவர்களுக்கு நல்லபடி சிபார்சு சொல்லி வைக்கணும்...

மண்டலம் : பாருங்க என்னோட வேலையை, போகப் போகப் புரியும். உங்க மனசோட போட்டு வையுங்க, இந்தத் தேர்தலிலே காங்கிரசுக்கு வெற்றி ஏற்படும்படி வேலை செய்து காட்டுங்க, உங்களையே இந்தப் பக்கத்துக்குக் காங்கிரஸ் தலைவராக்கிக் காட்டுகிறேன்...

மு. க. க. : நமக்கு எதுக்கப்பா தலைவர் வேலை...

மண்டலம் : நம்மாலே முடியாதுன்னு பார்க்கிறிங்களா...

மு. க. க.: செச்சே! அப்படி நினைப்பேனா. எனக்குப் பலபேர் சொல்லியிருக்கிறாங்களே உன்னைப் பற்றி,

உன் யோசனைப்படியே நடக்கறேன், சரிதானே. என் ஓட்டு உன்னோட காங்கிரசுக்குத்தான், திருப்தி தானே...

மண்டலம்: அதென்னங்க, உன்னோட காங்கிரசு என்று சொல்றிங்க. நம்மோட காங்கிரசு என்று சொல்லுங்க...

மு. க. க.: நான் இன்னும் கதர்கூடப் போடவில்லையேப்பா...

மண்டலம்: அதனாலே என்ன! உடையிலே என்ன இருக்குது! எல்லாம் உள்ளத்திலே இருக்கணும்; இருக்குது,

மு. க. க: ஏம்பா! உன் பேச்சைக் கேட்டு, காங்கிரசிலே சேர்ந்துவிடறேன். கட்டாயம் நாம் ஜெயித்தாகணும்; இல்லையானா ஊர் கேலி பேசும்,

மண்டலம்: வெற்றியிலே இனி என்னங்க சந்தேகம். நீங்களே இனி காங்கிரஸ். வெற்றி பெற்றுக் காட்டாமலா இருப்பிங்க... இந்தப் பக்கத்து ஓட்டு மூணு ஆயிரம்...

மு. க. க.: ஆமாம்; நம்ம பேச்சுக்குக் கட்டுப்பட்டவங்க ஒரு ஆயிரம் இருக்கும், எவ்வளவு குறைச்சி மதிப்புப் போட்டாலும்.

மண்டலம்: மற்ற இரண்டு மட்டும் என்ன! உங்களை மீறியா போய்விடும்...

மு. க. க.: எதிரி கால் அரைன்னு ஆசை காட்டினா. அதுக பல்லை இளிச்சிவிடுமேன்னு பார்க்கறேன்,

மண்டலம்: நீங்க இருக்கிற பக்கம், ஒருவன் வந்து கால் அரைன்னு பேரம் பேசுவானா, அவ்வளவு துணிச்சலா! ரோஷம் கிளம்பிவிட்டா, ஓட்டுக்கு இரண்டு மூணுகூட எடுத்து வீசுவீங்கன்னு தெரியாதா எதிரிக்கு...

மு. க. க: ரோஷத்தைப் பார்த்தா, செலவு அதிகமாக ஆகிவிடுமே...

மண்டலம்: அந்தப்பயம் எதிரிக்கு இருக்குமேல்லோ... அவன் என்ன உங்களைவிடப் பெரிய புள்ளியா,



மு. க. க.: புள்ளியாவது சுள்ளியாவது; இப்பத்தான் கொஞ்சம் பசை! வரட்டும்பய, பார்த்துக் கொள்ளலாம்...

மண்டலம்: அப்ப, நான் வரட்டுங்களா! இனி இந்த வண்டிப்பேட்டை பக்கம், என்னுடையது அல்ல, உங்களுடையது...

மு. க. க.: நீபோய், மற்ற இடத்தைக் கவனி தம்பி! வண்டிப்பேட்டை ஓட்டு, இப்பவே நம்ம பெட்டியிலேன்னு வைத்துக்கொள்ளு...

மண்டலம்: அதிலே சந்தேகம் என்ன! ஒரு ஐம்பது எடுங்க...

மு. க. க.: ஐம்பது ரூபாயா...ஏம்பா!

மண்டலம்: ஆமாங்க! ஒரு செட்டு கதர் உடை அனுப்பி வைக்கிறேன்...

மு. க. க.: ஆமாம்பா! அப்படியே கொடிகூட...

மண்டலம்: பட்டுத் துணியிலே உங்க மாளிகைக்கு... மற்ற இடத்துக்கு, துணியிலே சரிதானே,

மு. க. க.: உனக்கா தெரியாது.

★

ஆலை அதிபர் ஆரிமுத்து: மந்திரி வருகிறார் என்று சொன்னா, நாங்க என்ன மயக்கம் போட்டு விழுந்து விடுவோம்னு நினைப்பா, நாங்கள் விவரம் தெரியாதவர்கள் அல்ல. மந்திரி வரட்டும் மகராஜனாக, உனக்குச் சொன்ன பதில்தான் அவருக்கும். தேர்தல் செலவுக்கென்று எங்களைக் கசக்கிப் பிழிந்தால், நாங்கள் என்ன கதியாவது. நாங்கள் என்ன முன்பு போலவா இருக்கிறோம், எங்களைத் தான் வரி போட்டுப் போட்டு வாட்டி எடுக்கிறதே உங்க கட்சி சர்க்கார்...

மண்டலம்: நான், முன்பே இதைச் சொன்னேன். டி. டி. கே. க்குத் தந்திகூடக் கொடுத்தேன்...

ஆலை:- உடனே வரியைக் குறைத்துவிட்டாராக்கும். விடப்பா அந்தப் பேச்செல்லாம், முன்பு போல

எங்களுக்கு இலாபம் கிடையாது. ஏதோ ஒரு ஆயிரம் தொழிலாளிகள் பிழைக்கவேண்டுமே என்பதற்காக இதைக் கட்டிக்கொண்டு அழவேண்டி இருக்கிறது. வருவதிலே ரூபாய்க்கு 14 அணா கொட்டிக் கொடுக்கணுமாம், அதற்குப் பெயர் சமதர்மமாம்... சோஷியலிசமாம்...இதற்கு நாங்களே பணம் செலவழித்துக் காங்கிரசை ஆளச்சொல்லி ஏற்பாடு செய்ய வேண்டுமாம். குழியை வெட்ட வேண்டியது நாங்கள்—எங்களை அதிலே போட்டு மூடி மண்ணைப் போடுவீர்கள் நீங்கள். எதற்காகப்பா, வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்கள். சோஷியலிசம் பேசுகிற கட்சி, முதலாளிகளிடம் வரலாமா, பணம் திரட்ட...

**மண்:-** கோபம் அதிகமாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இப்போதுகூட, உங்களுக்கு வரிச்சலுகை செய்தது காங்கிரஸ் அரசாங்கம்தானே...

**ஆலை:-** அதற்குப் பெயர் சலுகையா...வரம்னு சொல்லப்பா! உனக்கு என்ன தெரியும் பொருளாதார சாஸ்திரம். உங்களோட காங்கிரஸ் சர்க்காரின் கண்மூடித்தனமான போக்கினால், தொழில் அமைக்க மூலதனம் கிடைப்பதில்லை. தெரியுமா! மூலதனம் எங்கே இருந்து வரும்? அந்தரத்திலிருந்தா? இலாபம் கிடைக்கவேண்டும்; அந்த இலாபத்திலிருந்துதானே மூலதனம் கிடைக்க முடியும்...

**மண்:-** அதைக் காங்கிரஸ் சர்க்கார் ஒப்புக்கொள்கிறதே! ஒப்புக்கொள்வது மட்டுமா! கம்யூனிஸ்டுகளின் வாயை அடக்க இந்த வாதத்தைத்தானே பயன்படுத்துகிறது.

**ஆலை:-** பேசுவது சோஷியலிசம்; தேர்தல் நிதிக்கு, முதலாளிகள்!

**மண்:-** காங்கிரஸ் சொல்லும் சோஷியலிசத்தில், முதலாளிகளுக்கும் இடம் உண்டு. அதுதானே அதிலே இருக்கிற அருமையே. மற்ற நாடுகளில் சோஷியலிசம் என்றால் முதலாளிகள் இருக்கக்கூடாது என்பது திட்டம். இங்கே அப்படியா!! முதலாளிகள் கட்டாயம் இருப்பார்கள், இருந்தாக வேண்டும்



என்று திட்டவட்டமாகப் பேசுவது காங்கிரஸ் கட்சி. அதை மறந்துவிடலாமா?

**ஆலை:-** முதலாளி இருக்கலாம், ஆனால், அவனிடம் இலாபம் சேரக்கூடாது, அதற்கு ஆயிரத்தெட்டுத் தடைகள், விதிகள், சட்டங்கள். ஏன் இதைச் செய்து கொண்டு எங்களிடம் பணமும் கேட்கிறீர்கள்? எதற்காகக் கொடுக்கவேண்டும்? எங்கிருந்து கொடுக்க முடியும்?

**மண்:-** இப்படிப் பேசினால் நான் என்னத்தைச் சொல்ல முடியும். பணம் தேவை, பெரிய அளவில். காங்கிரசு முதலாளிகளை வாழவைக்கிறது என்று பலமான பிரசாரம்; எதிர்ப்பு அதிகம். காங்கிரஸ் தேர்தலில் தோற்றுப்போனால், பிறகு சோஷியலிசத் திட்டப்படி தொழில்களைத் தனிப்பட்ட முதலாளிகளிடம் இருக்கவிட மாட்டார்கள்......

**ஆலை:-** அந்த இழவுக்காகத்தான் எங்களால் ஆன உதவி செய்து தொலைக்கிறோம் காங்கிரசுக்கு. போனதடவை ஒரு கோடி ரூபாய் அளவுக்குக் கொடுத்திருக்கிறோம்.

**மண்:-** கொடுத்ததைக் கவனத்தில் வைத்துக்கொண்டுதான், காங்கிரஸ் சர்க்கார் உங்களுக்கு உள்நாட்டுக் கடன், வெளி நாட்டுக்கடன், சலுகை எல்லாம் கிடைக்கும்படி செய்தது...

**ஆலை:-** செய்ததோ இல்லையோ, அதுகூட இருக்கட்டும் ஒருபுறம். எங்களிடம் பணமும் வாங்கிக்கொண்டு காங்கிரஸ தலைவர்கள் மேடைமீது ஏறிக்கொண்டு, உற்பத்தியான செல்வத்தை நாங்களே உறிஞ்சிக் கொண்டோம் என்றா பேசுவது, மக்களுக்கு எங்கள் பேரிலே ஆத்திரம் வருகிறபடி. அவர்கள் சொத்து சிலரிடம் குவிந்திருப்பது ஏன் என்று கேட்டுப் புரட்சியை செய்யமாட்டார்களா!

**மண்:-** விடுவோமா! இருக்கிற சொத்தையும் வருவாயையும் பங்கு போட்டுக்கொள்வது சோஷியலிசம் அல்ல என்று பேசி வருவது எந்தக் கட்சி? காங்கிரசல்லவா! சோஷியலிசத்துக்கே நாங்கள் புதிய வியாக்யானம் கொடுத்திருக்கிறோம்,

ஆலை:- என்ன வியாக்யானமோ! என்ன தத்துவமோ! புலியிலே புலி இது புதுப்புலி! சைவப்புலி! என்கிறீர்கள். போகட்டும், இப்போது என்னதான் எதிர்பார்க்கிறீர்கள்?

மண்:- உங்கள் தரத்துக்குத் தக்கபடி; எங்கள் தேவைக்கு ஏற்றபடி...

ஆலை:- உங்கள் தேவை நாளுக்குநாள் வளரும்; நாங்கள் என்ன செய்வது? உங்களிடம் கண்டிப்பு இல்லை; உங்கள் கட்சியிலேயே சிலபேர் கண்டபடி பேசுகிறார்கள், முதலாளிகளின் மனம் புண்படும்படி. கொள்ளைக்காரனை நடத்துவதுபோல் நடத்துகிறீர்கள்—காட்டு கணக்கு என்கிறீர்கள்—பூட்டு கடையை என்கிறீர்கள்—நீட்டு நோட்டுகளை என்கிறீர்கள்.

மண்:- அப்படி ஒன்றும் நடக்காது. முன்பு ஏதாவது நடந்திருந்தாலும் இனி நடக்காது. இப்போதே டி.டி.கே. போட்டுள்ள புதிய திட்டத்தைப் பார்த்தீர்களல்லவா? கறுப்புப் பணத்தில் ஒரு பகுதியைச் சர்க்காருக்குக் கொடுத்துவிட்டால், மற்றதற்குக் கணக்கு வழக்கு இல்லை என்று கூறிவிட்டார்...

ஆலை:- கறுப்புப்பணம் உள்ளவர்களுக்கு அது சலுகையாக இருக்கலாம். என்னிடம் ஏது?

மண்:- நான் சொன்னேனா? சொல்லுவேனா? எதிர்க்கட்சிக்காரர்கள் தான் அப்படிப் பேசி ஏசுகிறார்கள். இந்தக் காங்கிரஸ் சர்க்கார் கள்ளமார்க்கட்காரரிடம் சரணாகதி அடைந்துவிட்டது என்கிறார்கள். இதைப் பொதுமக்கள் புரிந்துகொண்டார்கள்; அதனால் இந்தத் தடவை காங்கிரசுக்கு ஓட்டுப் போடமாட்டார்கள் என்று பேசுகிறார்கள். இந்தத் தடவை, காங்கிரஸ் தோற்றுவிட்டால், கள்ளமார்க்கட்டுக்காரருக்குக் காங்கிரஸ் கட்சி உடந்தையாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டு உண்மை என்று ஆகிவிடும் ஆகவே, அந்த விதமான பழி விழாதிருக்கவும், முதலாளிகளைப் பூண்டோடு ஒழிக்கத் திட்டமிடுபவர்கள் ஆதிக்கம் பெறாதபடி தடுக்கவும், காங்கிரஸ் வெற்றி பெற்ற ஆக வேண்டும்,



ஆலை:- உம்முடைய வாதம் சரியோ, தவறோ, நான் நீண்ட காலமாகக் காங்கிரஸ் பக்தன் அதனால் என்னால் ஆனது செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்போது வருகிறார் மந்திரி?

மண்:- நீங்கள் நாள் குறிப்பிட்டதும்...

ஆலை:- என் தகப்பனாரின் தலைத் திவசம் இந்தப் புதன்கிழமை...

மண்:- நினைவுநாள் கொண்டாடிவிடுவோம்......மந்திரி தலைமையில்...

ஆலை:- அன்றைக்கே, அமெரிக்கக் கூட்டுறவுடன் நான் ஆரம்பிக்க இருக்கும் புதிய தொழிற்சாலைக்கான அடிப்படைக் கல்நாட்டு விழாவும்...

மண்:- நடத்திவிடுவது......இதற்கு ஒரு மந்திரி...... அதற்கு ஒரு மந்திரி...

ஆலை:- மந்திரியிடம், தனியாகச் சில விஷயங்கள் பேச...

மண்:- ஒரு மணி நேரம் ஒதுக்கச் சொல்கிறேன், போதுமா?

ஆலை:- ஒரு முக்கியமான விஷயம்...மந்திரி இங்கு வருகிறபோது, என்னை மதிப்புக் குறைவாக நடத்திய அதிகாரி இருக்கிறாரே, தெரியுமே உங்களுக்கு, அவர் இருக்கக்கூடாது...

மண்:- மாற்றிவிட்டால் போகிறது, வேறு இடத்துக்கு.

ஆலை:- மகாத்மா காந்தியின் அருளால், தேர்தலில் நமக்கு ஜெயம் நிச்சயம்...

மண்:- உங்களுடைய ஆசீர்வாத பலம் உண்டு என்று தெரிந்த பிறகுதான், நான் தேர்தல் வேலையிலே ஈடுபட்டேன்.

★

முற்போக்காளர்:- என்ன இருந்தாலும், காங்கிரஸ் கட்சியில் முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்தபடி இருக்கிறது.

மண்டலம்:- நீங்கள் நினைப்பது தவறு. கூடிக்குலவி முதலாளிகளை ஒழித்துக்கட்டும் தந்திரமான திட்டமல்லவா காங்கிரஸ் மேற்கொண்டிருப்பது.

மு:- கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது என்பார்களே, அப்படி இருக்கிறது உங்கள் போக்கு...

ம:- அப்படியானால் முதலாளிகளை அடியோடு ஒழித்துவிடவேண்டும் என்கிறீர்களா? சரி, செய்வோம். அதற்குக் காங்கிரசு வெற்றி பெற்றால்தானே...

மு:- முதலாளியை ஒழிக்க, காங்கிரஸ் வேட்பாளராக ஒரு முதலாளியையே நிறுத்துவதா...வெட்கக் கேடு...

ம:- என்ன செய்வது? காங்கிரசுக்கோ எதிர்ப்பு அதிகமாகிவிட்டிருக்கிறது. பணம் நிறையத் தேவை. பணம் செலவழிக்கக்கூடிய ஆசாமியாகப் பார்த்துப் போட்டால்தானே...

மு:- தன் பணத்தால்தான் காங்கிரஸ் வெற்றிபெற்றது என்ற நினைப்பில், அந்த முதலாளி மேலும் இறுமாப்புடன் நடந்துகொள்வாரே!

ம:- எப்படி முடியும்! எத்தனை பணம் இருந்தாலும், நம் போன்றவர்களின் உதவியில்லாமல் வெற்றி கிடைக்காது என்பது தெரியாதா அவருக்கு?

மு:- அவருக்கு நம்முடைய கொள்கையில் நம்பிக்கை இல்லை; நமக்கு அவருடைய குணத்தில் வெறுப்பே இருக்கிறது. ஆனாலும் தேர்தலுக்காக ஒரு உறவு வைத்துக்கொள்கிறோம், முறையா! கூடா நட்புக் கேடாய் முடியும் என்பார்களே ...

ம:- தேர்தலுக்காக இவரைப் பிடித்து இழுத்துப் போட்டு வைத்திருக்கிறோம், அவ்வளவுதானே. திட்டம் போடுவது, கொள்கை தீட்டுவது இவரா!!

மு:- கொள்கை, திட்டம் இவைகளைத் தீட்டும் நிலையில் உள்ள தலைவர்கள் மட்டும் என்ன இலட்சணத்தில் இருக்கிறார்கள்! ஒரே குளறுபடி! மொரார்ஜி வலது சாரி, மேனன் இடதுசாரி, மாளவியா தீவிரவாதி என்று இப்படித் திக்குக்கு ஒருவராக இருக்கிறார்கள். ஒருமித்த கருத்து இல்லையே...



ம:- எந்தக் கருத்துக்குப் பெரிய ஆதரவு கிடைக்கும் தெரியுமோ, நம்மைப் போன்ற முற்போக்காளரின் கருத்துக்குத்தான்...!

மு:- முற்போக்காளர் முகாமில்தானா தாங்களும்......! முற்போக்கு, இனி ஒரு முழக் கயிறு தேடிக் கொள்ள வேண்டியதுதான்! துணிந்து சொல்கிறீரே, உம்மை முற்போக்காளர் என்று...ஒரு தேர்திருவிழா பாக்கி கிடையாது, ஆலமரத்தடி கிளிஜோதிடனிலே இருந்து நாடி ஜோதிடர் வரை தேடி அலைகிறீர், முற்போக்காளர் என்று வேறு சொல்லிக் கொள்கிறீர்.

ம:- அதிலே எல்லாம் எனக்கு நம்பிக்கை இருப்பதாக எண்ணிக்கொள்கிறீர்! அப்படித்தானே! அதுதான் தவறு...!

மு:- நம்பிக்கை இல்லாமலா, ஆடி அடங்கிய சாமியாருக்கு அன்னாபிஷேகம் செய்து அவர் காலைக் கழுவி அந்தத் தண்ணீரைப் பருகினீர்—போன வாரம்...?

ம:- பைத்யம்! பைத்யம்! ஆடி அடங்கிய சாமியாருடைய அற்புதத்திலே நம்பிக்கையா எனக்கு! நான் என்ன மடையனா, அப்படிப்பட்ட மூடநம்பிக்கை கொள்ள. ஆடி அடங்கிய சாமியாரிடம் சொக்கிக் கிடக்கும் மக்கள் ஊரிலே நிறையப் பேர், தெரியுமா! சாமியார் ஒருவார்த்தை சொன்னால் போதும், அந்தப் பக்தர்கள் ஓட்டு அவ்வளவும் நமக்குத்தான். அதற்காக, அவருடைய பக்தனாக ஒரு நாள் இருந்தேன். என்னுடைய உண்மையான நோக்கத்தைத் தெரிந்துகொள்ளாமல், பேசுகிறீர்...

மு:- அப்படியானால், பேய், பூதம், பிசாசு, மோட்சம், நரகம், முன்வினை, மறுஜென்மம், சடங்கு சம்பிரதாயம், மாயமந்திரம், புராணம், இதிகாசம் இவைகளைப் பற்றிய நம்பிக்கை உமக்குக் கிடையாது என்று சொல்லும்......

ம:- சொல்ல வேறு வேண்டுமா—ஐயா! என் தலைமையிலேதான் பெரியார் கூட்டம் நடந்தது. அன்றைக்கு விளாசினார் பாருங்க இராமாயணத்தைப் பற்றி, அடே அப்பா! அவ்வளவு பிரமாதம்.

மு:- அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தது எனக்குத் தெரியாது. ஆனால், ஆரண்யபுரம் என்ற ஊரில் கோதண்டராமசுவாமி கோயிலில், பட்டாபிஷேகத் திருவிழாவிலே முக்கிய பங்கு உங்களுடையது என்று பேப்பர்லே பார்த்தேன்.

ம:- ஆமாம்! போட்டோ கூடப் போட்டிருந்தாங்களே. ஆனால், உம்மிடம் சொல்லிவைக்கிறேன், ஏன் போனேன் அந்தப் பட்டாபிஷேகத்துக்கு? ஆரண்ய புரம் வட்டத்திலே மட்டும் ஆறு ஆயிரம் ஓட்டு! புரியுதா! அங்கே என்னைப் பட்டாபிஷேக வைபவத் திலே கண்டதிலே எவ்வளவோ மகிழ்ச்சி, நம்பிக்கை, அந்த ஊராருக்கு...

மு:- அவர்களை ஏமாற்றினீர் என்றுதானே பொருள்?

ம:- அவ்வளவு பச்சையாகச் சொல்லலாமா...இது ஜன நாயகக் காலமாச்சே...

மு:- நான் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுவதற்குச் சம்மதித் தாலும் இராமாயண பாரதத்தை நம்பும் பைத்யக் காரத்தனத்தைக் கண்டிக்காமல் இருக்க மாட்டேன்...

ம:- உங்களைக் கட்டுப்படுத்த யாருக்கும் உரிமை கிடை யாது. அந்தப் பயமே வேண்டாம்...காங்கிரசுக்குள் ளேயே மூடநம்பிக்கை ஒழிப்புமுனை என்று ஒரு அமைப்பு வைத்துக் கொள்ளுங்கள்...யார் தடுக்க முடியும்...

மு:- அப்படியா...பகுத்தறிவுப் பாசறையும் ஏற்படுத்திக் கொள்ளலாமா...

ம:- தாராளமாக! இப்போது சமதர்மமுனை என்று ஒன்று வேலை செய்கிறதே,காங்கிரசிலே தெரியாதா...

மு:- என்ன நோக்கத்துடன்...?

ம:- காங்கிரஸ் சமதர்ம திட்டத்தைச் சரிவர, மும்முர மாக நடத்தவேண்டும் என்று வற்புறுத்த. சமீபத் திலே மகாநாடுகூட நடத்தது...

மு:- யாரார் போயிருந்தார்கள் அந்த மகாநாட்டுக்கு...

ம:- ஏன்! நம்ம காமராஜரே போயிருந்தார்...



மு:- சரி! என் ஓட்டு காங்கிரசுக்குப் போடுவதாலே, என் சமதர்மக்கொள்கை, பகுத்தறிவுக்கொள்கை எதுவும் பறிமுதல் ஆகிவிடாது என்று சொல்வதாலே, காங் கிரசுக்கு வேலை செய்கிறேன். ஒரு சின்ன உதவி...

ம:- சொல்லுங்க செய்துவிடலாம்...

மு:- நான் எழுதியுள்ள கடவுள் ஒழிக! என்ற புத்தக வெளியீட்டு விழாவுக்குக் காமராஜரைத் தலைமை வகிக்க அழைத்துவர வேண்டும்...

ம:- அடுத்தவாரமே நடத்திவிடலாம்...

மு:- அடுத்த வாரமா...அச்சகத்தான் பழயபாக்கிக்காக நச்சரித்தபடி இருக்கிறான்; வேலையிலே சுணக்கம்... இரண்டு வாரம் ஆகும்...

ம:- அடுத்தவாரம் விழா! எப்படி என்ன என்று என்னை ஒன்றும் கேட்கவேண்டாம். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். காமராஜர் தலைவர்; அந்தக் கூட்டத் திலேயே, காங்கிரசை ஆதரித்து நீங்களும் ஒரு நாலு வார்த்தை பேசிவிட வேண்டும்; செலவு பற்றி உமக்கு ஒரு கவலையும் வேண்டாம்...

★

மண்டி மாரியப்பன்:- மண்டலமா! வாங்க, வாங்க' இப்பத்தான் வழி தெரிஞ்சுதா, கண்திறந்துதா...அய் யோவ்! உன்னைப்போல ஆசாமிகளை நம்பினா, படு நாசம்தான்யா, யாருக்கும்...

மண்டலம்:- மளமளன்னு சொல்லவேண்டியது அவ்வள வையும் கொட்டிவிடுங்க சீக்கிரமா...

ம. மா:- ஆமாய்யா! கேலிதான் பேசுவே. தலைவரில் லையா...தெரியப்போகுதே பத்து நாளிலே. தீட்டிக் கிட்டுத்தான் இருக்கிறாங்க எல்லோரும்...

ம:- ஒழித்துக்கட்டத்தானே ... செய்யட்டும் ... நீங்களும் சேர்ந்து கொள்ளுங்க...தோற்கட்டும் காங்கிரசு, எனக்கு என்ன நஷ்டம்! ஆகிறபடி ஆகுது...

ம. மா:- என்ன மண்டலம்! முற்றுந் துறந்ததுபோலப் பேசி மிரட்டிப் பார்க்கறே.

ம:- பின்னெ, நீங்க எதுக்காக எறிஞ்சி விழறிங்க...

ம. மா:- நடையா நடந்தேன் உன் வீட்டுக்கு அந்த அதிகாரி கணக்குப் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு போயிட்டான்...மிரட்டிக்கிட்டு இருக்கிறான்... மானம் போகுதுன்னு...மகாநாடுன்னா பணம், மந்திரிவர்றாருன்னா பணம், மண்டலத்தேர்தல் என்றா பணம், மகாத்மா ஜெயந்தின்னா பணம்; யுத்தநிதி, கடன் பத்திரம், கூட்டத்துக்குப் பணம், இவ்வளவுக்கும் நானு! என்னை ஒரு அதிகாரி கேவலப்படுத்தறது, அதைக் கேட்க ஆள்கிடையாது. இது நியாயமா...இந்த விதமாக நீங்க நடந்து கொண்டா, எங்க உதவி எப்படிக்கிடைக்கும்... சொல்லு நீயே...

ம:- அந்த அதிகாரி விஷயமா, சொல்லவேண்டிய இடத்திலே சொல்லவேண்டியதை, சொல்லவேண்டிய நேரம் பார்த்து சொல்லி இருக்கறேன்...நான் என்ன, நன்றிகெட்டவனா! காங்கிரசுக்கு நீங்க செய்கிற உதவியை மறந்துவிடுவேனா...

ம. மா:- அதிகாரி விஷயமா நீ சொன்னது என்னத்துக்குப் பயன்பட்டுது. கல்லுப்பிள்ளையார்போல இங்கேதானே இருக்கிறான் அந்த இரும்புத்தலையன். அவனை வேறு இடம் மாற்ற முடியல்லையே...

ம:- முடியல்லே. ஒத்துக்கொள்கிறேன். ஆனால், ஏன் முடியவில்லை என்கிற காரணம் தெரியுமா உங்களுக்கு...

ம. மா:- உன்னோட பேச்சுக்கு மேலிடத்திலே அவ்வளவுதான் மதிப்புப் போலிருக்குது...

ம:- எனக்கு உள்ள மதிப்பு எந்தவிதத்திலேயும் கெட்டுப் போகவில்லை. உங்களோட பேரைச் சொன்னதும் மேல் இடத்திலே, மேலே கீழே பார்க்கறாங்க. காங்கிரசுக்கு நீங்க விரோதியாகி விட்டதாக யாரோ கதை கட்டிவிட்டிருக்காங்க...ஏதோ சங்கக் கூட்டத்திலே பேசிவிட்டிங்களாமே, காங்கிரசுக்கு இந்தத் தடவை வெற்றி கிடைக்காது என்று...

ம.மா:- ஆமாம்!கோபம் அவ்வளவு எனக்கு. எங்களோட உதவியைப் பெற்றுக்கொண்டு எங்களையே கேவலமா நடத்தினா காங்கிரசு எப்படி ஜெயிக்கும்னு கேட்டேன்...



ம:- அது காதிலே விழுந்ததும் மேல் இடத்திலே உள்ளவங்களுக்கு அதிகமான கோபம். இந்த விஷயம் தெரியாமல் நான், அந்த அதிகாரி விஷயமாச் சொன்னேன். மேல் இடம் வேணும் அந்த ஆசாமிக்கு! கணக்குப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்தால் போதாது, வழக்கே போட்டாகணும்...அப்பத்தான் ஆசாமியோட துடுக்குத்தனம் போகும்னு கூச்சலிட்டு, என்னை விரட்டிவிட்டுது...

ம. மா:- வழக்கே போடணுமாமா...என்ன அநியாயம் இது...வாரி வாரிக் கொடுத்தவனாச்சே...

ம:- வருத்தப்படவேண்டாம், கோபத்தாலே அவ்விதமாப் பேசிவிட்டாங்க...நான் ஒரு சபதம் சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கறேன்......நீங்க யார் பேச்சையோ கேட்டு வீணான பழி சுமத்தறிங்க. மாரியப்பப் பிள்ளையோட தேசபக்தி உங்களுக்குத் தெரியாது. அவருடைய உதவியாலேதான் இந்தத் தடவை காங்கிரசு ஜெயிக்கப் போகுது...அவருக்கு அவ்வளவு செல்வாக்கு...

ம. மா:- அது மேல் இடத்துக்கும் தெரியுமே. நம்மிடம் கொடுக்கல் வாங்கல் தொடர்பு வைத்துக்கொண்டுள்ள கிராமம் 50க்கு மேலே இருக்குமே தவிரக் குறையாதே...

ம:- சொன்னேன் விவரமா... மாந்தோப்புக் குத்தகை எடுத்து இருக்கிற விஷயம், மாரியம்மன் கோயிலுக்கு அபிஷேகம் செய்திருக்கிற விஷயம், உங்க மச்சினனுக்கு உள்ள செல்வாக்கு, எல்லாம் சொல்லி, இந்தத்தடவை முழுமூச்சாக அவர் ஈடுபட்டு, காங்கிரசுக்கு வெற்றி தேடிக்கொடுக்கப் போகிறார்......அப்புறமாவது அவருடைய செல்வாக்கையும் தேச பக்தியையும் உள்ளது உள்ளபடி புரிந்து கொள்ளுங்க என்று சொன்னேன்...

ம. மா:- சொன்னயா! அதுதான் சரி...

ம:- அதிகாரியை மாற்றித்தான் ஆகணுமான்னு, கடைசியிலே கேட்டாங்க, மேலிடத்திலே...நான் சொன்னேன், இப்ப வேண்டாம், தேர்தல் முடியட்டும், மாரியப்பப் பிள்ளையோட செல்வாக்கு எப்படிப் பட்டது என்பதைப் புரிந்துகொண்டு, பிறகு

அதிகாரியை மாத்துங்க என்று சொல்லி விட்டு வந்தேன். உங்களை மலைபோல நம்பி இந்தச் சபதம் செய்துவிட்டேன். அதிகாரியை மாற்றிவிடலாம் அரை நொடியிலே......உங்களோட செல்வாக்கு எப்படிப்பட்டது என்பது மேலிடத்துக்குத் தெரிந்ததும்...

ம. மா:- பகவானோட கடாட்சத்திலே என் செல்வாக்கு எந்த விதத்திலேயும் பழுதாகிப் போகவில்லை. காங்கிரசுக்கு வெற்றிதேடிக் கொடுக்கவில்லையானா என்பேர் மண்டி மாரியப்பனில்லே...பார்த்து விடுவோம்...என்ன செலவாகிவிடப்போகுது...ஒரு நூறு மூட்டை கெட்டுப்போச்சுன்னு எண்ணிக் கொண்டாப் போகுது...

ம:- என்னத்துக்குங்க கெட்ட பேச்சு! ஒரு சிலோன் பர்மிட் கிடைச்சா கிடைக்கக்கூடியதிலே நூறிலே ஒரு பாகம் ஆகுமா. நீங்க செலவு செய்யப்போகிற தொகை...

ம. மா:- சிலோன் பர்மிட்டா? மண்டலம்! அதுமட்டும் எனக்குக் கிடைக்கும் என்கிற உறுதி இருந்தா, எதிரியை ஓடஓட விரட்டி அடிக்கறேன்...பணம் பத்து ஆயிரம் ஆகும் என்றாலும் கவலை இல்லை...

ம:- சிலோன் பர்மிட்டு, காங்கிரசு வெற்றிபெற்ற பத்தாம் நாள் உங்க வீடுதேடி வரும்.

★

மண்டலம்:- குமரப்பனா! ஏம்பா!' என்னோட ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே... பத்தாயிரம் கடன் வேண்டும்னு மனு போட்டிருக்கிறயாமே...

குமரப்பன்:- ஆமாம் புதிய தொழில் ஒன்று ஆரம்பித்து விட்டுத் தொல்லைப்பட்டுக்கிட்டு இருக்கறேன்...... கடன் தேவைப்பட்டுது.

ம:- என்னிடம் சொல்லப்படாதான்னுதான் கேட்கறேன். நீ சொல்லவில்லை என்றாலும் எனக்குத் தெரியாமலா போய்விடும்...



கு:- அதெப்படித் தெரியாமல் போய்விடும்......அதான் ஒருத்தன் இருக்கிறானே எனக்கு மாமனாருன்னு பேர் வைத்துக்கொண்டு, அவன் சொல்லி இருப்பான்...

ம:- சேச்சே! அவரு ஒரு பேச்சும் சொல்லவில்லை பாங்க் தலைவர் இல்லே பார்த்தசாரதி, அவர் தான் சொன்னார். உன்னைப்பற்றி விசாரித்தார், ஆசாமி எப்படி? குணம் எப்படி? நிலவரம் எப்படி? என்றெல்லாம்...

கு:- எல்லா விவரமும் தெரிவித்திருக்கிறேனே...

ம:- சொன்னாரு...ஆனா அதெல்லாம் உண்மை தானான்னு கேட்டாரு. என் பேச்சிலே அவருக்கு ஒரு நம்பிக்கை......போன வருஷம் நம்ம நாராயணன் நாலாயிரம் ரூபா கடன் கேட்டிருந்தான்...... அவனோட சொத்து மதிப்பு போதாதுன்னு யாரோ புகார் செய்துவிட்டாங்க. என்னைத்தான் கேட்டாரு. நான் சொன்னேன், நாராயணன் நாணயஸ்தன், அவனை நம்பி, நாலு என்ன எட்டு ஆயிரம்கூடக் கொடுக்கலாம் என்று, கொடுத்தாரு.

கு:- நம்ம விஷயமாகவும் சொல்லி ஏற்பாடு செய்யப்பா...

ம:- எனக்கு இல்லையா அதிலே அக்கறை...ஆனா எனக்கு இப்ப வேலை நெருக்கடி...தெரியுமே உங்களுக்கும். தேர்தல் வேலை. அந்த வேலையாத்தான் பாங்க் தலைவரிடம் போயிருந்தேன். அவர் ஒரு பட்டியல் கொடுத்தார் இன்னின்னாரைப் பார்த்தா நல்லது என்று...நம்ம பாங்க் தலைவருக்குக் காங்கிரசு என்றாலே, உயிர்...அவ்வளவு தேசபக்தி...கதர் போட்டவங்களை கண்ட போதும், உபசாரம் செய்வார்...காங்கிரசுடைய வெற்றியிலே அவ்வளவு அக்கறை...பாங்க் வேலையைக்கூட ஒரு பத்து நாளைக்குக் கவனிக்கப்போறதில்லைன்னு சொல்லி விட்டாரு...

கு:- அப்படியானா, நம்மகடன் இப்பக்கிடைக்காதுன்னு சொல்லுங்க...

ம:- அவசரம் அதிகமாக இருந்தா ஒண்ணு செய்யுங்க ...ஒரு நாலுநாளைக்கு நாலு இடம் சுற்றிக் காங்கிர

சுக்கு ஓட்டு கேளுங்க...சேதி அவர்காதிலே விழுந்தாப் போதும், உடனே கடன் உங்க வீடுதேடி வந்து சேரும்...

கு:- உன்னோடு கூடவேவந்து வேலைசெய்கிறேன் மண் டலம்! எனக்கு சோடப்பட்டி, சொர்ணாபுரம், ஆளிப்பட்டி, அம்மானூர் இங்கே எல்லாம் சொந்தக் காரர்கள் நிறைய...

ம:- கேள்விதான் எனக்கும். ஆனா அங்கே உங்க பங் காளி ஒருத்தர் இருக்கிறாராம், அவர் எதிர்த்து வேலை செய்கிறாராம்...

கு:- என் பங்காளியா! விட்டுத்தள்ளு மண்டலம்! அவ னுக்குச் செல்வாக்கா, எனக்குச் செல்வாக்கா என்பதை ஒருகை பார்த்துவிட்டாப்போகுது...

ம:- உன்பங்காளி முரட்டுப்பிடிவாதம்போல இருக்குது. கைக்காசைச் செலவழித்துக்கொண்டு வேலை பார்க்க றானாமே...

கு:- பணம் என்ன அவன்கிட்டத்தான் இருக்குதாமா! மற்றவங்களெல்லாம் என்ன பக்கிரியாமா! பார்த்து விடுவமே அதையுந்தான். அந்த நாலு ஊரைப்பற்றின கவலையைவிடு, நான் பார்த்துக் கொள்கிறேன்... கடன்மட்டும்...

ம:- தேர்தலிலே நம்ம பக்கம் வெற்றி என்கிற செய்தி வந்த எட்டாம் நாள், கடன்தொகை வீடுதேடி வரா விட்டா, என்னை மண்டலம்னு கூப்பிடவேண்டாம், கமண்டலம்னு கூப்பிடு. வேலையைக் கவனி... புறப்படு...

★

மண்டலம்:- நமஸ்காரம்! நமஸ்காரம்! சௌக்கியந் தானுங்களே...பட்டாபிஷேக உற்சவத்திலே பார்த்தது...

தர்மகர்த்தா தாமோதரம்:- ஓ! மண்டலமா! பகவா னோட கடாட்சத்திலே சௌக்கியந்தாம்பா... பத்துநாளா இலேசா பல்வலி,



ம:- பல்லை எடுத்துவிடலாமே...புது டாக்டர் வந்திருக் காரு பாருங்க, ரொம்பக் கெட்டிக்காரரு...

த. தா: உனக்குத் தெரிந்தவர்தானா...

ம:- அதென்ன அப்படிக் கேட்டுவிட்டிங்க. நம்ம ஊருக்கு ஒருநல்ல டாக்டர் வேண்டுமென்று நானே நேரிலேபோய் மந்திரியைப் பார்த்து, இவரை இங்கே அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேனே.

த. தா:- அப்படியா...ரொம்ப நல்லதாப்போச்சி...

ம:- தேர்தல்வேலை மும்முரம், தெரியுமே உங்களுக்கு...

த. தா:- ஆமாமாம்! ஆனா விலை ஏறிவிட்டுது என்கிற கோபம், வருத்தம் ஜனங்களுக்கு. காங்கிரசுமீது வெறுப்பு இருக்குது. உனக்கா தெரியாது...

ம:- கஷ்டப்படுகிற ஜனங்க அப்படித்தான், விவரம் தெரியாததாலே வெறுப்புக் காட்டுவாங்க...உங் களைப்போன்ற பெரியவங்கதான் நல்லபடி சொல்லி ஜனங்களைத் திருத்தவேணும்...

த. தா:- இந்த ஜனங்களை இந்தக் காலத்திலே திருத்தப் போனா, நீ முதலிலே திருந்திக்கொள்ளு என்று பேசுதுங்க...

ம:- ஆமாமாம்! இந்தக்காலத்து ஜனங்களோட போக்கைத் தான் பாகவதப் பிரசங்கி பன்னீர்தாஸ் பட்டாபிஷேகத் திருவிழாவின்போது நடத்தினாரே பக்த ராமதாஸ் காலட்சேபம், அதிலே புட்டுப் புட்டுக் காட்டினாரே...

த. தா:- கேட்டயேல்லோ......ராமா! ராமான்னு ராம தாசர் பஜித்ததும் ராமன் நேரிலேயே வந்தாராம்... அந்தக் காலத்திலே...

ம: நம்ம காங்கிரஸ் ராஜ்யம்கூட, ராமராஜ்ஜியம்தானே ...காந்தியே வைத்த பெயராச்சே...

த. தா:- அது சரி மண்டலம்! யாரோ சொன்னாங்க என்னிடம்...நீ என்னமோ ராமசாமிப் பெரியார் கூட்டத்திலே தலைமை வகித்தயாம்......அவரு ராமனையும் சீதையையும் கண்டபடி திட்டினாராம்

...ஏம்பா! நீ கலந்து கொள்ளலாமா அந்தக் கூட்டத்திலே...

ம:- நான் காரணம் இல்லாமலா கலந்துகொண்டேன். வேறே யாராவது தலைமை வகித்திருந்தா, பெரியார் பேச்சை மறுக்க முடியாமல் திக்கித் திணறிப் போயிருப்பாங்க. நான் விட்டேனா! இவ்வளவு பேசற இவருடைய பேரே ராமசாமிதான்! என்று சொன்னேன். ஜனங்க ஒரே ஆரவாரம் செய்தாங்க அந்த ஒரு பேச்சிலே அவருடைய மூன்று மணிநேரப் பேச்சும், போச்சி...

த. தா:- பலே! பலே! சரியான பேச்சுத்தான் பேசியிருக்கறே...

ம:- அது மட்டுமா! மற்றொரு விஷயம் சொன்னேன், ஜனங்க அப்படியே அசந்து போய்விட்டாங்க. கடவுள் அவதாரமான ராமச்சந்திரமூர்த்தி, மகாலட்சுமியான சீதாபிராட்டி, இவர்களைப் பற்றியெல்லாம் கண்டித்துப் பேசுகிற பெரியாரே, நம்ம காங்கிரசு கட்சியைப் பற்றிக் கண்டிக்க முடியவில்லை; பாராட்டிப் பேசறாரு; ஆதரிக்கச் சொல்கிறார். எதையும் கண்டிக்கிற பெரியாரே காங்கிரசை ஆதரிக்கிறபோது, நாடே திரண்டு வந்து காங்கிரசுக்கு ஓட்டுப் போடும் என்பதிலே என்ன சந்தேகம் என்று கேட்டேன். பத்து நிமிஷமாச்சி, கரகோஷம் அடங்க...

த. தா.: ரொம்பச் சந்தோஷம்...வரட்டுமாப்பா...

ம. : ஒரு சின்னக்காரியம் செய்யணும்...நம்ம கோயில் நிலம் இருக்குது பாருங்க...

த. தா.: கொட்டாவூர், கோனூர், பருதூர் மூன்று இடத்திலே இருக்குது, நிலம்...

ம. ; சிரமத்தைப் பார்க்காமெ ஒரு நடை நீங்க போய் வந்தா நல்லது...

த. தா. : ஓட்டுக்குத்தானே...சொல்லி அனுப்பிவிட்டால் போகுது.

ம. : நேரிலேயே போய்வந்தா நல்லது...ஏன்னா! மேல் இடத்திலே, உங்களை ஏரியா கமிட்டிக்குப் போட



வேண்டும் என்ற எண்ணம் இருக்குது. அந்த இடத்துக்குப் பல்விளக்கிக் கொண்டிருக்கிற ஒரு ஆசாமி. உங்களைப் பற்றித் தப்புந் தவறுமா சொல்லி வைத்திருக்கிறான்...

த. தா. : தப்புந் தவறுமாப் பேச என்ன இருக்குது; என்னைப் பற்றி...

ம : ஒண்ணுமில்லிங்க...அவருக்குத் தள்ளாத வயது... ஓடி ஆடி வேலை செய்ய முடியாது. எந்தக் காரியத்தையும் தானே நேரிலே போய்ப் பார்க்க முடிகிறதில்லே என்று கோள்மூட்டி விட்டிருக்கிறாங்க...சில பேர். அதனாலேதான். இந்தத் தேர்தல் வேலையாக நீங்களே அந்த ஊர்களுக்கு நேரிலேயே போய்வந்தா நல்லதுன்னு நினைக்கிறேன்...

த. தா. : அப்படியா விஷயம்... தள்ளாத வயதாமா எனக்கு... எல்லாம் தள்ற வயதுதான்... நடமாட முடியாதாமா... நாளைக்கே கிளம்பிப் போறேன் அந்த மூணு ஊருக்கும், அப்பத் தெரிந்து கொள்ளட்டும், தள்ளாதவனோட வேலைத் திறமையை. பல்வலி இருந்தா என்ன...கொஞ்சம் காசிகட்டித் தூளை அப்பிக் கொண்டாபோகுது வலி தன்னாலே... ...நாளைக்குக் கிளம்பறேன்...அந்த ஏரியா கமிட்டி விஷயம்?

ம : அது உங்க காலடியிலே கிடக்குதுங்க. அதை நான் பார்த்துக்கொள்கிறேன்.

★

தம்பி! இத்தனைவிதமான முயற்சிகளிலும், ஆளுங் கட்சியால் ஈடுபட முடிகிறது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் அளவுக்கு, நாம் போட்ட கணக்கினை பொய்யாக்கி விடுகிறது.

மக்களின் இதயம் நமது பக்கம் இருக்கிறது என்பதிலே ஐயமில்லை. ஆனால், மக்கள் தமது இதயம் இடும் கட்டளைப்படி நடந்து கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தி, அவர்களை இக்கட்டிலே சிக்க வைத்துவிடும் காரியம் நடந்துவிடுகிறது.

இவைகளையும் எதிர்பார்த்து, இவைகளையும் மீறி, நமக்கு ஆதரவு கிடைத்திடத் தக்க வழி கண்டறிந்து,பாடு பட வேண்டும்.

இத்தனை கொடுமைகளைச் செய்த காங்கிரசுக் கட்சியை எதிர்த்துத் தோற்கடிக்க இவ்வளவு பாடுபட வேண்டுமா, என்று எண்ணிக்கொள்ளக்கூடாது.


கொடுமை, உறுமிக்கொண்டு கிளம்பும் சிறுத்தை வடிவிலே மட்டும் இல்லை; பசும்புற்றரையிலே ஒளிந்து கொண்டு நெளியும் பாம்பின் உருவிலேயும் இருந்திடுவது காண்கிறோமே!

ஆகவே, காங்கிரசாட்சியின் கொடுமைகளை மேடைகளில் எடுத்துக் கூறிவிட்டால் போதும், மக்கள் தெளிவு பெற்று, காங்கிரசாட்சியை வீழ்த்துவதற்கான துணிவு பெற்று, நமக்குத் துணை நிற்பர் என்று எண்ணிவிட்டால் போதாது. கிராமங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டாக வேண்டும், தோழமை வளர்ந்தாக வேண்டும்.

ஆசைக்கு மயங்கிவிடுவது, அச்சத்துக்கு இடமளித்து விடுவது, இச்சகம் பேசுவோரின் நச்சு வலையில் வீழ்ந்து விடுவது ஆகியவற்றினை நீக்கியாக வேண்டும்.

இதற்கு ஏற்ற முறையில் உன் எதிர்காலப் பணி அமைந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவே இதனை எழுதினேன்.

அண்ணன்,



2-5-'65

காஞ்சிக் கடிதம் : 17

# இதயம் வென்றிட...3

**தருமபுரித் தோல்வி நம்பிக்கை கொண்டோர்க்கு நம்ப முடியாச் சேதி**

**மக்களின் பரிவு கழகத்திடம்**

**ஆபிரகாம் லிங்கனுடைய தோல்வி-வெற்றிப் பட்டியல்**

**அமைச்சர்கள் தருமபுரி தலைநகர் என்றதால், கழகத்துக்குக் கிடைத்த வாக்குக் குறைவு.**

தம்பி,

மல்லிகைக் கொடியின் முனை ஒடிந்திருக்கக் காணும் போது எவருக்கும் அடடா! ஒடிந்து விட்டதே! கொடியே இதனாலே கெட்டுப்போய்விடுமோ, காய்ந்து போய் விடுமோ, இனி இந்தக் கொடியிலே அழகிய மலர்கள் பூத்திடாதோ! மணம் பரப்பிடாதோ! என்றெல்லாம் கூறிடத்தோன்றும், கவலை உண்டாகும்.

எருக்கஞ் செடி எருமையின் காலிலே சிக்கிக் கூழாகிப் போயினும், யார் அதைக்கண்டு கவலைகொள்வார்கள்!!

ஊருக்கே எழிலளித்து வரும் மணிமாடத்தின் சுவரிலே ஒரு சிறு வெடிப்பு ஏற்பட்டால் காண்பவரெல்லாம் கவலை கொள்வார்கள்; இந்த வெடிப்பினாலே கட்டடத்துக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று அச்சம் கொள்வதால்; கலனாகிப்போய் கவனிப்பாரற்றுக் கிடக்கும்

பாழுங்கிணற்றிலே மேலும் சிறிது கலன் காணப்பட்டால் கவலைகொள்வார் உண்டோ?

பட்டுச் சட்டையிலே ஒரு பொட்டு மசி வீழ்ந்தாலும், எல்லோர் கண்களிலும் படுகிறது, என்ன இது! என்ன இது! என்று கேட்கிறார்கள்; குடுகுடுப்பாண்டியின் உடையிலே காணப்படும் கறைபற்றிக் கவலைப்படுவார் உண்டோ?

வீரனுடைய கரத்திலே வீழ்ந்துவிட்ட 'வெட்டு' எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும்; உடற்கட்டைப் பார், இரும்புபோல! என்று கூறினாலும், வீணனுடைய உடலமைப்பிலே எவரும் கவனம் செலுத்தமாட்டார்கள்.

திருக்குறள் ஏட்டின் பேரிலே மைக்கூடு கை தவறிக் கவிழ்ந்துவிட்டால், பதறிப்போவோம்; பழைய பஞ்சாங்கத்திலே கறையான் குடியேறினால்கூட கவலை கொண்டிடத் தோன்றுமா?

நாம் நல்லது என்று எண்ணி மதிப்பளித்திடும் எந்தப் பொருளுக்கேனும், ஏதோ காரணத்தால் ஏதாகிலும் ஒரு சிறு கெடுதல் ஏற்பட்டுவிட்டாலும், பதறிப்போகிறோம். அது அந்தப் பொருளிடம் நமக்கு இருக்கும் பற்று எந்த அளவு இருக்கிறது என்பதற்குச் சான்று!

தம்பி! மகிழ மரத்தடியிலே உதிர்ந்து கிடக்கும் பூக்களை, ஒவ்வொன்றாகப் பக்குவமாகப் பொறுக்கி எடுத்து மகிழ்ந்திடுவர் சிற்றிடையார்!! தேங்காய் ஓட்டுத் துண்டுகளை அல்ல!!

கழுத்தளவு தண்ணீரில் இறங்கிப் பறிக்கிறான் ஓர் காளை, அழகோவியமாகத் திகழ்ந்திடும் செந்தாமரையை —அவன் காலைச் சுற்றிக்கொள்ளும் பாசியைத் தூக்கி வீசிவிடுகிறான் மற்றோர் பக்கம்.

தத்தமது கருத்துக்கு எவை எவை விரும்பத்தக்கன, மகிழ்ச்சி தரத்தக்கன என்று தோன்றுகின்றனவோ, அந்தப் பொருளினைப் பெற அவர்கள் முனைவதும், அந்த முயற்சியிலே வெற்றி கிடைத்திடும்போது மகிழ்ச்சி கொள்வதும் இயற்கை.

பொழுது சாயும் நேரம், உச்சிப்போது முதல் தேடித் தேடிக் கண்டிட முடியாது கவலை மிகுந்திருந்தவனுக்கு,



அவன் தேடிவந்த மூலிகை, ஒருசிறு குன்றின்மீது இருப்பதாகச் 'சேதி' கிடைக்கிறது; கிடைத்ததும், இன்றைக்கு இதுபோதும், நாளைய தினம் பார்த்துக் கொள்ளலாம் என்றா இருந்துவிடுவான்? ஒருக்காலும் இல்லை; அலுப்பினை மறந்திடுவான்; அகமகிழ்ச்சியுடன், குன்று நோக்கி நடந்திடுவான்.

தாம் விரும்பும் பொருளைப் பெற்றிடும் முயற்சியில் ஈடுபடுவோருக்கும், இன்னலையே கன்னலாக்கிக் கொள்ளும் இயல்பு ஏற்பட்டுவிடும்.

ஆனால், அத்தனை கஷ்டப்பட்டு அவன் கொண்டு வந்த மூலிகை, கடுங் காற்றொன்று வீசியதால், கரம் விட்டுக் கிளம்பி, காட்டிலே ஓர்புறத்திலே, கள்ளி காளான் மிகுந்த பகுதியிலே பறந்து சென்றுவிட்டால், அவன் எவ்வளவு பதறிப் போவான்!

வெறுங்கையுடன் வீடு திரும்புகிறான்; எடுத்த காரியந் தனை முடித்திடும் ஆற்றல் மிக்கவன் இவன் என்பதால், இல்லத்துள்ளோர், மூலிகை கொண்டு வருகிறான் என்று எண்ணிப் புன்னகை காட்டுகிறார்கள்; பெருமூச்செறிந்தபடி அவன், பட்டபாடு வீணாயிற்று! கரத்திலே சிக்கிற்று, கடுங்காற்று பறித்துக் கொண்டது! என்று கூறுகிறான்; கேட்போர் உள்ளம் என்னென்ன எண்ணும்!

தாம் விரும்பும் பொருள், மதித்திடும் பொருள், பெற்றிட வேண்டி, ஆற்றல் மிக்கவனை அதற்காக அனுப்பி வைத்திட, அவன் ஆயிரத்தெட்டு இன்னலைத் தாங்கிக்கொண்டு, பொருளைக் கண்டெடுத்து வருகிற வழியில், அவனையும் மீறியதோர் வலிவினால் பறிக்கப் பட்டுப் போய்விடின், பொருளைப் பெறத் துடித்துக் கொண்டிருப்பவர்களின் மனம் என்ன பாடுபடும்!!

பெற்றிட வேண்டியதாக ஒரு பொருள் இருந்து, அதைப் பெற்றளிக்கும் ஆற்றல் மிக்கவன் அதைப் பெற முனைந்து, பெற்றிடுவான் என்ற நம்பிக்கை பெரும் அளவுக்கு எழுந்திட்ட நிலையில், பெற்றிட இயலவில்லை என்றோ, பெற்றிட முனைந்தேன், வேறொருவன் அதனைத் தட்டிப் பறித்துக்கொண்டு சென்றான் என்றோ அப்பொருளைப் பெற்றளிக்கச் சென்றவன் வந்து கூறிடும் போது, பொருளைப் பெற்று மகிழ்ந்திட எண்ணி ஆவ

லுடன் காத்துக் கிடந்தவர்களின் உள்ளம், உலைக்கூடம் ஆகிவிடும்.

பொருளின் அருமை, அதனிடம் ஏற்பட்ட விருப்பம், பொருளைப் பெற்றிட முடியும் என்ற நம்பிக்கை, அவனைப் பெறச் சென்றவனின் ஆற்றலிலே வைத்துள்ள நம்பிக்கை, இவற்றின் தன்மையைப் பொறுத்திருக்கிறது, பொருள் பெறாததால் ஏற்படும் ஏமாற்றம், எரிச்சல், கவலை, வேதனை.

பஞ்சவர்ணக் கிளியைப் பக்குவமாகப் பிடித்திடச் சென்று, பாதிமரம் ஏறுகையில், அது பறந்து போய் விட்டது என்றொருவன் கூறும்போது, கேட்பவர்கள், அடடா! அப்படியா! என்று பேசுவர், பரிவுகாட்டி!

ஒரு மணி நேரமாகக் காத்திருத்தேன் கிடைக்க வில்லை என்றொருவன் கூற, எதற்குக் காத்திருந்தாய் ஒரு மணி நேரம் என்று மற்றவன் கேட்க, ஓணானுக்கு என்று முன்னவன் சொன்னால், மற்றவன், பேதையே! பேதையே! இதற்கா இத்தனைக் கவலை கொள்கிறாய்! ஒரு ஓணான் கிடைக்காததற்காகவா!! என்று கூறிக் கை கொட்டிச் சிரிப்பான்.

தர்மபுரியில், தம்பி! நாம் கட்டாயம் வெற்றி பெற்றுத் தருவோம் என்று, வெற்றி பெற்றாக வேண்டும் என்று மெத்தவும் விரும்பி, வெற்றி பெற்றளித்திடுவோம் என்று அழுத்தமாக நம்பிக்கொண்டிருந்தவர்கள் தமிழகத்திலே மிகப் பலர்-கழகத்துக்கு வெளியே கூட. தர்மபுரி வெற்றி இந்த நேரத்தில் மிகவும் விரும்பத்தக்கது என்பதிலேயும், அந்த வெற்றியைக் கழகம் பெற்றளிக்கும் ஆற்றல் உள்ளது என்பதிலேயும், அவர்கள் அவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்திருக்கிறார்கள்! அதனால்தான், தர்மபுரியில் கழகம் தோற்றுவிட்டது என்ற 'சேதி' வந்ததும், அவர்களால் நம்பமுடியவில்லை, கவலை அவர்களை அலைக்கழித்திருக்கிறது.

தர்மபுரியில் தோற்றுப் போனதால், எல்லோருக்கும் ஏற்படுவதுபோல எனக்கும் கவலையும் வேதனையும் ஏற்பட்டது என்றாலும், அந்தக் கவலையும் இடையில்,

மக்கள் கழக வெற்றியை எவ்வளவு எதிர்பார்த்து இருந்திருக்கிறார்கள்,



கழக வெற்றி நிச்சயம் என்று மக்கள் எத்துணை நம்பிக்கையுடன் இருந்திருக்கிறார்கள்,

வெற்றி பெற்றிடத்தக்க ஆற்றல் கொண்டது கழகம் என்ற எண்ணம் எவ்வளவு அழுத்தமாக இருந்திருக்கிறது,

என்பவைகளை அறிந்துகொள்ள முடிகிறது; கவலையையும் கலைத்துவிட்டு ஓர் இன்பப் புன்னகை எழுகிறது.

கழகமாவது, வெற்றி பெறுவதாவது!
கழகத்துக்கு ஏது அந்த வலிவு!

கழகம் வெற்றி பெற்றால் என்ன, தோற்றால் என்ன!

என்ற இந்த முறையிலே, பற்றற்று, மக்கள் இருந்துவிடவில்லை: உலகிலே கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. இப்போது கழகம் தர்மபுரியில் வெற்றி பெற்றதா இல்லையா என்பதிலா கவனம் செலுத்தவேண்டும்! என்று கூறி அலட்சியப் போக்கிலே இருந்துவிடவில்லை. கழகம் வெற்றி பெற வேண்டும், கழகம் வெற்றி பெறும், அந்தச் சேதி காதில் விழும், களிப்புக் கிடைத்திடும் என்று மக்கள் மிக்க ஆவலுடன் இருந்திருக்கிறார்கள். ஆகவேதான், கழகம் தர்மபுரியுல் தோற்றுவிட்டது என்றதும், அவர்கள் திடுக்கிட்டுப் போயினர், துயர் கப்பிக்கொண்டது.

ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு, கழகம் ஒரு தேர்தலிலே ஈடுபடும்போது, வெற்றி யாருக்கு என்பது பற்றி, மக்கள் இந்த அளவு அக்கறை காட்டினதில்லை.

வெற்றி பெற்றால்கூட, கழகமா? வெற்றியா? சரி, அதனால் என்ன? கழகம் வெற்றிபெற்றுவிட்டதால்! காய் கனியாகிவிடப்போகிறதா, காகம் கானம்பாடப் போகிறதா! ஏனப்பா, கடுகை மலையாக்கிக் காட்டுகிறாய்!! என்று பேசிடுபவரின் தொகைதான் மிகுதி.

இன்று நிலைமை அவ்விதம் இல்லை; கழகம் தேர்தலிலே ஈடுபடுகிறது என்றால், கட்டாயம் வெற்றிதானே! இதிலென்ன அய்யப்பாடு எழமுடியும்!! என்று மக்களில் பெரும் அளவினர் பேசிக்கொளக் கூடிய கட்டம் தோன்றி விட்டது.

கழகம், மக்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கிறது; கழகம் வெற்றிபெறத்தக்க ஆற்றலுடன் இருக்கிறது என்ற நம்பிக்கை மக்களிடம் மிகுந்திருக்கிறது; கழகம் வெற்றிபெறவில்லை என்றால், மக்களுக்குத் திகைப்பு ஏற்படுகிறது, எனும் இவை பொருள் மிக்கன. நாம், மக்களின் பார்வையிலே இருக்கிறோம், மக்களின் பரிவு நம்மிடம் உறவுகொண்டிருக்கிறது என்பது பொருள்.

ஆகவேதான் தம்பி! தர்மபுரியில் கழகம் தோற்றுவிட்டது என்ற உடன், மல்லிகைக் கொடியின் முனை ஒடிந்திருப்பதைக் காணும்போது, மணிமாடச் சுவரிலே வெடிப்பு ஏற்பட்டுள்ளதைப் பார்க்கும்போது, பட்டுச் சட்டையிலே ஒரு சொட்டு மசி விழுந்திருப்பது காணும்போது, வீரன் கரத்திலே ஒரு வெட்டு வீழ்ந்திருப்பது தெரியும்போது, திருக்குறள் ஏட்டிலே மசிக்கூடு கவிழ்ந்தது காணும்போது, எப்படிப் பதறுவார்களோ, கவலைகொள்வார்களோ. அப்படிக் கவலை கொள்கிறார்கள், கழகத்தின் தோல்வியைக்கேட்டு.

செல்லாத நாணயத்தைத் தந்திரமாக, நல்ல நாணயம் என்று கடைக்காரனை நம்பச்செய்து தந்துவிட்டு, பொருள் பெற்றுக்கொண்டுவந்து விடுபவன் அடையும் மகிழ்ச்சி காங்கிரஸ்காரர்களைப்பிடித்து உலுக்கியபடி இருக்கிறது, இப்போது!!

அதிலும், பலநாட்கள் பட்டினி கிடந்தவனுக்கு ஒரு நாள் விருந்து கிடைத்துவிட்டால், தின்னமுடியாத அளவுக்குத் தின்றுவிட்டுத் திணறுவார்களே, அந்த நிலைக்குச் சென்றுவிட்டார் முதல் அமைச்சர் பக்தவத்சலனார்!

பல நாட்களாக, கொளுத்தினார்கள் இடித்தார்கள், சுட்டார்கள் செத்தார்கள், ஓடினார்கள் துரத்தினார்கள், பிடித்தார்கள் அடைத்தார்கள், என்ற விதமான 'சுப சேதி'களையே கேட்டுக்கேட்டு, இடிந்துபோயிருந்தவரல்லவா, இப்போது வெற்றி என்றதும், தெருக்கூத்திலே காண்போமே, கலர்க்கண்ணாடித்துண்டுகள் பதித்த கிரீடமும், காக்காப் பொன்முலாம் பூசப்பட்ட கட்கமும், ஐந்தாறுவிதமான வர்ணத்துணிகளைச் சுற்றி விடப்பட்ட ஆடை அலங்காரமும், பிசின்போட்டு ஒட்டப்பட்ட மீசை



கிருதாவும்கொண்ட 'ராஜா' குதித்துக் கூவுவாரே, ராஜாதி ராஜன் வந்தேனே! மகா ராஜாதி ராஜன் வந்தேனே!! என்று அதுபோலாகிவிட்டார்!

வெற்றி! வெற்றி! வேட்டுச்சத்தம் கேட்ட நாட்டில், வெற்றி! வெற்றி! சுட்டுத்தள்ளிய சூரர்கட்கேவெற்றி! வெற்றி! என்று பாடுகிறார். பல நாள். பதைபதைத்துக் கிடந்தவர், இந்தப் பாயசம் பருகட்டும் பாவம்! வேண்டாம் என்பார் இல்லை. ஆனால், இப்படித்தான் வெற்றி கிடைக்கும் என்று முன்பே தமக்குத்தெரியும் என்று பேசுகிறாரே, அது தவறு, தேவையற்றது, பொருளற்றது!

ஆனால், வெற்றிக்களிப்பிலே பொருள் பொருத்தம் பார்க்கவா தோன்றும்; ராமன் பிறவாததற்கு முன்னாலேயே இராமாயணம் எழுதினாராமே வால்மீகி, அது போலத் தம்மை எண்ணிக்கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

காங்கிரஸ் வெற்றி பெற்றிருப்பது, அத்தனை பாராட்டத்தக்கதாகக் கொண்டாடத்தக்கதாக ஏன் தோன்றுகிறது? துளியும் எதிர்பார்த்திராததால்!!

தாளம் துளிகூடத் தவறவில்லை என்று பாராட்டுக் கிடைத்ததும், யாருக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் கிளம்பும்? இசை மன்னன் சித்தூர் சுப்பிரமணியத்துக்கா!! இன்றைக்கு வரவேண்டிய வித்துவான் வராததாலே, இலுப்பையூர் கருப்பையா பாடுவார்!! என்ற அறிவிப்புடன் பாடத்தொடங்கியவர், ஆனந்தத் தாண்டவம் ஆடுவார், தாளம் தவறாமல் பாடியதாகப் பாராட்டப்பட்டால்.

பொதுத் தேர்தலுக்குப்பிறகு கழகம், காங்கிரசைச் சந்தித்த, தேர்தல் களம்,

திருச்செங்கோடு
திருவண்ணாமலை
சென்னை மாநகர்
தர்மபுரி

இவற்றில், முதல் மூன்று இடங்களிலும் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டது; தர்மபுரியிலே வெற்றிபெற்றது.

தாளம் தவறவில்லை என்று தட்டிக்கொடுப்பது போன்ற பாராட்டுதலுக்கு மட்டுந்தான் காங்கிரஸ் உரிமை கொண்டாடமுடியும். அதற்குமேலே கொண்டாடுவது, உப்பை அதிகமாக்குவதாகும்; மணம் நெடியாகிவிடும் நிலைமை!! ஆனால், அதைத்தான் முதல் அமைச்சர் செய்துவருகிறார் — மும்முரமாக!! நெடு நாளைக்குப்பிறகு புதிதாக வளையல்களைக் நிறையப் போட்டுக்கொண்டவள், குலுக்கி நடைநடைந்து கலகல ஒலி எழுப்பிக் காட்டுவதுபோல,

மூன்று முறை கழகம் வெற்றிபெற்றபோது, இந்த 'முன்கூட்டியே' இன்னதுதான் நடக்கும் என்று கணித்திடும் வால்மீகி எங்கே போயிருந்தாரோ!!

இத்தனை பிணங்கள் வீழாதிருந்தபோது, மூன்று முறை காங்கிரசைத் தோற்கடித்த பொதுமக்கள், தர்மபுரியில் வெற்றிகொடுத்தார்கள் என்றால், காங்கிரசின் அடக்கு முறையைப் பாராட்டியா! மக்கள் என்ன இதயமற்றவர்களா!! அல்லவே!!

அடக்குமுறைப் பிரச்சினையைக்கூட மறைத்துவிடத் தக்க வேறு ஏதோ நிலைமைகள் உருவாக்கப் பட்டதாலன்றோ மக்கள் காங்கிரசுக்கு வெற்றி தந்தனர். இதனைப் புரிந்துகொள்ள, சராசரி அறிவே போதுமே!

மக்கள் விரும்பவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை; காங்கிரசின் பெருந்தலைவர்கள் எதிர்பார்க்கவில்லை; ஆனால், தொகுதியில் வேலை பார்த்துவந்த காங்கிரஸ் தலைவர்கள், தமது வேலை முறைகளைக் கணக்கெடுத்து வெற்றி கிடைத்திடும் என்று எதிர்பார்த்திருக்கக்கூடும்; அவர்கள் கூறியிருப்பார்கள் முதல் அமைச்சருக்கு; அப்போது அவரே அதை நம்பியிருந்திருக்கமாட்டார். நடந்துவிட்ட பிறகு பேசுகிறார், நமக்கு முன்பே தெரியும்!! என்று.

தம்பி! அவர்கள் அவ்விதம் பேசுவதாலே நமக்கு நட்டமில்லை; சொல்லப்போனால் நமக்கு ஒருவிதத்தில் அந்தவிதமான பேச்சு நல்லதுகூட.

நாம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறோம்; நாடே எதிர்பார்த்தது நாம் வெற்றி பெறுவோம் என்று, ஆனால் நாம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறோம்.



இதனை நாம் மறத்தலாகாது, நினைவினிற் கொள்ள வேண்டும்; எதற்கு? மக்களின் இதயம் நமது பக்கம் என்று அறிந்து அகமகிழ்ந்து நம்பிக்கை கொண்டு விடுவது மட்டும் போதாது; வெற்றிக்கான முறைகளைச் செம்மைப் படுத்திக் கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சியைப் பெறுவதற்காக.

தேர்தலிலே மட்டுமல்ல, எடுத்த காரியம் எதிலும் தொட்டது அத்தனையும் பலித்துவிடும் என்று நிலைமை இருந்துவிடுவதில்லை. ஏமாற்றங்களும், இடையூறுகளும் எவருடைய பாதையிலும் ஓரோர் வேளை குறுக்கிடத்தான் செய்யும். தோல்விகளையும் சந்தித்திட வேண்டும்; துணிவுடன். ஒரு பட்டியல் தருகிறேன், பார் தம்பி!

*1831*—வியாபாரத்தில் தோல்வி.
*1832*—சட்டசபைத் தேர்தலில் தோல்வி.
*1833*—மீண்டும் வியாபாரத்தில் தோல்வி.
*1834*—சட்டசபையில் பதவி.
*1835*—காதலியின் மரணம்.
*1836*—நரம்புக் கோளாறு நோய்.
*1838*—சட்டசபைத் தலைவர் தேர்தலில் தோல்வி.
*1840*—எலக்டர் தேர்தலில் தோல்வி.
*1843*—பெருமன்றத் தேர்தலில் தோல்வி.
*1846*—பெருமன்றத் தேர்தலில் வெற்றி.
*1848*—பெருமன்றத் தேர்தலில் தோல்வி.
*1855*—செனட் தேர்தலில் தோல்வி.
*1856*—உதவி ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி.
*1858*—செனட் தேர்தலில் தோல்வி.
*1860*—ஜனாதிபதி தேர்தலில் வெற்றி.

இந்தத் தோல்வி—வெற்றி பற்றிய பட்டியல் எவருடையயது தெரியுமா தம்பி! இறவாப் புகழ் பெற்றுவிட்ட ஆபிரகாம் லிங்கனுடையது!

ஆமாம்! தம்பி! அத்தனை தோல்விகளைக் கண்டிருக்கிறார் ஆபிரகாம்லிங்கன். எத்துணை உள்ள உரம்! அந்தத் தோல்விகளைக் கண்டு மனம் உடைந்திடாமல், முயற்சியிலே மேலும் மும்முரம் காட்டி, அமெரிக்கக் குடியரசுத் தலைவராகி இறவாப் புகழ்பெற்றுக் காட்டினார். ஒவ்வொரு முறை அவர் தோற்றபோதும் அந்த நாட்டுப் பக்தவத்சலங்கள் என்னென்ன பேசியிருப்பார்கள்! தொலைந்தான்! தொலைத்துவிட்டோம்!! என்று

எத்தனைபேர் முழக்கம் எழுப்பியிருப்பர்? ஆபிரகாம் லிங்கனுடைய நண்பர்களேகூட, இந்தத் தோல்விகளைக் கண்டபோது, இவ்வளவு தகுதியுள்ளவரைத் தேர்ந் தெடுக்காத இந்த மக்களை என்ன சொல்வது! இப்படிப் பட்ட மக்களை நம்பி யார்தான் எந்த நல்ல காரியத்தைத் தான் செய்ய முற்பட முடியும்! என்றெல்லாம் பேசியிருந் திருப்பார்கள். ஆயினும், ஆபிரகாம்லிங்கன், இந்தத் தோல்விகளைக் கண்டு, துயர்துளைக்கும் மனத்தினராகி விடவில்லை, மக்களின் நல்லாதரவு கிடைக்கும் வரையில், அதற்காகப் பாடுபடுவது தமது கடமை என்ற உணர் வுடன் பணியாற்றினார்; திராவிட முன்னேற்றக் கழகம், பொதுமக்களின் நல்லாதரவைக் கேட்டிடும் பணியினை ஓர் கடமை எனக்கொள்ள வேண்டும். மக்கள் தமது நல்லாதரவை நமக்குத் தராமலும் இல்லை. தர்மபுரியில் நமக்கு அந்த நல்லாதரவு கிடைக்காமற் போனதற்கான காரணத்தை, கழகத் தோழர்கள் கண்டறியவேண்டும்; நமது வேலை முறைகளிலே இருந்திடக்கூடிய குறைபாடு களைக் களைந்திடுவதிலே கவனம் செலுத்த வேண்டும். நமது தோல்வி, நமக்கு மட்டுமன்றி, நமது கழகத்திற்கு வெளியே உள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கெல்லாம், எவ்வளவு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்பதை அறியும்போது, கவலையைவிட, ஒரு புதுவித நம்பிக் கையே நமக்குத் தோன்றும். அத்துணை மக்கள் நமது வெற்றியை எதிர்பார்த்தபடி உள்ளனர் என்பது புரி வதால்.

பொது உண்மையை அனைவரும் அறிவர்; ஆளுங் கட்சிக்குக் கிடைக்கக்கூடிய சில வசதிகளும், வாய்ப்பு களும், எதிர்க்கட்சிகளுக்குக் கிடைக்காது. ஆம் எனில் அதற்கு என்ன பரிகாரம்? அந்த வசதிகளையும் வாய்ப்பு களையும் கொண்டு ஆளும்கட்சி சாதித்துக்கொள்வதை நாம் நமது பரிவினைக்காட்டி, தோழமையைக் காட்டி. தூய்மையைக் காட்டி, முயற்சியின் மூலம், பெற்றிட வேண்டும்; பெற்றிட முடியும்; பெற்றிருக்கிறோம்; தரும புரியில் பெறத் தவறிவிட்டோம்.

ஆளுங்கட்சி அதிகார பலத்தைக் காட்டி ஏழை எளியவர்களை மட்டுமல்ல. வணிகர்களை, அலுவலகப் பணியாளர்களை, மயக்கவும், மிரட்டவும் முடிகிறது. அதனால்தான், அமைச்சர்களாக இருந்துகொண்டே



பொதுத்தேர்தலை நடத்துவதைக் கண்டித்தோம்; தேர்த லுக்குச் சில மாதங்களுக்கு முன்பாகிலும், மந்திரி பதவி களை ராஜிநாமாச் செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். காங்கிரஸ் அமைச்சர்கள் ஒப்புக்கொள்ள வில்லை.

இடைத் தேர்தலின்போது, நாம் அந்த யோசனை யைக்கூட கூறமுடியாது; பொருளில்லை.

இடைத் தேர்தலிலே பெரும்பாலும் ஆளுங்கட்சி வெற்றியைத் தட்டிப் பறித்துக்கொள்ளும் வாய்ப்புப் பெறுகிறது. வருபவர் யார்? மந்திரி! கேட்பது என்ன? ஓட்டு! கொடுக்காவிட்டால்? கோபம்! கோபம் வந்தால்? என்னென்ன செய்வாரோ? நமக்கேன் அவர்களின் பொல்லாப்பு!!—இது பொதுவாக மக்களின் மனப் போக்கு. இதை மீறித்தான் எதிர்க்கட்சிகள் வெற்றி பெற் றிட வேண்டும்.

எதிர்கட்சிக்குத் தருகிற 'ஓட்டு' உடனடியான பலனை எதிர்பார்த்து அல்ல!

ஆளுங்கட்சினர் 'ஓட்டு' கேட்கும்போதோ, உட னடியாகப் பலன் தருவதாகச் சொல்லுகிறார்கள்; மக்கள் நம்பவும் செய்கிறார்கள்.

> ''பெண்கள் கல்லூரி வேண்டும், வேண்டும் என்று பல வருஷங்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இன்னும் ஏற்பாடாகவில்லை''

என்று தர்மபுரிப் பிரமுகர்கள், கழகத் தோழர்களிடம் கூறும்போது, கழகத் தோழர்கள் என்ன சொல்லுவார் கள்,

> சட்டசபையில் இதைப்பற்றிக் கட்டாயம் பேசு கிறேன். கல்லூரி அளமக்காதிருக்கும் போக்கைக் கண் டிக்கிறேன். இந்தத் தேர்தலில் காங்கிரசைத் தோற் கடித்துக் காட்டினால், காங்கிரஸ் மந்திரிகளுக்குப் பயம் ஏற்படும்; அப்போது கல்லூரிக்கு வழி பிறக்கும்.''

இதைத்தான் சொல்லுவார்கள்; முறை. அமைச்சர் ராமய்யாவிடம் அதே தருமபுரிப் பிரமுகர்கள் அதே

கல்லூரி விஷயமாகக் கேட்டால், அவரால் என்னென்ன சொல்ல முடியும் என்பதை எண்ணிப் பாரேன், தம்பி!

''கல்லூரியா! பெண்கள் கல்லூரியா! ஏற்படுத்த லாமே! அதிலென்ன கஷ்டம்! எத்தனையோ கல்லூரி கள் ஏற்படுத்தி இருக்கிறோமே. இங்கே எந்த இடம் நல்ல இடம், கல்லூரிக்கு?

இவ்விதம் பேசமுடியும்; பேசுகிறார்கள். உள்ளம் பூரிக் கிறது பிரமுகருக்கு.

இருக்கிறது நல்ல இடம்; ஊருக்கு மையமாக; ஒரே சதுரம்; அறுபது ஏக்கர்.

என்கிறார் என்று வைத்துக் கொள்ளேன், உடனே மந்திரி யின் மோட்டார் கிளம்புகிறது; ஜீப் முன்னாலே பறக் கிறது; பக்கத்தில் பிரமுகர்; இடத்தைப் பார்வையிடச் செல்கிறார்கள்.

''உங்க பேட்டை ஓட்டு எப்படி?''

என்று அந்தச் சமயத்தில் மந்திரி கேட்டால் என்ன பதில் வரும்?

''எல்லாம் 'ஐயா' சொல்கிறபடிதான்! காங்கிர சுக்குத்தான்''

இடத்தைப் பார்வையிடுகிறார்கள்; தரமான இடம் என் கிறார் மந்திரி; ஆமாம்! என்கிறார் அதிகாரி! அகமகிழ்ச்சி பிரமுகருக்கு; கல்லூரி வந்துவிடும் என்பதனாலே மட்டு மல்ல; நெடுநாளாக விலை போகாதிருந்து வந்த அந்த நிலத்தை நல்ல விலைக்கு விற்றுவிட முடியும் என்பதால்; நிலம் பிரமுகருடையது; இந்த விவரம் விளக்கப்பட்ட பிறகு அந்தப் பிரமுகர், ஐம்பது பேர் சுட்டு வீழ்த்தப் பட்டார்களே அந்தக் கொடுமையையா எண்ணிக் கொண் டிருப்பார்; ஏகர் ஐயாயிரம், அறுபது ஏகர்! மொத்தத்தில் 3 இலட்சம்!! இந்தக் கணக்கிலே அல்லவா அவர் உலவிக் கொண்டிருப்பார். மகனை இழந்த மாதா கதறுவதா காதில் கேட்கும் புதுப்புது நோட்டுகளை எண்ணும்போது எழுகிறதே இன்பநாதம், அது!!

தம்பி! நாம். மக்களின் இதயம் நமது பக்கம், ஆகவே, தேர்தலிலே வெற்றி நமது மக்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது, காங்கிரசாட்சியின் கொடுமை களை எடுத்துப் பொதுமக்களிடம் விளக்கிக்கொண்டு இருக்கும்போது, இந்தக் கல்லூரிப் பிரச்சினை படை



எடுத்து, நமக்கு வரவேண்டிய ஓட்டுகளை விழுங்கிய கொண்டிருக்கிறது.

பண்புள்ள ஜனநாயக நாடுகளில், அமைச்சர்கள் தேர்தலின்போது—அதிலும் இடைத்தேர்தலின்போது—அதைச் செய்து தருகிறோம், இதை நிறைவேற்றிக் கொடுக்கிறோம் என்று வாக்களிக்கமாட்டார்கள். முறை யல்ல என்பதால்.

தர்மபுரியில் நடந்தது என்ன?

சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது, புதிய மாவட்டத்துக்கு எது தலைநகர், கிருஷ்ணகிரியா? தருமபுரியா? என்கிற பிரச்சினை அங்கு ஓட்டுக் கேட்க வந்த அமைச்சர்கள்.

தருமபுரியைத் தலைநகர் ஆக்கித் தருகிறோம்.

என்று, அங்கேயே அறிவித்திருக்கிறார்கள். தரும புரியில் பிரமுகர்களும், வணிகர்களும், எப்படி அதிலே மயங்கா திருக்க முடியும்!

முழுக்கணக்கு எனக்குக் கிடைக்கவில்லை என்றாலும், தருமபுரியைத் தலைநகர் ஆக்குகிறோம் என்று தேர்தல் நேரத்தில் காங்கிரசார் வாக்களித்த காரணத்தால், தருமபுரி வட்ட ஓட்டுகள் நமக்குக் கிடைத்திருக்க வேண் டியவை, காங்கிரசுக்கு விழுந்துள்ளன என்பது தெரிகிறது.

தம்பி! தருமபுரி தொகுதி மூன்று பிரிவுகள் கொண் டது; ஒன்று காரிமங்கலம் வட்டம்; இரண்டாவது தருமபுரி வட்டம்; மூன்றாவது நல்லம்பள்ளி வட்டம்.

கடந்த பொதுத்தேர்தலில், காங்கிரஸ் வேட்பாள ராக நின்றவர் நல்லம்பள்ளி வட்டம் பாளையம் புதூர் கந்தசாமி கவுண்டர். கழக வேட்பாளர், தருமபுரி வட்டம் வெற்றிபெற்ற சுயேச்சையாளர் வீரப்ப செட்டியார் காரிமங்கலம் வட்டம்.

ஆகவே காரிமங்கலம் வட்டத்து ஓட்டுகளில் மிகப் பெரும்பாலானவை, வீரப்பசெட்டியாருக்கு, நல்லம்பள்ளி வட்டத்து ஓட்டுகளில் மிகப் பெரும்பாலானவை காங் கிரஸ் வேட்பாளர் பாளையம் புதூராருக்கு, கழக வேட் பாளரான சுப்பிரமணியம் அவர்களுக்கு, தருமபுரி வட்ட ஓட்டுகளில் மிகப் பெரும்பாலானவை விழுந்தன.

கடந்த பொதுத் தேர்தலில் கிடைத்ததைவிட இம் முறை காரிமங்கலம் வட்டத்திலும், நல்லம்பள்ளி வட்டத்

திலும் (நான் அறிந்தவரையில்) கழகத்துக்குக் கிடைத்திருக்கிறது; ஆனால், தருமபுரி வட்டத்துகள் ஓட்டுகள் கழகத்துக்குக் குறைந்துவிட்டன.

காரணம் என்ன இருக்க முடியும்? தலைநகர்!!

இந்த ஆராய்ச்சி செய்துகாட்டி தோல்வியை மறைத்திட ஒரு திரை நெய்துகொண்டிருக்கிறேன் என்று எவரும் எண்ணிக்கொள்ளவேண்டாம். இந்த விவரம் கூறுவதற்குக் காரணம், தேர்தலின் போது, நாம் துளியும் எதிர்பாராத, புதிய நிலைமைகள் வடிவமெடுத்து, எதிர்பாராத, விளைவுகளை உண்டாக்கி விடக்கூடும் என்பதை விளக்குவதற்காகவே.

ரஷியாவிலே, நெப்போலியன் படுதோல்வி அடைந்ததற்கான பல காரணங்களிலே ஒன்று என்று இன்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள் நெப்போலியன் ரஷியா மீது படை எடுத்துச் சென்ற சமயத்தில், வழக்கமாக ஆரம்பமாகிற பனிக்காலம் பத்துநாள் முன்னதாகவும், வழக்கத்தைவிடக் கடுமையாகவும் ஆரம்பித்தது ஆபத்தாக முடிந்தது என்கிறார்கள்.

களத்திலே ஏற்பட்டுவிடும் தோல்விகள், படை பலத்தை மட்டும் நம்பிக்கொண்டிருந்தால் போதாது, முறைகளையும் செம்மையாக்கிக்கொள்ள வேண்டும் என்ற பாடம் தருவன. அந்த முறையில், தருமபுரித் தோல்வியை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

மக்களின் இதயம் வென்றிட நாம் எடுத்துக் கொண்ட முயற்சி நாம் பெருமிதம் கொள்ளத்தக்க வெற்றியைக் கொடுக்கிறது. நமக்குக் கிடைத்துள்ள இந்த வலிவினைச் சிதைத்திட, ஆளுங்கட்சியான காங்கிரஸ் என்னென்ன நிலைமைகளை உருவாக்கும், என்னென்ன முறைகளை மேற்கொள்ளும் என்பன பற்றி விழிப்புடனிருந்து கண்டறிந்து அவைகளையும் முறியடிக்கத்தக்க விதமாக நமது முறைகளைச் செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்காகவே இத்தனை கூறினேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

9-5-'65

காஞ்சிக் கடிதம் : 18

# மனிதனும் மிருகமும்

**மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வேறுபாடுகள்**

**இராகுல சங்கிருத்தியாயனின் படப்பிடிப்பு**

**விஞ்ஞான விற்பன்னர்களின் கருத்துரைகள்**

**வெள்ளைப்பாண்டி கவிதையால் எழுந்த எண்ணங்கள்**

தம்பி,

அடவியிலே அலைந்துகொண்டும், குகைகளிலே பதுங்கிக்கொண்டும், கல்லையும் கட்டையையும் கருவிகளாகக் கொண்டு மிருகங்களுடன் போரிட்டுக்கொண்டும் காயோ, கனியோ, கிழங்கோ, மிருகத்தின் இறைச்சியோ, பசித்தீயைப் போக்கிக்கொள்ள எதனையோ உண்டு, கதிரவன் கக்கிடும் வெப்பத்தாலும், கடுங்குளிராலும், பெருமழையாலும், பேய்க் காற்றாலும், நிலநடுக்கத்தாலும், காட்டுத் தீயினாலும் அலைக்கழிக்கப்பட்டு, கொல்வது கொல்லப்படுவது, துரத்துவது துரத்தப்படுவது என்ற நிலையில், இருந்துவந்த மனிதகுலம் இன்று விண்ணகத்து விந்தைகளைக் கண்டறிந்திட, முனைந்திடும் கால கட்டம் வந்து சேர்ந்திருக்கிறது. எத்தனை நெடிய பயணம்! எத்தனை ஆபத்துக்களையும் அழிவுகளையும் எதிர்த்து நடாத்தப்பட்ட பயணம்! எங்கு இருந்தான்! எங்குச் செல்கிறான்!! எவ்விதம் இருந்து வந்தான், எவ்விதமான மாறுதலைப் பெற்றுக் கொண்டிருக்கிறான்! குகைகளில், மொழி அறியாது, தாய்க்கும் தாரத்துக்கும், உடன்

பிறந்தாளுக்கும் உள்ளத்தை வென்றாளுக்கும் வித்தியாசம் தெரியாது, மிருக இச்சையை எப்படியோ தீர்த்துக் கொண்டு, உறுமிக் கிடந்தவன், இன்று சமூகக் கட்டுக் கோப்பும் சட்ட திட்டங்களும் பெற்று, இந்த அவனியைத் தனது விருப்பத்தின்படி உருமாறச் செய்ததுடன் நில்லாது, மேலே மேலே செல்கிறான்; சென்றபடி இருக் கிறான்; வேகவேகமாக; விதவிதமான முறைகளைத் துணைகொண்டு; ஒளி ஒலி இவற்றின் வேகத்துடன் போட்டியிட்டபடி!! பெற்ற வெற்றிகள் பெறவேண்டிய வெற்றிகளைத்தான் நினைவுக்குக் கொண்டு வருகின்றன! சென்ற இடம், இனியும் செல்லவேண்டிய இடத்துக்கு தூண்டுதலைத் தருகிறது! பயணம் முடிவு பெறவில்லை! பயணத்தின் முடிவு தெரியவுமில்லை! எங்கே செல்கிறான்? அறிந்திட நேரமில்லை; நினைப்பும் எழவில்லை! பயணம் செய்திடவே காலமெல்லாம் செலவாகிறது! எங்கே செல் கிறான்? காற்று எங்கே செல்கிறது? ஒலியும் ஒளியும் எங்கே செல்கின்றன? விடை உண்டா இவ்வினாக்களுக்கு? உண்டு எனில், அஃதே, மனிதகுலம் மேற்கொண்டுள்ள பயணத்தின் பொருளையும் அறிந்திடத் துணைசெய்யும். செல்லும் இடமும், செல்வதன் நோக்கமும் அறிந்த பிறகு பயணத்தைத் தொடரலாம் என்று மனிதன் ஓய்வு எடுத்துக்கொள்ளவில்லை. சென்றுகொண்டே இருக் கிறான்! புதிது புதிதாகப் பலவற்றினைக் கண்டறிய வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டு, சென்றவண்ணம் இருக்கிறான். எதனாலோ ஈர்க்கப்பட்ட நிலையில், சென்றபடி இருக்கிறான். சந்திரமண்டலத்துடன் அந்தப் பயணம் நின்றுவிடப் போவதில்லை! செவ்வாய் மண்டலம் அழைக்கிறது!! காணவேண்டிய மண்டலங்கள், இன்னும் எத்தனை எத்தனையோ உள்ளன! எல்லாம் புரிந்து விட்டது, எல்லாம் கிடைத்துவிட்டது, இனிப் பயணம் தேவையில்லை என்று கூறிடும் கட்டம் இல்லவே இல்லை! சென்றுகொண்டே இருப்பது மனிதகுலத்தின், பொழுது போக்குமல்ல, தொழிலும் அல்ல; இயல்பு! இயங்கும் நிலை உள்ளமட்டும் இந்த இயல்பு இருந்தே தீரும், சுற்றிடும் பம்பரம் கண்டு வியந்திடும் குழவிபோல, பறந்திடும் விமானம் கண்டு மகிழ்ந்திடும் இளைஞன் போல, இன்று மனிதகுலப் பயணத்திற்கான வழிவகைகளைக் கண்ட றிந்து, ஒரு விந்தையிலிருந்து மற்றோர் விந்தைக்கு அழைப்பு விடுத்திடும் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு



களையும் செயல்முறைகளையும் கண்டு, நாம் பெருவியப் படைகிறோம்.

உண்டு உறங்கி, உறவாடி இனம் பெருக்கி, மாண்டு மடிந்துபோவது மனித குலத்தின் செயலின் அடிப்படை கிடைத்ததை உண்டு, அலுப்பினால் வீழ்ந்து உறங்கி, வலிவு காட்டி உறவாடி இனம் பெருக்கி, அழிவு தன்னை நோக்கி வரும்போது எதிர்த்துப் பார்த்து, இயலாத போது மாண்டுபோவது, மனிதகுலத்தின் பாலபருவ நிலையாக இருந்தது. இந்த நிலையிலிருந்து, தேவைப் படுவதை உண்பது, உண்பனவற்றை உண்டாக்கிக்கொள் வது வேலை செய்வதால் அலுப்படைவது, அதனால் இழந்துவிட்ட வலிவினைத் திரும்பப்பெற உறங்குவது, உடல் உணர்ச்சிக்காக மட்டுமின்றி உள்ளத்தில் எழுந் திடும் பற்று பாசம் காதல் எனும் உணர்ச்சிகளைச் செம்மைப்படுத்தி உறவு முறையினை வகுத்துக்கொண்டு அதன்படி ஒழுகுவது, சாவு வந்திடும் என்று தோன்றிடும் போது, தடுப்பு முறைகள் தேடுவது, இறுதியில் மடிந்து போவது எனும் கட்டம் வருவதற்குள் மனிதன் பலப்பல நூறாயிரம் ஆண்டுகளைக் கழித்துவிட்டான்; ஆண்டுகள் என்ற காலக் கணக்குக்கூடத் தெரியாத நிலையிலேயே, எத்தனை எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகளைக் கழித்துவிட்டான். மனிதன், உருப்பெற்று உலவத் தொடங்கி ஐந்து இலட்சம் ஆண்டுகளாகின்றன என்று விஞ்ஞான விற்பன்னர்கள் கூறுகின்றனர். மிருக நிலையி லேயே, மனிதன் நீண்ட நெடுங்காலத்தைக் கழித்து விட்டிருக்கிறான். எனினும், துவக்க முதலே, மனிதன் சில தனித்தன்மைகளையும் தனிச் சிறப்பினையும் பெற் றிருந்ததால், மிருக நிலையினை மாற்றிக்கொள்ளும் முயற்சியிலே ஈடுபட்டு, மெள்ள மெள்ள வெற்றி கண் டான். மிருகங்கள் இருக்கும் இடத்திற்கு ஏற்ற இயல் பைப் பெறுகின்றன; அந்த இயல்பு, மாற்ற முடியாததாகி விடுகிறது. உறுமிக் கொண்டிருந்த புலியும், சீறிக்கொண் டிருந்த பாம்பும், கொத்திக்கொண்டிருந்த வல்லூறும் இன்றும் அதே இயல்புடனேயே இருந்திடக் காண்கிறோம். மனிதனைவிட மிருகங்கள், எத்தனையோ காலத்துக்கு முன்பிருந்தே உள்ளன; எனினும், இயல்பு மாறவில்லை; மாற்றிக்கொள்ளும் திறமை மிருகங்களுக்கு அமைய வில்லை.

இயல்பு, சுற்றுச்சார்பினாலே உருப்பெறுகிறது, வளருகிறது; எனவே, இயல்பு மாறவேண்டுமெனில் சுற்றுச்சார்பு மாறவேண்டும்; மாற்றி அமைக்கப்பட வேண்டும்; அதற்கான தனித்திறமை மிருகங்களிடம் இல்லை; எனவேதான் இயல்பு, அன்று இருந்தது போன்றே இன்றும்—மிகப் பெரும் அளவுக்கு—இருந்திடக் காண்கிறோம்.

மிருகங்களின் உருவ அமைப்பு, நடமாட்ட முறை இவற்றிலே ஏற்பட்டுவிட்ட மாற்றங்கள்கூட, தாமாக விரும்பி, முயன்று ஏற்படுத்திக்கொண்ட மாற்றங்கள் அல்ல. இருந்துவந்த சுற்றுச்சார்பு தானாக மாற்றமாகி, அதன் காரணமாக, மிருகங்களின் நிலையிலேயும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. ஏற்படுத்திக் கொள்ளவில்லை!! இதிலேதான், மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள அடிப்படை வித்தியாசம் அடங்கி இருக்கிறது.

யானை முதல் பூனைவரை, பாம்பு பறவை பூச்சி புழு என்பவைகள் ஈறாக, வடிவமாற்றம் நிரம்ப ஏற்பட்டுள்ளன என்பதனை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து கூறுகின்றனர்.

இன்று காணப்படும் யானைக்கும், பண்டு இருந்து வந்ததற்கும், உள்ள வித்தியாசத்தைக் காணும்போது, திடுக்கிட்டுப் போய்விடுவோம். நீர் வாழ்வன, நிலம் வாழ்வன, ஊர்வன, பறப்பன, எனும் எவற்றிலும், பெரிய மாறுதல் வடிவத்திலே ஏற்பட்டுவிட்டன. குதிரை காட்டுக் குதிரையாக இருந்த காலத்திலிருந்து வெகுவாக முன்னேறி, இன்றைய நிலையினைப் பெற்றது. நகரக் கூட முடியாதபடியான மாமிச மலையாக இருந்துவந்த பல மிருகங்கள் அழிந்தே போய்விட்டன. இன்று உள்ள மிருகங்கள் நமது முன்னோர்கள் எவ்விதம் இருந்தனர் என்று கண்டறியுமானால், வெட்டித் தலைகுனியும். மிருகங்களைச் சொல்கிறோமே! நமது இலட்சணம் மட்டும் என்ன! நமது மூல மூதாதை குரங்கு!! பெருமைப் படத்தக்கது என்றா கூற மனம் வரும்.

சுற்றுச் சார்பினை மாற்றி அமைத்து இயல்பையும் வடிவினையும் அதற்கு ஏற்ப, மிருகங்கள் பெற்றிடவில்லை; மனிதன் மட்டுமே, சுற்றுச் சார்பினைத் தனக்கு ஏற்றதாக, வசதி அளிப்பதாக, அமைத்துக் கொண்டான், மிருகங்கள் போலவே, புதர்களில் பதுங்கிக் கிடந்தவன். குகைகளைக் கண்டான்; அதிலே இருந்துவந்த மிருகங்களை விரட்டிவிட்டோ கொன்றுவிட்டோ, குகைகளைத் தனதாக்கிக் கொண்டான். குகைகளைக் கண்டறிந்தது மட்டுமல்ல, சில காலத்துக்குப் பிறகு, மலைகளைக் குடைந்து குகைகளை உண்டாக்கிக் கொண்டான். சுற்றுச் சார்பினை மாற்றி அமைத்திட அமைத்திட, அதற்கு ஏற்றவிதமாக இயல்பு மாறிக்கொண்டு வரலாயிற்று.



சுற்றுச் சார்பினைத் தனக்குச் சாதகமான முறையில் மாற்றி அமைத்துக் கொள்ளும் திறமை பெற்றிருக்கும் காரணத்தினாலேயே, மனிதன் எந்த இடத்திலும் இருந்திடும் வகை கண்டறிந்து வாழ்ந்திட முடிகிறது.

வெப்பம் தீயெனத் தாக்கும் சகாரா பாலைவனத்திலும் மனிதன் இருக்கிறான், பனி மலை மிகுந்த அயிஸ்லாந்திலும் இருக்கிறான்; கடலோரமும் அவனைக் காணலாம். மலைமுகட்டிலும் அவன் இருக்கிறான்; ஆற்றோரமும் இருக்கிறான்; அடவியிலும் இருக்கிறான்; பெருமழை பொழிந்தபடி உள்ள இடத்திலும் இருக்கிறான்; வறட்சி மிகுந்த இடத்திலும் இருக்கிறான்.

மிருகங்களின் நிலை அவ்விதமில்லை. பனிப் பிரதேசத்து மிருகங்களை பாலைவனத்தில் கொண்டு சேர்த்தால் செத்துப் போகின்றன; நீர்வாழ்வனவற்றை நிலத்தில் கிடத்தினால் உயிர் போய்விடுகிறது. சில சுற்றுச் சார்பிலே வாழ்ந்திடும் வகையினுள்ளவைகள், மாறான சுற்றுச் சார்பிலே கொண்டு சேர்க்கப்பட்டாலோ, தாமாகச் செல்ல நேரிட்டாலோ மடிந்து விடுகின்றன.

மிருகக் காட்சிச் சாலைகளில் இதனை உணர்ந்தே, எந்தெந்த மிருகத்துக்கு என்னென்ன விதமான சுற்றுச் சார்பு தேவையோ அதனை அமைத்துத் தருகிறார்கள்.

மனிதன், எவ்விதமான சுற்றுச் சார்புள்ள இடத்திலும் இருக்கிறான்; காரணம், அதனைத் தனக்கு ஏற்றதாக்கிக்கொள்ளும் முறைகளைக் கண்டறிந்துகொள்ள முடிவதால்.

கடுங்குளிர் மிக்க இடமானால் கம்பளிச் சட்டை அணிந்துகொள்வதன் மூலம், கொடுமை நேரிட்டு விடாத

படி தடுத்துக் கொள்கிறானல்லவா! மானோ மாடோ கடுங்குளிரிடத்தில் கொண்டு செல்லப்பட்டால் என்ன செய்திட முடியும்! விறைத்து இறந்துவிடுகின்றன.

மிருகங்கள், தமக்கென்று அமைந்துவிட்ட உடலமைப்பு, இயல்பு இவற்றினை மட்டுமே கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது; வேறு துணை—வேறு கருவி—வேறு முறை—பெற்றிடவும் பயன்படுத்திக் கொள்ளவும் முடிவதில்லை. நகர்ந்து செல்லும் உடலமைப்பும் இயல்பும் பெற்ற ஆமை, வேகமாகப் பாய்ந்தோடும் குதிரையின் துணைபெற்று, விரைந்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் சென்றிட முடியுமா! ஆமை, அந்த நாளிலிருந்து நகர்ந்துகொண்டுதான் இருந்திடுகிறது—வேகம் பெறமுடியவில்லை! குதிரை. எப்போதும் வேகமான ஓட்டத்தைப் பெற்றிருந்திருக்கிறது.

மனிதன், தனக்கு உள்ள உடலமைப்பு, இயல்பு, என்பவைகளினால் மட்டும் கிடைத்திடும் நடவடிக்கைகளோடு நின்றுவிடவில்லை: வேறு துணை பெறுகிறான்; வேறு கருவிகளைத் தேடுகிறான்.

பறந்திடும் உடலமைப்பு மனிதனுக்கு இல்லை! ஆனால், பறந்து செல்கிறான், பறவைகள் வியந்திடத் தக்க விதத்தில்.

நீருக்கடியிலே இருந்திடத் தக்கதான உடலமைப்பு மனிதனுக்கு இல்லை; ஆனால், நீர்மூழ்கிக் கப்பல் அமைத்து, அதன் துணைகொண்டு, நீருக்கடியில் இருந்திடும் வழி பெற்றுவிட்டான்.

கிடைத்ததைக் கிடைத்தபடியே தின்றிடும் மிருக முறையிலிருந்து வந்தான் மனிதன்; இன்று கிடைப்பதை அல்ல, உற்பத்தி செய்வதை; அதே முறையிலே அல்ல, தன் சுவைக்கு ஏற்பப் பக்குவப்படுத்தியும், மற்றப் பொருளுடன் கலந்தும் உண்ணத் தலைப்பட்டுவிட்டான்.

மிருகங்கள், நடமாடுகின்றன, மனிதன் வாழுகின்றான் என்று கூறிடுவதற்கான காரணத்திலே இது முக்கியமானது; மனிதன் தனக்கான வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான்; மிருகங்களுக்கு அமைந்துவிடுகிறது.



மக்களுக்கும் மாக்களுக்கும் இயல்பிலேயும் நடவடிக்கைகளிலேயும் வேறுபாடு காணமுடியாதிருந்த காலத்தை இன்று ஆராய்ச்சியாளர்கள், எடுத்துக் காட்டுகிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் மாக்களை வேட்டையாடுவதும், மாக்கள் மக்களைப் பிய்த்துத் தின்பதும் மாறி மாறி நடைபெற்றுவந்த நிகழ்ச்சிகளாக இருந்திருக்கின்றன.

இராகுல சங்கீத்ராயன் எனும் ஆராய்ச்சியாளர், கி.மு. 6000-ல், இருந்த நிலைமை பற்றி எழுதியிருப்பதைப் பார்க்கும்போது, எந்தவிதமான வாழ்க்கை முறையிலிருந்து மனித குலம் இன்றைய புதுமை வாழ்க்கை முறைக்கு வந்திருக்கிறது என்பது புரிகிறது; புரியும்போது வியப்பு, திகைப்பூட்டும் அளவுக்கு ஏற்படுகிறது.

பனிப் படலம் மிகுந்த வால்கா நதிப் பிரதேசத்தைக் காட்டுகிறார் ஆராய்ச்சியாளர். நீலநிற வானம் மேலே! கீழே பனி கப்பிக் கொண்டுள்ள நிலப்பரப்பு. பெரிய பெரிய மரங்கள்—கிளைகளிலே பனிக் கட்டிகள். மிருகங்களின் உறுமல், பட்சிகளின் கலகல ஒலி, வண்டுகளின் ரீங்காரம் எதுவும் இல்லை. திகைப்பூட்டும் அமைதி.

மலைகளிலே இயற்கையாக அமைந்துள்ள குகைகளே வீடுகள்!

ஒரு கிழவி—ஆடை இல்லை—கற்றை கற்றையாக ரோமம் அடர்ந்திருக்கும் நிலையில்—கண்களில் ஒளி இல்லை—ஒரு வெறிச்சிட்ட பார்வை.

எலும்பைச் சுவைத்தபடி சில பெண்கள்.

அதிலே ஒரு துண்டு வீசப்படுகிறது அழுகுரலெழுப்பும் குழந்தையிடம்.

குகையிலே பதுங்கிக் கிடக்கும் மனிதமிருகங்கள்!

நெருப்பு மூட்டிட விறகு தேடி, கட்டுகளாக்கித் தூக்கிக்கொண்டு வருகிறார்கள் இளம் பெண்கள்.

ரோமம் நீக்கப்படாத தோலால் ஆடை, அவர்களுக்கு.

நீண்ட கூர்மையுள்ள கம்பு, நன்றாகத் தீட்டிக் கூர்மையாக்கப்பட்ட கல் அம்பு!

குடும்பத் தலைவி முன்னே செல்ல, மற்றவர்கள் பின்னால் செல்கிறார்கள்.

ஆழ்ந்த தூக்கத்தில் உள்ள கரடிகளைத் தாக்கிக் கொல்கிறார்கள்—உணவுக்காக.

குகைக்கு வருகிறார்கள்—வழியிலே ஓநாய்கள் சூழ்ந்து கொள்கின்றன. போர்!

ஓநாய் கொல்லப்படுகிறது, அதன் பச்சை இரத்தத்தை இவர்கள் குடிக்கிறார்கள்-சதையைப் பிய்த்துத் தின்கிறார்கள்.

இவர்களிலே சிலரை ஓநாய்கள் கொன்று, சதையைப் பிய்த்துத் தின்கின்றன.

இது ஒவ்வொரு நாளும்—கொல்வது கொல்லப்படுவது—குருதிகொட்டுவது குருதி குடிப்பது—நாலு கால் மிருகங்களுக்கும் இரண்டுகால் மிருக்கங்களுக்கும் ஓயாத போர்! இது வாழ்க்கை முறையாக இருந்திருக்கிறது என்பதை எடுத்து காட்டுகிறார் ஆராய்ச்சியாளர்.

இவ்விதமான முறையிலா மனிதகுலம் இருந்து வந்தது என்று எண்ணும்போதும், இவ்விதமாக இருந்து வந்த மனிதகுலத்தில், வழிவழி வந்தவர்களே நாம் என்பதை எண்ணும்போதும், எல்லாவகையாலும் மனிதன் உயர்ந்தவன், சிறந்தவன் என்ற எண்ணமே ஒரு விதமான கேலிக்கூத்தாகத் தென்படும்.

மாக்களுக்கும் நமக்கும் மாறுபாடு தெரியமுடியாத நிலையிலே இருந்து, வெகுதூரம் முன்னேறிவிட்டோம் என்ற எண்ணம் ஒரு விதமான மன நிம்மதியைக் கூடத் தரும் என்பதில் ஐயமில்லை.

கூர்ந்து பார்த்தால், முறையிலே வியக்கத்தக்க மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்றாலும், அடிப்படை அலுவல்கள், இயல்புகள், உணர்வுகள், வெகுவாக மாறி விடவில்லை என்பது புலனாகும்; புலனாகும்போது, மாக்களைவிட நாம் மிக அதிகமாக முன்னேறிவிட்டோம் என்று கூறிக்கொள்வதற்கில்லையே என்ற எணணம் நம்மைப் பிடித்து வாட்டி வதைத்திடும்.

கல்லைத் தீட்டிக் கருவியாக்கி, காட்டுமிருகங்களை வேட்டையாடிக் கொன்றுதின்று உடற்பசியைப் போக்கிக்



கொள்வதிலே வரம்புவகை, முறைநெறி என்பவைகளைப் பார்க்காமல் நடந்துகொண்டு வந்த நாட்களிலே, உண்பது உறங்குவது, உறவாடுவது, போராடுவது. பெறுவது தருவது, என்பவைகளுக்கு அடிப்படையாக அமைந்திருந்த அதே உணர்வுகள், இன்றும் அதே விதத்திலே கிளம்பி, மனிதக் குலத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பதை அறிகிறோம்; அறியும்போது, முன்னேறிவிட்டோம் என்று கூறிக் கொள்ளும் முழு உரிமையை மனிதகுலம் பெறவில்லை என்பது தெளிவாகிறது.

இன்றும், எனக்கு, உனக்கு என்பதற்காகவும், என்னுடையது உன்னுடையது என்பதற்காகவும் அன்று போலவே அமளி நடந்தபடி இருக்கிறது! கருவிகள் மாறிவிட்டன, கருத்து மாறிவிடவில்லை, போர் முறைகள் மாறிவிட்டன, போர் உணர்வு மாறவில்லை.

கோபம் கொந்தளிப்பு, தாக்குதல் தப்பித்தல், பாய்வது பதுங்குவது—எல்லாம் அன்று போலவே இருந்திடக் காண்கிறோம்.

மலைமுகடுகளில், அடவிகளில், அருவிக்கரைகளில் அமளிகள் நடைபெற்றன முன்பு; இப்போது நவநாகரிக நகர்களில், மின்னிடும் மாளிகைகளில், அமளி! முன்பு கல்லாலான கருவிகள்! இன்று அணு ஆயுதம்!

அழிக்கும் உணர்வும், அழிவிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் உணர்வும், அந்த உணர்வுகளின் அடிப்படையில் அமைந்துள்ள போராட்டமும், அன்று போலவே இன்றும் இருந்திடக்காண்கிறோம்.

முன்பு, வாழ்நாளில் மிகப் பெரும்பகுதி, போராட்டமாகவே இருந்துவந்தது என்று கூறலாம்; இன்று வாழ்நாளில் ஒரு போராட்டத்துக்கும் மற்றொரு போராட்டத்துக்கும் இடையிலே, 'அமைதி நாட்கள்' இருக்கின்றன. இந்த அளவுதான் மனிதகுலம் முன்னேற்றம் காணமுடிந்திருக்கிறது.

அரசு இல்லை ஆகவே அமைதி இல்லை! மார்க்கம் இல்லை ஆகவே ஒழுக்கம் இல்லை! சட்டம் இல்லை ஆகவே சாந்தி இல்லை! அறநூல் இல்லை ஆகவே அறம் இல்லை! அறிவாளர் இல்லை ஆகவே அறிவுத் தெளிவு இல்லை!—அன்று, மாக்களுக்கும் மக்களுக்கும் அதிக அளவு மாறுபாடு இல்லாத காலத்தில்.

இன்றோ! அரசு இருந்தும் அமைதி இல்லை; மார்க்கம் இருந்தும் ஒழுக்கம் இல்லை; அறநெறி காட்டப்பட்டும் அறம் நிலைத்து நிற்கவில்லை; அறிவாளர் முயன்றும் அறிவுத் தெளிவு ஏற்படவில்லை!

ஆனால், எழிலூர்கள் பலப்பல, தொழிலின் ஏற்றம் மிகப்பல! மாடமாளிகை, கண்ணைப் பறிக்கத்தக்க விதமாக! கலை கவர்ச்சி தருவதாக! இவைகளுக்குக் குறைவு இல்லை.

இவைகளைக் காட்டிலும் மிக முக்கியமானது என்று கூறத்தக்கதான விஞ்ஞான அறிவுப்பெருக்கத்துக்கோ ஒரு அளவு இல்லை! மேலே மேலே செல்கிறது மனிதகுலம், விண்ணிலே உள்ள கிரகங்களைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவர.

புறத்தோற்றத்தைக் காணும்போது, மனிதகுலம் வெகுதூரம், வேகவேகமாக முன்னேறி, உன்னதமான கட்டத்தில் வந்திருப்பது தெரிகிறது.

அகத்தில் நெளியும் உணர்வுகளையும், அந்த உணர்வுகள் ஆட்டிப் படைத்திடுவதற்கேற்ற வண்ணம் மனிதகுலம் ஆடித் தொலைப்பதையும் பார்க்கும்போது முன்னேற்றம் அடைந்துவிட்டோமா என்பதிலேயே பலமானதோர் சந்தேகம் ஏற்படத்தான் செய்யும்.

வாழப் போரிட்டுத் தீரவேண்டியுள்ள நிலையும், வலிவைக் காட்டிப் பகையைத் தீர்த்துகட்டும் முறையும், காடு மிகுதியாக இருந்த நாட்களில் இருந்துவந்தது போலவே காடு குறைந்து நாடு எழில்பெற்ற நாட்களிலேயும் இருக்கிறது; இதைப் பார்க்கும்போது, மனிதகுலம் பெற்றுவிட்ட முன்னேற்றம், அடிப்படையை மாற்றுவதாக இல்லை என்பது புரிகிறது; கவலை மிகுந்திடுகிறது.

காட்டுக் குணத்தைப் போக்கிக்கொள்வதிலே பெருமைப்படத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்படாத நிலையில், மனிதகுலத்திடம் விஞ்ஞானம் புதிய புதிய மிகுதியும் வலிவுள்ள கருவிகளை, முறைகளைக் கொடுத்து விட்டிருக்கிறதே என்பதனை எண்ணி இன்று பெருத்த கவலைக்குள்ளாகிவிட்டுள்ளனர் பேரறிவாளர் பலர். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொள்வதிலே மனிதகுலம் வெற்றி பெறாத நிலையில், உணர்வுகளின் அடிப்படை



யிலே அமைந்துவிடும் நடவடிக்கைகளுக்குப் பயன்பட்டு விடும் விதமாக, இன்றைய விஞ்ஞான அறிவு பல புதிய கண்டுபிடிப்புகளைக் கொடுத்துவிட்டிருப்பது, குருடன் கையில் சிக்கிவிட்ட தீப்பந்தம் போன்ற நிலையை உண்டாக்கிவிட்டிருக்கிறது.

இதனை எண்ணும்போதுதான் இன்றைய நிலையில் ஒரு பெரும்போர் மூண்டுவிடுமானால், உலகமே அழிந்து படும் என்ற அச்சம் எழுகிறது. மனிதகுலம் அழிந்து படாமல் காப்பாற்றப்படவும். உலகம் மீண்டும் காடு ஆகிடாமல் தடுத்திடவும் வேண்டும் என்ற தூய்மை மிக்க பொறுப்புமிக்க கருத்தினைக் கொண்டவர்கள், உலகப் பெரும்போர் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை உருக்கத்துடன் எடுத்துரைத்து வருகின்றனர்.

அனேகமாக எல்லா நாட்டுத் தலைவர்களும் உலகப் பெரும்போர் மூண்டுவிடக்கூடாது என்பதிலே மிகுந்த அக்கறை காட்டிப் பேசி வருகின்றனர்.

ஒரே ஒரு நாட்டின் தலைவர் மட்டுமே, பெரும்போர் மூளட்டுமே! உலகிலே அழிவு நடமிடட்டுமே! அழிந்தது போக, மிகுந்திருப்பதிலிருந்து மீண்டும் ஒரு புதிய வளர்ச்சி துளிர்க்கும் என்று பேசுகிறார். கூசாது இத்தகைய கொடிய கருத்தினைக் கூறிவருவது மக்கள் கொல்லப்பட்டு மலைமலையாகக் குவிக்கப்பட்டாலும் என்ன என்ற விதமான இரக்கமற்ற இயல்பு கொண்டுள்ள சீனத்துத் தலைவன் மாசே-துங் எனும் வெறியன் மட்டுமே.

மனிதகுலம் மெத்தப் பாடுபட்டு, பலப்பல ஆயிரம் ஆண்டுகளாக நடத்திய பயணத்தின் பலன் அனைத்தையும் ஒரு நொடியில் பாழாக்கி, மறுபடியும் கற்காலத்துக்குச் சென்றிடும் நிலை பிறந்திடும், ஒரு பெரும்போர் மூண்டிடின் என்ற அச்சமும் பொறுப்புணர்ச்சியும், ஓரளவுக்கு, இன்று அரசோச்சுகிறது. இந்த நல்லியல்பையும் நாசமாக்கிடும் விதத்தில், சீனத்துப் போர் வெறியர்களும் அவர்களின் உறவிலே உவகை கொள்ளும் பாகிஸ்தான் தலைவர்களும், நடந்து கொண்டு வருவது, மனித குலத்துக்கே இழைக்கப்படும் மாபெருந் துரோகமாகும்.

இருப்பது போதாது மேலும் வேண்டும் என்ற நினைப்பும், நமக்கு மட்டுமே இருக்கவேண்டும் அதனைப்

பெற எம்முறையையும் மேற்கொள்ளலாம் என்ற துணிவும், காட்டிலும்சரி நாட்டிலும்சரி, கொடிய செயல்களுக்குக் காரணமாக அமைந்துவிடுகிறது.

எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடத்தக்க, ஒருவரை ஒருவர் வஞ்சித்தும் அழித்தும் கொள்ளத் தேவையற்ற முறைபெற, விஞ்ஞானம் வழிகாட்டுகிறது. ஆனால், இதற்கு அந்த விஞ்ஞானத்தைப் பயன்படுத்திக்கொள் வதைக் காட்டிலும், அழிவுக் கருவிகளைத் தயாரிப்பதற் காகவே விஞ்ஞானத்தைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

பல விஞ்ஞான விற்பன்னர்கள் இது குறித்துத் தமது கவலையையும் தெரிவித்துள்ளனர்.

பொருளை மிகுதியாக்கிக்கொள்ளவும் வளத்தைப் பெருக்கிக்கொள்ளவும், விஞ்ஞானம் வழிகாட்டத் தயா ராக இருக்கிறது; ஆனால், அதனிடமிருந்து வெடிகுண்டு களையும் அணுகுண்டுகளையுமே அரசுகள் கேட்டுப் பெற்று இறுமாந்து கிடக்கின்றன.

பஞ்சம் பசி போக்கிடும் வழிகாட்டப் பயன்பட வேண்டிய விஞ்ஞானம், இன்று பகை மூட்டிட, அழிவை ஏவிடப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மனிதனுடைய வாழ்க்கை முறையையே செம்மைப் படுத்தவும், மேம்பாட்டையச் செய்யவும் பயன்பட வேண்டிய விஞ்ஞானத்தை, மனிதகுலத்தின் நாசத்துக்குக் கருவிகளைச் செய்திடும் காரியத்துக்குப் பயன்படுத்துவது கொடுமையினுங் கொடுமை. எனினும் இந்தக் கொடுமை நடந்தபடி இருந்திடக் காண்கின்றோம்.

இன்றுள்ள மனிதகுலம், தனக்குக் கிடைத்துள்ள விஞ்ஞானத்தை இத்தகைய கொடுமைக்குப் பயன் படுத்தினதுபோல, மாக்கள் நிலையிலிருந்து விடுபடா திருந்த மக்கள், தமக்குக் கிடைத்த கருவிகளைப் பயன் படுத்திக் கொண்டார்களில்லை. அவர்களுக்கு விஞ்ஞானம் நகர் அமைப்பு, பாதை அமைப்பு, பாசன வசதி, பயிரிடும் முறை, கல்விக்கூடம், மருத்துவக்கூடம் என்பவைகளைத் தரவில்லை — இன்றைய மனித குலத்துக்கு விஞ்ஞானம் தந்துள்ள வசதிகள் மிகப்பல; எனினும், கிளியைக் கொன்று காக்கைக்கு விருந்திடுவதுபோல, விஞ்ஞான



அறிவைக்கொண்டு மனிதகுல அழிவுக்கு வழி கண்டு பிடிக்கும் கொடுஞ்செயலில் இன்றைய மனிதகுலம் ஈடு பட்டிருக்கிறது.

டாக்டர் எட்வர்டு டெல்லர் எனும் விஞ்ஞான விற் பன்னர், சென்ற திங்கள், விஞ்ஞானத் துறையை மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படும்விதமாகக் கட்டுப்படுத்தும் உரிமை விஞ்ஞானிகளிடம் இல்லாமலிருப்பது குறித்தும், அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்கக் கூசிடும் கேடான காரியங்களுக்கு விஞ்ஞான அறிவு ஆக்கித் தரும் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருவது குறித்தும் மிகுந்த கவலை யைத் தெரிவித்திருக்கிறார்.

விஞ்ஞானி, பொருள்களைப் படைத்திட விரும்பும் பேரறிவாளன்—அழிவு கண்டு உள்ளம் வெதும்பிடத்தான் செய்வான். தூங்கும் பனிநீர் தங்கிடும் மூங்கில் இலை யெனினும் அதனிடம் காணக்கிடக்கும் கவர்ச்சி அதனிடம் உள்ள உயிர்ப்பு. இதனை மேலும் மேலும் வலிவுள்ள தாக்கிட பொலிவுள்ளதாக்கிட விரும்பும் விஞ்ஞான விற்பன்னர்கள் மனிதர்கள் மாக்களைப்போல ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்வதற்கு, விஞ்ஞானம் பயன் படுத்தப்படுவதுகண்டு, உள்ளம்நொந்து போகின்றனர்.

பசியாலும் பஞ்சத்தாலும் தாக்கப்பட்டோ, இயற்கை விளைவிக்கும் கொடுமைகளால் கொட்டப் பட்டோ, நோயூட்டும் கிருமிகளால் அரிக்கப்பட்டோ, கூனிக் குறுகி, குற்றுயிராகிடும் மக்களை, நிமிர்ந்து நின்றிடச் செய்திட நிம்மதியான வாழ்வு பெற்றிட வழி காண இரவு பகல் விழித்திருந்து, பொருள்களின் தன்மை யினை ஆய்ந்தறிந்து, புது முறைகளைக் கண்டுபிடித்துத் தந்திடும் விஞ்ஞானிகள், அவர்கள் பெற்றளித்திடும் பேருண்மைகளே மனித குல அழிவுக்குப் பயன்படுத்தப் படுவதனைக் காணும்போது, ஏன் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளைத் தந்தோம் என்று எண்ணி வேதனைப்படத் தான் செய்கிறார்கள்.

இதனால்தான் டாக்டர் எட்வர்டு டெல்லர் எனும் விஞ்ஞான விற்பன்னர் மனித குலத்துக்கு உள்ள இன்ன லைத் துடைத்து, இன்ப வாழ்வு அளித்திடும் வழிகள் காணவே, விஞ்ஞானம் உடனடியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

டாக்டர் ராபாட் ஒப்பன் ஈமர் எனும் மற்றோர் விஞ்ஞான விற்பன்னரும் இதுபோன்றே கூறியுள்ளார். விஞ்ஞானம் இதுவரை பெற்றளித்துள்ள பெரு வெற்றி களால், மனித குலம் எந்த வகையிலும் அளவிலும் பயன் பெற்றிருக்கிறது என்பது பற்றிய கணக்கெடுத்தாக வேண்டும் என்பதற்காகவே பல்கலைக் கழக மொன்றில் பார்த்துவந்த வேலையைக்கூட உதறித் தள்ளிவிட்டார் இந்த விஞ்ஞானத்துறைப் பெருமகன்.

விஞ்ஞானத் துறையின் வளர்ச்சிக்காகப் பெரும் பொருள் செலவிடப்பட்டு வருகிறது; காலத்தையும் கருவூலத்தையும் கணக்கற்ற அளவு செலவிட்டுத்தான் பேருண்மைகளைக் கண்டறிந்து, புதிய கண்டுபிடிப்பு களைத் தருகின்றனர் விஞ்ஞான விற்பன்னர்கள்.

மின்னிடும் விண்மீன்களின் இயல்புகளைக் கண் டறியவும், விண்வெளியில் உலவிடவும், ஆங்கு உள்ள கிரகங்களைக் காணவும், எத்தனை எத்தனைக் கருவிகள்! என்னென்ன முறைகள்! விண்வெளியிலே நடந்தே காட்டி விட்டான் சோவியத் நாட்டு மாவீரனொருவன், விஞ்ஞானத்தின் துணைகொண்டு.

இவை எவரையும் வியப்பில் ஆழ்த்தும்; ஐயமில்லை· எனினும் மறைந்த மாமேதை ஆல்டேன் என்பார், விண் வெளியின் ஆராய்ச்சிக்காகப் பெரும் பணம் செலவிடு வது தேவைதானா! இப்போது கவனிக்கப்படவேண்டிய பிரச்சினைதானா விண்வெளி விஷயம் என்று சில ஆண்டுகளுக்கு முன்பே கேட்டிருந்தார்.

இப்போது விண்வெளி ஆராய்ச்சிக்காகப் பல்வேறு நாடுகளும் செலவிடும் தொகை, கேட்போருக்கு மயக்க மூட்டும் அளவினதாக இருக்கிறது.

விண்வெளித் துறை பற்றிய ஆராய்ச்சிக்காக மட்டும் ஆண்டொன்றுக்கு 10,000 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என்கின்றனர்.

இத்தனை பெருந்தொகையை, விண்வெளி ஆராய்ச்சிக் காகச் செலவிடுவதனைக் காட்டிலும், மனித உடற்கூறு பற்றிய ஆய்வுத் துறைக்கும், உணவுத் துறை, பொருள் ஆக்கத் துறை, மருத்துவத் துறை ஆகியவற்றினுக்கும் செலவிட்டிருக்கலாம்—செலவிட வேண்டும் என்ற கருத் தினைக் கூறிச் சென்றார் ஆல்டேன்-



மக்களின் இயல்புகளே பெரும்பாலும் அவர்களுடைய நடவடிக்கைகளுக்குக் காரணம்; அவர்களின் நடவடிக்கை களைச் செம்மையாக்கிட வேண்டுமானால், இயல்புகளை மாற்றிட, அல்லது கட்டுக்குள் கொண்டு வரவேண்டும்; விஞ்ஞானம் அதற்குப் பயன்பட வேண்டும் என்ற கருத்து இன்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள உண்மைகளில ஒன்றாகும்.

குற்றவாளி ஒரு நோயாளி. குற்றவாளியைத் தண்டிப்பதனால் மட்டும் அவனைத் திருத்திவிட முடிவதில்லை.

ஒருவர் இருவரைத் திருத்திவிட்டாலும் குற்றம் எழாதபடி தடுத்துவிட முடிவதில்லை.

குற்றவாளி, ஒரு நோயாளி! ஆகவே அவனுக்கு உள்ள நோயைப் போக்கவேண்டும்; போக்க முடியும். இந்தக் கருத்துகளை இன்று அறிவாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஆனால், இதனைத் தொடர்ந்து, இயல்பினைக் கெடுத்திடும் நோயை நீக்கிட வழி கண்டறிந்திடும் முயற்சியில், விஞ்ஞானிகள் ஈடுபட்டு, புதிய முறை களைச் சமைத்து அளித்திடப் போதுமான தொகை செலவிடப்படுவதில்லை.

நிலவிலே காணப்படும் 'கறை'யின் தன்மையைக் கண்டறியச் செலவிடுவது உடனடியாகத் தேவையா, அல்லது மக்களுடைய மனத்திலே மூண்டிடும், அழுக்கு களைப்போக்கிட வழி கண்டிடச் செலவிடுவது உடனடித்தேவையா என்ற கேள்வி பிறந்துவிட்டிருக் கிறது.

குற்றவாளி ஒரு நோயாளியே என்ற பேருண்மையின் அடிப்படையில், நரம்புகள், உடல் உறுப்புக்களிலே சில ஆகியவற்றிலே பழுது பார்ப்பதன்மூலம், புதுப்பிப்பதன் மூலம், குற்றம் செய்திடும் இயல்பினை மாற்றிட முடியும் என்று கூறுகின்றனர், அந்தத் துறையின் விற்பன்னர்கள். ஆனால், அந்தத் துறைக்காகச் செலவிடப்படும் தொகை போதுமான அளவினதாக இல்லை. விண்வெளிபற்றிக் கிளம்பிவிட்டுள்ள வேட்கை பெரும் தொகையை விழுங்கி விடுகிறது.

குடல் வெந்து கிடப்பவன் வாய் நாற்றமடிப்பதும், நீர் கொண்டவன் தும்மியபடி இருப்பதும், வெப்ப நோயாளன் இருமிக்கிடப்பதும் காண்கிறோம். அவர்களின் நோயைப் போக்கிட மருந்தளிக்காமல், வாய் நாற்றக் காரனுக்கு நாற்பது ரூபாய் அபராதம், தும்மலொன்றுக்கு எட்டணா கட்டவேண்டும், இருமலுக்கு இரண்டு ரூபாய் அபராதம் என்று முறை கூறினால் எப்படி இருக்கும்; முறையாகுமா? ஆகாது. அதுபோலத்தான், ஒருவனுக்கு அமைந்து விட்ட உறுப்புகளின் தன்மைக் கோளாறு காரணமாக ஏற்பட்டுவிடும் நடவடிக்கைகளுக்காகத் தண்டனை விதித்திடும் முறை என்று கூறுகின்றனர்.

உடற்கூறு பற்றிய அறிவுத் துறையிலே கண்டறிய வேண்டுவன நிரம்ப உள்ளன. அந்தத் துறையிலே நல்ல வெற்றி கிட்டக்கிட்ட, குற்றவாளிகளாகப் பலரை ஆக்கிவிடும் அந்த நோயையே போக்கி விடலாம்; பெருமளவு குறைத்துவிடலாம் என்கின்றனர்.

மக்கள் தொகை எத்தனை வேகமாகவும் அளவினதாகவும் பெருகினாலும் கூடக் கவலையில்லை. விவசாயத் துறையிலும், பொருள் ஆக்கத் துறையிலும் புதுப்புதுக் கண்டு பிடிப்புகளைப் பெற்று அனைவருக்கும் 'வாழ்வு' அளித்திட இயலும் என்கின்றனர்.

நோயினால் மக்கள் மடிந்து போவது மட்டுமல்ல, பிழைத்துக்கொள்பவர்கள்கூட வலிவிழந்து போய்விடுவதன் காரணமாக, அவர்களின் உழைப்புத்திறன் கெட்டுப் போகிறது; அதன் காரணமாக உற்பத்தித் திறன் உருக்குலைந்து விடுகிறது. எனவே, நோய்களை நீக்கிட வழி காண வேண்டும்; காணமுடியும் என்கின்றனர்.

இந்தத் துறைகளில் செலவிடப்படும் பணம், மனித குலத்தின் இன்னலைத் துடைத்து இதம் தந்திட உடனடியாகப் பயன் தந்திடும். ஆனால், இந்தத் துறைகளுக்காகச் செலவிடுவதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகத் தொகையை வெறி என்று கூறத்தக்க ஆர்வ உணர்ச்சியுடன் அழிவுக் கருவிகளைக் காண்பதற்கான துறைகளுக்கு வல்லரசுகள் செலவிட்டு வருகின்றன!

மனிதனை, மிருக நிலையிலிருந்து விடுவித்து முன்னேற்றமடையச் செய்யப் பயன்பட வேண்டிய விஞ்



ஞானம், அதனை முறைப்படுத்திக் கட்டுக்குள் வைத்துக் கொள்ளத் தவறிவிட்டதன் காரணமாக, மீண்டும் மனிதனை மிருக நிலைக்கே கொண்டுபோய்ச் சேர்க்கப் பயன்பட்டு வருகிறது என்ற கருத்து இன்று பரவிக் கொண்டு வருகிறது.

இந்தக் கருத்தின் வெற்றியைப் பொறுத்திருக்கிறது, மனித குலத்தின் எதிர்காலம்.

கூடி வாழ்தல், கேடு செய்யாதிருத்தல், உழைத்துப் பிழைத்தல், பகிர்ந்து அளித்தல் என்பவை பாராட்டத் தக்க பண்புகள் என்று பேசிடும் நிலை மாறி, இவையே இனி மனிதகுலத்தின் வாழ்வுமுறைகள் என்றாக வேண்டும். அதிலே எந்த அளவு வெற்றி கிடைக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வேறுபாடு மறையும்.

தம்பி! இந்த எண்ணங்கள் எனக்கு ஏற்படக் காரணம் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறாயல்லவா! நான் ஏதும் பெரிய தத்துவ நூலைப் புதிதாகப் படித்து அதனால் ஏற்பட்ட எண்ணக் கொந்தளிப்புக் காரணமாக இதனை எழுதவில்லை. த. வெள்ளைப்பாண்டி, (பி.எஸ்.ஸி. இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்) செயிண்ட் ஜான்ஸ் கல்லூரி இதழில் தீட்டிய கவிதை ஒன்றைக் காணும் வாய்ப்புப் பெற்றேன். அதனைப் படித்ததால் இத்தனை, எண்ணங்கள் எழுந்தன; உன்னிடம் சொல்லி வைத்தேன்.

இதோ அந்தக் கவிதையையும் தந்திருக்கிறேன்; படித்துப் பயன் பெற!

எண்ணில்லாப் பொறிகளினை விசைகள் தம்மை
இருள்போக்கும் மின்னொளியை நிறைத்து வைத்தாய்
மண்ணுக்குட் புகுந்தாய்நற் கனியைக் கண்டாய்
மனமெட்டாத் தொலைவினையும் கைக்குள் கொண்டாய்
கண்ணுக்குத் தெரியாத பொருளை எல்லாம்
கண்டறியும் நுண்கருவி பலவும் செய்தாய்
விண்ணினையும் காற்றினையும் அளந்தெடுத்தாய்
வியக்கின்றேன்; வியக்கின்றேன்; வியக்கின்றேனே;

பிணியெல்லாம் போக்குதற்கு மருந்தைக் கண்டாய்
பிறநாட்டில் பேசுவதை இங்குக் கேட்டாய்
அணுவையும்நின் ஏவலனாய் ஆக்கிக் கொண்டே
அகலுலகைப் புதுமையினால் நிறைத்து விட்டாய்
இணையில்லாச் செயற்கைக்கோள் பறக்க விட்டாய்
இயற்கைதனை வென்றேனென் றலறு கின்றாய்
திணிசெருக்கால் உன்னைநீ அழித்தல் கண்டு
சிரிக்கின்றாள் சிரிக்கின்றாள் இயற்கை அன்னை!

ஆதிக்க வெறிகொண்டிவ் வண்ட மெல்லாம்
அழித்திடுவேன் நொடியில்என் றறிவிக் கின்றாய்
சோதித்துப் பார்ப்பாயாம் குண்டை வானில்;
தொல்லையினை யோரவில்லை: வருங்காலத்தில்
காதற்றும் காலற்றும் பார்வை யற்றும்
கருப்பையுள் குழவியதும் நலிதல் உண்டாம்
போதித்துப் பார்க்கின்றார் பெரியோ ரெல்லாம்
புழுதியிலே கொட்டியநெய் போலா யிற்றே!

ஏற்றங்கள் பலகண்ட மனிதன் இந்நாள்
இறங்கிவிட்டான் அழிவென்னும் புதைகுழிக்குள்:
காற்றெல்லாம் நஞ்சாக மாறக் கூடும்
கழனியெலாம் கருவற்றுப் போகக் கூடும்
ஊற்றுக்கள் நச்சாறாய் ஓடக் கூடும்
உண்ணுகின்ற மக்கள்உயிர் இழத்தல் கூடும்
கூற்றிங்குத் தலையைவிரித் தாட்டம் போடும்
குவலயமே வெற்றிடமாய்க் காட்சி கொள்ளும்!

பயனுள்ள வாள்தூக்கிப் பகையை வெல்லார்
பதடிகளாய்த் தம்முடலை யரிவார் போலும்
வயலுக்குக் களைநீக்கும் கருவி கொண்டு
வளர்பயிரைத் துண்டாக்க முனைவார் போலும்
கயமைக்கு நல்லறிவை உகுத்தல் போலும்
கருதிவிட்டாய் அணுவாலே யுலகைத் தாக்க
நயமான வேலைக்கே அணுவைக் கொண்டால்
நலமென்பேன் இல்லையேல் அழிவே மிஞ்சும்!

அண்ணன்,

அண்ணாதுரை

16-5-'65

காஞ்சிக் கடிதம்: 19

# சொக்கப்பனிடம் பட்ட கடன்

**அமெரிக்கக் கடனும் ரஷ்யக் கடனும்**

**புதுக் கடன் கொண்டு பழங்கடன் அடைப்பு**

**கடன் தீர்க்கும் அளவுக்குத்**
**தொழில் அமைப்பு ஏற்படாமை**

**நேரிடைப் பதிலும் திட்டவட்ட விளக்கமும் தேவை**

**காமராசரால் கழுகைக் கிளியாக்கிவிட முடியுமா?**

தம்பி,

சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சோணாசலத்திடம் புதிதாகக் கடன் வாங்குபவர் உண்டு; சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே மேலும் கடன் வாங்குபவர் உண்டா? கண்டதுண்டா?

இல்லை என்கிறீர்கள். அப்படி ஒருவர் எப்படி இருக்க முடியும் என்று கேட்கிறீர்கள். மலைபோல இருக்கிறார் தம்பி! மலைபோல! கண்டதில்லை என்கிறாய். நான் என்னத்தைச் சொல்ல!!

சொக்கப்பனிடம் பட்ட கடனை ஏன் திருப்பித்தர முடியவில்லை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்; மற்றவை பிறகு எளிதாகப் புரியும்.

சொக்கப்பனிடம் பட்ட கடன் விளக்கு ஆகாமல் மத்தாப்பாகிவிட்டால், வயலுக்குப் பாயாமல் விழலுக்குச் சென்றுவிட்டால், பணம் வீணாகிப் போகும்—பயன் கிடைக்காது. பயன் கிடைத்தாலல்லவா, கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்? கலியாணச் செலவுக்காகக் கடன் வாங்கிக்கொண்டு வந்து அதனைக் கழனி வாங்கச் செலவிட்டால் இரண்டோர் வருடத்தில் பட்ட கடனையும் தீர்த்துவிடலாம், கடன் படாமல் கலியாணத்தையும் பிறகு நடத்திக் கொள்ளலாம். அவ்விதமின்றி, கலியாணச் செலவுக்காகப் பெற்றுவந்த கடன் தொகையைக் கொண்டு காவடித் திருவிழா நடத்திவிட்டால், கலியாணந்தான் நடக்குமா, பட்ட கடனைத் தீர்க்கத்தான் வழி கிடைக்குமா! கந்தன் அருள் கிடைக்கலாம், அங்கே! மேலே!! இங்கே? கடன் கொடுத்தவன் 'பிடி வாரண்டு' அல்லவா அனுப்புவான்!

கடன்படுவது என்பதே அடியோடு தவறு அல்ல; தேவை, நேரம் இவைகளைப் பொருத்துக் கடன்படலாம்; அதனைக்கொண்டு தக்க பலன் கொடுக்கக்கூடிய செயலாற்றி, வருவாய்பெற்று, அதிலே மிச்சம்பிடித்து, பட்ட கடனையும் தீர்த்துவிடலாம், புதிய உடைமையையும் காணலாம். காண்கின்றனர், கருத்துடன் காரியமாற்றுபவர். கடனோடு கடன் சுந்தப்பொடி பலம் பத்து-என்பார்கள் கொச்சை மொழியில் அதுபோலக் கடன் பட்டுப் பட்டு, கவைக்குதவாத காரியத்தில் செலவிட்டுவிட்டால், சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சோணாசலத்தைத் தேடவேண்டியதுதான்! இதுவே தவறு, மோசம். நான் சொல்வது இதனைவிட விசித்திரம், சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே கடன் வாங்குவது!

பருவச் சேட்டைமிகுந்த அரும்பு மீசைக்காரன் 'ஐயா' வைத்து விட்டுப்போன அறுபது வேலி நிலத்தைக் காட்டிப் பத்து ஆயிரம் தான் கடன் வாங்குகிறான் முதலில். வட்டி வளருகிறது, கேட்டனுப்புகிறார்கள்; மீண்டும் அதே புள்ளியிடம் மற்றுமோர் கடன் வாங்கி, பழைய கடனுக்கான வட்டியைச் செலுத்துகிறான்! செலுத்துகிறானா!! அந்தப் புள்ளியே, புதிய கடன் கொடுக்கும்போது, பழைய கடனுக்கான வட்டித் தொகையை எடுத்துக்கொண்டு மிச்சத்தைத்தான் கொடுக்கிறார்.



கடைசியில் என்ன நிலை? இன்னும் இருப்பது என்ன? அந்த அரும்புமீசை மட்டுந்தான் என்று ஊரார் கேலி பேசும் நிலை.

நான் இந்த 'உல்லாச புருஷனை' அல்ல, காணச் சொல்லிக் கேட்டுக்கொண்டது. இந்தியப்பேரரசு, நம்ம மாநில அரசு இவைகளையே பாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் அரசு, சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே மறுபடியும் கடன் வாங்குவது போன்ற நிலையிலேதான் நடத்தப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் பட்ட கடனைத் தீர்க்க மறுபடியும் அமெரிக்காவிடமே கடன் வாங்கும் விந்தை நடந்தபடி இருக்கிறது.

நிலையில் இதேதான் மாநில அரசு! பேரரசிடம் பட்டுள்ள கடனைத் திருப்பித்தர, மாநில அரசுகள் மறுபடியும் பேரரசிடமே கடன் வாங்குகின்றன.

பேரரசிடம், மாநில அரசுகள் பட்டுள்ள கடன் தொகையில், 1965-66-ம் ஆண்டில் 274-கோடி ரூபாய் திருப்பித் தரவேண்டும்—தவணை முறைப்படி.

மாநில அரசுகள் பேரரசிடம் பட்ட கடன் தொகையைக் கொண்டு பயன்தரும் விதமாகச் செலவிட்டிருந்தால், பட்ட கடனைத் தவணை முறையிலே திருப்பித் தருவதற்கான வருவாய் கிடைத்திருக்கும். வருவாய் அந்த முறையில் கிடைக்கவில்லை.

எந்தப் பிரச்சினையையும் ஆராயும் போக்குடையவரும், காங்கிரஸ் கட்சியினருமான திரு. சந்தானம் மாநில அரசுகள் பெற்றுள்ள கடன் தொகையில் பாதிக்கு மேல், பயன் தராதவிதமாக, வருவாய் கிடைக்க முடியாத காரியங்களுக்காகச் செலவிட்டு விட்டதாகக் கூறுகிறார்.

நாம் கூறினால், அது பக்தவத்சலனாரின் அதி அற்புதமான மூளையைக் குழப்பிவிட்டுவிடுகிறது; ஆட்சியைக் கைப்பற்ற, எம்மை விரட்டச் சூழ்ச்சி நடக்கிறது என்கிறார். இது சந்தானம் சொன்னது; எதிர்க் கட்சிக்காரர் பேச்சு அல்ல. எனவே, எரிச்சல் எழத் தேவையில்லை.

வருவாய் கிடைக்கும் விதமாகக் கடன் தொகையைச் செலவழிக்காததால், 1965-66ல் செலுத்த வேண்டியுள்ள தவணைத் தொகையான 274-கோடி ரூபாய்க்கு வழி தெரியவில்லை மாநில அரசுகளுக்கு. எனனதான் செய்கிறார்கள்? சொக்கப்பனிடம் பட்ட கடனைத் திருப்பித் தரச் சொக்கப்பனிடமே மீண்டும் கடன் வாங்குகிறார்கள்.

274-கோடி என்றேனே, இது அசல் தொகையில் ஒரு பகுதி.

இத்துடன் வட்டியும் கட்டவேண்டுமே! அதற்காக 135-கோடி ரூபாய் தேவை. மொத்தத்தேவை இந்த ஆண்டுக்கு 409-கோடி ரூபாய்.

இதற்காகப் பேரரசிடம் மாநில அரசுகள் மீண்டும் 703-கோடி ரூபாய் கடன் வாங்குகிறார்கள். அந்தக் கடன் தொகையிலிருந்து, பழைய கடனுக்காக 409-கோடி ரூபாயைக் கட்டப் போகிறார்கள்!

இதுபோலவே பேரரசு கதர்த்தொழில் அமைப்புக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள்; அந்த அமைப்பும் 34-கோடி ரூபாய் தரவேண்டும்! அதற்காக, பேரரசு புதிய கடன் கொடுக்கிறார்கள் அந்த அமைப்புக்கு! அந்தப் புதிய கடனைக்கொண்டு பழைய கடனை அடைக்கப் போகிறது கதர் அமைப்பு!

இதற்கெல்லாம் பேரரசுக்குத் தொகை வேண்டுமே' அதற்கு வழி? பாடுபட்டுக் குவித்துள்ள வருவாயிலிருந்து எடுத்து வழங்கப் போகிறதா? இல்லை! இல்லை! அப்படி இருந்திருந்தால், பேரரசு, மாநில அரசுகளைத் தட்டிக் கேட்காதா; பட்ட கடனைக்கூடத் திருப்பித் தரமுடியாமல் புதுக் கடன் கேட்டுக் கொண்டிருக்கலாமா? இது உருப்பட வழியாகுமா? என்றெல்லாம். பேரரசு பட்டுள்ள கடன் தொகையைக் கொண்டு தக்கவருவாய் தேடிக் கொள்ளாததால் 1965—66 ஆண்டிலே மட்டும், இந்தியாவுக்கு உதவி செய்யும் கழகத்திடம் புதிதாகக் கடன் கேட்டிருக்கிறது, 560 கோடி ரூபாய்!!

மேலேயும் சரி கீழ்மட்டத்திலும் சரி, ஒரே முறை; சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே புதிய கடன் பெறுகிறமுறை.

இது நல்லதல்ல என்கிறார்கள் நிபுணர்கள்! இது கேவலம் என்கிறார் விஜயலட்சுமி பண்டிட்! இதைப்



பற்றிக் கவலைப்படுகிறார்கள் பலர்; பொருளாதார நிபுணர்கள்; பொறுப்புள்ள அதிகாரிகளாக இருந்தவர்கள்!

ஒரே ஒருவர் மட்டும், இதைப் பற்றிக் கவலை இல்லை என்று கூறுகிறார்; காமராஜர்!

சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடம் புதுக்கடன் வாங்குவது, நிலைமை எவ்வளவு மோசமாகி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது; காமராஜரோ, கவலை இல்லை என்று கூறுகிறார்.

சொக்கப்பனிடம் கடன்பட்டவர் எத்தப்பனாக இருந்தால், கொடுத்தவனுக்குத்தான் கவலை, வாங்கியவனுக்கு அல்ல! ஆனால், இந்தியப் பேரரசு எத்தப்பனாக முடியுமா! கொடுத்த கடனைத் திருப்பிப் பெற, கடன் கொடுத்தவன் எதை எதைத் தன்னிடம் ஒப்படைக்கச் சொல்லிக் கேட்பானோ என்ற அச்சமே வந்துவிட்டிருக்கிறது, பலருக்கு.

அமெரிக்காவிலிருந்து P.L. 480 என்ற சட்டப்படி இந்தியா பெற்றுள்ள பொருளுக்கான பணம், ரூபாயாகத் தரப்பட்டு அந்தத் தொகை இந்தியாவில் அமெரிக்காவின் கணக்கில் குவிந்துகொண்டு வந்திருக்கிறது.

இன்னும் கொஞ்ச காலத்தில் அமெரிக்கா இந்தியாவில் சேர்த்துவைத்துள்ள தொகை ஆயிரம் கோடி ரூபாயாகிவிடுமாம்! இப்போது 800 கோடிக்கு மேல் இருக்கிறதாம்.

இந்தத் தொகையை அமெரிக்கா இந்தியாவிலேயே தான் செலவிட வேண்டும்—அது நிபந்தனை.

அமெரிக்கா, வேறு சில வெளிநாடுகளுக்குத் தருவதாக ஒப்புக்கொண்டுள்ள பொருளை, இந்தியாவில் குவிந்துள்ள பணத்தைக் கொண்டு இந்தியாவிலே வாங்கி, அந்த வெளிநாடுகளுக்கு அனுப்பினால் என்ன? பணம் பாசி பிடித்துப்போகும் நிலையில் இருக்கிறதே! இந்தவிதமாகப் பயன்படுத்திக்கொண்டால் என்ன? என்ற பேச்சு அமெரிக்காவில் கிளம்பிவிட்டது. இதற்கு இந்தியப் பேரரசு இணங்கவில்லை. அமெரிக்க அரசு வற்புறுத்தவில்லை, இப்போதைக்கு! இந்தக் கருத்து அமெரிக்காவில் வலுப்பெற்றால், நிலைமை எப்படி மாற நேரிடும் என்பது

பற்றிக் கூறுவதற்கில்லை; ஆனால், நினைக்கும்போதே நடுக்கமெடுக்கிறது-விவரமறிந்தவர்களுக்கு.

அமெரிக்காவுக்குச் சொந்தமாகியுள்ள இந்தப் பெரிய தொகையைக் கொண்டு, இங்கே உள்ள பொருளை வாங்கி வெளிநாடுகளுக்கு அமெரிக்கா தன் கணக்கிலே அனுப்பினால் என்ன நேரிடுமென்றால், அந்த நாடுகளுக்கு அந்தப் பொருளை இந்தியா அனுப்பினால் இந்தியாவுக்குக் கிடைக்கக்கூடிய வெளிநாட்டுச் செலாவணி குறைந்துபோகும்; குறைந்து போனால், வெளிநாடுகளிலிருந்து இந்தியா வரவழைக்கும் பொருளுக்காகப் பணம் செலுத்த முடியாத திண்டாட்டம் இந்தியாவுக்கு ஏற்பட்டுவிடும். இந்த நிலையைப் பயங்கரமானது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இத்தகைய சிக்கல்கள் பல முளைத்தபடி உள்ளன.

ஆனால், எதற்கும் அஞ்சாமல் சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே புதிதாகக் கடன்வாங்கும் விந்தைச் செயலில் ஈடுபட்டபடி இருக்கிறார்கள்; எதிர்காலத்தை இடருள்ளதாக்கியபடி உள்ளனர், மெத்தத் திறமையுடன்.

கடன் கொடுக்கும் நாடுகளுக்கு ஏற்படாத கவலை உங்களுக்கு ஏன் ஏற்படவேண்டும் என்று கேட்பவர்கள் உயர்ந்த இடத்திலே இருந்துவிடுவதனாலேயே அந்தப் பேச்சு உயர்ந்ததாகி விடாது; ஊர்மெச்ச வாழ்பவர்களின் பேச்சுக்கு எதிர்ப்புப் பேசி ஏன் வம்பை விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் விவரம் தெரிந்த பலர் அந்தப் பேச்சு அறிவற்றது என்பதனை எடுத்துக் கூறாமலிருக்கிறார்கள்.

இன்று உலகிலே அமைந்துள்ள இருபெரும் போட்டி முகாம்கள், அமெரிக்காவும்—ரஷியாவும் என்பது அனைவருக்கும் தெரியும்.

வளர்ச்சி பெறாத, புதிதாக விடுதலை பெற்ற நாடுகளை, தத்தமது முகாமுக்கு அழைத்துக்கொள்ள, அமெரிக்கா—ரஷியா எனும் இருபெரு அரசுகளும் போட்டி போட்டுக்கொண்டு கடன் தருவது, இனாம் வழங்குவது, தொழில் நுட்ப அறிவு அளிப்பது, கூட்டுத் தொழில் அமைப்பது என்பவைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.



இந்தியப் பேரரசு, இந்த இருமுகாம்களில் எதிலும் சேராத 'நடுநிலை'க் கொள்கையைக் கொண்டது.

ஆனால் இந்தியப் பேரரசு, இந்த இரு முகாம்களிலும் தாராளமாகவும் ஏராளமாகவும் கடன் வாங்கியபடி இருக்கிறது.

இன்று இந்த இரு முகாம்களும், முகத்தைச் சுளிக்காமல், கேட்ட கடனைக் கொடுத்தபடி உள்ளன.

ஆனால், பெற்ற கடனை எப்படியும் திருப்பித் தர வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியின்படி, பணத்தைச் செலவிட்டு, தொழிலைப் பெருக்கி, வருவாய் கிடைக்கும் விதமாகப் பேரரசு நடந்து கொள்ளவில்லை.

மேலும் மேலும் கடன் வாங்கியே காலந்தள்ள வேண்டிய நிலையிலேதான் நாடு இருந்து வருகிறது.

அரசியல் பொது அறிவும் பொருளாதாரத்துறை நுண்ணறிவும் கொண்ட சமுதாயம் இந்தப் போக்கை, அபாயம் நிறைந்தது என்று கண்டிக்கவும் இந்த நிலைமைக்குக் காரணமாக இருந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் கட்சியின் ஆதிக்கத்தை அகற்றவும் தயங்காது.

இன்று நமது நாட்டிலே அந்த நிலையில், சமுதாயம் இல்லை. சர்க்கார் பட்ட கடன் என்றால் அது ஏதோ மக்களுக்குச் சம்பந்தமில்லாத ஒரு தனி விஷயம் என்று எண்ணிக் கொண்டுவிடும் மக்கள் மிகுதியாக இருக்கிறார்கள்—இன்று.

இதே நிலையில்தான் சமுதாயம் எதிர்காலத்திலும் இருக்கும் என்று எவரும் கூறிட முடியாது.

நமது கழகமும், முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட பிற அரசியல் அமைப்புகளும், மக்களிடம், உண்மை நிலையை எடுத்து விளக்கியபடி இருக்க வேண்டும். விளக்கிக்கொண்டு வருவது, உடனடியாகப் பலன் தராது போகலாம்—இடையிலே தருமபுரிகள் தோன்றலாம்—ஆனால், மெள்ள மெள்ள மெய்யறிவு சமுதாயத்திலே இடம்பெற்றே தீரும்; அப்போது இவைகளுக்கெல்லாம் மக்கள் 'கணக்குக்' கேட்பார்கள்!, ஜன

நாயக உணர்வு வளர்ந்துள்ள நாடுகளில் சர்க்காரை நடத்தும் கட்சியிடம் இவ்விதமான 'கணக்கு'களை மக்கள் கேட்கிறார்கள்; கேட்பதால் எதிர்க்கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும், மக்களுக்குப் பயந்து, எதிர்க்கட்சிகளுக்குப் பயந்து, நீதி நியாயததுக்குப் பயந்து நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது. இங்கோ, சொக்கப் பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே மேலும் கடன் வாங்கி, வாங்கிய கடனை வகையான முறையில் செலவிட்டு வருவாயைப் பெருக்கிக் கொள்ளா மல் நடந்துகொள்ளும் ஒரு அரசு அட்டகாசம் செய் கிறது; அதனை நீக்கிட, மாற்றி அமைக்க, மக்கள் துணிந்து எழ இயலவில்லை.

கொடுப்பவர் கிடைக்கும்போது கடன் வாங்குவது எளிதான காரியம், அதிலே பெருமை இல்லை; புதிய சுமை ஏறுகிறது என்றுதான் பொருள்.

கொடுத்த கடனைத் திருப்பிச் செலுத்திவிட முடியும்; ஏனென்றால், அந்தத் தொகையைக்கொண்டு அமைக்கப் பட்டுள்ள தொழிலில், ஆதாயம் எதிர்பார்த்த அளவு கிடைத்து வருகிறது, ஆகவே, கவலை வேண்டாம் என்று கூறிடும் அரசுதான், மக்களின் நன்மதிப்பைப் பெறக்கூடிய அரசு.

இன்று வரையில், இந்தியப் பேரரசு, பெரும் பெரும் தொகையினைக் கொட்டிக் கட்டி நடத்தி வரும் தொழில் அமைப்புகள் ஆதாயம் தந்துவருகின்றனவா என்ற சாதாரணக் கேள்விக்கு, நேர்மையுடனும் நேரிடையாக வும் பதில் கூறட்டுமே பார்க்கலாம், அரசாளும் பெரிய தலைவர்கள்!

கடன் வாங்காமல் இருக்க முடியுமா என்று கேட் பதும், அமெரிக்காவே ஒரு காலத்தில் கடன் வாங்கி இருக் கிறது தெரியுமா? ரஷியாவே கடன் வாங்கி இருக்கிறது தெரியுமா? என்று கேட்பதும், புதிதாகத் தொழில் துவக் கிட, கடன் வாங்கித்தானே ஆகவேண்டும்? என்று கேட் பதும் எனக்குத் தெரியும்.

அரைத்த மாவையே அரைத்துக் காட்டாமல் நேர்மை யாகவும் நேரிடையாகவும் அந்தப் பெரிய தலைவர் களைப் பதில் கூறச்சொல்லிக் கேட்டுப் பார், தம்பி! வாங்கிய கடனைக்கொண்டு பேரரசு துவக்கி நடத்திவரும்



தொழில் அமைப்புகளிலே, ஆதாயம் கிடைக்கிறதா? இல்லை என்றால், ஏன்? ஆதாயம் கிடைக்காதபோது, கடனைத் திருப்பிக்கட்ட வழி ஏற்படுமா? கடனைக்கூடத் திருப்பிக் கட்டுவதற்கான வருவாயைப் பெறமுடியாத நிலையில் தொழில்களை நடத்தி வருவது, திறமைக் குறைவைத்தானே காட்டுகிறது?

இந்தத் திறமைக் குறைவு உள்ள ஒரு ஆட்சியை நடத்திவரும் கட்சியை மக்கள் எதற்காக மறுபடியும் மறு படியும் ஆதரிக்க வேண்டும்? இந்தத் திறமைக் குறைவு நெளியும் நிலையில் உள்ள கட்சி, நாட்டிலே வேறு எந்தக் கட்சிக்கும் நாடாளும் தகுதியும் திறமையும் கிடையாது என்று பேசுவது முறையாகுமா?

தம்பி, இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில் தான் கிடைக்கிறது காமராஜர்களிடமிருந்து: எதிர்க் கட்சிக்காரன் பேச்சைக் கேட்காதே!!—இதுதான் பதில் பேச்சு!

சர்க்காரே நியமித்துள்ள தணிக்கைக் குழு சர்க்கார் துறையிலே உள்ள தொழில் அமைப்புகளிலே காணக் கிடக்கும், ஊழல் ஊதாரித்தனம், மந்தம், முறைகேடு, நஷ்டம் ஆகியவை பற்றிப் புட்டுப் புட்டுக் காட்டுகிறது.

எடுத்துக் காட்டுக்காக ஒரு கணக்கு:

இந்தியப் பேரரசு 870 கோடி ரூபாய்களை மூல தனமாகப் போட்டு அமைத்து நடத்திவரும் தொழில் அமைப்புகளின் மூலம் கிடைத்துள்ள வருவாய், சர்க்கார் கணக்கின்படி 3 கோடியே 22 இலட்ச ரூபாய்.

போடப்பட்டுள்ள மூலதனத்துக்கு வட்டி மட்டும் எவ்வளவு தெரியுமா தம்பி! 24 கோடி ரூபாய்!

இந்த 3 கோடியே 22 இலட்ச ரூபாய் இலாபம் என்பது, வட்டி கொடுத்தான பிறகு அல்ல!! இந்த 3 கோடியே 22 இலட்ச ரூபாய் இலாபமும் எப்படிக் கிடைத்தது? தொழிற்சாலையிலே பொருளை உற்பத்தி செய்ததன் மூலம் கிடைத்தது அல்ல. பண்டங்களை வாங்கி விற்றதிலே கிடைத்த இலாபம்!

இதைக் கண்டு பொறுப்புள்ள கட்சி வெட்கப் பட்டிருக்க வேண்டும்; பொறுப்புள்ள மக்கள் இந்த

நிலைமைக்குக் காரணமாக உள்ள கட்சியை வீழ்த்தி யிருக்க வேண்டும்.

பொதுப் பணத்தையும், கடனாகப் பெற்ற பணத்தை யும்—ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை, வகையற்ற விதமாகச் செலவிட்டு, ஆதாயம் தராதவிதமாகத் தொழில் அமைப்புகள் நடத்தி, மக்களுக்கு—எதிர்காலச் சந்ததிக்கும் சேர்த்து—துரோகம் செய்திடும் ஒரு கட்சியை வேறு எந்த நாட்டிலும், தாங்கிக்கொள்ள மாட்டார்கள். இங்கு அந்தக் கட்சியை விட்டால் வேறு வக்கு வழி இல்லை என்று கூறிடத் தக்க அளவுக்கு நிலைமை மோச மாகி வருகிறது.

அத்தகைய மோசமான நிலைமையை மாற்றி, காரிருளைக் கலைத்திடும் அறிவு ஒளியைத் தந்திடும் எழு ஞாயிறாகத் திகழ்கிறது நமது கழகம்.

ஆபத்து நிரம்பிய ஒரு எதிர்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் அரசினர், சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே கடன் வாங்கும் போக்கிலே நடந்துகொள்கிறீர்களே, இது முறையா சரியா என்று கேட்கும்போது, கடனைத் திருப்பிக் கட்டக்கூடிய வருவாய் பெருகி வருகிறது என்ற கணக்குக் காட்டாமல், வேறு ஏதேதோ தேவையற்ற பிரச்சினைகளைப் பேசி வருகின்றனர்.

தம்பி! யாரோ சொல்லியிருப்பார்கள் போலிருக் கிறது காமராஜருக்கு; நீங்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராகி விட்டிருக்கிறீர்கள். ஆகவே, இனிச் சற்று அதிகமாக, வெளிநாட்டுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுங்கள் என்று. இம்முறை நடத்தினாரே—என்ன பயணம்?—மின்னல் வேகச் சூறாவளிப் பயணம்!! அதிலே வெளிநாட்டுப் பிரச்சினை பற்றியும் பேசியிருக்கிறார்.

மின்னல், நிரந்தர ஒளியைத் தருவதில்லை; சூறாவளி நல்லதைக் கொடுப்பதில்லை; இதை உணர்ந்துதானோ என்னவோ சில இதழ்கள், காமராஜரின் சுற்றுப் பயணத்தை, மின்னல் வேகச் சூறாவளிப் பயணம் என்று எழுதியிருக்கின்றன. அந்தப் பயணத்தின்போதுதான் காமராஜர், ரஷியாவுடன் சேருவதா அமெரிக்காவுடன் சேருவதா என்ற பிரச்சினையைப் பற்றிக் கூடப் பேசி யிருக்கிறார்.



மற்ற யாருக்கு எந்தவிதமான கருத்து இருந்து வந்த போதிலும், தம்பி! நமது கழகம், ரஷியாவுடன் சேர வேண்டாம், அமெரிக்காவுடன் கூட்டுச் சேர வேண்டும் என்று எப்போதும் வலியுறுத்தியது இல்லை; இனியும் சொல்வதாக இல்லை.

கழகம் கூறுவதெல்லாம், எந்த இடத்திலிருந்து பெறு கிற கடனாக இருந்தாலும்—கடன் கடன்தான் என்பதும், அந்தக் கடனை, வருவாய் தரத்தக்க விதமாகச் செல விட்டுத் தொழில் அமைப்புகளைக் காணவேண்டும் என்பதும்,

இதிலே இன்றுவரை, இந்தியப் பேரரசு, வருந்தத் தக்க, கண்டிக்கத்தக்க தோல்விகளைத்தான் பெற்றளித்து இருக்கிறது என்பதும்,

இதன் காரணமாக இந்தத் தலைமுறை மட்டுமல் லாமல், வருகின்ற தலைமுறைக்கும், பெருஞ்சுமை ஏறிவிட் டிருக்கிறது என்பதும்,

இத்தனை கேட்டினுக்கும் காரணமாக உள்ள காங்கிரஸ் கட்சியிடம் மீண்டும் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவிப்பது தவறு என்பதும் ஆகிய இவைகளே.

அமெரிக்கா, நமக்குச் சரியானபடி மதிப்பளித்துப் பரிவுகாட்டி, நியாயம்காட்டி நடந்துகொள்ளவில்லை; ரஷியா அவ்விதம் இல்லை; நமக்காகப் பரிந்துபேசி வருகிறது. ஆகவேதான் லால்பகதூர் ரஷியா போகிறார் என்கிறார் காமராஜர்.

இவ்விதம் லால்பகதூர் பேசமாட்டார்.

இனி என்றென்றும் லால்பகதூர், அமெரிக்கா போகவே கூடாது என்று முடிவு எடுத்துவிடவில்லை.

இனி என்றென்றும் எந்தவிதமான உதவியும் அமெரிக்காவிடமிருந்து நமக்குத் தேவையே இல்லை என்று லால்பகதூர் அறிவித்துவிடவில்லை.

வெட்கப்படாமல் உண்மையை ஒப்புக்கொள்வ தானால், லால்பகதூர் அமெரிக்கா போகாமல் ரஷியா சென்றதற்குக் காரணம், இப்போது இங்கே வரவேண்

டாம் என்று அமெரிக்கத் தலைவர் ஜான்சன் சொன்னது தான்.

காமராஜரின் 'கண்டுபிடிப்பு' வேறு!!

அவருடைய அந்தப் பேச்சு ஆங்கில ஏடுகளில் எடுப்பான முறையிலே வெளியிடப்பட்டாலேபோதும், அவருக்கும் சங்கடம் ஏற்படும், இந்தியப் பேரரசுக்கும் சங்கடம் விளையக்கூடும்.

நல்ல வேளையாக இங்கே பேசினார், தமிழில்! இப்படியா பேசினீர்கள் என்று யாரேனும், டில்லி வட்டாரத்திலே கேட்டால், உடனே, நான் பேசியது அவ்விதம் அல்ல பத்திரிகைக்காரர்கள் திருத்திப் போட்டுவிட்டார்கள் என்று கூறிடத்தெரியும் காமராஜருக்கு. முன்பு ஒரே அடியாக அடித்தாரல்லவா, இந்தியிலே அறிக்கை வந்தால், கிழித்துப்போடுவோம் என்று நான் சொல்லவே இல்லை என்று, வடக்கே உள்ளவர்கள் கேட்டபோது! அதுபோல!!

இப்போது உள்ள பிரச்சினை, இந்தியா ரஷியாவிடம் நேசமாக இருப்பதா, அமெரிக்காவுடன் நட்பாக இருப்பதா என்பது அல்ல.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன், இப்போது இங்கே வரவேண்டாம் என்று கூறியது பொறுத்துக் கொள்ளக்கூடியதுமல்ல, மறந்துவிடத்தக்கதுமல்ல; அந்தப் பேச்சு ஜான்சனுடைய தரத்தையே வெகுவாகக் குறைத்து விட்டிருக்கிறது என்பதையும் நான் மறுப்பவனல்ல.

ஆனால் தம்பி! காமராஜர் பேசியதில் இருந்து, இனி அமெரிக்காவின் உதவி கேட்டிட இந்தியப் பேரரசு விரும்பாது என்று மட்டும் யாரும் எண்ணிக்கொள்ள வேண்டாம், அவருக்கேகூட அந்த எண்ணம் ஏற்பட்டு விடக்கூடாது. சூறாவளிப் பயணத்தின் காரணமாக, அவர் நிலைமையை மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார்.

அவர் அத்தனை வீராவேசமாக இங்கே பேசிக் கொண்டிருந்த நாளில், அமெரிக்காவில், உதவி கேட்டுக் கொண்டு, உருக்கமாக ஒரு மேத்தா பேசிக்கொண்டிருந்தார்.

ஆமாம், தம்பி! அசோக்மேத்தா, இந்தியாவுக்கு உதவி, தாராளமாகவும் ஏராளமாகவும் செய்யும்படி



ரஷியாவில் பேசிக்கொண்டிருக்கும் அதே நாட்களில், இந்தியாவுக்கு அதிக அளவில் உதவிசெய்யும்படி, மற்றொரு மேத்தா,—ஜி. எல் மேத்தா—அமெரிக்காவில் பேசிக்கொண்டிருந்தார்.

மே திங்கள் 11, 12 நாளிதழ்களைப் பார்த்தால், இரு வேறு நாடுகளில் இருவேறு மேத்தாக்கள் இந்தியாவுக்கு உதவி அளிக்கும்படி உருக்கத்துடன் வேண்டிக்கொண்ட செய்திகளைக் காணலாம்.

அதே இதழ்களில் மின்னல் வேகச் சூறாவளியார், அமெரிக்காவைத்தூக்கி ஆறுகாததூரம் வீசிப்போட்டு விட்டு, சோவியத் ரஷியாவுடன் சரசமாடிடும் விந்தைப் பேச்சுப் பேசியதையும் காணலாம்

இவைகளுக்குள் உள்ள முரண்பாடுகளை இங்கு உள்ள மக்கள் அவ்வளவாகக் கவனிக்கமாட்டார்கள்; அவர்களில் மிகப்பலர் இன்னமும் அண்டத்தை ஆதிசேஷன் தாங்குகிறார் என்பதையும், அரிபரந்தாமன் திருப்பாற்கடலில் ஆலிலைமீது பள்ளிகொண்டிருக்கிறார் என்பதையும் 'இருந்தாலும் இருக்கும்' என்று ஏற்றுக் கொண்டுள்ளவர்கள்!

ஆனால், விவரம் தெரிந்தவர்கள், விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

நான், தம்பி! அந்த முரண்பாடுபற்றிக்கூட இப்போது குறிப்பிடவில்லை; நான் கேட்பதெல்லாம் கடன் சுமை ஏறிக்கொண்டே வருகிறதே. கடனைத் திருப்பிக் கொடுத்திடத்தக்க முறையில், வருவாய்தரும் தொழில் அமைப்பு ஏற்படவில்லையே, இதற்கு இன்று அரசாளும் காங்கிரசார் என்ன சமாதானம் கூறுகிறார்கள் என்பது தான்.

தம்பி! சர்க்காரிடம் பெற்ற கடன் மட்டுமல்ல; ஏராளமான வெளிநாட்டு முதலாளிகள், குறிப்பாக அமெரிக்க முதலாளிகள், முதல் போட்டு இங்கே தொழில் நடத்தி, இலாபத்தைக் கோடிக்கணக்கில் தத்தமது நாடுகளுக்குக் கொண்டுசெல்கிறார்கள். இங்குள்ள 'முதலாளிகளுடன்' கூட்டுச்சேர்ந்து தொழில் நடத்துகிறார்கள்; இலாபம் குவிந்தபடி இருக்கிறார்கள்,

இவை யாவும் எதிர்காலத்தில், இந்த நாட்டின் பொருளாதார யந்திரத்தின் சூத்திரதாரிகளாக வெளி நாட்டார்களே ஆகிவிட்டுள்ளனர் என்ற பேராபத்தை மூட்டிவிடலாம்.

இப்போதே, சுயராஜ்யத்துக்கு முன்பு இருந்ததைவிட, மிக அதிகமான அளவு, பிரிட்டிஷ் அமெரிக்க முதலாளி மார்களின் ஆதிக்கம் இங்கு வளர்ந்துவிட்டிருக்கிறது. இதனைக் காங்கிரஸ் தலைவர்கள் மறுத்திட முடியாது.

கடனும் நிரம்ப வாங்கி இருக்கிறார்கள்; பெரிய பெரிய தொழில்களிலும் வெளிநாட்டாரின் பிடி அதிக மாகி வந்திருக்கிறது, இந்தியப் பேரரசு துவக்கி நடத்தி வரும் தொழில்களில், மகிழத்தக்க வருவாய் கிடைக்க வில்லை; ஊழல் ஊதாரித்தனம் காரணமாகப் பல அமைப்புகளிலே நட்டம் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது.

இவை பெருமை தரத்தக்கவைகளா?

பாருங்கள் எமது ஆட்சித் திறமையை என்று கூறி' காங்கிரஸ் தலைவர்கள் மார்தட்டிக் கொள்ளத் தக்கவையா?

இவற்றைச் செய்திடும் ஒரு கட்சி, மக்களின் ஆதரவைப் பெறுவதற்கேற்ற தகுதியைக் கொண்டது தானா?

இந்தக் கேள்விகள் இன்று பெரும்பாலான மக்களின் மனத்தைக் குடையாமலிருக்கலாம்; ஆனால், மக்கள் இவை பற்றி என்றைக்குமேவா சிந்திக்கமாட்டார்கள்?

தம்பி! மக்களை இந்த விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கச் செய்யவேண்டிய பொறுப்பைத்தான் கழகம் மேற்கொண்டிருக்கிறது; அதனைத் தக்க முறையில் நடத்திக்கொண்டும் வருகிறது.

எனவேதான் காமராஜர், மாதத்தில் இருபது நாட்கள் நான் தமிழ் நாட்டிலே சுற்றுப் பயணம் செய்யப் போகிறேன் என்று அறிவிக்கிறார்.

இதைவிடப் பெருமை தரத்தக்க 'சான்று' வேறு தேவையில்லை, நமது கழகத்துக்கு.



நாக நாட்டுப் பிரச்சினை, பாஞ்சாலச் சிக்கல், மத்தியப் பிரதேசத்து மாச்சரியம், உத்திரப்பிரதேசத்து உபத்திரவம், ஒரிசா ஊழல், மைசூர் மனத்தாங்கல், பாகிஸ்தான் பகை, சீனாவின் தாக்குதல் எனும் இன்னோ ரன்ன எல்லாப் பிரச்சினைகளுக்கும் பத்தே நாள்; நமது கழகம் ஏற்படுத்தி வைத்துள்ள எழுச்சியை, மக்களின் விழிப்புணர்ச்சியை அழித்திடும் முயற்சிக்கு இருபதுநாள்!

அவ்வளவு வேலை இருப்பதாக உணருகிறாரே காமராஜர், ஒப்புக்கொள்கிறாரே மறைமுகமாக, அது போதும், நமக்கு நமது பணியின் தரத்திலும் அளவிலும் பெருமை இருக்கிறது, பலன் இருக்கிறது என்பதை உணர்த்த.

அகில இந்தியாவுக்கும் சேர்த்து அவர் தலைவர்!! ஆமாம், தம்பி! ஆனால் அவர், மாதத்தில் இருபது நாள் இங்கு இருந்தாக வேண்டும் என்று நிலைமை!!

தருமபுரியில் வெற்றி பெற்றதனால், வேறு சில தலைவர்கள், கழகம் செல்வாக்கு இழந்துவிட்டது, காங்கிரசுக்குச் செல்வாக்கு அதிகமாகி விட்டது என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள்; காமராஜருக்குத் தெரிகிறது, தருமபுரி வெற்றியைக் கொண்டு கணக்குப் போட்டு ஏமாறக்கூடாது என்று; ஆகவேதான், மாதத் தில் இருபது நாள் இங்கு!!

மாதத்தில் இருபது நாள் காமராஜர், மின்னல் வேகச் சூறாவளிச் சுற்றுப் பயணம் நடத்தி, மக்களிடம் கழகம் ஏற்படுத்தி வைத்துள்ள எழுச்சியை மாய்த்திடும் முயற்சி யில் ஈடுபட வேண்டி ஏற்பட்டுவிட்டிருக்கிறது. இது என்னைப் பொருத்தவரையில், தம்பி! ஒரு இனிப்பளிக்கும் நிகழ்ச்சியாகவே தோன்றுகிறது.

காமராஜருக்கு நிரம்ப வேலை தர, கழகம் களிப்புடன் காத்துக்கொண்டிருக்கிறது.

ஆனால் ஒன்று. கழகம் எழுப்பிடும் பிரச்சினைகளை நேர்மையாகவும் நேரிடையாகவும் சந்தித்து, தக்க விளக்கம் தரவேண்டும் காமராஜர். சுற்றி வளைத்துப் பேசுவது, சூடம் கொளுத்திப் பூஜை செய்வோர்களின் புன்னகையைப் பெற்றிடப் போதும். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது, எடுபிடிகளின் எக்கா

ளத்துக்குப் போதும்! அவனே! இவனே! என்று பேசுவது,
பண்பு நிரம்பப் பெறவேண்டும் என்பதைமட்டுமே
விளக்கிக் காட்டிடும். மக்களின் மனத்திலே ஏற்பட்டுள்ள
அச்சம், அய்யப்பாடு, அருவருப்பு, அலுப்பு இவைகளைப்
போக்க நேர்மை வேண்டும், நேரிடையான பதில்
வேண்டும், திட்டவட்டமான விளக்கம் வேண்டும்.

இதனைக் கருத்திலேகொண்டு, காமராஜர், இருபது
நாட்கள் அல்ல, இருபது நிமிடம் பேசினாலும், விவர
மறிந்தோர் பாராட்டுவர். குயில் நாளெல்லாம் பாடித்
தானா பாராட்டுப் பெறுகிறது; இல்லையல்லவா!!

மக்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள், ஏன்
எங்கள் இன்னல் போகவில்லை,

எங்கள் இன்னலைப் போக்கத் தீட்டிய திட்டங்கள்
ஏன் எங்களை வாழவைக்கவில்லை,

எங்களை வாழவைக்க என்று சொல்லிப் போட்ட
திட்டத்தின் பலன் எப்படிச் சீமான்களிடம் சிக்கிக்
கொண்டது,

அப்படிச் சீமான்களிடம் அந்தப் பலன் சிக்கிக்
கொண்டதை ஏன் நீங்கள் தடுக்கவில்லை,

தடுக்காதது மட்டுமல்ல அவர்களுடன் கூடிக் குலாவித்
குழலூதி வருகிறீர்களே, அது ஏன்?

அது மட்டுமல்லாமல், அந்த அக்கிரமக்காரர்களிட
மிருந்து, கட்சிக்காகக் கோடி கோடியாகப் பறித்துக்
கொள்கிறீர்களே, அது முறையா?

அப்படிப் பறித்துக்கொண்டு பிழைத்து வரும் நீங்கள்,
சோஷியலிசம் பேசுகிறீர்களே, அது உண்மையாக இருக்க
முடியுமா?

ஊர்க்குடி கெடுப்பவனை உறவினனாக்கிக்கொண்டு
ஊர் வாழ வகுக்கப்பட்ட சோஷியலிசத்தை நடத்திக்
காட்ட முடியுமா? இவை போன்றவைகளை.

அவனுக்கு என்ன தெரியும்! இவனுக்கு என்ன
முடியும்! எல்லாம் எனக்குத் தெரியும்! எதுவும் என்னால்
தான் முடியும்!!—என்ற இந்த முறையில், இருபது
நாட்களா, முப்பது நாட்கள் பேசினாலும், மக்களிடம்



நன்மதிப்பும் பெறமுடியாது, கட்சியின் எதிர்காலத்தை
யும் செம்மைப்படுத்திக்கொள்ள முடியாது.

இப்போது நடைபெற்று முடிந்த சூறாவளிபோலத்
தான் மேலும் பல சூறாவளிகள் நடக்கும். அதுதான்
மாதத்தில் இருபது நாட்களுக்கு என்றால், மேளதாளம்,
தீவட்டி மத்தாப்பு, கோச்சு மோட்டார், பூக்கடை பழக்
கடை, மூங்கில் துணிமணி, ஒலிபெருக்கி அச்சகம் இவை
களுக்கு வருவாயும், பல செல்வவான்களுக்குச் செலவும்,
மக்களுக்கு நேரக்கேடும் ஏற்பட முடியுமே தவிர, வேறு
உருப்படியான பலன் ஏற்படாது.

காமராஜர், தாராளமாக அதைச் செய்து பார்க்
கட்டும்.

மாதத்தில் இருபது நாட்கள் நான் தமிழ் நாட்டில்
இருக்கப்போகிறேன் என்று அவர் சொல்லும்போதே,
இந்தியப் பேரரசின் தலைவர்களின் நினைவு, திராவிட
முன்னேற்றக் கழகத்தின் மீதுதான் இயற்கையிலேயே
செல்லும். ஏனெனில், எத்தனை கசப்பானதாக இருப்
பினும், உண்மையை அவர்களும் ஒப்புக்கொண்டாக
வேண்டுமே; தமிழகத்தில் பல எதிர்கட்சிகள் இருந்
தாலும், திராவிட முன்னேற்றக்கழகம்தான் முன்னணியில்
நிற்கிறது என்ற உண்மையை. ஆக, காமராஜர் மாதத்தில்
இருபது நாள் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்கிறார்
என்றால், என்ன பொருள்கொள்ள முடியும்? திராவிட
முன்னேற்றக் கழகத்தின் வலிவு அந்த அளவு இருக்கிறது
என்பதைத்தானே!

இங்கே மந்திரிகள் இருக்கிறார்கள்; தலைவர்கள்
நிரம்ப! புதிதுபுதிதாக!! பேச்சாளர்கள் புதுப்புது பூச்சு
களுடன்!!-இவ்வளவு இருந்தும், ‘பெரிய மேளம்’ வந்தாக
வேண்டும் என்ற நிலைமை! அதுவும் ஒருவேளை இரண்டு
வேளைக்கு அல்ல! ஒருநாள் இரண்டு நாளைக்கு அல்ல;
மாதத்தில் இருபது நாட்களுக்கு!! அவ்வளவு வேலை
இருக்கிறது. இங்குள்ள காங்கிரஸ் மந்திரிகளும் தலைவர்
களும், பேசுகிறார்கள், நித்தநித்தம்; காரசாரமாக!!
ஆனால், காமராஜருக்குத் திருப்தி ஏற்படவில்லை.
மக்களை வசப்படுத்த இவர்களால் முடியவில்லை என்று
எண்ணுகிறார், மறைமுகமாக அதை எடுத்தும் காட்டு
கிறார். காட்டிவிட்டுக் கூறுகிறார், நான் வருகிறேன்,

நானே வருகிறேன், மாதத்தில் இருபதுநாள் வருகிறேன் என்று.

மாதத்தில் இருபது நாள், காங்கிரஸ் கூட்டம் நடக்கும் என்று அல்ல,

மந்திரிகளும் காங்கிரஸ் பேச்சாளர்களும் கூட்டம் நடத்துவார்கள் என்று அல்ல,

நான் வருகிறேன்!
நானே வருகிறேன்!

என்பதாகப் பேசுகிறார்.

பெரிய டாக்டரே வரப்போகிறார், இங்கேயே தங்கி இருந்து வைத்தியம் செய்யப்போகிறார் என்பது, நோயாளியின் நிலைமை அத்தனை மோசமாகிவிட்டிருக்கிறது என்பதற்குத்தானே அடையாளம்?

அதுபோலத்தான், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் நிலைமை, 'பெரிய டாக்டர்' வந்து தீரவேண்டிய விதமாக ஆகிவிட்டிருக்கிறது.

இருபது நாட்கள் அல்ல, மாதம் முழுவதும் இங்கேயே இருந்து, பேசி வந்தாலும், ஆட்சிமுறை இன்றுள்ளது போல, மக்களை வாழவைக்காததாக, ஊழல் ஊதாரித்தனம் நெளிவதாக, முதலாளிகளைக் கொழுக்கவைப்பதாக, கடன் பளுவை அதிகப்படுத்துவதாக, சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே கடன் வாங்கும் முறையினதாக இருந்து வரும் வரையில்,

ஊர்க்குடி கெடுப்பவர்களும், முதலாளிகளும், கள்ள மார்க்கட்காரரும் கொள்ளை இலாபம் அடிப்பவனும், கொள்கை அறியாதவனும் பிடி ஆட்களும், பேரம் பேசிகளும் சோரம் போனவர்களும், காங்கிரஸ் கட்சியின் நடுநாயகங்களாக இருந்து வரும் வரையில், மாதத்தில் இருபது நாளென்ன, முப்பது நாளும் இங்கே முகாமடித்தாலும், பலன் என்ன கிடைத்துவிடும்! பச்சை வண்ணம் பூசி, கழுகைக் கிளியாக்கிவிட முடியுமா, பளிங்குப் பாத்திரத்தில் ஊற்றித் தருவதால் காடி, பாலாகிவிடுமா?




ஒரு பலன், உருப்படியான பலன், காமராஜர் அறிவித்துள்ள திட்டத்தின்படி கிடைப்பது, கழகத்தின் வளர்ச்சியின் அளவு இந்தியப் பேரரசுக்குப் புரிகிறதே அதுதான். அந்த மகிழ்ச்சி எனக்கு!!

அரசியல் நிலைமைகளை, ஆட்சியாளர்களால் ஏற்படும் கேடுபாடுகளை மக்களிடம் எடுத்துக் கூறிவருவது மகத்தான ஜனநாயகக் கடமை. அந்தக் கடமையைச் செய்து வருகிறது கழகம்; அதனை எதிர்த்து இருபது நாள் சுற்றுப்பயணம் மட்டும் செய்து பலன் காண எண்ணுவதைவிட, ஆட்சி முறையைத் திருத்த வழி என்ன என்று யோசிக்க ஒருநாள், காங்கிரஸ் கட்சிமீது மக்கள் வெறுப்புக்கொள்ளத்தக்க நிலைமையை உண்டாக்கி வைப்பவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் காங்கிரசின் செல்வாக்கைப் பயன்படுத்தித் தமது சுயநலனைப் பெருக்கிக் கொள்கிறார்களே, அதனை ஒழிப்பது எப்படி என்பதற்கு ஒருநாள், உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளின் கொட்டம் வளர்ந்து வருகிறதே அதனை அடக்கிட ஒடுக்கிட வழி என்ன என்பதுபற்றி யோசிக்க ஒருநாள், சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே மீண்டும் கடன் வாங்கும் போக்கிலே அரசு நடந்துகொள்கிறதே, அதனைத் திருத்துவது எப்படி என்பது பற்றி யோசிக்க ஒருநாள் என்ற முறையில், மிச்சமிருக்கும் பத்து நாட்களையாவது காமராஜர் பயன்படுத்தினால், நல்லது. நான் சொல்லியா அவர் கேட்பார்! ஏ! அப்பா! அவர் எவ்வளவு பெரிய உயரத்தில் இருக்கிறார்!! என் பேச்சு காதில் விழுமா!

நான் சொல்வது அவருடைய காதிலே வீழ்ந்தாலும் வீழாவிட்டாலும், தம்பி! உன் செவிவழி நுழைந்து நெஞ்சிலே நிறைந்திருந்தால், அது போதும் எனக்கு. அதனால்தான் உன்னிடம் சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே மறுபடி கடன் வாங்கும் போக்கிலே காங்கிரஸ் அரசு நடந்துகொண்டு வருவது பற்றிச் சொன்னேன். பட்டம், பதவி, பர்மிட்டு, லைசென்சு இலைகளுக்காக ஏங்கிக் கிடப்பவர்கள், பதவிப் பல்லக்கினைச் சுமந்து திரிந்தால் பாகும் பருப்பும் சுவைக்கக் கிடைக்கும் என்று நினைத்துக் காத்துக் கிடப்பவர்கள், ஐயோ! நம்மால் ஆகுமா? என்று அஞ்சிக் கிடப்பவர்கள், விளைந்த காட்டுக் குருவிகள், ஒளிவீழ்ந்து

மாய்ந்திடும் விட்டில் பூச்சிகள் போன்றாரை விட்டுவிட்டு உழைத்துப் பிழைப்பவர்கள், ஊருக்கு உழைப்பவர்கள், உண்மையை உணரத் துடிப்பவர்கள், நீதிக்காகப் பரிந்து பேசுபவர்கள், நெருப்பாற்றைக் கடந்திடும் அஞ்சா நெஞ்சு கொண்டவர்கள் ஆகியோரிடம் இவைகளைக் கூறிடு. பெரிய பெரிய சர்வாதிகாரங்களைக்கூட, இத்தகையவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட அணிவகுப்புகள் வீழ்த்தின என்று படித்திருப்பதால், தம்பி! எனக்கு ஒரு நம்பிக்கை; அந்த நம்பிக்கையுடன் இவைபற்றிக் கூறினேன், வேறு எவரிடம் கூறுவேன்?

அண்ணன்,



23-5-'65

காஞ்சிக் கடிதம் : 20

# கங்கா தீர்த்தம்-1

**பொருளற்ற சொல் பயனற்றுப் போகும்**

**சோஷியலிசம் என்பதுதான் என்ன?**

**காமராசர் பேசுவது சோஷியலிசம்; குலவுவதோ முதலாளிகளிடம்!**

தம்பி,

நெல்லுக்கும் பதருக்கும் உருவ அமைப்பிலே அதிக வித்தியாசம் தெரிவதில்லை; ஆனால், உழவர்கள் எளிதாக இரண்டையும் வெவ்வேறாகப் பிரித்துவிடுகிறார்கள்; ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துப் பார்த்து அல்ல; முறத்திலே கொட்டி, காற்றடிக்கும் பக்கமாக நின்று 'தூற்றி' எடுப்பதன் மூலம்.

கானலுக்கும் நீருக்கும் தொலைவிலிருந்து பார்க்கும் போது வேறுபாடு தெரிவதில்லை; கானல், நீர்போலவே தோற்றமளிக்கிறது; அருகே சென்று பார்த்தால் கானல் என்று கண்டறிந்திட முடிகிறது.

சொல்லிலே கூடப் பதரும் உண்டு, நெல்லும் உண்டு; கானலும் உண்டு, நீரும் உண்டு; கண்டறிய வேண்டும். அதற்குக் காது மட்டும் பயன்பட்டால் போதாது, கருத்து சுறுசுறுப்பாக வேலை செய்தபடி இருக்கவேண்டும்.

நெல் விளைவிக்க எடுத்துக்கொள்ள வேண்டி வரும் முயற்சி உழைப்புப்போலவா சொல்லை விளைவித்திடத்

தேவைப்படுகிறது? வெகு எளிதாக வண்டி வண்டியாக, அம்பாரம் அம்பாரமாகக் குவித்திட முடிகிறது, சொல்லினை.

நெல்லுக்கும் பதருக்கும் உள்ள வேறுபாட்டினைக் கண்டறிந்து, பதரை அப்புறப்படுத்தினால் மட்டுமே, பயனுள்ள நெல்லைப் பெறமுடியும்; சொல்லுக்கும் அவ் விதமே.

பயனற்றதைச் சொல்லாதே என்கிறார் வள்ளுவர்; கேட்டனரா! பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றார், கேட்டனரா? இல்லையே.

பயனற்றன பேசுவதிலேயும், தம்பி! இருவகை உண்டு. ஒன்று தெரியாமல் பயனற்றன பேசிவிடுவது; மற்றொன்று, தெரிந்து, திட்டமிட்டு, வேண்டுமென்றே, கேட்பவர்களை ஏய்க்க என்றே பயனற்றவைகளை, பயனுள்ளவைபோலத் தோற்றம் கொள்ளும்படிச் செய்து பேசி வைப்பது. முன்னது அறியாமையின் விளைவு, மற்றது கயமையின் ஒருவகை.

மற்றொன்றும் தெரிந்திருக்குமே தம்பி! சீமான் கொடுக்கும் வேப்பெண்ணெய் தேன்போல் இனிக்கிறது என்று கூற வேண்டிய கொடுமையை ஏழைகள் சில வேளைகளிலே தாங்கித் தொலைக்க வேண்டி நேரிட்டுவிடுகிறது. சீமான் என்று நான் குறிப்பிடுவது பணம் படைத்தவனை மட்டுமல்ல, பதவியால் உயர்ந்திருப்பவரும் ஒரு வகையில் சீமானே! அதிலும் இந்நாட்களில் பணம் படைத்தவன் கூடப் பதவி பிடித்தவன் முன்பு கைகட்டி நிற்கவேண்டி இருக்கிறது, காரியம் சாதித்துக்கொள்ள.

பெரிய புள்ளியின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசுவது கூடாது என்ற எண்ணத்தில், குமுட்டல் கொடுத்திடுவதைக்கூட இனிப்பளிப்பதாக, ஏழை கூறிட வேண்டி நேரிட்டுவிடுகிறது; ஆனால் அந்த ஏழைக்கு உண்மை தெரியும்: நாக்கு மட்டுந்தான் வேறுவிதமாகப் பேசுகிறது; நெஞ்சம் உண்மையினை அறியும். நிலை காரணமாக, அந்தப் பேச்சு.

அஃதே போலத்தான் பதவியில் உயர்ந்தவர்கள், பதர் கொடுத்து இது உயர்தரமான நெல் என்று கூறிடும் போது, ஏழையால் மறுத்துப் பேசிட முடிவதில்லை.



ஆனால், வாய் மட்டுந்தான் மூடிக்கிடக்கிறது; மனம்? தூங்குவதில்லை! உண்மையை உணராமலிருப்பதில்லை.

திட்டமிட்டு, பயனற்றவைகளைக் கலந்தளிக்கும் முறை வணிகத்துறையிலே மிகுந்துவிட்டிருக்கிறது என்று அறிந்தோரும் அனுபவித்து அல்லற்பட்டோரும் கூறுகின்றனர்.

ஒருவர் கூறினார் என்னிடம் ஒரு ஊரில், அரிசியுடன் கலப்பதற்காக வெள்ளைநிறக் கூழாங்கற்களை அரிசி போன்ற வடிவிலேயே உடைத்துத் தந்திட ஒரு சிறு யந்திரமே வைத்திருக்கிறார்களாம்! அரிசி சோறாக ஆன பிறகே, இந்தக் கல்லரிசியைக் கண்டுபிடிக்க முடியுமாம்! வேகாதல்லவா, கல்லாலான அரிசி! கண் மட்டும் போதவில்லையல்லவா, அரிசியுடன் கலந்துள்ள-கலந்துள்ளதா!! கலக்கப்பட்டுள்ள!!-கல் அரிசியைக் கண்டுபிடிக்க!

சீவல் பாக்குடன் ஏதோ ஓர்விதமான கொட்டையை (காட்டுப்பயிர்) சீவிக் கலந்துவிடுவதாகவும், தழையை வேகவைத்துக் கருநிறமாக்கிப் பொடி செய்து தேயிலைத் தூளுடன் கலந்து விடுவதாகவும், ஏலத்துடன் கருநிறமான மெழுகுத் துண்டுகளைக் கலந்து விடுவதாகவும் கூறுகிறார்கள்.

இவை, குறுக்கு வழியில், தவறான வழியில் ஆதாயம் தேட நடத்தப்பட்டு வரும் அக்கிரமங்கள். சட்டம் இருக்கிறது, ஆனால், அதனால் மட்டும் எவ்வளவு என்று வேலைசெய்ய முடியும்! அலுத்துப்போய் விடுகிறது! தூங்கிவிடுகிறது! மயக்கமடையச் செய்தும் விடுகிறார்கள்! இன்று நேற்றா! நெடுங்காலமாகவே.

கிரேக்க நாட்டுக் கவிஞர் பெருமகன், ஹோமர் கூறினார்.

ஓடிவிடுகிறது ஒய்யார அநியாயம்!

மாந்தரை அலைக்கழித்து மானாய்ப் பறக்கிறது.

அநியாயம் விளைவித்த புண்ணுக்கு மருந்தளிக்கப் புறப்பட்டுப் போகின்றாள் தொழுகை எனும் பெண்ணாள்! தொல்தேவர் குடிப்பிறந்தாள்! ஆயினும் என்ன?

நங்கை அவள் நொண்டி. நகர்கின்றாள், நைந்த
கண்ணாள் முகமது சுண்டி.

என்று பாடினார்.

அநியாயம் இழைக்கப்படும்போது, தேவனைத் தொழுது பரிகாரம் தேடுகின்றனரல்லவா—அது எப்படிப் பயனற்றுப் போகிறது என்பதனைக் காட்டுகிறார் கிரேக்கக் கவிஞர்

அநியாயம் மானாகப் பறக்கிறதாம்!

அநியாயத்தை வீழ்த்தக் கிளம்பும் தொழுகை
எனும் பெண்ணுக்கு, கண் குருடாம், கால் நொண்டி
யாம்!

இப்போது, அநியாயத்தை வீழ்த்தக் கிளம்பும் சட்டம், இதைவிட மோசமான நிலையில் அல்லவா இருக்கிறது!

சரி, அண்ணா! கலப்படத்தால் விளையும் கேடு பற்றி எதற்காக இப்போது கூறுகிறாய்? எந்தப் பண்டம் வாங்கி ஏமாந்துவிட்டாய்? என்று கேட்கிறாயா, தம்பி! நான் கூறவந்தது, சொல்லிலே கலக்கப்பட்டு விடும் பயனற்றன பற்றி; இடையிலே பொருளிலே கலக்கப்பட்டுவிடும் பயனற்றவை பற்றியும் குறிப்பிட்டேன்.

தம்பி! வடிவத்திலே ஒத்தது போலவே இருப்பினும் ஏன் பதர், கானல் இவைகளைப் பயனற்றன என்கிறோம்.

பொருளற்றன, பயனற்றன; அவ்வளவே!

பதருக்குள்ளே, பொருள் இல்லை, நெல்லுக்குள் அரிசி எனும் பொருள் இருப்பது போல! பொருள் இல்லை; ஆகவே பயன் இல்லை!!

கானலில், நீர் இல்லை, பருகிட! பொருள் இல்லை, பயன் இல்லை!

சொல்லிலேயும் அவ்விதமே, பயனுள்ள சொல்லில் பொருளிருக்கும், பொருளுள்ள சொல்லால் பயன் கிடைக்கும்; பொருளற்ற சொல் பயனற்றுப் போகும்.

நெல்லும் பதரும் ஒரே பயிரிலே விளைவது போலவே, பயனுள்ள சொல்லும் பயனற்ற சொல்லும், ஒரே பேச்சிலிருந்துதான் முளைக்கின்றன.



பதர் நீக்கி நெல் கொள்வதுபோல, பேசப்படுவன வற்றில் பயனற்றதை நீக்கிவிட்டுப் பயனுள்ளதைக் கொள்ளவேண்டும்.

இது மிகக் கடினமா! என்ன அண்ணா! உனக்கு இளையவன்—வயதில்தானே!! பதர் நீக்கி நெல்லைக் கொள்ளவேண்டும் என்பதனைக் கூடவா எனக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று கேட்பாயோ, தம்பி! கேட்டாலும் கேட்டுவிடுவாய்; ஆகவே விரைந்து கூறிவிடுகிறேன். நான் குறிப்பிட்டேனே, சீமான் கொடுத்த வேப்பெண்ணெய்—அதனை நினைவுபடுத்திக் கொள். பயனற்றன—பயனளிப்பன என்று சொல்லைப் பிரித்துவிடலாம், நல்லன கொண்டு அல்லன தள்ளலாம்—நம்மை ஒத்தவர்கள் பேசக் கேட்டால்; ஆனால், பேசுபவர், பெரிய புள்ளி—பெரிய பதவியில் உள்ளவர் என்றால் முடியுமா; எளிதாக! முடியும் என்னால்! என்கிறாயா!! சரி, தம்பி! நீ எதனையும் துருவித் துருவிப் பார்த்திடவும், உண்மையை எடுத்துரைக்கவும் தேவைப்படும் இயல்பினைக் கொண்டிருக்கிறாய்; உன்னால் முடிகிறது. ஆனால், எல்லோராலும் முடியுமா — எத்தனையோ தொல்லைகளைத் தாங்கித் தாங்கி வாழ்க்கையே வளைந்து போயுள்ள நிலையில் உள்ளவர்களால் முடியுமா —பதவியில் உயர்ந்தவர்கள் பேசும் பேச்சிலே, தரம், வகை பிரித்துக் காட்டி, அவர்களின் கோபம் கிளம்பித் தாக்கினால் அதனுடைய வேகத்தைத் தாங்கிக் கொள்ளும் ‘உள்ள உரம்’ எல்லோருக்குமா ஏற்பட்டுவிடும்? முடியாதல்லவா! அவர்கள் நெல்லுக்குப் பதிலாகப் பதர் கிடைக்கப்பெற்று, பதர் என்று வெளியே கூறிடவும் முடியாமல், அதனைச் சுமந்தும் செல்லவேண்டி நேரிட்டுவிடுகிறது. காமராஜரின் சுற்றுப் பயணப் பேச்சைக் கேட்டவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறுகிறார்கள்; இதழ்களிலே நான் பார்த்த அளவில், எனக்கும் அதுபோலத்தான் தோன்றுகிறது.

தம்பி! மற்றொன்று உளது முக்கியமானது; பேச்சு பொருளுள்ளதாக, பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்பதுடன், சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமிருக்கவேண்டும்; சொல் சுவைத்து, செயல் கசப்பளித்தால், பயன் என்ன?

வாளது கையில்கொண்டு
வருபவன் சிரம் அறுத்து
வாகையைச் சூடிநானே
வந்திடுவேன், உறுதி உறுதியாமே!

என்று உரத்த குரலிலே முழக்கம் எழுப்பிவிட்டு, களம் நோக்கிச் செல்லாமல், அடுக்களை சென்று பதுங்கினால், முழக்கத்தால் பயன் என்ன கிடைத்திடும்!

செந்தமிழின் சுவையினைச் சேர்த்து, செல்லரித்துப் போன ஏடுகளிலே உள்ள கதைகளுக்குப் புதுவடிவம் கொடுத்து, காலட்சேபம்' செய்து கனதனவான் வாழ்க்கையைப் பெற்றிருப்பவர்கள் சிலரை அறிந்திருப்பாயே, தம்பி! அப்படிப்பட்டவரில் ஒருவர்-பெயரா? ஏதாவது வைத்துக்கொள்ளேன்! — தேனாமிர்தானந்தர்! —பரதன் பாதுகை சுமந்ததுபற்றி உருக்கமாகக் காலட்சேபம் செய்துவிட்டு, அன்றிரவு அண்ணனுக்குச் சேரவேண்டிய சொத்தினை ஏமாற்றிப் பறித்துக் கொள்வதற்காக, ஆள்வைத்து அவனை மண்டையில் அடித்து, மூளை குழம்பிப்போகும்படி செய்து, 'பித்தர் விடுதி'யில் சேர்த்து விட்ட பிள்ளைப் பெருமாள் எனும் சீமான் வீட்டில் விருந்துண்ணச்செல்வதும், கண்ணப்ப நாயனார் கதையை, கேட்பவர் கண்களில் நீர் வழியும் விதமாகக் 'காலட்சேபம்' செய்துவிட்டு, இளையாளுக்காக மூத்தாளைத் தாக்கி, அதன் காரணமாக அவளுடைய கண்ணுக்குச் சேதம் உண்டாக்கி, அது மாரியம்மன் செய்தது என்று மற்றவர்களை நம்பும்படி செய்துவிட்ட பெரியசாமி மாளிகையில் விருந்துண்ணச் செல்வதும், வள்ளலார் வகுத்தவழிபற்றி அழகொழுகப் பேசிவிட்டு, பட்டாளத்துக்கு ஆட்டுக்கறி 'காண்ட்ராக்ட்' எடுத்து ஆறு இலட்சம் ஆதாயம் பெற்ற அருமை நாயகம் பங்களாவில் விருந்து சாப்பிடச் செல்வதும், காரைக்காலம்மையார்பற்றிக் காலட்சேபம் செய்துவிட்டு, கணவனிடம் மல்லுக்கு நின்று மாதம் ஆயிரம் ஜீவனாம்சம் பெற்றுக்கொண்ட மரகதம் வீட்டிலே சிற்றுண்டி சாப்பிடச் செல்வதும், எம்மதமும் சம்மதமே என்ற சமரசபோதம் அளித்துவிட்டு, கோயில்யானைக்கு நாமம், வடகலையா, தென்கலையா என்ற பிரச்சினையில் முன்னாலே நின்று, எதிர்த்தரப்பினரை ஆள்வைத்து மண்டையை உடைத்த தர்மகர்த்தா தனபாலர் வீட்டிலே



விருந்துக்குச் செல்வதும், ஆலயத் திருப்பணி பற்றி அழகாகப் பேசிவிட்டு, அம்பாளின் ஆபரணங்களைத் தன்னுடைய 'அன்னத்துக்கு' என்று ஆக்கிக்கொண்ட கோயிற் பெருச்சாளி கோதண்டபாணி வீட்டிலே 'ஜாகை' வைத்துக்கொள்வதும், பொருத்தம் என்று புராணத்தைப் போற்றுபவர்களேகூட ஒப்புக்கொள்பவர்களா! சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமில்லையே; எதெது தவறு, பாபம் என்று காலட்சேபத்தில் கூறுகிறாரோ, அந்தத் தவறுகளை, பாபங்களைச் செய்து பணம் திரட்டிக்கொண்டுள்ள பாதகர்களின் விருந்தினராகச் செல்லலாமா? எப்படி மனம் ஒப்பிச் செல்கிறார்? இவர் அப்படிப்பட்டவர்களின் இல்லங்களில் சென்று விருந்துண்டால், ஊரார் என்ன எண்ணிக்கொள்வார்கள்? எத்தனையோ பயல்கள், என்னை அக்கிரமக்காரன், அநியாயம் செய்தவன் என்று பேசினார்கள்! இப்போது என்ன சொல்கிறார்கள். அறநெறிபற்றியும் அன்புவழிபற்றியும், அரி அரன் அவர் மகன் ஆகியோரின் மகிமைபற்றியும் அழகாகக் காலட்சேபம் நடாத்தும் தேனாமிர்தானந்தரே எனது இல்லத்திற்கு வந்திருந்தார், விருந்துண்டார், வாழ்த்தினார்; காணிக்கையை ஏற்றுக்கொண்டார்! என்று அவர்கள் பேசமாட்டார்களா! உள்ளபடி அந்தக் காலட்சேபம் செய்பவருக்கு, அக்கிரமத்திலே வெறுப்பு என்றால், அக்கிரமக்காரரர் வீடுசெல்ல மனம் இடம் கொடுக்குமா! சென்றார் என்றால், அவரைப்பற்றி என்ன தம்பி! எண்ணிக்கொள்வாய்? அவருடைய 'காலட்சேபம்' பற்றி எந்த விதமான மதிப்புப்போடுவாய்?

சூறாவளிச் சுற்றுப் பயணக்காரர்—காமராஜர்—3000 மைல்களாமே—அவ்வளவு தொலைவுசுற்றி, பேசினாரே, ஏழைக்காக, சோஷியலிசத்துக்காக—தம்பி! அந்தப் பேச்சிலே பதர் எவ்வளவு என்பது ஒருபுறம் இருக்க, அந்தப் பேச்சுப் பேசினவரை வாழ்த்தி வரவேற்றவர்கள், செலவு செய்து விழா எடுத்தவர்கள், சூழ நின்று சூடம் கொளுத்தியவர்கள், மாளிகை அழைத்துச் சென்று விருந்து நடத்தியவர்கள், இவர்கள் யார்? சோஷியலிசத்துக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? ஏழை இவர்களைப்பற்றி என்ன எண்ணுகிறான்? என்பவைபற்றி எண்ணிப்பார்த்தால் தம்பி! நான் குறிப்பிட்ட காலட்சேபக்காரர் உவமையின் பொருள் விளங்கும்.

ஒரு ஊரில் பஸ் முதலாளி, மற்றோர் இடத்தில் ஆலை அரசர், இன்னோரிடத்தில் வட்டிக் கடைக்காரர், வேறோரிடத்தில் மிட்டா, மற்றுமோரிடத்தில் புது பர்மிட், இப்படிப்பட்டவர்கள் இல்லங்களிலா, அல்லது ஆலைத் தொழிலாளி, கதர்க் கடையில் கணக்கெழுது பவர் போன்ற எளியோர் குடில்களிலா, எங்கு அழைத்துச் செல்லப்பட்டார், சோஷியலிசம் பேசியவர் என்பதைக் கேட்டறிந்தால், தம்பி! சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தம் இல்லாததை, முரண்பாடே இருப்பதை அறிந்துகொள்ளலாம்; அறிந்து கொண்டுள்ளனர் மக்கள்.

''ஏழைபங்காளர் காமராஜர் என்பது இப்போது தெரிகிறதல்லவா?''

மண்டலம் கேட்கிறார் இதுபோல வறண்ட தலைத் தோழரைப் பார்த்து.

''மகராஜன்! ஏழைக்காகத்தான் ஆட்சி என் கிறார். காது குளிரக் கேட்டேன்'' என்று அந்த ஏழை கூறுகிறான்; உடனே மண்டலம், சரி! இந்த ஓட்டு நமக்கு, காங்கிரசுக்கு என்று எண்ணிப் பூரித்து, வேறு ஆளைப் பார்க்கச் செல்கிறார். ஏழைக்காகப் பேசிய காமராஜர் ஏறிச் செல்லும் படகு மோட்டார் பறந்து வருகிறது; பாதையில் நிற்காதே, போ! அந்தப் பக்கம்! என்று விரட்டுகிறார் போலீஸ்காரர்.

''எங்கே செல்கிறார் காமராஜர்?''

என்று கேட்கிறான் ஏழை, போலீஸ்காரரிடம்.

கட்டாயம் தெரிந்துகொண்டாக வேண்டுமோ! ஏனாம்! பேட்டி பார்க்கவோ!

என்று கேலி பேசித் துரத்துகிறார், காலை முதல் கால் கடுக்கச் சேவகம் பார்த்த அலுப்பினால், கான்ஸ்டபிள்.

மற்றோர் ஏழை பதில் கூறுகிறான்.

ஆலை முதலாளி அய்யம்பெருமாள் அரண் மனைக்கு.

இது கேட்ட ஏழையின் உச்சி குளிருமா! உள்ளம் பதறு கிறது.



அய்யம்பெருமாள் அரண்மனைக்கா!
விருந்து சாப்பிட அந்த இடமா!

நூல் கட்டுகளைக் கள்ளமார்க்கட்டில் விற்பவ னாயிற்றே.

நெசவாளர்களின் குடும்பம் எத்தனையோ நாசமாகக் காரணமாக இருந்தவனாயிற்றே.

கணக்கு, மூன்று நாலு தினுசாச்சே அவனிடம், அவன் அரண்மனைக்கா செல்கிறார் காமராஜர்.

அவன் போன்றவர்களின் ஆதிக்கத்தை ஒழித்தால் தானே, சோஷியலிசம் மலரும்.

சோஷியலிசம் மலர்ந்தால்தானே ஏழைக்கு வாழ்வு.

ஏழையின் வாழ்வைக் குலைக்கும் எத்தன் அரண்மனைக்கு இவர் போகலாமா?

இவர் அங்குப் போனால் பிறகு சோஷியலிசம் பெற எப்படி வேலை செய்ய முடியும்?

பேசுவது சோஷியலிசம், குலவுவது முதலாளி யிடமா!

எங்கள் காதுக்காகச் சோஷியலிசப் பேச்சு; இவர் தங்குமிடம் முதலாளி மாளிகை!

இவ்விதமெல்லாம் தம்பி! அந்த ஏழை கேட்க முடியாது-மனத்திலே இவை கொந்தளித்தபடி இருக்கும். மண்டலத்துக்கு இது தெரியாது!

சோஷியலிசம் ஏன் தேவைப்படுகிறது? என்பது குறித்தும், சோஷியலிசம் என்றால் என்ன? என்பது பற்றியும் சோஷியலிசத்தை எப்படிக் காண்பது என்பது பற்றியும் சோஷியலிச தத்துவம் அறிந்தவர்கள், சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலே வெற்றி கண்டவர்கள், கூறியுள்ளனர்.

காமராஜர் இந்தக் கருத்துக்களை அல்ல-சோஷிய லிசம்பற்றிக் காங்கிரஸ் கொண்டுள்ள கருத்தைத்தான் கூறுகிறார்,

இது அல்லவே சோஷியலிசம் என்று கூறுகின்றனர்; சோஷியலிச தத்துவத்துக்கும் நீங்கள் சொல்லுவதற்கும் பொருந்தவில்லையே என்று விவரமறிந்தவர்கள் கூறுகின்றனர்; அதுபற்றி எமக்குக் கவலையில்லை; தத்துவம் பேசுபவர்கள் அல்ல நாங்கள்; நாங்கள் கூறும் சோஷியலிசம் இப்படித்தான்! போ! போ!!—என்று கூறிவிடுகிறார் காமராஜர்.

மண்டலத்தைக் கேட்டால், இது ஒரு மாதிரி சோஷியலிசம் என்கிறார்.

சோஷியலிசம் மாதிரிதான் இது என்கிறார் வேறோர் காங்கிரஸ்காரர்.

தம்பி! இப்போது புனிதப் பயணத்தின் புகழ் பாடி, நம்மோடு இருந்தபோது, சோஷியலிசம் மாதிரி என்று காங்கிரஸ் கட்சி ஆவடியில் திட்டம் கூறினபோது முழக்கமிட்டது என் காதில் இப்போது கூட ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சோஷியலிசம் மாதிரி!
குதிரை மாதிரி!

குதிரை மாதிரி என்றால் என்ன பொருள்? கழுதை என்று பொருள்.

அப்படிப் பேசிவிட்டு இப்போது இப்படி இருக்கலாமா என்று என்னைக் கேட்காதே தம்பி! பயில்வான் போல இருந்தான் இப்போது எலும்புருவாகிவிட்டானே ஏன் என்று கேட்டால், என்ன பதில் கூறுவது; கெட்ட கிருமிகள் கொட்டிவிட்டன என்றுதானே, அதுபோல, அது கிடக்கட்டும்; காமராஜர், பேசிடும் சோஷியலிசம் பற்றிப் பார்ப்போம். அவர் பேசுவது சோஷியலிசம் அல்ல! பதர்; நெல் அல்ல!!—ஏன்? பொருள் இல்லை; பயன் இல்லை.

இதனை எல்லோராலும் உணர்ந்துகொள்ள முடிந்தாலும் எடுத்துக் கூறிடும் இயல்பு அனைவருக்கும் இருந்திடாது; அந்த இயல்பு இருந்திடினும், அச்சம், தயை தாட்சணியமின்றி அதனை எடுத்துக் கூறுவோரின் தொகை அதிகம் இருக்க முடியாது.

ஏழைக்காகப் பரிந்து பேசுவது.
ஏழைக்கு இயன்ற அளவு உதவி செய்வது.



ஏழையும் ஓரளவு நிம்மதியான வாழ்வு பெற வழி காண்பது,

ஏழைக்குத் தொழிலும் வருவாயும் கிடைக்கச் செய்வது,

ஏழையை ஏழை என்பதற்காக இழிவாக நடத்தாமலிருப்பது,

ஏழைக்கு, குடி இருக்க வசதி, படிப்பு வசதி, மருத்துவ வசதி தேடிக்கொடுப்பது,

இவைகளைச் செய்துவிட்டால் போதும். அதுதான் சோஷியலிசம் என்று எண்ணிக்கொள்ளச் சொல்லுகிறது, காங்கிரஸ் கட்சி.

காய்ச்சல் காரணமாக வாய்க்கசப்பு கொண்டவன் நாவில், ஒரு துளி தேன் தடவிவிடுவது போன்றது இது.

தானதருமம் செய்வது, சத்திரம் சாவடி கட்டுவது, கோயில் குளம் அமைப்பது, கல்விக் கூடம் கலியாண மண்டபம் கட்டுவது, இவைகளைச் செய்தால் போதும் அதுதான் சோஷியலிசம் என்று எண்ணிக்கொள்ளச் சொல்கிறார்கள்.

இந்த உதவிகளை—தருமங்களை—தனிப்பட்ட 'முதலாளிகளை'ச் செய்யச் சொல்லி வற்புறுத்துவதும் முதலாளிகளிடம் வரியாகவும் நன்கொடையாகவும் பணம் பெற்று சர்க்கார் இந்த உதவிகளைச் செய்வதும் போதும், சோஷியலிசம் அதுதான் என்று காமராஜரைச் சொல்லலைத்திருக்கிறது காங்கிரஸ் கட்சி.


ஆனால், சோஷியலிசம் என்பதற்கு தரப்பட்டிருக்கும் விளக்கம் வேறு; அதனைப் பார்க்கும்போது மன எழுச்சியே ஏற்படும்.

உடலிலே படிந்துள்ள சேற்றினைக் கழுவிக்கொள்ள ஒரு பானைத் தண்ணீர் தரச் சொல்லி 'உபதேசம்' செய்வதைச் சோஷியலிசம் என்று காங்கிரஸ் கூறுகிறது. சோஷியலிசம் உடலிலே சேறு படியாத நிலையை ஏற்படுத்த என்ன வழி, யாது முறை என்பதை எடுத்துக் காட்டும் திட்டமாகும்,

"கொடு!" என்று முதலாளிகளிடமும், "பெறு" என்று ஏழையிடமும் கூறுவதும். "அவ்வளவு இருக்கிறதே. கொஞ்சம் கொடு!" என்று பணக்காரரிடமும், 'இவ்வளவு கிடைத்ததே. திருப்திப்படு" என்று ஏழையிடமும் பேசி, இருவர்க்கத்துக்கும் இடையே நின்று இருவருக்கும் இனிப்பாகப் பேசிவருவதை, சோஷியலிசம் என்று காங்கிரஸ் கட்சி கருதிக் கொள்கிறது! கருதிக்கொள்ளச் சொல்லுகிறது. சோஷியலிசத் தத்துவமும், முறையும் வேறாக இருக்கிறதே என்று கூறினாலோ, கோபம் பொத்துக்கொண்டு வருகிறது—புரியாததால் அல்ல—புரிவதால்!!—எங்கள் சோஷியலிசம் இதுதான் என்று கூறிவிடுகிறார்கள். இதுபற்றிப் பிறகு எழுதுகிறேன்.

புரோகிதன், நம் வீட்டுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துவரச்சொல்லி, செம்பிலே நிரப்பி, ஒரு கொத்து மாவிலையைச் செருகி, இதிலே இருப்பது, கங்கா, யமுனா, சரஸ்வதி ஆகிய நதிகளின் புண்ணிய தீர்த்தம் என்று சொல்லும்போது, இது ஏன் இப்படி ஒரு அண்டப் புளுகு! என்று கேட்கிறார்களா—நன்றாகத் தெரியும், நம்முடைய வீட்டுக் கிணற்றுத் தண்ணீர்தான் என்பது—இருந்தாலும் புரோகிதர் பொய்யுரைக்கும்போது மறுப்பதில்லையே!! ஆம்! என்று ஒப்புக் கொள்கிறார்களல்லவா? அதுபோல நெடுங்காலமாக—இங்குமட்டும் அல்ல-நாகரிக அரசியல் வளர்ந்த எல்லா நாடுகளிலும் ஈவு இரக்கம், பரிவு பச்சாத்தாபம், தானம் தருமம் என்ற பண்புகள் இருந்து வந்தனவே, அவைகளையே எடுத்து தமது கட்சி முத்திரையிட்டு, இதுதான் சோஷியலிசம் என்கிறது காங்கிரஸ் கட்சி. கிணற்றுத் தண்ணீர் கங்கா தீர்த்தம் ஆகிவிடுகிறது!!

அண்ணன்,



30-5-'65

காஞ்சிக் கடிதம் : 21

# கங்கா தீர்த்தம்-2

**எல்லாம் எல்லாருக்கும் என்பதே சோஷியலிசம்**

**மாங்காய் மாலை போன்றது காங்கிரஸ் பேசும் சோஷியலிசம்**

**அமெரிக்க முதலாளிகளை மேத்தா அழைக்கிறார்**

**காங்கிரஸ் சோஷியலிசம் முதலாளிகளைக் கொழுக்க வைக்கிறது**

**ஜான் நைஹார்ட்டின் எழுச்சிக் கவிதை**

தம்பி,

ஏழைக்கு இதம் செய்திடவே செல்வவானிடம் பணம் ஆண்டவனால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. செல்வவான்கள் 'தர்மகர்த்தாக்கள்' அவர்களிடம் சேர்ந்திடும் செல்வம் அவர்களுடைய சுகபோகத்துக்காக அல்ல என்ற கருத்தை, மெத்தக் கனிவுடன், கேட்போர் உள்ளம் உருகும் விதத்தில் எடுத்துரைத்தவர்களில் காந்தியாருக்கு நிகர் எவரும் இல்லை என்றே கூறலாம்.

பண்புகள் குறித்து எடுத்துரைத்த மேலோர் அனைவருமே இத்தகு கருத்தினை வலியுறுத்தி வந்தனர். இதனை மறுத்தவர் எவரும் இல்லை; அதுபோன்றே இதனை முழுக்க முழுக்க ஏற்றுக்கொண்டு அந்த நெறி நின்றவர்களும் இல்லை.

ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழைந்தாலும் நுழைய லாம், செல்வவான் மோட்ச சாம்ராஜ்யத்தில் நுழைய முடியாது

என்ற அருள்மொழியை அறிந்து, ஒப்புக்கொண்டு, உள்ளம் உருக அதுபற்றிய உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மேனாட்டினர்; அதன் காரணமாக அவர்கள் உடைமைகளைத் தேடிப்பெறுவது, உல்லாச வாழ்க்கையில் ஈடுபடுவது என்பவைகளை விட்டொழித் தனரா? இல்லை! உபதேசம் கேட்பது ஞாயிற்றுக்கிழமை களில், உடைமைகளைப் பெற அலைவது மற்ற நாட் களில் என்று முறை வகுத்துக்கொண்டனர்!!

முற்றுந்துறத்தல், தன்னலம் மறுத்தல், பிறர்நலம் பேணுதல், ஊருக்குழைத்தல், ஈதலில் இன்பம் கண்டிடல், கூடி வாழ்தல்—இவைகளைப் போற்றிட எவரும் தவறி யதுமில்லை; இவைகளின்படி ஒவ்வொருவரும் வாழ்ந்து சமூகத்தின் தன்மையை மாற்றி அமைப்பதிலே முழு வெற்றி கண்டவர்களும் இல்லை. சிலர் அந்த முயற்சி களை மேற்கொண்டனர்; ஆனால், துவக்க காலத் தூய்மை, நாளாகவாகத் தேய்ந்து தேய்ந்து மாய்ந்தே போய்விட்டது; அருளகமாகத் துவக்கப்பட்டவைகள் பிறகு ஆதிக்க பீடங்களாக, மடாலயங்களாக மாற்றப் பட்டுவிட்டன.

இந்நிலை மேனாட்டில் மட்டுமா கீழ்நாடுகளிலுமா என்ற கேள்விக்கே இடமில்லை, எங்கும் இந்நிலை; அளவில், வேகத்தில், தரங்கள் இருக்கலாம், போக்கிலே ஒரேவிதமாகத்தான் இருந்தது.

ஏன் உபதேசங்களைப்பற்றி இப்போது கூறுகிறேன் என்று கேட்பாய் தம்பி! காங்கிரஸ் பேசிவரும் சோஷிய லிசம், உபதேச பாணியில் இருக்கிறதல்லவா, அந்த உபதேசம் பலன் தராது. ஏனெனில், இன்றையக் காங்கிரஸ்காரர்களைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகமான தூய்மையாளர்கள், இன்று இவர்கள் செய் வதைவிட மெத்த உருக்கத்துடன் செய்த உபதேசங்கள் யாவும், பூஜாமாடத்துக்கு உரிய ஏடுகளாய், பாடல்களுக் கான கருப்பொருளாய்ப் போய்விட்டன-ஏழை-பணக் காரன் எனும் பொல்லாங்கு மூட்டிவிடும் பேதத்தைப் போக்கவில்லை; போக்கிட முடியவில்லை?



அருளாளர் என்று விருது பெற்றோரின் உபதேசம் மூலம், ஏழையின் இன்னலைத் துடைத்திட முயன்று பார்த்து அது தக்கபலன் தராது போனது கண்டபிறகே, மேனாட்டு அறிவாளர்கள் சிந்தித்துச் சிந்தித்து, சோஷிய லிசம் எனும் சமதர்ம முறையைக் கண்டறிந்து கூறினர்.

நல்ல இதயம், உயர்ந்த பண்பு இவைகளிலிருந்து எழுந்ததுதான் சோஷியலிச முறை என்றாலும் இதயம் நல்லதாக்கப்பட வேண்டும் என்ற நல்லுரையே, சோஷிய லிசம் காணும் வழி என்று சோஷியலிசக் கருத்தளித்த வித்தகர்கள் கூறிடவில்லை.

அய்யோ பாவம்!
அவனும் மனிதன்!
ஏதோ செய்வோம்!
போகிற கதிக்கு நல்லது!
கொண்டு செல்லவா முடியும்!
கொடுத்தால் குறையாது!
ஒன்றுக்கு ஒன்பது கிடைக்கும்!

என்பன போன்ற பேச்சுகளும், அவைகளுக்கான மனப் போக்கும் இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல, நெடுங் காலமாக இருந்து வருபவை.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆகும் என்ற கருத்தை வலியுறுத்தி எழுதப்பட்ட கதைகளும், புனையப் பட்ட புராணங்களும், கொஞ்சமா!

தம்பி! ஊருக்கு ஒரு உபகாரமும் செய்தறியாத வனாம் ஒருவன். அவன் இறந்து மேலுலகம் சென்றான் —படித்த கதையைச் சொல்லுகிறேன்; பார்த்ததை அல்ல! —அவன் இறந்தபோது, ஒருவருக்கு ஒரு உதவியும் செய் யாத இவன் நரகம்தான் செல்வான் என்று ஊரார் பேசிக் கொண்டனர்—ஆனால், அவனைத் தேவ தூதர்கள் பொன்னுலகம் கொண்டு சென்றனராம்—கணக்குப் பார்க்கப்பட்டது—''இவனுடைய ஆள் காட்டி விரலுக்கு மாலை மரியாதைகள் நடத்தி இவனைச் சிறிது காலம் பொன்னுலகில் இருந்திடச் செய்திடுக! அனைவரும் இவனுடைய ஆள்காட்டி விரலைக் காணட்டும்; மகிழட்டும்; போற்றிப் புகழட்டும்'' என்று தேவதேவன் கட்டளையிட்டானாம்.

காரணம் என்ன தெரியுமா, தம்பி! ஆசாமி ஒருவருக்கும் ஒருவிதமான உதவியும் செய்யாதவன் என்ற போதிலும், ஒருநாள் உச்சிப்போதில், கடுமையான பசியுடன் வந்த ஒருவன், இவனிடம் எந்த உதவியும் பெற முடியாமற்போகவே, இங்கே தர்மசத்திரம் எங்கே இருக்கிறது? அதையாவது காட்டுமே ஐயா! என்று கேட்டிட, ஆள்காட்டிவிரலை நீட்டி, சத்திரம் இருக்கும் பக்கத்தைக் காட்டினானாம். அந்தப் புண்ணிய காரியத்துக்காக, அவனுடைய ஆள்காட்டி விரலுக்கு அத்தனை மரியாதை!!

இவ்விதமான கதைகளைக் கூறியாகிலும் மற்றவர்களுக்கு உதவி செய்திடவேண்டும் என்ற எண்ணத்தை ஊட்டவேண்டும் என்று பலர் வெகுபாடுபட்டிருக்கிறார்கள்.

> ஆனால், அத்தலகைய உதவிகள், தான தருமங்கள். பாலைவனத்திலே தெளித்த பன்னீர்த் துளிகளாகிப் போயினவேயன்றி, பாலைவனத்து வெப்பத்தைப் போக்கிடவில்லை!

இதனைக் கண்ட பிறகுதான் பேரறிவாளர்,

> மனிதன் வாழப் பிறந்தவன்,
> எல்லாம், எலலோருக்கும் என்றே உளது.

என்ற அடிப்படையை எடுத்துக் காட்டி சோஷியலிசத்தை உருவாக்கினர்.

சோஷியலிசமே போதுமான பலனைத் தரவில்லை, தத்தித் தத்தி நடக்கிறது, தடுமாறிக் கீழே விழுகிறது என்று கூறி, அடித்து நொறுக்கிப் பிறகு புது வார்ப்படம் காண்பதுபோல, புரட்சி நடாத்திப் புதுமுறை காண வேண்டும் என்று கூறுகின்றனர் பொது உடைமை வாதிகள். ஆனால், இன்றைய காங்கிரசோ, ஏழைக்கு ஏதேனும் உதவி செய்திடுக! என்ற பழைய பேச்சைப் புது முறுக்குடன் மேடைகளிலே பேசுகின்றனர்; அதனைச் சோஷியலிசத் திட்டம் என்று வேறு நம்பச் சொல்கின்றனர்.

வேலிகள் ஆயிரம் பட்டக்காரருக்கு, வாண்டையாருக்கு, மூப்பனாருக்கு, இராமநாதபுரத்தாருக்கு, நெடும்பலத்தாருக்கு, அவர் போன்றாருக்கு; அவர்களெல்லாம்



நடத்திச் செல்லும் காங்கிரசிலே சோஷியலிசம் வேறு எப்படி இருக்க முடியும்?

மறைந்த மாமேதை நகைச்சுவை மன்னர் என்.எஸ். கிருஷ்ணன் நடித்துக் காட்டிய ஒரு காட்சி நினைவுக்கு வருகிறது—அதன் தொடர்பான கதை நினைவிலே இல்லை.

ஒரு இடத்தில், மாங்காய் மாலை கொடுக்க வேண்டி வருகிறது; மாங்காய் மாலை என்பது, பொன்னால் செய்யப்பட்ட மாங்காய் உருவ பில்லைகளில் கல்லிழைத்து, சரமாக்கி மாலையாகப் போட்டுக்கொள்ளும் விலை அதிகமுள்ள ஆபரணம்! இதைக் கொடுக்கவேண்டி வருகிறது; கொடுக்க வசதி இல்லை; அவ்வளவுக்குப் பணம் இல்லை!! எனவே ஒரு தந்திரம் புரிகிறார், நகைச்சுவையுடன்,

ஒரு ரோஜா மாலை, ஒரு மாங்காய் எடுத்துக்கொண்டு போய், இதோ மாங்காய், இதோ மாலை, மாங்காய் மாலை; வந்து கேட்டால் சொல்லிவிடுங்கள். மாங்காய் மாலை கொடுத்தாகிவிட்டது என்று, என்பதாகக் கூறிவிடுகிறார்.

அந்த ‘மாங்காய் மாலை’ போன்றது தம்பி! காங்கிரசார் இன்று பேசும் சோஷியலிசம்!! புரிகிறதா என்று கோபம் கொள்ளாத காங்கிரஸ்காரர்களைக் கேட்டுப் பார்.

இதனைக் கூறுவதால், உதவி செய்வது, தான தருமம் செய்வது கூடவே கூடாது என்று நான் சொல்லுவதாக எணணிக்கொண்டு விடக்கூடாது. சிலர் இருக்கிறார்கள். இந்த வாதத்தையே தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, இந்தவிதமான உதவிகளைச் செய்வதாலே எந்தவிதமான உருப்படியான பலனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை, ஆகவே, ஒருவருக்கும் ஒருவிதமான உதவியும் செய்யத் தேவையில்லை என்ற போக்கை மேற்கொள்பவர்கள்.

நான் சொல்ல வந்தது அத்தகைய எண்ணத்தை ஏற்படுத்த அல்ல. உதவி செய்வது சோஷியலிசமாகாது, சோஷியலிசம் என்பது, புதிய சமூக அமைப்பு முறை, புதிய அரசியல் அமைப்பு முறை, புதிய பொருளாதார அமைப்பு முறை என்பதையும், அதனை நோக்கமாகக் கொண்டது அல்ல, காங்கிரஸ் கட்சி பேசிவரும் சோஷியலிசம் என்பதையும் கூறுகிறேன்.

மண் குதிரை மீதேறிக்கொண்டு ஆற்றில் இறங்குவது என்பார்களே அது போன்றது காங்கிரஸ் பேசி வரும் சோஷியலிசம்.

காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம்' தமது உடைமைகளை, ஆதாயம் தேடித்தரும் அமைப்புகளை, அதனால் கிடைத்திடும் ஆதிக்கத்தை எந்தவிதத்திலும் கெடுத்து விடாது என்று நன்றாகத் தெரிந்திருப்பதாலேயே, இன்று எல்லாப் பெரிய புள்ளிகளும் காங்கிரசிலே இருக்கின்றனர். அவர்கள் என்ன ஏமாளிகளா! ஜாண் பணத்துக்கு முழம் புத்தி என்று கிராமத்திலே பேசிக் கொள்வார்கள்!!

உள்நாட்டு முதலாளிகள் மட்டுமல்ல, காங்கிரஸ் பேசி வரும் சோஷியலிசம் தங்கள் உடைமைகளையும் பணம் தேடும் உரிமையையும் ஒரு துளியும் பாதிக்காது என்ற அழுத்தமான நம்பிக்கை வெளிநாட்டு முதலாளிகளுக்கும், நிரம்ப ஏற்பட்டிருக்கிறது; கோடி கோடியாக, முதல் போடுகிறார்கள், புதிய புதிய தொழில்களிலே!

ஏழை எக்கேடோ கெடட்டும் என்ற பொக்கில், வெள்ளைக்காரன் முதலாளித்தனத்தை வளர்த்து வந்தான் என்று கூறினோம். வெள்ளைக்கார ஆட்சி போனபிறகு, அவன் காலத்திலே ஏற்பட்டிருந்த முதலாளி ஆதிக்கம் ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? கேட்டுப்பார், உண்மையை ஒளிக்காமல் பேசும் இயல்புள்ள காங்கிரஸ்காரர் எவரையாவது பார்த்து; எந்த அளவுக்கு வெள்ளைக்காரன் காலத்திலே அமைக்கப்பட்ட முதலாளித்தனம் ஒடுக்கப்பட்டிருக்கிறது என்று. தலையைக் கவிழ்ந்து கொள்வார்! ஏன்? ஒடுக்காதது மட்டுமல்ல, வெள்ளைக்காரன் காலத்திலே இருந்ததைவிட மூன்று மடங்கு அளவு வளர்ந்துவிட்டிருக்கிறது முதலாளித்தனம்-காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் - சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்.

வெள்ளையராட்சி விலகும் போது 1947ல், இங்கு முதலாளிகள், தொழில்களில் போட்டிருந்த மூலதனம் 700 கோடி ரூபாய் என்று கணக்கெடுத்தனர்.

சுயராஜ்யம் அமைந்து சோஷியலிசம் மலர்ந்திருப்பதாகக் கூறுகிறார்களே, அதன் காரணமாக, முதலாளி தொழிலில் போட்ட பணம் குறைந்ததா?



இல்லை. நாலு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த கணக்கின்படி இந்தத்தொகை 1900 கோடி ரூபாயாக வளர்ந்துவிட்டிருக்கிறது.

இதுபோல, முதலாளிகளின் முகாம்களை வளர வைத்துக்கொண்டே, சோஷியலிசமும் பேச முடிகிறது காங்கிரஸ் கட்சியினால்! அந்த அளவுக்கு மக்களின் மதி மங்கிக் கிடக்கிறது என்று காங்கிரஸ் கட்சி நம்புகிறது.

வெள்ளையராட்சியின்போது கிடைத்ததைவிட அதிக வருவாய் இப்போது முதலாளிகளுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை எந்தக் காங்கிரஸ் தலைவரும் மறுத்திட முடியாது.

நான் குறிப்பிட்டேனே நாலு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த கணக்கு—அதன்படி, தொழில் அதிபர்களுக்கு மத்திய சர்க்கார் வழங்கியுள்ள மானியம், சலுகை, கடன் ஆகிய வகையில் 590 கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது.

சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி, முதலாளிகளை ஊட்டி வளர்க்கிறது; கொழுக்க வைக்கிறது.

அதனாலே காங்கிரசுக் கட்சிக்கு என்ன இலாபம் என்று கேட்கமாட்டாய்—உனக்குத்தான் தெரியுமே தம்பி; போன பொதுத் தேர்தலின்போது முதலாளிமார்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுத்த நன்கொடை, 98 இலட்ச ரூபாய் என்பது!

முதலாளித்துவ முறையைக் கட்டிக் காத்துக் கொண்டும் கொழுக்க வைத்துக்கொண்டும் இருக்கும் காங்கிரஸ்கட்சி எப்படி சோஷியலிசத்தின் உண்மைக் கணக்குப்படி நடந்துகொள்ள முடியும்? முடியாது!

காங்கிரசுக் கட்சியிலேயே சிலர் இப்போது, சோஷியலிசம் வளரத்தக்க விதத்தில் காங்கிரசாட்சி நடந்து கொள்ளவில்லை என்று பேசத் தலைப்பட்டுள்ளனர்.

அமைச்சராவதற்கு முன்புவரை இந்திராகாந்தி இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார்கள். இப்போது எப்படியோ தெரியவில்லை.

இரு திங்களுக்கு முன்பு காங்கிரஸ் தலைவர்கள் சிலர் கூடி ஒரு காங்கிரஸ் சோஷியலிச மாநாடு நடத்தி, சோஷியலிசத் திட்டத்தை அக்கறையுடனும், தீவிரமாகவும் நிறைவேற்றும்படி காங்கிரஸ் ஆட்சியை வற்புறுத்திப் பேசினர்.

காங்கிரஸ்கட்சி, உள்ளபடி சோஷியலிசத்தின் வழி நடப்ப தானால், சிலர்கூடி, ஏன் வற்புறுத்த வேண்டும்! காங் கிரசுக் கட்சியிலேயே, சோஷியலிச வழி நடப்பதாகக் கூறும் ஒரு பிரிவும், சோஷியலிச வழி நடக்கவில்லை என்று குறைகாணும் ஒரு பிரிவும் இருக்கிறது; காமராஜர் இந்த இரண்டு பிரிவிலும் இருக்கிறார்!

தம்பி! சோஷியலிசத் தத்துவத்தின் அடிப்படை, தொழில்கள் உற்பத்தியைப் பெருக்கவேண்டும், அந்த உற்பத்தி மக்களின் வசதிகளை அதிகப்படுத்தப் பயன்பட வேண்டுமேயன்றி, முதலாளிகளின் இலாபத்தைப் பெருக் கிடப் பயன்படக் கூடாது என்பதாகும்.

அதன்படி நடந்திருக்கிறதா என்பதைக் கண்டிட, ஒரு கணக்கினை ஆராய்வோமே!

இந்துஸ்தான் மோட்டார் கம்பெனி தெரியுமல்லவா —காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு 20 இலட்ச ரூபாய் நன் கொடை கொடுத்த அமைப்பு— அதனுடைய மூலதனம் 7 கோடியே 79-இலட்சமாம்.

அந்தக் கம்பெனிக்கு ஒரே வருடத்தில்—1960ல்— கிடைத்த இலாபம் 2,85,71,127 ரூபாய் என்று கணக்குத் தந்திருக்கிறார்கள். பார்த்தனையா, காங்கிரசின் சோஷிய லிசம் கொண்டுள்ள கோலத்தை!!

டாட்டா கம்பெனிக்குக் கிடைத்த இலாபம் 5 கோடியே 77 இலட்சமாம்!

ஒரிசா மாநிலத்தில் இருக்கிறதே—இப்போது அதன் பெயர் 'பாரதம்' முழுவதும் அடிபடுகிறதே கலிங்கா கம்பெனி, அதற்கு ஒரே வருஷத்தில் கிடைத்த இலாபம் 26 இலட்சம்! இப்படி இலாபம் திரட்டிக் கொள்ள இட மளித்துவிட்டு, சோஷியலிசம் பேசுகிறது காங்கிரஸ் கட்சி!



துரைத்தனமே அமைத்த ஒரு குழு, மக்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதையும் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது.

ஒரு நாளைக்கெல்லாம் ஒரு மணி நேரத்துக்கு மட்டுமே வேலை கிடைக்கிறதாம்—மற்ற நேரத்தில் வேலை தேடி அலைகிறார்கள்—கிடைக்காமல் திண்டாடு கிறார்களாம் 270 இலட்சம் மக்கள்! இந்த ஒரு மணி நேர வேலையில் கிடைக்கும் கூலியைக் கொண்டு எப்படி வாழ முடியும்? வதைபடுகிறார்கள், அரைப்பட்டினியாக.

ஒரு நாளைக்கெல்லாம் இரண்டு மணி நேரத்துக்கு மட்டுமே செய்வதற்கு வேலை கிடைக்கிறது 200 இலட்சம் மக்களுக்கு;

ஒரு நாளைக்கு ஐந்தணா மட்டுமே கூலியாகப் பெற்று வாழவேண்டிய பரிதாபம் 600 இலட்சம் மக்களுக்கு; நாலணா பெறுபவர்கள் 400 இலட்சம்; இவை சர்க்கார் நியமித்த அமைப்பு கொடுத்துள்ள கணக்கு, நான் இட்டுக் கட்டியது அல்ல.

டாட்டா, பிர்லா கோடி கோடியாகக் குவித்துக் கொண்டிருப்பதும், குப்பனும் சுப்பனும் கூலி போதாமல் குமுறிக் கொண்டிருப்பதும், சோஷயலிசம் அல்ல!!

இத்தகைய பயங்கரமான பேதத்தைப் போக்குவது தான் சோஷியலிசம்.

ஆனால் சோஷியலிசம் பேசும் காங்கிரசின் ஆட்சியில் மக்களிடையே காணக்கிடக்கும் பொருளாதார பேதம் விரிவாகிவிட்டிருக்கிறது; ஆழமாகியும் விட்டிருக்கிறது.

இதனை சர்க்காரே அமைத்த மகனாலோபிஸ் குழுவினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஏழை—பணக்காரன் பேதத்தைப் பயங்கரமான அளவு வளர்த்துவிட்டவர்கள், வளர்த்துக்கொண்டு வருபவர்கள் சோஷியலிசம் எமது திட்டம் என்றும் பேசுகிறார்கள்! விந்தையை என்னென்பது?

நானும் சைவன்தான் என்று பேசினானாம், ஆட்டு இறைச்சியின்றி ஒருவேளைகூட இருக்க முடியாதவன்,

வியப்பாக இருக்கிறதே! நீயா சைவன்? என்று கேட்டானாம் நண்பன்! ஆமாம்! அதிலென்ன சந்தேகம்! புல். பச்சைத்தழை இவைதானே ஆடு தின்கிறது, அதை நான் தின்கிறேன் என்றானாம். அது வேடிக்கைப் பேச்சு. காங்கிரஸ் ஆட்சியினர் முதலாளித்துவத்தை வளர்த்துக் கொண்டே சோஷியலிசம் பேசுகிறார்கள்; தங்கள் நாணயத்தை எவரும் சந்தேகிக்கக்கூடாது என்றும் கூறுகிறார்கள்—கூறுகிறார்களா!! கட்டளையிடுகிறார்கள்!

இவ்விதம் பேசுவது காங்கிரசின் எதிரிகளின் போக்கு என்று கூறித் தப்பித்துக்கொள்ள முயற்சிப்பார்கள் காங்கிரஸ் தலைவர்கள்.

தம்பி! நான் எடுத்துக்காட்டிய இந்தக் கருத்துரைகள் சில காங்கிரஸ்காரர்களே பேசியவை.

உத்திரப்பிரதேசத்தை சேர்ந்த ஒரு காங்கிரஸ்காரர் அன்சர் ஹர்வாணி என்பவர். அவர் மனம் நொந்து பேசியிருக்கிறார்:

> சோஷியலிச வழியிலே காங்கிரஸ் அரசு செல்லவில்லையே!
>
> கொள்ளை இலாபமடிக்கும் முதலாளிகளின் கொட்டத்தை அடக்குவதற்குப் பதிலாக அவர்களுடன் கூடிக் குலவுகிறீர்களே! இது அடுக்குமா!
>
> வரிகொடுக்காமல் ஏய்க்கும் வணிகக் கோமான்கள் இருக்கிறார்கள்; அவர்களைப் பிடித்திழுத்துத் தண்டிக்காமல், அவர்களின் மாளிகைகளிலே விருந்துண்ணச் செல்கிறீர்களே! நியாயமா?

என்றெல்லாம் கேட்டிருக்கிறார்.

சோஷியலிசம்கூட அல்ல, காந்திய வழியிலே கூடச் செல்லவில்லையே, முறையா? கைகூப்பி, மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், காந்திய வழியிலே நடவுங்களய்யா என்று காங்கிரஸ் ஆட்சியினரைக் கேட்டுக்கொள்கிறார் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்துவந்த தேபர்.



இவர்களின் மனக்குமுறலையுமா, காங்கிரசாட்சியினர் எதிர்கட்சியினரின் எரிச்சலூட்டும் பேச்சு என்று அலட்சியப்படுத்திவிடப்போகிறார்கள்!!

> சென்ற கிழமை கல்கத்தாவில் பேசிய மாளவியா எனும் காங்கிரஸ் தலைவர், நேரு மறைந்ததற்குப் பிறகு, காங்கிரசின் சோஷியலிசப் பணி பின்னுக்குச் சென்றுவிட்டது என்று நிருபர்களிடம் கூறியிருக்கிறார்.

சோஷியலிசப் பாதையில் வேகமாக நடைபோடுவதாக இங்கு காமராஜர் முழக்கமெழுப்புகிறார். சோஷியலிசத்தில் இதுவரை இருந்து வந்த ஆர்வமும் மங்கிவிட்டிருப்பதாக மாளவியா கூறுகிறார். அவரும் காங்கிரஸ்காரரே! அவரைக் கண்டிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம், காமராஜரை!! செய்யமாட்டார்!!

சோஷியலிசம்பற்றி இங்கு காமராஜர்கள் பேசும் போது, மக்கள்,

> தனி முதலாளிகளின் கொட்டம் அடக்கப்படும், வருவாய்தரத்தக்க பெரிய தொழில்கள் பொதுத் துறைக்கு ஒதுக்கப்படும்,
>
> பொருளாதார பேதம் ஒழிக்கப்படும் அல்லது குறைக்கப்படும்,
>
> தொழில்கள் வெறும் இலாபவேட்டைக் கூடங்களாக இனி இராமல், மக்களுக்கு வசதி தேடித்தரும் அமைப்புகளாகிவிடும்,
>
> ஓடப்பர் உயரப்பராகி எல்லோரும் ஒப்பப்பராகிவிடுவார்!

என்றெல்லாம் எண்ணிக் கொள்கிறார்கள், பாவம் அவர்கள் அறியார்கள், காங்கிரசின் சோஷியலிசம் அது அல்ல என்பதனை.

சோஷியலிசம் பேசுகிறார்களே இவர்கள் ஆட்சி செய்யும் நாட்டிலே நாம் எப்படி நம்பி, பெருந்தொகைகளை முதல் போட்டுத் தொழில் நடத்துவது என்று ஐயப்பட்ட அமெரிக்க முதலாளிகள் இங்கு உலா வந்த

னர், உரையாடினர், உசாவிப் பார்த்தனர், உண்மையை உணர்ந்துகொண்டனர், உவகையுடன் ஊர் திரும்பி மற்ற முதலாளிகளைக் கூட்டிவைத்து, அஞ்சற்க! அங்கு பேசப்பட்டு வரும் சோஷியலிசம் நம்மை ஒன்றும் செய்யாது. அது குறித்து நாம் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இந்தியாவிலுள்ள முதலாளிகளே அதுபற்றிக் கவலைப்படவில்லை; காங்கிரஸ் பேசும் சோஷியலிசம், ஏழையின் செவிக்கு இனிப்பளிக்கத்தான், வேறு எதற்கும் அல்ல; நாம் 'நமது' முதல் போட்டுத் தொழில் நடத்த ஆரோக்கியமான சூழ்நிலை இந்தியாவிலே அமைந்திருக்கிறது என்று கூறியுள்ளனர்.

போன வாரத்திலே, ஜி. எல். மேத்தா, இதனை மேலும் உறுதிப்படுத்தும் விதமாகப் பேசியிருக்கிறார், வாஷிங்டன் நகரில்.

இந்திய முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து தொழில் நடத்தும் அமெரிக்க முதலாளிகளுக்கு மேத்தா அன்புரையும் நன்றியுரையும் வழங்கினார். அவர்களிலே குறிப்பிடத்தக்கவர்கள் 67 முதலாளிகளாம்.

முதலாளிகளுக்காக இல்லை காங்கிரசாட்சி, ஏழைக்காகவே இருக்கிறது; பணக்காரரின் கொட்டம் அடக்கப்படும், பாட்டாளியின் வாழ்வு உயர்த்தப்படும் என்றெல்லாம் இங்கே காமராஜர் சோஷியலிசம் பேசுகிறார். அங்கே ஜி. எல். மேத்தா அமெரிக்க முதலாளிகளைக் கூட்டி வைத்து,

காங்கிரஸ் அரசுமீது சந்தேகம் கொள்ளாதீர்கள்.

தனிப்பட்ட முதலாளிகளின் தொழில் அமைப்புகளுக்குக் காங்கிரஸ் அரசு விரோதம் காட்டவில்லை.

காங்கிரசாட்சியில். 17 ஆண்டுகளில் தனியார் துறை விரிவடைந்திருக்கிறது, வளம் அடைந்திருக்கிறது. தனியார் துறைக்குக் காங்கிரஸ் அரசு உதவி அளித்து வருகிறது.

என்று எடுத்துக்கூறி, அமெரிக்க முதலாளிகளுக்கு அன்பழைப்பு விடுத்திருக்கிறார்,



உள்நாட்டு முதலாளிகளை எதிர்த்து, சமாளித்துச் சோஷியலிசத்தை நிலைநாட்டுவதே கடினமானது என்று விவரம் அறிந்தோர் கவலை கொள்கின்றனர்.

ஆனால், சோஷியலிசம் பேசிக்கொண்டே காங்கிரஸ் அரசு, பிரிட்டிஷ்-அமெரிக்க முதலாளிகளை இங்கு ஆதிக்கம் செலுத்த அழைக்கிறது. அவர்களும் இங்கு முகாம் அமைத்துக்கொண்டால், சோஷியலிசம் வெற்றிபெறுவது எளிதாக முடியக்கூடியதா!

வெள்ளைக்காரன் காலத்திலே இருந்ததைவிடப் பலத்துடன் இன்று முதலாளி முகாம் இருக்கிறது என்பதை எந்தக் காங்கிரஸ் தலைவரும் மறுக்க முடியாது.

தன்னை வரவேற்க வந்த காங்கிரஸ் அமைச்சரையே ஒருபுறம் போகச் சொல்லிவிட்டு, பிர்லாவுடன் மோட்டாரில் பேசிக்கொண்டே பவனி வந்தாராமே நந்தா கல்கத்தாவில் போனமாதம், அதிலிருந்தே புரியவில்லையா முதலாளிகட்குக் காங்கிரஸ் அரசிடம் உள்ள பிடிப்பு.

பச்சையாகவே பேசிவிட்டாரே காங்கிரஸ் அமைச்சர் படீல், சுயராஜ்யப் போராட்டக் காலத்தில் எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களைக் காங்கிரசுக்குக் கொடுத்தவர்கள் முதலாளிகள் என்று. மிரட்டும் குரலில் பிர்லாவும் பேசிவிட்டாரே, முதலாளிகளைக் காங்கிரஸ் சர்க்கார் பகைத்துக்கொள்ளக்கூடாது என்று.

இவைகளை எல்லாம் மக்கள் மறந்தேவிடுவார்கள் என்ற எண்ணத்தில், சோஷியலிசம் பேசிச் சுவை ஊட்டப் பார்க்கிறார்கள்.

சோஷியலிசத்தின் அடிப்படை ஒன்றைக்கூட அமைத்துக்கொள்ளாமல், சோஷியலிசத்துக்கு வெடி வைக்கும் போக்கை மாற்றாமல், சோஷியலிசம்பற்றிப் பேசுவது, எப்படிப் பொருளுள்ளதாகும்? என்ன பயனைத் தரும்?

இங்கே சோஷியலிசம் பேசுகிறார் காங்கிரஸ் தலைவர்; பிர்லா அறிவிக்கிறார் சென்றவாரம், அமெரிக்காவிலிருந்து:

3,00,000 டன் உற்பத்தி செய்யக்கூடிய தேன் இரும்புத் தொழிற்சாலையை 1967ல் துவக்கப்போவதாக! அமெரிக்க முதலாளியின் கூட்டுறவுடன்!!

அலுமினியத் தொழிற்சாலையை விரிவு படுத்தப் போவதாக! அமெரிக்கக் கூட்டுறவுடன்.

உர உற்பத்தித் தொழிற்சாலை விரிவான முறையில்! அமெரிக்கக் கூட்டுறவுடன்!!

அதேபோது, இந்தியப் பேரரசின் தொழில் அமைச்சர் சஞ்சீவய்யா,

தொழிலாளர்களுக்குப் போதுமான வசதிகளைத் தொழில் அமைப்புகள் செய்துதரவில்லை

என்று தெரிவிக்கிறார்.

பிர்லா புதுத்தொழில் அமைக்கிறார்; தொழிலாளி பழைய வேதனையைத் தொடர்ந்து அனுபவித்துவருகிறான்; காமராஜர் சோஷியலிசம் பேசுகிறார்; நாடு கேட்டுக்கொள்ளவேண்டி இருக்கிறது.

நாடு நம்புகிறதா என்று கேட்கிறாயா, தம்பி! நான் என்னத்தைச்சொல்ல! எதை எதையோ நம்பிக்கிடக்கும் மக்கள் இன்னமும் ஏராளமாக இருக்கிறார்களே!

அனுப்பிய மணியார்டர் வந்து சேர்ந்ததாகக் கடிதம் வருவதற்குள் துடிதுடிக்கும் அதே மக்கள், மேலுலகு சென்றுவிட்ட பெரியவர்களுக்கு, 'திவசம்' செய்வதன் மூலம், பண்டம் அனுப்பிவைப்பதாக நம்பிக்கொண்டிருக்கிறார்களே! எனவேதான் தம்பி! காங்கிரஸ் பேசும் சோஷியலிசம் பதர், நெல் அல்ல என்பதையும், காட்டும் கனிவு வெறும் கபடம் என்பதையும், அமைத்துள்ள முறை முதலாளியைக் கொழுக்கவைப்பது என்பதையும் விளக்கிக் காட்டவேண்டியிருக்கிறது. தெளிவு தேவைப்படும் அளவு இருந்தால், இன்றைய காங்கிரசில் நடுநாயகர்களாகக் கொலுவிருப்பவர்கள் யாரார் என்பதைப் பார்த்தாலே போதும் இந்தக் காங்கிரசினால் சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது என்பதைப் புரிந்து



கொள்ள புள்ளிமான் குட்டிக்குப் புலி பால் தராது என்பதை நான்மட்டுமா, இன்று பூஜைசெய்து வரம் கேட்டுக் கொண்டிருக்கும் தம்பிகளும் சேர்ந்து சொன்னார்கள். விளக்கம்போதும் என்று நாம் இருந்துவிடுவதற்கில்லையே; தெளிவு அரசோச்சும்வரையில் எடுத்துக் கூறியபடி இருந்தாகவேண்டும்.

காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம் பொருளற்றது; பயனற்றது,

காங்கிரசின் பேச்சுக்கும் நடத்தைக்கும் பொருத்தம் இல்லை.

என்பது மேலும் மேலும் விளக்கப்பட்டாக வேண்டும்.

ஏழைக்காகப் பரிந்து பேசுவது போதும், அதனையே இந்த மக்கள் சோஷியலிசம் என்று ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர் காங்கிரஸ் தலைவர்கள்.

ஏழைக்காகப் பரிந்து பேசுவதும், ஏழையை வதைக்கும் செல்வவான்களுக்கு அறநெறி, அன்புவழி பற்றிக் கூறுவதும், புதிய கண்டுபிடிப்பு அல்ல, மூவர்ணச் சரக்கும் அல்ல; மிக மிகப் பழையது.

வறுமையால் தாக்குண்டு கிடப்பவர்கள், தெளிவு பெற்று, தமது நிலைமைக்கான காரணம் கண்டறிந்து, உரிமை உணர்வு பெறுகிற வரையில், தானம் தருமம், பரிவு பச்சாத்தாபம், உதவி சலுகை இவைகளைப் பெற்றுக் கொள்வதில் மகிழ்ச்சிகொள்வர், நன்றியும் கூறிடுவர், இது நல்ல திட்டம் என்றும் ஒப்புக்கொள்வர். ஆனால், பொருளாதார யந்திர அமைப்பின் தன்மையையும், அதனைச் சமைத்திட்ட அரசியல் அமைப்பின் போக்கையும் விளங்கிக்கொண்ட பின்னர், என்ன கூறுவர்?

இருளது விட்டு வந்துளோம் வெளியே!

அய்யோ பாவம்! எனு மொழி கேளோம்!

ஐயமளித்திடும் கரமது வேண்டோம்!

என்றன்றோ கூறுவர். உரிமை கேட்பர், உதவி அல்ல!

தமிழ் இணையக் கல்விக் கழகம் ... தமிழ் நகர் ... 600

1881-ம் ஆண்டு பிறந்தவர் ஜான் நைஹார்ட் எனும் கவிஞர்; அவர் அந்த நாளிலேயே பாடிவைத்தார், தெளிவு பெற்ற ஏழை, விழிப்புற்ற பாட்டாளி என்னவிதமாகப் பேசுவான் என்பதனை.

''ஆணவக் கோட்டை
அமைத்திடுவோரே!
அடிமைகள் கண்டினி
நடுங்கிடுவீரே!

உலகிடை எழுந்திடும்
போர்கள் எதிலும்
இருப்பவர் யாமே
மறுப்பவருளரோ!

மன்னர் பெற்றிடும்
வலிவனைத்தும்
அளிப்பவர் யாங்கள்
அறிந்திடுவோமே.

ஞானிகளும் மோனிகளும்
முன்பு காட்டிய வழிகண்டு
காலகாலமாயுள கடுந்தளைகளை
உடைத்தெறிந்துமே

உலக இதயமதை
எம் முரசாகக்கொண்டு
இருளது விட்டு
வந்துளோம் வெளியே

அய்யோபாவம்! எனுமொழி
கேளோம்
ஐயமளித்திடும் கரமது
வேண்டோம்



பேரூர் சமைத்தவர்க்கேன்
பிச்சைதானும்!
என்றுதான் புரியுமோ
உமக்கிப் பேருண்மை.

குலப்பெருமை குடிப்பெருமை
விட்டொழிப்பீர்
வார்ப்படப் பொற்கடவுள்
வாணிபமும் விடுவீர்!

அவரவர் பெறும் தகுதி
ஆக்குந்திறன் வழியதாகும்.
உழைப்போர் நாங்கள்
உற்பத்தியாளர்
ஊமைகளாயிரோம்
இனியுந்தானே!

சுரண்டிடுவோரே!
சோம்பிக் கிடந்திடுவோரே!
பரவிப் பாய்ந்து வந்துளோம்
பாரினில்
பொழுது புலர்ந்தது
புவியெங்குமே, காண்!

இருளும் ஒழிந்தது
வாள் வெளிவந்தது.
உறையையும் வீசி
எறிந்தோம் கீழே!

தம்பி! கவிதையிலே குலுங்கிடும் எழுச்சியைக் கண்டனையா! இவ்விதமான எழுச்சி முரசு கேட்டு உலாவந்து வெற்றிகண்ட முறை சோஷியலிசம்.


இங்கோ, பதர் கொடுத்து நெல் எனக் கூறிடுவார் போல, அய்யோபாவம்! என்பதனையே சோஷியலிசம் என்று கருதிக்கொள்ளச் சொல்கிறார்கள்.

அவர்கள் கூறிடும் சோஷியலிசத்தில், பொருள் இல்லை; பயன் இல்லை!

பொருளற்றதைப் பேசிடுவதுடன், சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமற்ற முறையில் ஏழைக்காகப் பரிந்து பேசிவிட்டு, ஏழையின் அந்த நிலைமைக்குக் காரணமாக உள்ள முதலாளிகளுடன் கூடிக்குலாவுவதும், அவர்களைக் கொழுக்க வைப்பதுமான செயலில் ஈடுபடு கிறது காங்கிரஸ் கட்சி,

இதனை மெய்ப்பிக்கும் விதமாகவே இருந்திருக்கிறது காமராஜரின் மேடைப் பேச்சும், அவருடன் கூடிக் குலாவி யவர்களின் பட்டியலின் தன்மையும், இதனை எடுத்து விளக்கிட வேண்டும். இது வெறும் கிணற்றுத் தண்ணீர்; கங்காதீர்த்தம் என்று கூறுவது ஏமாற்றுப் பேச்சு என்பதனை எடுத்துக் கூறிட வேண்டும்—தொடர்ந்து.

அண்ணன்,



6-5-'65

தமிழ் நூல் காப்பகம்
09215
தமிழ் நகர் விருத்தாசலம் 606 001.